உ

சிவமயம்

தமிழியல் ஆய்வுச் சோலை

(தமிழ் இலக்கியச் சிந்தனை ஆய்வுகள்)

கனகசபாபதி நாகேஸ்வரன், B.A (Hons), M.A

முதுநிலை விரிவுரையாளர், தரம் 1,
மொழித்துறை, சமூக விஞ்ஞானமொழிகள் பீடம்
சபரகமுவ பல்கலைக்கழகம்
ஆலோசகர், தமிழ் இணையப் பல்கலைக்கழகம்,
இலங்கை.

வெளியீடு

தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரிப் பழைய மாணவர் சங்கம்,
கொழும்புக்கிளை, கொழும்பு.

14.05.2006

உ

[illegible]

மதிப்பிற்கும், பேரன்பிற்கும், பேரார்வதற்குரிய
[illegible] பேரவையின் கவரவ
செயலர் [illegible] அவர்கள் [illegible],
(நாற்பரிசுத் தேர்வுக்கு.)

[illegible]
[illegible]

01/02/2008.

உ

சிவமயம்

தமிழியல் ஆய்வுச் சோலை

(தமிழ் இலக்கியச் சிந்தனை ஆய்வுகள்)

கனகசபாபதி நாகேஸ்வரன், B.A (Hons); M.A

முதுநிலை விரிவுரையாளர், தரம் 1,

மொழித்துறை, சமூக விஞ்ஞானமொழிகள் பீடம்

சபரகமுவ பல்கலைக்கழகம்

ஆலோசகர், தமிழ் இணையப் பல்கலைக்கழகம்,

இலங்கை.

வெளியீடு

தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரிப் பழைய மாணவர் சங்கம்,

கொழும்புக்கிளை, கொழும்பு.

14.05.2006

ISBN: 955-98962-3-7.

சிவமயம்

THAMIZHIYAL AAIVUCH CHŌLAI

Thamizh Literary Thoughts Reseach



Author

KANAGASABAPATHY NAGESWARAN, M.A.

Senior Lecture Gr. I
Department of Languages
Faculty of Social Sciences and Languages
Sabaragamuwa University of Srilanka
Advisor, Tamil Virtual University
Sri Lanka.

Published by:

Tellippalai Mahajana College Old Students' Association,
Colombo Branch, Colombo, Sri Lanka

14 - 05 - 2006

ISBN: 955-98962-3-7.



அருள்மாமணி` ப.க. கனகசபாபதி `வித்துவாட்டி', `கவிஞர்' சுந்தரம்பிள்ளை கோகிலாம்பாள் தம்பதி. (வாகீச கலாநிதி நாகேஸ்வரனின் பெற்றார்)

பொருளடக்கம்

I. வாழ்த்துரை
திரு.பொ. சுந்தரலிங்கம்

II. வாழ்த்துரை
கலாநிதி க. சொக்கலிங்கம்

III. அணிந்துரை
பேராசிரியர், கலாநிதி சபா. ஜெயராசா

IV. கனகசபாபதி நாகேஸ்வரனின்
வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புக்கள்
பேராசிரியர், கலாநிதி க. அருணாசலம்

V. வெளியீட்டுரை
திரு. ச. சிறீகணநாதன்

VI. முகவுரை
வாகீசகலாநிதி. க. நாகேஸ்வரன்

	பக்
1. இலக்கியமும் திறனாய்வும்	01
2. சோழப் பெருமன்னர் காலத்துத் தமிழ் இலக்கியச் செல்நெறி	13
3. கவிச் சக்கரவர்த்தி கம்பன் கண்ட இராமனின் பேரெழில்	24
4. ஈழத்துச் சிறுகதைவளர்ச்சி	40
5. கதிர்காமப் பிரபந்தங்கள்	63
6. பெண்கள் ஒதுக்கப்படும் இனமா?	77
7. தமிழில் அகப் பாடல்களும் பக்திப் பாடல்களும்	86
8. அறநெறிப் போதனையில் தமிழிலக்கியங்கள்	96
9. மலையகக் கூத்துக்களில் சமயக் கருத்துக்கள்	107
10.தமிழ்க் காதல்	121
11.சைவமும் தமிழும்	150
12.இந்துக் கல்லூரிகளும்	160
13.சைவத் திருமுறைகள்	173

வாழ்த்துரை

திரு.பொ.சுந்தரலிங்கம்
அதிபர், மகாஜனக் கல்லூரி.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் நிறுவுநராகவும் முதல் அதிபராகவும் விளங்கிய பாவலர் தெ.அ.துரையப்பாபிள்ளை முதல் இன்று வரை கல்லூரியில் புகழ் பெற்ற பல எழுத்தாளர்கள் தோன்றி விளக்குகின்றனர்.

கல்லூரி எழுத்தாளர் மரபினருள் ஒருவராக விளங்குபவர் திரு. கனகசபாபதி நாகேஸ்வரன். 1966 ஆம் கல்லூரியில் கல்வி பயின்ற இவர் கல்வித் துறையில் மட்டுமன்றி எழுத்து, பேச்சு, இசை, நாடகம் முதலிய துறைகளில் சிறந்து விளங்கினார். எழுத்துத்துறையிலும் பேச்சுத் துறையிலும் அவர் இன்று புகழுடன் விளங்குவதற்குக் கல்லூரி ஆசிரியர்களான திரு.த.சண்முகசுந்தரம், புலவர் நா.சிவபாதசுந்தரனார், கவிஞர் செ.கதிரேசர்பிள்ளை முதலியோர் வழிகாட்டிகளாக அமைந்தனர். கல்லூரிக் காலத்தில் "இந்து இளைஞர்", "சங்கமம்" ஆகிய இதழ்களின் ஆசிரியராகப் பணியாற்றிய அவர் மாணவர்கள் எழுதிய சிறுகதைகளைத் தொகுத்து "இளம் முல்லை" நூல் வெளிவரவும் காரணமாக விளங்கினார்.

இங்கு கற்கும் போது க.பொ.த.ப. உயர்தரத் தேர்வில் சிறப்புச் சித்தியடைந்து, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து, பயின்று கலைமாணிப்பட்டமும் முதுகலைமாணிப் பட்டமும் பெற்ற அவர் இப்போது கலாநிதிப் பட்டப்படிப்பில் தொடர்ந்து வருகின்றார். யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறை விரிவுரையாளராகப் பணியாற்றிய அவர் இன்று சப்ரகமுகவப் பல்கலைக் கழகத்தில் மொழித்துறை முதுநிலை விரிவுரையாளராகப் பணியாற்றுகின்றார்.

சிவமயம்

முதுதமிழ்ப் பேரறிஞரும், கவிஞரும், கல்விமானுமாகிய சாஹித்திய ரத்தினம், வித்துவான், கலாநிதி க.சொக்கலிங்கம் (சொக்கன்) அவர்கள் வழங்கிய வாழ்த்து

வாகீசகலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன்

நயினை அருள்மிகு நாகபூஷணியம்பாள் ஆலய அறங் காவலர் பரம்பரையில் உதித்த பெரும் பேற்றினரான, வாகீச கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன், பண்ணோடிசை பாடவல்ல பக்திப் பாவாணராய் விளங்குவது வியப்பிற்குரிய ஒன்றன்று. சைவம், தமிழ் ஆகிய இருதுறைகளிலும் தேர்ந்து தெளிந்து புலமையாளர் வரிசையில் குறிப்பிடத்தக்க ஒருவராய் இவர் விளங்குகின்றார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தமிழைச் சிறப்புப் பாடமாகக் கற்றுக் கலைமாணிப் பட்டமும் தொடர்ந்து முதுமாணிப் பட்டமும் பெற்ற நாகேஸ்வரன் தமது நாவன்மை கொண்டு இலங்கைக் கம்பன் கழகமேடைகளிலும், பிறசமய பண்பாட்டு விழாக் களிலும் நாட்டிய் வெற்றிக்கொடிகள் பலப்பல. ***வாகீச கலாநிதி*** இவர் பெற்ற பட்டங்கள் விருதுகளில் தலையாயது. இந்தப்பட்டம் இவரை அடைந்ததால் மகிமை பெற்றது என்று கூறுவதற்கு எவ்வித தயக்கமும் வேண்டியதில்லை.

சில ஆண்டுகளின் முன்பு துர்க்கா தேவஸ்தானத்தில் சைவசமயச் சொற்பொழிவாளர்களாய் உள்ளவர்களுக்கு ஒரு சொற் பொழிவுப் போட்டி நிகழ்ந்தது. அரைமணித்தியால ஆயத்தத்தின்பின், குறித்த பொருள் (நடுவர் கொடுத்த பொருள்) பற்றி அரை மணித்தியாலம் சொற்பொழிவு ஆற்றவேண்டும் என்பது நிபந்தனை. அந்நிபந்தனைக்கமைய, பல்லவர்காலப் பக்திநெறி பற்றி உரை

யாற்றி முதலாமிடத்தினை நாகேஸ்வரன் மிக எளிதில் தமதாக்கி யதற்கு, இவரின் ஆழம், அகலம், செறிவு, நாவன்மை, தெளிவு, ஆகியனவே காரணங்களாய் அமைந்தன என்பதற்கு அந்தப் போட்டி யின் நடுவருள் ஒருவனாகிய நானே சாட்சி. "மகாகவியின்" புதிய தொருவீடு நாடகத்தின் நாயகனகத் தோன்றித் தமது தோற்றம் நடிப்பு குரல்வளம் என்பவற்றால் இரசிகர்களின் உள்ளங்களைக் கொள்ளை கொண்ட திறத்தையும் இவ்வேளையில் நினைவு கூர்வதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். இலங்கை வானொலி யிலே சைவ சமய நிகழ்ச்சித் தயாரிப்பாளராய் நாகேஸ்வரன் நிகழ்த்திய சாதனைகள் வரலாற்றில் இடம்பெற வேண்டியவை.

இவையாவிற்கும் மேலாகத் தமிழ் சமயத்துறைகளிலே தமது நுண்மாணுழைபுலம் கொண்டு ஆய்வுகள் நிகழ்த்தி ஆய்வுத் துறையிலே கணிசமான பங்களிப்பைச் செய்துவருவதோடு, பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறையிலே கலாநிதிப் பட்டம் பெற ஆய்வு நிகழ்த்தி வருவதும் குறிப்பிட்டுக் கூறவேண்டு வதாகும்.

சபரகமுவ பல்கலைக்கழக மொழித்துறையின் முதுநிலை விரிவுரையாளராகத் திகழும் வாகீசகலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்களின் அறிவாற்றல்கள் தொடர்ந்து தமிழ் கூறும் நல்லுலகிற்குப் பெரும் பயன் நல்க அவர்தம் குல தெய்வமாகிய அருள்மிகு நயினை நாகபூஷணியாள் அருள் தொடர்ந்து கிட்டு வதாக.

வாகீசகலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்களுக்கு எனது உளங்கனிந்த வாழ்த்துக்கள்.

கலாநிதி, சாகித்தியரத்தினம்
வித்துவான், க. சொக்கலிங்கம்
(சொக்கன்)

உ

சிவமயம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கல்வியியற் பீடத்தின் தலைவரும், கல்வித்துறைப் பேராசிரியரும், முனைவரும், சங்கச் சன்றோனும், இந்நூலாசிரியரின் பேராசானுமாகிய பேராசிரியர்,

கலாநிதி சபா. ஜெயராசா M.A(Ed);PH.D.

அவர்கள் வழங்கிய

அணிந்துரை



கட்டுரை இலக்கிய வடிவம் உருவ நிலையிலும் உள்ளடக்க நிலையிலும் மிக நீண்ட வீச்சுக் கொண்ட வடிவம். அதீத அகவய நிலையிலிருந்து இறுக்கமான தருக்கங்களை உள்ளடக்கிய புறவய நிலை வரை அதன் வீச்சு மிக நீண்டு செல்லும். இந்நிலையில், தமிழ் மரபிலே புனைகதைகளும், கவிதைகளும் ஆய்வு செய்யப்பட்ட அளவுக்கு கட்டுரை இலக்கியம் ஆய்வு செய்யப்பட்டாத ***முடிய*** நிலைக்கு உட்பட்டுக் காணப்படுகின்றது. கட்டுரை இலக்கியத்தின் எண்ணளவுப் பெருக்கமும், பண்பளவு வீச்சும் அதனை ஆய்வு செய்ய முயல்வோருக்கு ஒரு வித புலமை அச்சத்தை வழங்குதல் உண்டு.

சமகால உலகின் எழுத்தாக்கத் தொடர்பாடலில் கட்டுரை வடிவமே மேலோங்கி நிற்கின்றது. இந்த மேலோங்கலே விசையின் ஒரு பரிமாணமாக ***நேர்வியம்*** *(FACTION)* என்ற எண்ணக்கரு உருவாக்கம் பெற்றது. உலகின் பெருந் தொகையான அறிவுத்திரட்டும் அனுபவக் களஞ்சியங் களும் கட்டுரை வடிவங்களாகவே தேக்கி வைக்கப்படுதலையும் சுட்டிக் காட்ட வேண்டியுள்ளது.

கட்டுரை இலக்கிய வடிவம் தமிழ் மொழியிலே கால்கோள் கொள்வதற்குரிய ஆக்க நடவடிக்கைகள் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்களால் முன்னெடுக்கப்பட்டன. நாவலரைத் தொடர்ந்து தமிழ்க் கட்டுரை இலக்கியத்தின் ஆழ நீளங்களை விரிவாக்குவதிலே பெரும்பங்கு கொண்டவர் சுவாமி விபுலாநந்தர். நாவலர் வசனநடை கைவந்த வல்லாளராய்க் கட்டுரை இலக்கியத்தை வளம்படுத்த, சுவாமி விபுலாநந்தர் அறிவியல் தமிழ் கைவந்த வல்லாளராகக் கட்டுரை இலக்கிய வளத்தை முன்னெடுத்தார். இந்த வளர்ச்சித் திசை முகங்கள் பல்கலைக்கழக மரபினரால் மேலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்த வளர்ச்சியின் ஓர் அருவியாகி நிற்பவர் நண்பர் கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்கள்.

திரு. க. நாகேஸ்வரன் அவர்கள் நயினைப் பாரம்பரியத்தின் நீண்ட கல்வி மரபு தந்த தொடர்ச்சியான சுவடுகளின் வழிவந்தவர். இலங்கையின் அறுபத்து நான்கு தெய்விகத்திரு நிலைகளுள் ஒன்றாக விளங்கும் ஸ்ரீ புவனேஸ்வரி பீடத்தின் வழிவந்தவர். நயினை மகா வித்தியாலயத்திலும் நாவலப்பிட்டிக் கதிரேசன் கல்லூரியிலும் புகழ் பூத்த கல்விமான் இணுவிலைச் சேர்ந்த அதிபர், சபா. ஆனந்தர் B. O. L அவர் களிடம் கல்வி கற்றவர். தொடர்ந்து தெல்லிப்பழை மகாஜன க் கல்லூரி யில் பண்டிதர் செ. கதிரேசர்பிள்ளை, ***அறிவொளி*** த. சண்முகசுந்தரம் ஆகியோரிடத்து முறையே தமிழ் ஆங்கிலம் ஆகியவற்றைத் தெளிந்து கற்றவர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னோடி மாணவர்களுள் ஒருவராக விளங்கும் இவர் அமரர் பேராசிரியர் கைலாசபதி அவர் களிடத்துக் கற்றுத் தமிழ்ச் சிறப்புப்பட்டம் B. A(Hons) பெற்றவர். பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை அவர்களின் ஆற்றுப்படுத்தலில் முதுகலைமாணிப் பட்டத்தைப் (M. A) பெற்றுக் கொண்டவர். தற்போது பேராதனைப் பல்கலைக்கழகத்திலே கலாநிதிப் பட்டத்திற்கான (Phd) ஆய்வை மேற் கொண்டு வருபவர்.

அறிவுக் கையளிப்பில் நீண்ட அனுபவம் பெற்ற இவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், சபரகமுவ பல்கலைக்கழகம் தமிழ் இணையப் பல்கலைக்கழகம் முதலியவற்றின் வழியாகப் பலநூறு பட்டதாரிகளை உருவாக்கியவர். வானொலி மற்றும் தொலைக்காட்சி வாயிலாக வளமான அறிவுக் கையளிப்பினை வழங்கி வருபவர். ***ஈழநாடு*** ஆசிரிய பீடத்திலே கடமையாற்றி இதழியல் தமிழை வளர்ப்பதிலே பங்கு கொண்டவர். தமிழ்மொழி, இலக்கியம், இலக்கணம் வரலாறு, பண்பாடு, கலைகள், தொல்லியல், சமயமெய்யியல், முதலாம் துறைகளிலே ஆழ்ந்த ஆய்வுக் கட்டுரைகளையும் அறிவுப் பரவலாக்கற் கட்டுரைகளையும் எழுதி வருபவர்.

பத்துக்கு மேற்பட்ட ஆய்வு நூல்களை வெளியிட்டுத் தமது ஆளுமைப் பரிமாணங்களைத் துலக்கி நிற்பதோடு நாவலர் மரபிலே சொற் பெருக்குக் கலையையும் பேணி வளர்த்து வருபவர். மேற்கூறிய அனுபவங்களின் வெளிப்பாடும், அனுபவங்களின் பளிச்சீடுகளும் அறிகைப் பரிமாணங்களும் இந்நூலில் இடம் பெற்றுள்ள கட்டுரைகளிலே மேலுயர்ந்துள்ளன.

இலக்கியமும் திறனாய்வும் என்ற கட்டுரை கற்பித்தல் நிலையிலே திறனாய்வுக் கலையை விளக்கியும் விபரித்தும் எழுதப் பெற்ற ஆக்கமாக அமைந்துள்ளது. திறனாய்வும், கலை இலக்கியங்கள் தொடர்பான கருத்தியலும் *(IDEOLOGY)* வேறுபிரிக்க முடியாதவை. கருத்தியல் கலவாத இலக்கிய வடிவமும் இல்லை; திறனாய்வுமில்லை.

சோழப் பெருமன்னர் கால இலக்கியச் செல்நெறி என்ற கட்டுரை சோழர் காலத்து இலக்கியங்களின் பன்முக வளர்ச்சிக் கோலங்களை அகல்விரி *(COMPREHENSIVE)* நிலையில் எடுத்துக் கூறுகின்றது. ஒருமை நிலையிலிருந்த சமூகக் கோலம் பன்மை நிலையை அடையும் பொழுது பல்லினப் பாங்கான இலக்கிய வடிவங்கள் தோன்றும் நிலை ஏற்படும். சோழர் காலத்தில் நிகழ்ந்த வர்த்தக வளர்ச்சியும், கடல் கடந்த வர்த்தகங்களும், துறைமுக நகரங்களின் வளர்ச்சியும், யுத்தங்களும், நிலமானியப் பேரரசின் வளர்ச்சியும், அவற்றால் எழுந்த முரண்பாடுகளும், பன்முகமான இலக்கியக் கோலங்களின் தோற்றத்துக்குரிய விசைகளாக அமைந்தன.

கவிச் சக்கரவர்த்தி கம்பன் கண்ட இராமனின் பேரெழில் என்ற கட்டுரை இலக்கிய இரசனை நிலை அறிகைப் பாரம்பரியத்தின் தொடர்ச்சி யாக அமைகின்றது. டி. கே. சி, நீதியரசர் மகாராஜன், பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை முதலியோரின் மரபில் வளர்ச்சியுற்ற இலக்கிய இரசனை நிலை அறிகை அணுகு முறையின் பளிச்சீடுகளை இக்கட்டுரையிலே காணலாம்.

பெண்கள் ஒதுக்கப்படும் இனமா? என்ற கட்டுரை பெண்ணியம் பற்றிய ஆசிரியரின் நோக்கை வெளிப்படுத்துகின்றது. இச் சந்தர்ப்பத்தில் ஜாக்குயிஸ் டெறிடா *(WHITE INK)* என்ற எண்ணக்கரு இணைத்து நோக்குதற்குரியது. தாயின் முலைப் பாலைக் குறியீடாக்கி அவர் பெண்ணியம் தொடர்பான தமது கருத்துக்களை வெளியிட்டார். இந்த எண்ணக் கருவின் வழியாக பாரம்பரியமான ஆண் நிலைச் சிந்தனை களுக்கு மாறுபாடான அணுகு முறையினை அவர் முன்னெடுத்தார். இருள் - ஒளி, ஏற்றம் - இறக்கம், உயர்வு - தாழ்வு, ஆண் - பெண்

என்ற இருமைப் பாங்கில் *(BINARY SYSTEM)* ஒன்று உயர்ந்தது மற்றையது தாழ்ந்தது என்ற காட்சி மரபு வழியாக நிலை நிறுத்தப்பட்டு வந்துள்ளது. இக்கருத்தை மாற்ற வேண்டிய உணர்வைக் கட்டுரை புலப்படுத்தி நிற்கின்றது.

தமிழில் அகப்பாடல்களும் பக்திப்பாடல்களும் என்ற கட்டுரை அகம் பற்றிய அகல் விரி விளக்கத்தைத் தருவதுடன் தமிழர்களுடைய வாழ்க்கைக் கட்டுமானத்துடன் அந்த எண்ணக்கரு கொண்டுள்ள தொடர்பு களும் உரைக்கப்படுகின்றன. அகம் பற்றிய விளக்கமும், அகவாழ்வும் மனித அடிப்படை இயல் பூக்கத்துடன் இணைந்துள்ளன. சமூக வடிழ்க்கை யின் அழுத்தங்களால் இயல் பூக்கம் நெறிப்படுத்தப் படுதலுக்கும் உட்படும் நிலையைப் பெறுகின்றது.

அற நெறிப் போதனையில் தமிழ் இலக்கியங்கள் என்ற கட்டுரை யில் இடம் பெறும் கருத்துக்கள் தமிழரது சமூக வாழ்வின் அடிக்கட்டு மானத்தை அடியொற்றி மேலமைந்த கருத்துக்களாக இருத்தல் குறிப்பிடத்தக்கது. ஒழுக்கம், விழுமியம், கல்வி அறம், முதலியவை சமூக அடிக்கட்டுமானத்துக்கு முரணாகவோ, ***இருப்பை மீளாக்கம் செய்யும்*** மீளவலியுறுத்திகளாகவோ அவை செயற்பட்ட வண்ணமிருக்கும்.

மலையகக் கூத்துக்களில் சமயக் கருத்துக்கள் என்ற கட்டுரையில் மதுரை வீரன் முதலியவை விளக்கப்படுகின்றன. தொன்மங் கள் ***கூட்டு நனவிலியின்*** *(COLLECTIVE UNCON SCIOUS)* வெளிப்பா டாக இருத்தல் மட்டுமன்றி, பழைமைச் சின்னங்களுடன் இணைத்துப் புதிய கருத்துக்களையும் மனவெழுச்சி களையும் வெளியிடுவதற்கும் துணையாக நிற்றலும் குறிப்பிடத்தக்கது.

தமிழிலக்கியம் சார்ந்த ஆய்வாக அமையும் ***தமிழ்க் காதல்*** என்ற கட்டுரை இலக்கியக் கல்வி நிலையில் பால் நிலை இயல்புகளையும், அவற்றின் வழியான காதலையும் அணுகியுள்ளார். மேலை நாடுகளில் வளர்ச்சி பெற்றுள்ள பிராய்டிசம் மற்றும் நவபிராய்டிசம் முதலியவற்றின் மேலோங்கிய வடிவமாக குயிர் கோட்பாடு *(Queer theory)* முனைப் படைந்து எழுந்துள்ளது. பின் நவீனத்துவ வாதிகளும் இக்கோட் பாட்டுக்கு அனுசரணை வழங்குகின்றனர். மறுபுறம் பெண்ணிய முனைப்பை வெளிப்படுத்துவோர் பிராய்டிசமும், நவபிராய்டிசமும் ஆண் நிலை ஓங்கலின் வெளிப்பாடுகள் என்று குறிப்பிடுகின்றனர். இவ்வாறாக மேலை உலகில் நிகழும் கருத்து மோதல்களைத் தமிழ் இலக்கியப் பரப்பிலே பிரயோகிப் பதற்குரிய தளத்தை இக்கட்டுரை உணர்த்தி நிற்கின்றது.

சைவத் திருமுறைகள் என்ற கட்டுரை சைவக்கருத்தியலையும், அதனோடிணைந்த அநுட்டானங்களையும், தமிழர் இசை வளத்தையும் ஒன்றிணைக்கும் ஆக்கமாக அமைந்துள்ளது. சமகாலத்தில் வளர்ச்சி பெற்றுவரும் சமய ஒப்பியல் அறிகையும் ஆய்வுகளும் உலகின் அனைத்துச் சமயங்களுக்குமிடையே காணப்படும் பொதுப் பண்புகளையும், பொதுத் தளங்களையும், தளவிலகல்களையும் துல்லியமாக விளக்கு கின்றன. ஒப்பியல் சமய ஆய்வை மேற் கொள்வதற்குரிய புலக்காட்சிக் கருப் பொருட்கள் இக் கட்டுரையில் வளமாகக் கிடைக்கப் பெறுகின்றன.

சைவமும் தமிழும் என்ற கட்டுரையில் சைவக் கருத்தியலின் தனித்துவமும், உலகுக்குரிய அறிகைச் சொத்தாக அது அமைதலும் விளக்கப்படுகின்றது.

இந்துக் கல்லூரிகளும் தமிழ்க் கல்வி மரபும் என்ற கட்டுரை கல்வி வரலாறு மற்றும் ஒப்பியற் கல்வி தொடர்பான கருத்துக்களை உள்ளடக்கி அமைக்கப் பெற்றுள்ளது. மேலைத் தேயக் கல்வி முறைமை யானது கற்றவர்களின் மனங்களை அன்னியமாக்கியதுடன் சமூகத்தி லிருந்தும் அவர்களை அன்னியமாக்கியது. அத்தகைய எதிர் விளைவு களை மறுதலித்து உருவான இந்துக்கல்வி இயக்கங்களின் செயற் பரிமானங்கள் கட்டுரையிலே விளக்கப்படுகின்றன. பல முற்போக்குப் பரிமாணங்கள் இந்துக் கல்வி இயக்கங்களிலே காணப்பட்டாலும் சமூக ஏறு நிரலமைப்பை மீளவும் உருவாக்கும் தடத்திலிருந்து அவற்றால் விலகிச் செல்ல முடியாதிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இந்நூலில் இடம் பெற்றுள்ள கட்டுரைகள் தனித்துவமானவை யாயும், நூலாசிரியரின் சமயக்கருத்தியலையும், மானிடக் கருத்தியலையும் தாங்கியவையாயும் அமைந்திருத்தல் குறிப்பிட்டுக் கூறக் கூடிய அவதானிப்பு ஆகும். நூலாசிரியரின் எழுத்தாக்கப் பணிகள் தொடரவும், வளரவும் எமது நல்வாழ்த்துக்கள்.

பேராசிரியர், கலாநிதி சபா. ஜெயராசா.

கல்வியியற் பீடம்,
யாழ். பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி, இலங்கை.
27- 09- 2004.

தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரியின் பழைய மாணவர் சங்கக் கொழும்புக்கிளையின் தலைவர் உயர் திரு ச.சிறீகணநாதன் அவர்கள் வழங்கிய வெளியீட்டுரை

தமிழ்கூறு நல்லுலகின் மூத்த நவீன தமிழ்க்கவிஞர் என்ற பெருமை பெற்றவர் ***பாவலர் தெ. அ. துரையப்பாபிள்ளை*** அவர்கள். தமிழகத்தின் மூத்த நவீன தமிழ்க் கவிஞரான ***மகாகவி சுப்பிரமணிய பாரதியார்*** அவர்கள் கவிதை எழுதத் தொடங்கியதற்கு (1906) ஐந்து ஆண்டுகளுக்கு முன்னரே, 1901 ஆம் ஆண்டிலேயே பாவலரின் ***கீதரசமஞ்சரி*** என்ற நவீன கவிதைத் தொகுதி ஈழத்தில் வெளிவந்தது. இப் பாவலர் 1910 ஆம் ஆண்டில் ***தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியை*** நிறுவி, நிறுவுநராகவும் ஆசிரியராகவும் அதிபராகவும் பணியாற்றினார். (ஒக்ரோபர் 24 -06-1910 - 1929). பின் அவரின் மாணவராகவும் கவிஞராகவும் விளங்கிய ***கா. சின்னப்பா*** அவர்கள் கல்லூரியின் ஆசிரியராகவும் அதிபராகவும் பணிபுரிந்தார். (1914 - 1945). இவ்விருவர் காலம் முதல் இன்றுவரை எமது கல்லூரி தொடர்ந்து பேரறிஞர்களையும் பல்துறை ஆற்றல் மிக்கவர்களையும் உருவாக்கி வருகின்றது.

இவ்விரு தமிழறிஞர்களின் தமிழ் இலக்கிய ஆர்வமும் ஆக்கமும் பல எழுத்தாளர்களை உருவாக்கக் காரணமாக அமைந்தது. கவிஞர் கா. சின்னப்பா காலத்தில் புகழ்பெற்ற ஈழத்து எழுத்தாளர்களான கவிஞர் செ. கதிரேசர்பிள்ளை, அ. ந. கந்தசாமி, அ. செ. முருகானந்தன், மகாகவி து. உருத்திரமூர்த்தி முதலியோர் உருவாகினர்.

பாவலரின் மகனும் மகாஜனாவின் மாணவரும் ஆசிரியரும் அதிபருமான ***தெ. து. ஜயரத்தினம்*** அவர்களின் காலத்தில் (1919

- 1970) கவிஞர் செ. கதிரேசர்பிள்ளை, அறிஞர் த. சண்முகசுந்தரம், புலவர் நா. சிவபாதசுந்தரனார் முதலாய பல எழுத்தாள ஆசிரியர்களின் தொடர்பால் மகாஜன மாணவர்கள் பலர் பேச்சாளர் களாகவும் எழுத்தாளர்களாகவும் உருவாகிப் புகழ்பெற்றனர். இன்றும் கல்லூரியின் இலக்கியத்துறைப் பணி இடையீடின்றித் தொடர்கின்றது.

மகாஜன மாணவர்களான மிகப் பலர் எழுத்துத்துறையிலும் அரச பதவிகளிலும் கல்வித்துறையிலும் பல்கலைக்கழகங்களிலும் உயர்நிலையிலும் பதவிகளிலும் தொடர்வது கல்லூரிக்குப் பெருமை தருவதாகும். இம்மரபில் தோன்றிய புகழ் பெற்ற தமிழறிஞராகவும் எழுத்தாளராகவும் பல்கலைக்கழக மூத்த தமிழ் விரிவுரையாளரா கவும் **வாகீசகலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன்** விளங்குகின்றார்.

1964 ஆம் ஆண்டில் மகாஜனக் கல்லூரியில் மாணவராகச் சேர்ந்துகொண்ட திரு. க. நாகேஸ்வரன் 1974 ஆம் ஆண்டு க. பொ. த (உயர்தர) வகுப்புவரை பத்து ஆண்டுகள் படித்து இறுதித் தேர்வில் சிறப்பாகச் சித்தி எய்தி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பட்டப் படிப்புப் பெறும் வாய்ப்புப் பெற்றார். அங்கு சிறப்புக் கலைமாணி (1976 - 1979), முதுகலைமாணி (1985 - 1988) ஆகிய பட்டங்களைப் பெற்ற அவர் விரைவில் கலாநிதிப் பட்டமும் பெறவுள்ளார் (2000 - 2005).

மகாஜனக் கல்லூரியின் எல்லை இல்லத்தில் வாழ்ந்து கல்விபயின்ற அவர் இளமை முதலே கல்லூரியில் ஆற்றல் மிக்க மாணவராகவும் தமிழ், சமயத் துறைகளின் பேச்சாளராகவும் இத்துறைகள் சார்ந்த எழுத்தாளராகவும் நாடகத்துறை நடிகராகவும் விளையாட்டு வீரராகவும் விளங்கி, கல்லூரியிலும் மாவட்ட நிலையிலும் அகில இலங்கை மட்டத்திலும் பல்வேறு போட்டிகளில் முதன்மைப் பரிசுகளைப் பெற்றுவந்தார். 1973, 1974 ஆம் ஆண்டு களில் நல்லூர் முருகன் வருடாந்த திருவிழாவையொட்டி யாழ் மாநகரசபை நடத்திய சமய அறிவுப் போட்டியில் தொடர்ந்து முதற் பரிசுகளைப் பெற்றார். அகில இலங்கை மட்டத்தில் நடை பெற்ற பல கட்டுரைப் போட்டிகளிலும் பரிசு பெற்றுக் கல்லூரிக்குப் பெருமை சேர்த்தார். இக்காலம் முதல் பல பட்டிமன்றங்களிலும் முன்னணிப் பேச்சாளராகக் கலந்து சிறப்பாகப் பேசிவந்தார். கல்லூரியிலும்

வெளியிலும் நடைபெற்ற சிரமதானப் பணிகளுக்கான மாணவர் குழுக்களின் தலைவராகவும் இவர் பணியாற்றினார். 1973 ஆம் ஆண்டில் கல்லூரித் தமிழ் மன்றம் வெளியிட்ட ***இளம்முல்லை*** என்ற மாணவர் சிறுகதைப் பூங்கொத்தின் தொகுப்பாளராகவும் பதிப்பாளராகவும் கல்லூரித் துணை அதிபர் அறிஞர் த. சண்முகசுந்தரம் அவர்களின் வழிகாட்டலிற் செயற்பட்டார். கல்லூரியில் வெளியான ***இந்து இளைஞர்*** என்ற மாணவர் சமய இதழ் ஆசிரியராகவும் இவர் செயற்பட்டார். கல்லூரியில் நடைபெற்ற தொல்பொருளியிற் கண்காட்சிப் பகுதியின் மாணவர் தலைவராகவும் இவர் சிறப்போடு செயற்பட்டார்.

1974 ஆம் ஆண்டு முதல் ஈராண்டுகள் ஒருசாலை மாணாக்கர்களான திரு. நாகேஸ்வரனும் விழிசிட்டியைச் சேர்ந்த திரு. சு. சரவணபவனும் இணையாசிரியர்களாக உத்வேகத்துடன் செயற்பட்டுச் ***சங்கமம்*** என்ற கலை இலக்கிய அறிவியல் இதழை வெளியிட்டனர். கல்லூரித் துணை அதிபர் த. சண்முகசுந்தரம் அவர்களும், கல்லூரிப் பழைய மாணவரும், பழைய மாணவர் சங்க இணைச் செயலரும், பாவலர் நூற்றாண்டு விழா இணைச் செயலரும், பாவலர் மலர் நூற்றாண்டு நூலாசிரியரும் தற்போது இழியற் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளரான திரு. ஆ. சிவநேசகச்செல்வன் அவர்களும் **சங்கமம்** பதிப்பாலோச கராகப் பணியாற்றினர். இம் மலர்க்குழுவில் திருவாளர்கள் வீ. சிறிகதிர் காமநாதன் (நிர்வாக ஆசிரியர்), சி. செ. சண்முகநாதன் (செயலர்), பொ. இரகுபதி (நிர்வாக அதிபர்) ஆகிய சமகால மாணவர்களும் பணிபுரிந்தனர். அம்பனைக் கலைப்பெருமன்றத்தின் நிறுவுநரும் கல்விக்கழகத்தின் பதாமகரும் புகழ்பெற்ற எழுத்தாளருமான திரு. ஆ. சிவநேசச் செல்வன் நாகேஸ்வரனின் அயல்வீட்டினராகவும் கல்வி வழிகாட்டியாகவும் இருந்ததால் இருவருக்கும் இடையீடற்ற நெருங்கிய கல்வித் தொடர்புகள் இருந்தன. இது நாகேஸ்வரனின் எழுத்துத்துறை, தமிழியற் சிந்தனை வளர்ச்சிகளுக்குப் பேருதவியாக அமைந்தது. ஆசிச் செல்வனின் தந்தையார் ஆசிரியர் பண்டிதர் நா. ஆறுமுகம் அவர்களும் கல்லூரியிலே நாகேஸ்வரனுக்குக் கற்பித்தார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில், சிறப்புக் கலைமாணித் தமிழ்த்துறையில் ஆற்றல் மிக்க மாணவராக இருந்த திரு. நாகேஸ்வரன் பல்கலைக்கழக அறிஞர்களின் வழிகாட்டலில் கல்வியிலே உயர்நிலை அடைந்தார். இங்கு இவர் பல சங்கங்களில் மாணவ உறுப்பினராகவும் வளர்ச்சித்துறைப் பதவியாளராகவும் சிறப்பாகச் செயற்பட்டார். இக்காலத்தில் யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் சார்பில் இந்தியாவிலும் மலேசியாவிலும் நடைபெற்ற மகாநாடுகளில் கலந்துகொள்ளும் பெருவாய்ப்புகளையும் இவர் பெற்றார். இவ்வேளையில் இரு நாடுகளிலும் இவர் பல நிகழ்வு களிலும் கலந்து உரையாற்றும் வாய்ப்பும் பெற்றார். பல்கலைக் கழகத்திலும் இவர் விவாதக்குழு, நாடகக்குழு, விளையாட்டுத்துறை ஆகியவற்றில் ஈடுபட்டுத் தொடர்ந்து சிறப்பாகச் செயற்பட்டார். இவற்றிலெல்லாம் இவர் தமது ஆற்றலையும் பெருமையையும் நிலைநிறுத்தினார்.

பாடசாலை மாணவப் பருவத்திலேயே இதழாசிரியராகச் சிறப்புப் பணியாற்றிய இவர் பல்கலைக்கழகச் சிறப்புக் கலைமாணிப் பட்டம் பெற்றதும் (1979 - 1980 களில்) யாழ்ப்பாணத்தில் *ஈழநாடு* செய்தி இதழின் துணையாசிரியராகப் பணியாற்றினார். பின் இலங்கை வானொலியில் அறிவிப்பாளராகவும், நிகழ்ச்சிப் பொறுப்பாளராகவும் தயாரிப்பாளராகவும், உரையாளராகவும், நேர்முக வர்ணனையாள ராகவும் தொடர்ந்து ஐந்து ஆண்டுகள் (1980 - 1985) பணியாற்றினார். மலேசியாவில், AIBD (ASIA INSITUTION OF BROADCASTING DE-VELOPMENT) வானொலி, தொலைக்காட்சிப் பயிற்சிக்குப் புலமைப் பரிசில் பெற்றுச் சென்று திரும்பினார்.

உயர் தமிழ்க் கல்வியில் ஆர்வம் கொண்ட இவர் மீண்டும் யாழ். பல்கலைக்கழகத்தில் முதுமாணிப் பட்டப்படிப்பில் ஈடுபட்டுப் பட்டம் பெற்றார். (1985 - 1988). 1985 இல் யாழ் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறை விரிவுரையாளராகப் பணியாற்றும் பேறும் துணை வேந்தரான பேராசிரியர் கலாநிதி சு. வித்தியானந்தனின் பேருதவியும் இவருக்குக் கிடைத்தன. 1996 ஆம் ஆண்டில் சப்ரகமுவப் பல்கலைக் கழகத்தில் மொழித்துறையின் தலைவராகவும் முதுநிலை விரிவுரை

யாளராகவும் பணியேற்று இன்று அங்கு மூத்த விரிவுரையாளராகவும் (தரம்-1) பணியாற்றி வருகின்றார்.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் வளர்ச்சியில் கல்லூரிப் பழைய மாணவர்கள் தொடர்ந்து பேருதவி ஆற்றி வருகின் றனர். ஈழத்திலும் வெளிநாடுகளிலும் இயங்கிவரும் கல்லூரிப் பழைய மாணவர் சங்கங்களும் பழைய மாணவர்களும் அண்மையில் கொழும்புக் கிளையில் கூடியபோது கல்லூரியின் நூற்றாண்டு விழாவை (2010) நோக்கிய காலப்பகுதியில் கல்லூரியின் பல்துறை வளர்ச்சிக்கும் தீவிரமாகப் பணியாற்ற முடிவுசெய்தனர்.

இப்பணிகளில் ஒன்றாகக் கல்லூரி நிறுவுநர், ஆசிரியர்கள், பழைய மாணவர்களின் எழுத்தாக்கங்களைத் தொடர்ந்து நூலாக வெளியிடுதலும் இடம் பெறவுள்ளது. கொழும்புப் பழைய மாணவர் சங்கத்தினரான எமக்கு இப்பணிகளின் முதல் முயற்சியாக எமது கல்லூரியின் புகழ்பெற்ற பழைய மாணவர்களுள் ஒருவரான வாகீச கலாநிதி க. நகேஸ்வரனின் ***தமிழியல் ஆய்வுச் சோலை*** என்ற ஆய்வுச் சிறப்புமிக்க இக்கட்டுரைத் தொகுப்பு நூலை வெளியிடும் பெரும்பேறு கிடைத் துள்ளமை எமக்குப் பெருமகழ்ச்சி தருகின்றது. இதனைப் பெருமைப் பணியாகக் கருதுகிறோம்.

திரு. நாகேஸ்வரன் அவர்களின் ***தமிழியல் ஆய்வுச்சோலை*** என்ற இவ்வாய்வுநூல் பதின்நான்கு சிறந்த ஆய்வுச் சிந்தனைக் கட்டுரைகளைக் கொண்டுள்ளது. இவற்றுள் ஐந்து கட்டுரைகள் ஈழத் தமிழரின் இலக்கிய, சமயச் சார்புடையனவாக அமைந்துள்ளன. ஏனைய ஒன்பது கட்டுரைகளும் பொதுவான தமிழ், சமயச் சார்பு டையவையாக அமைந்துள்ளன.

இக்கட்டுரைகள் இந்நூலை வாசிக்கும் அனைவருக்கும் தமிழ் இலக்கியம், சைவ இலக்கியம் பற்றிய அறிவை வளர்க்க

உதவுவனவாக அமைந்துள்ளன. மேலும் இவை தமிழ், சமய மாணவர்களது ஆய்வறிவுச் சிந்தனை வளர்ச் சிக்குப் பயன்படுவனவாகவும் அமைந்துள்ளன. இந்நூலை வெளியிடும் பெரு வாய்ப்பினை எமது சங்கத்துக்கு தந்த வாகீச கலாநிதி கனக. நாகேஸ்வரனுக்கு எமது பெருநன்றி உரியதாகும்.

இந்நூலுக்கான வாழ்த்துரையினை வழங்கிய கல்லூரி அதிபர் பொ. சுந்தரலிங்கம் அவர்களுக்கும் முதுதமிழ்ப்பேரறிஞர் வித்துவான், கலாநிதி க.சொக்கலிங்கம் (சொக்கன்)அவர்களுக்கும், அணிந்துரை வழங்கிய கல்லூரிப் பழைய மாணவரும் கல்வியியற் பீடத்தின் தலைவரும், பேராசிரியருமான சபா. ஜெயராசா அவர்களுக்கும் நூலாசிரியரின் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புரையை வழங்கிய பேராசிரியர் க. அருணாசலம் அவர்களுக்கும் நூலைச் சிறப்பாக அச்சிட்டு வழங்கிய வெள்ளவத்தை SDS **கணனி நிறுவனத் தினருக்கும் லஷ்மி பதிப்பகத்தினர்க்கும்** எமது உளங்கனிந்த நன்றி.

19- 10- 2004

ச. சிறீகணநாதன்

(பழைய மாணவர் சங்கக் கொழும்புக்கிளை சார்பில்)

உ



அருட்கலைமாமணி, சைவசித்தாந்த பண்டிதர்,
வாகீசகலாநிதி,
கனகசபாபதி நாகேஸ்வரன், B.A (Hons) ; M.A
(அகில இலங்கை சமாதான நீதிவான்)
முதுநிலை விரிவுரையாளர், மொழித்துறை,
சமூக விஞ்ஞான மொழிகள் பீடம்,
சப்ரகமுவ பல்கலைக்கழகம்.

ஈழத்தில் அறுபத்து நான்கு சக்தி பீடங்களுள் ஸ்ரீ புவனேஸ் வரிபீடம் என மிளிரும் நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் தேவஸ்தானத்தின் பரம்பரை மரபு வழி அறங்காவலர் வம்சத்தில் தவசிரேஷ்டர் ஸ்ரீமான் **பரமலிங்கம் கந்தசாமி கனகசபாபதி** எனும் 'அருள்மாமணி'க்கும் **ஸ்ரீமதி சுந்தரம்பிள்ளை கோகிலாம்பாள்** எனும் 'வித்துவாட்டி,' க்கும் மூத்த புதல்வன் **வாகீசகலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன், எம்.ஏ.**

இலக்கிய ஆய்வாளர், கலைஞர், கல்விமான், இன்னிசைச் சொற்பொழிவாளர், மொழிபெயர்ப்பாளர், நேர்முக வர்ணனையாளர், பண்ணிசைக்கலைச்செல்வர் எனும் பன்முகப்பட்ட உன்னத ஆளுமைகளின் திருவுரு.

நாவலப்பிட்டி கதிரேசன், தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி ஆகியவற்றின் பழையமாணவரான இவர் யாழ்ப்பாணப்பல்கலைக் கழகத் தின் தமிழ்த் துறையில் **பேராசிரியர், கலாநிதி கனகசபாபதி கைலாசபதி யின்** மேற்பார்வையின்கீழ்த் தமிழ்இலக்கியத்தில் கலைமாணிச் சிறப்புப் பட்டத்தினையும், B.A (Hons) **பேராசிரியர் கலாநிதி ஆ. வேலுப்பிள்ளையின்** மேற்பார்வையின் கீழ் முதுகலைமாணிப் பட்டத்தினையும் (M.A) முறையே 1979, 1988 ஆம் ஆண்டுகளிற் பெற்றார். தற்போது பேராதனைப் பல்கலைக்கழகத்திலே தமது கலாநிதிப் பட்டத்திற்கான (Ph. d.) ஆய்வினை நிகழ்த்துகிறார்.

சப்ரகமுவ பல்கலைக்கழகத்து மொழித் துறையிலே முது நிலைத் தமிழ் விரிவுரையாளராகவும், இணைப்பாளராகவும் பணியேற் றுள்ளார். யாழ், பல்கலைக்கழகத்திலும், தமிழ் இணையப்பல்கலைக் கழகத்திலும் பட்டதாரிகள் பலரை உருவாக்கிவருகிறார். தமிழின் பல்வேறு துறைகளி லேயும் நிரம்பிய ஈடுபாடு கொண்டுள்ள இவர் இலக்கியம், சமூகம்,

கலை, சமயம், வரலாறு, தொல்பொருளியல், அரசறிவியல்; இதழியல், கல்வி, பண்பாடு, மொழி, வாழ்க்கை வரலாறு, பத்திரிகையியல், வானொலி, தொலைக்காட்சி எனும் துறைகளிலே பல்வேறு ஆய்வுக் கட்டுரைகளை எழுதியுள்ளார்.

1972 ஆம் ஆண்டு முதல் இவரது ஆய்வுக் கட்டுரைகள் ***கோமுகி, சங்கமம், கலாசுரபி, மல்லிகை, செல்வந்தி, இந்துநெறி, இனமுழக்கம், தமிழ்ஒலி, பராசக்தி, தேன்பொழுது, ஊற்று, ஆலய மணி, ஜீவசக்தி, தமிழோசை, உள்ளம்*** ஆகிய இலக்கியச் சஞ்சிகைகளிலேயும், ***ஈழநாடு, உதயன், தினகரன், வீரகேசரி, தினக்குரல்*** பத்திரிகைகளிலேயும் வெளிவந்துள்ளன.

1980 களில் ***ஈழநாடு*** பத்திரிகையின் உதவி ஆசிரியராயும், 1985 வரை ஐந்தாண்டுகள் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்சேவையில் நிகழ்ச்சிகள் தயாரிப்பாளராயும், பகுதி நேர அறிவிப்பாள ராயும், நேர்முக வருணனையாளராகவும் பணியாற்றினார். இந்திய அலஹபாத்திலும், திருச்சியிலும், மலேசியாவிலும் நடந்த சமய இலக்கிய மாநாடுகளிலே 1979 இலும், 1983, 2002 இலும் பங்கேற்றார். இலண்டன் கனடா ஆகிய நாடுகளில் வெளியிடப்பட்டுள்ள சமய, இலக்கிய மலர்களில் இவரது ஆய்வுக் கட்டுரைகள் தமிழிலே பிரசுரமாகியுள்ளன.

நல்லையாதீனம், பருத்தித்துறை சாரதா ஆச்சிரமம், கொழும்பு விவேகானந்த சபை, அகில இலங்கை இந்துமா மன்றம், கொழும்புத் தமிழ்ச் சங்கம், அகில இலங்கைக் கம்பன் கழகம், யாழ்ப்பாணம் திருநெறிய தமிழிசைச் சங்கம், ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம். கலாசார அமைச்சின் கலைக்குழுவின் இலக்கியக் கருத்தரங்குகள், தமிழ் இணையப் பல்கலைக்கழகம், பேராதனைப் பல்கலைக்கழக இந்துமா மன்றம், Sri Lanka Foundation Institute (S.L.F.I), யாழ்ப்பாணம் செஞ் சிலுவைச் சங்கம், இந்து சமய கலாசார அமைச்சு, திணைக்களம் ஆகிய நிறுவனங்களிலே இலக்கிய, சமய விரிவுரைகளை நிகழ்த்தி யுள்ளார்.

இவர் தேமதுரத்தமிழோசையினை உலகமெல்லாம் பரப்பும் கடப்பாட்டில் கால்நூற்றாண்டுக் காலம் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தின் தமிழ் சேவையில் சைவநற்சிந்தனை, இந்துசமய சஞ்சிகை நிகழ்ச்சி (அருளமுதம்), இலக்கியப் பேச்சுக்கள், இந்து சமயப்பேச்சு,

கலந்துரையாடல்கள், சொல்வளம் பெருக்குவோம், ஆலயத் திருவிழா நேர்முகவருணனைகள், நேர்காணல், கலந்துரையாடல்கள் என்பவற்றிலே பங்கேற்றுச் சேவையாற்றி வருவதும் தமிழ் கூறும் நல்லுலகம் அறிந்ததே.

அருள்மொழிச்செல்வர், செஞ்சொல்வாரிதி, இன்னிசைச்சொல் வேந்தன், செஞ்சொல்வாணர், மணிமொழிவாரி, நவரஸக் கலை ஞானி, சொற்பேராழி, சித்தாந்தபண்டிதர், அருட்கலைமாமணி, வாகீசகலாநிதி என்னும் கௌரவப் பட்டங்களைப் பெற்றுள்ள இவர் அகில இலங்கைச் சமாதான நீதிபதியும் ஆவார். ***கலாசுரபி*** (1979), தடுத்தாட்கொண்டபுராணம் (பல்கலைக்கழக உள்வாரி / வெளிவாரிப் பட்டதாரி மாணவருக்கான பாடநூல்) (1989), ***சிவதத்துவமலர்*** (1996), ***சத்திதத்துவமலர்*** (1996), ***நவநாதம்*** (1998), ***பக்திமலர்*** (2004), என்னும் நூல்களின் ஆசிரியர். நாடறிந்த பேச்சாளர். இவர் நாரந்தனை வண்ணார்பண்ண ஸ்ரீமான் பாலசிங்கம் பூமணி தம்பதியரின் மருமகனும் ஆவார். மனைவி இரதிமலர்தேவி, மகன்மார் பிரகாஷ், குருபரன், மகள் தாரணி குடும்பத்தார்.

பேராசிரியர், கலாநிதி க. அருணாசலம், M.A;Ph.D.

தமிழ்த்துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம்,
பேராதனை,
இலங்கை.
19-05-2004.



ARUDKALIMAAMANIAUM,SIDDHANTHA PANDIT,
VAAKEESAKALANITHI
KANAGASABAPATHY NAGESWARAN, B.A (HONS) : M.A.
(WHOLE - ISLAND JUSTICE OF THE PEACE)
SENIOR LECTURER, Cr. I,
DEPARTMENT OF LANGUAGES,
FACULTY OF SOCIL SCIENCE AND LANGUAGES,
SABARAGAMUWA UNIVERSITY OF SRI LANKA.

'Vakeesakalanithy' **Kanagasabapathy Nageswaran,** M.A. (born on August 05, 1952) hails from the hereditary chain of chieftains and from a noble and illustrious family of Nainathevu, where the Shree Nagapooshani Amman temple is situated. This temple is reckoned as 'Puveneswary – Peedam'. It is the most revered among 64 Hindu divine – powered Chapters of Sri Lanka.

K. Nageswaran is the eldest son of Thavasireshadar **Sriman Paramalingam Kanthasamy Kanagasabapathy** also known as "Arul Maamani" and 'Vithu Vaaddi' **Suntharampillai Kohilambal.**

He is a researcher in the field of literature, a 'Kalaignar', an academic and a lecturer in devotional songs (Thevarams), a translator, a commentator, an honorary doctor in the field of singing and reciting devotional songs. He is deservedly called a living idol of multifaceted and multi – skilled potentialities.

He is an old boy of Nawalapitiya Kathiresan College and Tellipalai Mahajana College. He received his Special degree in Tamil Literature under the guidance of **Prof. Kanagasabapathy Kailasapathy.** He received his post- graduate degree under the guidance and supervision of **Prof. A. Velupillai** of University of Jaffna in 1979 and 1988 respectively.

He is presently Senior Lecturer in Tamil and coordinator at the Department of Languages in the University of Sabragamuwa. He has produced several graduated from the Universities of Jaffna,

Sabragamuwa and the Virtual University. He is involved in research and analysis of many areas and sectors of the Tamil language. He has presented several research papers in areas like literature, society, arts, religion, history, archaeology, politics, magazine related journalism, education, culture, indigenous medicine, biography and mass media journalism.

His articles and research papers were published in literary magazines like *Koomuki,* Sevvanthi, Inthuneri, Inamulakkam, Thamil Oli, Parashakthi, Thean Poluthu, Ootu, Aalayamanai, Jeevasakthi, Thamilosai and Ullam. His articles were published in *Eelanadu,* Uthayan, Thinakaran, Virakesari and Tinakural.

He served for five years as assistant editor of Eelanadu during 1980-1985. He has served as relief announcer and producer for the Tamil Service of the SLBC. He participated in conferences held in Allahabad and Trichi in India and Malaysia in 1979 and 1983.

He research papers have been published in religious and literary magazines published in London and Canada.

He has delivered lectures on religion and literature at the Colombo Vivekananda Sabai, All Celylon Hindu Congress, Colombo Thamil Sangam, All Ceylon Kamban Kalagam, Jaffna Thiruneriya Thamil Isai Sangam, Ariya – Dravidian Language Development Society. He has spoken at Literary seminars, he has serves in the literary commimittees of the state Arts Council of the Ministry of Culture, Tamil Virtual University, Peradeniya University, Ministry of Hindu Religious Affairs and Department of Hindu Religious Affairs.

For 25 years he had been broadcasting over the Tamil Service of the SLBC on the virtues of Tamil language and thus spreading the Tamil language all over the world. His broadcasts also include talks on Saivaism, meditation, Hindu Religious subjects, Arul Amutham, word-power improvement etc. He is also a commentator of temple festival programmes.

He has been given honorary degrees and appellations such as **Arulmolichelvar, Sencholvaaarithi, Manimoli Vaarithi, Navarasakalaignanai, Sotperali, Saiva Sithantha Pandit, Arudkali Maamani and Vakeesa Kalanithi.** He is a **JP** for the whole island.

He is also well known orator and publisher of *Kalaasurapi* (1979). He also published *Thaduthaadkonda Puranam* (curriculum book for under graduates of universities internal and external examinations (1989), *Saivathathuvamalar* (1996), *Sakthithathuvamalar* (1996), *Navanaatham* (1998), and *Bakthimalar* (2004)

He is the son in law of Balasingam and Poomani of Vannarpannai. His wife is Rathymalardevi. His children are Pragash, Guruparan, and Tharani.

Prof and Dr. K. Arunasalam,
Department of Tamil,
University of Peradeniya
Sri Lanka.

முகவுரை

என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே.
(திருமந்திரம்)

தமிழியல் ஆய்வுச் சோலை என்னும் இந்நூல் என்னால் அவ்வப் போது எழுதப்பட்ட இலக்கிய ஆய்வுக்கட்டுரைகளைக் கொண்டது. நறுமண மலர்களைக் கொண்டமைவது பூஞ்சோலை. **வீழுமிய இலக்கியச் சிந்தனை களால் நிறைந்துள்ளது தமிழியல் ஆய்வுச்சோலை.**

பாவலர் தெ.அ. துரையப்பாபிள்ளை அவர்கள் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியை நிறுவிய பரோபகாரி. அவரெழுதிய கவிதை களடங்கிய நூல் ***சிந்தனைச் சோலை*** என்பது 1901 இல் வெளிவந்த முதல் கவிதை நூலாகும். ***கீதரசமஞ்சரி, சகலகுணசம்பன்னன்*** என்பன பிறநூல்களாம். பாவலரது இலக்கிய அடிச்சுவட்டிலே மகாஜனக் கல்லூரியின் புகழ்பெற்ற இலக்கியக் கல்விப் பாரம்பரியத்தின் பிறிதொரு வெளிப்பாடாக இந்நூல் ***தமிழியல் ஆய்வுச் சோலை*** என்னும் மகுடத்துடன் இப்பொழுது மலர்கிறது.

பல வண்ணத் தமிழிலக்கிய மலர்களைக் கொண்டமைவது இவ் வாய்வு நூல். இலக்கியச் சிந்தனையையும் செல்நெறியையும் விபரிக் கும் பாங்கிலே ஆய்வுக்கட்டுரைகள் இந்நூலிலிடம் பெறுகின்றன. தமிழ் மொழியையும், தமிழ் இலக்கியத்தையும், தமிழியற் சிந்தனைகளையும் தமிழ்ப் பண்பாட்டையும், தமிழர் கலாசாரத்தையும் நேசிப்போருக்கும் வாசிப்போருக்கும் இந்நூல் இன்பந் தருவதாகும்.

"தமிழ்" என்றால் "அறிவு" என்று பொருள். அறிவின் பன் முகப்பாட்டுத் தன்மைகளை இந்நூலிலிடம்பெறுங் கட்டுரைகள் எடுத் தியம்புகின்றன. பொதுவாகத் தமிழ்மொழி, இலக்கியம், கவிதை, சிறுகதை, இலக்கிய விமர்சனம், பக்தி இலக்கியம், பண்ணிசை, பெண்ணியம், காவியங்கள், பிரபந்தங்கள் என்னும் துறைகளில் பல்கலைக்கழகத் தமிழியல் ஆய்வறிஞர்களின் விழுமிய கருத்துக்களை மனங்கொண்டும், நூல்களிலே உசாவியும் இந்நூற் கருத்துக்கள் அமைந்துள்ளன. கருத்து களைப் பெற்றுக்கொண்ட நூல்கள் உசாத்துணை நூல்களாகத் தரப் பட்டுள்ளன. பொருளடக்கம் இந் நூலிலுண்டு.

பரீட்சை நோக்கில் மட்டுமன்றிப் பொதுநோக்கிலும் தமிழ் மொழியைக் கற்கவிரும்பும் எவருக்கும் இந்நூல் மிகுந்த பயன்பாட்டைத் தரும் என்பது என் நம்பிக்கை. நுனித்து நோக்குவோர்க்கு இந்நூலில் சிற்சில வழுக்கள், குறைகள் தென்படலாம். தனிமனிதப் பலவீனங்கள் அவை. மேலும் முற்றாகத்திருந்தவும், திருத்தவும் முயற்சிப்பேன். அன்பர்கள் வழுக்களைச் சுட்டிக்காட்டலாம். அறிஞர்கள் விமர்சிக்கலாம். சிந்தனை வளம் சிறந்து பெருகட்டும். சோலையிலே புதுமலர்கள் புஷ்பிக்கட்டும்; தமிழ் மணம் தமிழ் கூறுநல்லுலகெங்கும் பரவட்டும்.

இவ்வாய்வு நூலைத் தொகுத்தபோது எனக்குப் பெரிதும் உதவியவர் எனது ஊரவரும், உறவினரும் நூல் வெளியீட்டிலே நிபுணருமான கல்வியாலோசகநிபுணர் உயர்திரு. **இ.க.சிவஞானசுந்தரம், M.A** அவர்கள். சில ஆய்வுக் கட்டுரைகளைக் க. பொ.த. (உயர் தரத்தில்) G.A.Q, B.A, M.A. இல் தமிழ் கற்கும் மாணவ மணிகளுக்கு உதவும் வகையில் பரீட்சை நோக்கிலே ***வீடயத்தைக் கொடும்,*** என்று ஆலோசனை கூறியவர் அவர். அவருக்கு என் மனமார்ந்த நன்றிகள்.

என் எழுத்துக்களிலுள்ள தவறுகளைச் சுட்டிக்காட்டி எளிமையாகவும் பிறருக்கு விளங்கவும் எழுதுமாறும் விமர்சிப்பவர் என் அன்பு மனைவி ரதிமலர்தேவி. இந்நூலாக்கத்தின் போதும் சிறப்புற ஒத்துழைத்துச் செயற்பட்ட அவரது தன்னலமற்ற அன்பான பேருதவி களுக்கு என் மனமார்ந்த நன்றிகள். சுகமே வாழ்க.

இந்நூலைச் சரவை நிலையில் (Proof) எழுத்துத் திருத்தஞ் செய்து என் பணிகளை வெகு இலகுவாக்கியவர்கள் சப்ரகமுவ பல்கலைக் கழகத்திலே மொழித்துறையிலே என்னிடம் 2004 ஆம் ஆண்டு தமிழைப் பிரதான (Major) பாடமாகக் கற்ற பட்டதாரி மாணவ மாணவிகள். நெடுந்தீவைச் சேர்ந்த செல்வன கு. ஜனப்பிரியன், அனந்தர்புளியங் குளத்தைச் சேர்ந்த செல்வன் பொன். ஆறுமுகரஞ்சன், புத்தூரைச் சேர்ந்த செல்வி சுவிதா செகசோதி, கோப்பாயைச் சேர்ந்த சிந்துஷா குகதாசன் ஆகிய கலைப் பட்டதாரிகள் என்பெரு நன்றிக்குரியவர்கள். இவர்கள் வாழ்வு தமிழால், செந்தமிழ்த் தெய்வம் முருகனாலே வளம் பெறுவதாக என மனமார வாழ்த்துகிறேன். என்றும் என் நல்லாசிகள் உரித்தாகும்.

இந்நூல் வெளியீட்டில் என்னை ஊக்குவித்த தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் கொழும்புக் கிளையின் பேரவை உறுப்பினர்கள்

என் வளர்ச்சியில் பெரும் பங்களிப்பை நல்கினர். குறிப்பாக மகாஜனக் கல்லூரியின் எதிர்காலம் பற்றியும் அதன் பெரும் புகழ் மங்காத வகையிலே எதிர்காலத்தில் பணிகளாற்ற வேண்டும் என்றும் துடிக்கும் உயர் கணிதத் துறை நிபுணர், கணிதமேதை, பேராசான் உயர்திரு. **த. பூ. முருகையா** ஆசிரியரின் உதவிகள் என் குருதியோட்டத்தில் என்றும் நின்று நிலைப்பன. முகாமைப் பேரவையினருக்கு என் பணிவான நன்றியும் வணக்கமும் உரித்தாகுக. வெளியீட்டுரையினை எழுதிய தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கக் கொழும்புக் கிளையின் தலைவர் உயர் திரு ச. சிறீகணநாதன் அவர்கட்கு நன்றி வணக்கம்.

எனது உயர்விலே என்றும் கரிசனையுடையோர் என்றென்றும் பெருமதிப்புக்குரிய நால்வர். இளமையில் எனக்குக் கல்வி போதித்த என்பேராசான் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கல்வியியற் புலத்தின் தலைவரும் பேராசிரியருமான முனைவர் **சபா. ஜெயராசா** அவர்கள். இரண்டாமவர் காரைநகர்த் **தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் தலைவரும்.** காரை மணிவாசகர்சபையின் காப்பாளருமான இலக்கிய கலாநிதி, **சிவத்திரு க. வைத்தீசுவரக் குருக்கள்.** மற்றவர் நான் மறையுமட்டும் என்னுள் மறையாமல் நிலைத்து உயிர்த்து வாழும் பேராதனைப் பல்கலைக்கழகத் தகைசார் ஓய்வுநிலைப் பேராசிரியரும், பெருங் கல்விமானும், மானிடத் தெய்வமுமான **கலாகீர்த்தி, பேராசியர் சீ. தில்லைநாதன் தம்பதியர்.** மற்றயவர் எனக்குத் தமிழியற் கட்டுரைகளை எழுதும் பயிற்சியை செப்பமாய் வழங்கிய என் பேராசான் இதழியற் கல்லூரியின் விரிவுரை யாளர் ***சிந்தனைச் செம்மல்,*** அறிவியல் வசனநடை கைவந்த வல்லாளர் **திரு. ஆ.சிவநேசச்செல்வன், M. A. M.Sc** அவர்கள். இவர்களின் உந்தலே இந்நூல். ஆசியுரைகளையும், பாராட்டு வாழ்த்துக்களையும் எழுதி வழங்கிய சான்றோர்க்கு என் இருதய பூர்வமான நன்றிகள் ; இவர்கள் அனைவரதும் இனிய நல்லாசிகள் எனக்கு என்றும் வேண்டும்.

என் **தமிழியல் ஆய்வுச் சோலை** யை மிக நேர்த்தியாகவும், செப்பமாகவும், அருமையும் அழகும் கவர்ச்சியும் பொதுளியதாகவும் கணினியிலே அச்சேற்றிய **வெள்ளவத்தை SDS கணினி** விற்பன்னர்கள் என் பாராட்டுக்கும் வாழ்த்துக்குமுரியவர்கள்; மெச்சத்தக்கவர்கள். இவர் களது பொறுமை நிலத்தினும் பெரிதே!

முடிவாக, நூலுருவாக்கம் என்பது பலவகையிலும் நிரம்பிய சுமை தருவது. என் பெருஞ் சுமையைத் தமிழ்கூறு நல்லுலகம் குறைத்து இனிமேல் என்னைத் தூக்கித் தாங்கும் என்று திடமாக நம்புகிறேன்.

நானும் **செந்தமிழிலே** நூலெழுதவும் வெளியிடவும் பேரருள் புரிந்த **தனிப்பெருந் தமிழ்த் தெய்வம் முருகக் கடவுளின்** பரங்கருணையையும் **அம் முருகனைத் தந்த அன்னை, உலக மாதா நயினை ஸ்ரீ நாகபூஷணீ அம்பாளின்** திருவடிகளையும் சிந்தித்து வந்தித்து வணங்குகிறேன். உங்கள் தமிழியற் சிந்தனைகளும் வளம் பெறுவதாகுக. இனிச் சோலையுள் நுழைந்து அதன் மாட்சியையும், கருத்துக் காட்சியையுங் கண்டு களிமகிழ் வெய்துங்கள்.

வாழ்க தமிழ்.

கனகசபாபதி நாகேஸ்வரன்.

மொழித்துறை,
சமூக விஞ்ஞான மொழிகள் பீடம்,
சபரகமுவ பல்கலைக்கழகம்,
பெலிகுல்லோயா,
இலங்கை.
14.02.2005.

இலக்கியமும் திறனாய்வும்

காலத்தின் தேவை கருதி உருவாக்கப்படுவது இலக்கியம். இதனாலேயே **காலத்தின் கண்ணாடி இலக்கியம்** எனச் சிறப்பிக்கப் படுகிறது. தரமான இலக்கியத்தினை அறிவதற்கு உறுதுணையாக அமைவது திறனாய்வு ஆகும். வாழ்க்கையின் சுவைதரு கூறாகிய இலக்கியம் அவ்வாழ்க்கை பற்றிய விமர்சனமாகவும், வாழ்க்கையின் இலக்கணமாகவுங் கூட விளங்குகிறது. வாழ்க்கையின் நன்மை தீமைகள், இன்பதுன்பங்கள். உயர்வு தாழ்வுகள், யதார்த்தம், கற்பனை ஆகியவற்றின் திறன்களைச் சுவைபடத் தருவது இலக்கியம்.

சிறந்த படைப்பாளர் இலக்கியத்தினூடாக வாழ்க்கையைத் திறனாய்வு செய்கின்றார். திறனாய்வாளர் இலக்கியத்தை விமர்சனம் செய்வதன் மூலம் வாழ்க்கையை அளவீடு செய்கிறார். இருவரதும் உயர்வின் ***மூலாதாரம்*** மனித வாழ்க்கையே தவிர இலக்கியமன்று. விமர்சனம், திறனாய்வு, நலனாய்தல், தாரதம்மியம் காணுதல் என்பன மனிதனின் இயல்பூக்கங்களாகும். மனிதனுடைய திறனாய்வின் தராதரத்தைக் கொண்டே சமுதாயம் அவனைக் கணிக்கிறது. *திருக்குறள், கம்பராமாயணம்,* இறையனார் களவியலுரை, கந்தபுராணம் போன்ற இலக்கிய நூல்களின் அரங்கேற்றத்தின் போது பல தர்க்கங் களும், வாதப்பிரதிவாதங்களும் நிகழ்ந்துள்ளன. தமிழ்மொழியில் மூலக்கூறுகளை இலக்கிய ரீதியாகவும் வழக்கு ரீதியாகவும் ஆராய்ந்து அவற்றின் பொதுவான இயல்பினை வரையறுத்துத் தருவது இலக்கண மாகும். நலனாய்தலானது தனியே உணர்வுபூர்வமாக இலக்கியத் தினை அணுக, திறனாய்வு என்பது உணர்வுபூர்வமாகவும் அறிவு பூர்வமாகவும் இலக்கியத்தை அணுகுகின்றது என்பதே உண்மை நிலையாகும்.

திறனாய்வு இலக்கியமானது ஏற்கனவே உருவாக்கப்பட்ட இலக்கியங்களில் அமைந்து கிடக்கும் பொருள், உணர்ச்சி, கற்பனை, வடிவம் போன்ற பொதுத்தன்மைகளை அடிப்படையாகக்கொண்டு இலக்கியக் கொள்கைகளை உருவாக்குகிறது. இலக்கியத் திறனாய்வு ஓர் அரிய கலையாகும். அறிவுக்கும் இடம் கொடுத்து உணர்வுக்கும் இடங்கொடுத்து வளர்ந்துவரும் ஒரு பெரிய துறை. பண்பட்ட இலக்கியப் படைப்புக்கும் தரமான இலக்கிய இரசனைக்கும் நிலைக்களமாக விளங்கவல்ல உண்மைகளையும் கருத்துக்களையும் சிந்தனை

களையும் வகுத்தும் தொகுத்தும் வழங்கி வரும் ஓர் அற்புத மான கலையறிவுக் கருவூலம் ஆகும். இவ்விலக்கியத் திறனாய்வானது கணிதம் போலவும் தாவரவியல் போலவும் அமைந்த ஒன்றன்று. மனித உணர்வோடும், உள்ளத்தோடும், அபிலாஷைகளோடும் தொடர்புடைய கலையை ஒட்டியமைந்த ஒன்று.

தனது உள்ளம் கவர்ந்த ஒன்றைக் கலைஞன் படைக்க அப்படைப்பை மற்றொருவர் கண்ட காட்சியை மையமாகக் கொண்டு பிறப்பதே இலக்கியத் திறனாய்வு. இதனாலேயே *கம்பராமாயணத்திற்* கமைந்த ஏதோ ஒரு நிலைத்த இலக்கியப்பண்பு பலரின் சிந்தனைக் குரியதாகி இன்று அது ஓர் அமரகாவியமாய், காலவெள்ளம் கடந்து நின்ற அற்புதக் கலைக் கருவூலமாய் உலகச் சிந்தனையைத் தூண்டி விடும் ஒப்பற்ற பெருநூலாய் விளங்குகின்றது. காரணம் யாரோ ஒருவர் அதற்குரிய இறவா இலக்கிய இயல்புகள் பலவற்றிலும் உள்ளபடி கண்டறிந்து பிரித்து உணர்த்தி இரசிகப் பெருமக்களுங் கண்டு அனுபவிக்குமாறு செய்தமைதான். இத்தொடர்பிலே வ. வே. சு. ஐயர், பேராசிரியர்கள் இராமகிருஷ்ணன், இராதாகிருஷ்ணன், அ. ச. ஞானசம்பந்தன், கம்பனடிப்பொடி, இலக்கிய கலாநிதி, பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை போன்றோர் குறிப்பிடப்படவேண்டியவர்கள்.

இலக்கியத் திறனாய்வாளனுக்குரிய தகுதிகளும் வரன்முறை களும் சில இருக்கின்றன. திறனாய்வாளன் தமக்கென்றே அமைத்தி ருக்கக்கூடும் சில மனவியல்புகளுக்கு அப்பாற்பட்டுச் சொந்த விருப்பு வெறுப்புகளுக்கு இடந்தராது ஒரு குறிப்பிட்ட இலக்கிய இயக்கத்தின் தனிப்பட்ட இலக்கிய மதிப்பீட்டிற்கு இரையாகாமல் தற்கால அரசியல், சமுதாயச் சூழ்நிலைகளைத் தாண்டித் தம் முடிவுகளை அறிவிக்க வேண்டும். ஒரு கலைப்படைப்பைச் சாதாரண மக்கள் சுவைத்து மகிழ் வதற்கும் இலக்கியத்துறை வல்லுநர் சுவைத்து மகிழ்வதற்கும் இடையே வேறுபாடு உண்டு. திறனாய்வாளன் என்பவன் இவ்வேறு பாட்டின் உண்மை நிலையை உள்ளபடி எடுத்துக்காட்டிப் பொதுமக் களின் சுவையுணர்வினை இரசனையை மேன்மேலும் ***பண்படுத்தி*** உயர்ந்த தரமான நிலைக்கு உயர்த்தவேண்டும்.

வேகமாக வளர்ந்துவரும் இலக்கியப் படைப்புருவாக்கங்களுக் குள்ளே இறவாத் தன்மையுடைய இலக்கியங்கள் இவையெனச் சுட்டிக்காட்டும் துணிவும், திறமையும், புத்திக் கூர்மையும், ஆளுமையும், நேர்மையும் திறனாய்வாளனுக்கு இருக்கவேண்டும். வாழ்க்கையிலிருந்து மலர்வது இலக்கியம். இலக்கியம் பற்றியது இலக்கியத் திறனாய்வு.

திறனாய்வாளன் வாழ்க்கையைப் பற்றியும் மனித இயற்கைத் தன்மையைப் பற்றியும் நேரடியான அறிவோ அனுபவமோ பெற்றாலன்றி, வாழ்வினின்று தழைத்தெழுந்த இலக்கியம் பற்றி முறையாகத் திறனாய்வு செய்ய இயலாது. எனவே திறனாய்வாளனென்பவன், நாம் (வாசகர்) ஒரு கலைப்படைப்பைச் சரியாகப் புரிந்துகொள்ளவும் சுவைத்து மகிழவும் பெரிதும் உறுதுணை செய்கின்றான்.

காலச்சூழ்நிலைக்கும், அவ்வப்போது எழுகின்ற சமுதாய அரசியல் பொருளாதார அமைப்புகளுக்கும் கோட்பாடுகளுக்கும் ஏற்ற படி இலக்கியக் கலை பற்றிய சிந்தனையும் நோக்கும் படைப்புத் தொழிலின் போக்கும் வேறுபட்டு வளர்ந்து வந்திருக்கின்றன. இந்த வேறுபாடுகள் காரணமாக இலக்கியத் திறனாய்வுத் துறையிலும் புதிய புதிய கொள்கைகளும் முறைகளும் வகைகளும் உருப்பெற்றுள்ளன. ***மாற்றமென்பது வளர்ச்சியின் அடிப்படை.***

இன்று திறனாய்வு வகைகள் பலவாக வளர்ந்து விரிந்து மொழி இலக்கிய ஆராய்ச்சிக்குப் பெரிதும் துணை செய்கின்றன. திறனாய்வின் வகைகள் பின்வருமாறு வசதிகருதி வகுக்கப்பட்டுள்ளன:

1. படைப்புவழித் திறனாய்வு.
2. மரபுவழித் திறனாய்வு.
3. விதிமுறைத் திறனாய்வு.
4. முருகியல்முறைத் திறனாய்வு.
5. விளக்கமுறைத் திறனாய்வு.
6. மதிப்பீட்டுமுறைத் திறனாய்வு
7. வரலாற்றுமுறைத் திறனாய்வு.
8. சொல், பொருள், கலைதுணுக்கத் திறனாய்வு
9. வாழ்க்கை வரலாற்றுவழித் திறனாய்வு
10. ஒப்பீட்டுமுறைத் திறனாய்வு.

என்பனவாகும். இன்று **மொழியியல் நோக்கிலே படைப்புகளை அணுகித் திறனாய்வு செய்வது** கூர்மையடைந்துள்ளது.

சுவைக்கு நிலைக்களமாயமைத்து ஒவ்வொருவரும் பயிலும் போதும் இடையறாது ஊறும் நீரூற்றுப்போல அவ்வொவ்வொரு வருக்கும் புதுபுதுச்சிந்தனைகளையும் உணர்வுகளையும் சுரந்து கொடுக்கும் இலக்கியக் கலைக்கு அமையும் திறனாய்வு தனிப்பட்ட மனிதன் ஏதேனும் சில தனிப்பட்ட சிந்தனைச் சாயத்தோடு அமைவதை முற்றும் தவிர்த்துவிட முடியாது. அதேசமயம் தன் சொந்தச்

சிந்தனைக்கே முதலிடம் கொடுத்துக் கவிஞனின், படைப்பாளனின், கலைஞனின் நோக்கையும் அவன் வாழ்ந்த காலகட்டத்தையும் மறந்து விட்டுத் திறனாய்வு செய்ய முற்படுவது அறிவீனமாகும்; பொருத்த மற்றதாகும்.

படைப்புக் கலையின் அமைப்பையும் அழகையும் நுண்மாண் நுழைபுலத்தையும் அரிய கலை உத்திகளையும் ***மூலநூல்வழியே*** சென்று கண்டுகாட்டிய பணியைச் செய்துள்ள அளவில் ***உரையாசிரியர் களைத் திறனாய்வாளர்கள்*** எனக் கொள்ளலாம். அன்றியும் ஒரு நல்ல திறனாய்வாளனுக்கு வேண்டிய அ.்.கி அகன்ற அறிவும் ஆழ்ந்த நோக்கும் பல்கலைத் தேர்ச்சியும் ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட துறையில் பெற்ற முற்றிய புலமையும், நூல்கள் பலவற்றிலும் கண் தோய்ந்து தெளிந்து பின்னர் உரையெழுதும் பண்பும், உலகியல் உணர்வும், பன்னூற் புலமையும், மொழியைத் திறம்படக் கையாளவல்ல போராற் றலும், இயற்கை, வாழ்க்கை, இலக்கியம் ஆகியவற்றைக் கண்டு தெளிந்த கலைஞானமும் ***உரையாசிரியர்கள்*** பெற்றிருந்தனர் என நோக்கும்போது அவர்களைத் திறனாய்வாளர்களெனக் கொள்ளுதல் பொருத்தமெனலாம். இவை திறனாய்வுக்கலை தொடர்பான தமிழிலுள்ள ஆரம்பகால நிலைமைகள்.

ஒவ்வொரு காலத்திற்கும் ஒவ்வோர் இலக்கியப் பரம்பரைக்கும் ஏற்ப இடத்தை ஒட்டியும் சமுதாயச் சூழலை ஒட்டியும் திறனாய்வுக்கலை வளர்ந்து வந்துள்ளது. ***உரையைக் கொண்டு மூலத்தையும், மூலத்தைக் கொண்டு உரைகளையும் பல சமயங்களில் அறிந்து கொண்டதுண்டு*** என்று கூறுகின்றார் டாக்டர் உ. வே. சாமிநாதையர். மூலநூலின், (TEXT) பொருளையும் அமைப்பையும் முழுமையாகக் கண்டுகாட்டி, பண்பட்ட, திருந்திய இலக்கியப் பயிற்சிக்கு வழிமுறைகளைக் காட்டும் திறனாய்வாளர்களாகப் பழங்காலத் ***தமிழ் உரையாசிரியர்கள்*** விளங்கினர் என்பது தெளிவாகின்றது. ***மரபுநிலை தெரிந்தாலே நவீனம் உயிர்ப்புப் பெறும்.***

ஆய்வுப் பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை தமிழிலே அறிவியல் முறையான இலக்கிய ஆய்வு நெறியினைத் தோற்று வித்தார். இலக்கியம் சார்ந்த பல்துறைகளிலும் அவர் சேவையாற் றினார். அவர் 45க்கு மேற்பட்ட நூல்களைப் பதிப்பித்தார், எழுதிய 23 நூல்கள் வெளிவந்துள்ளன. இவர் ஓர் ஆய்வாளர் மட்டுமே. இலங்கையில் பேராசிரியர்கள் பலர் ஆய்வுத் துறையிலே ஈடுபட்

டுள்ளனர். அவர்களிலே மிகச் சிலர் சிறந்த உலகப் புகழ்பெற்ற திறனாய்வாளர்களாகத் திகழ்கின்றனர். பேராசிரியர்கள் சுவாமி விபுலாநந்த அடிகள், சு. வித்தியானந்தன், க. கணபதிப்பிள்ளை, வி. செல்வநாயகம், ஆ. வேலுப்பிள்ளை, க. கைலாசபதி, கா. சிவத்தம்பி, சி. தில்லைநாதன், எம். ஏ. நு.ஃமான், இ. பாலசுந்தரம், க. அருணாசலம், நா. சுப்பிரமணியன், எஸ். சிவசேகரம், அ. சண்முக தாஸ், மனோன்மணி சண்முகதாஸ், சி. மௌனகுரு, சித்திரலேகா மௌனகுரு, பொ. பூலோகசிங்கம், சோ. ஃகிருஷ்ணராஜா, சபா. ஜெயராசா, செ. யோகராசா, அம்மன்கிளி முருகதாஸ், கலாநிதிகள் துரை. மனோகரன், முருகையன், க. குணராசா, ச.ஜெபநேசன், க. சொக்கலிங்கம், க. சண்முகலிங்கம், ஏ. ஜே. கனகரட்னா, பண்டிதர் க. உமாமகேஸ்வரன், கவிஞர் சோ. பத்மநாதன், விரிவுரையாளர் ஆ. சிவநேசச்செல்வன் போன்றோர் சிறந்த கலை இலக்கியத் திறனாய்வாளர்களாக இன்று மதிக்கப்படுகின்றனர். டி. கே. சி., வாகீச கலாநிதி கி. வா.ஜகந்நாதன், இரசிகமணி கனக. செந்திநாதன் ஆகியோர் சிறந்த இலக்கிய நலனாய்வாளராவர். இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, மகாவித்துவான் F. X. C. நடராசா, பேராசிரியர் ஆ. சதாசிவம் போன்றோர் மரபுவழி இலக்கியத் தடத்தைப் பெரிதும் அறிமுகப்படுத்தினர். இலக்கிய நூலறிமுகம், மதிப்பீடு என்னுந் துறைகளிலே விமர்சகர் கே. எஸ். சிவகுமாரனின் பணிகள் குறிப்பிடற்பாலன. கலை, இலக்கியம், சமய மெய்யியல், இசை ஆர்வலர் வாகீச கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன், M.A இன் இலக்கிய விமர்சனப் பார்வைகள் மொழிச் செம்மையும் செழுமையும் வாய்ந்தவை ; பக்கச்சார்பற்றவை; கட்சிச் சார்பற்றவை.

தலைசிறந்த இலக்கியத் திறனாய்வாளர்களான பேராசிரியர்கள் க.கைலாசபதி, கா.சிவத்தம்பி, எம்.ஏ. நு.ஃமான் சபா. ஜெயராசா, சி. தில்லைநாதன், க. அருணாசலம்., நந்தி, செங்கையாழியான், மு. பொ, எஸ். பொ. ஆகியோரும் க. நா. சு, எஸ். தோத்தாத்திரி, கனகசபாபதி, புதுமைப்பித்தன், வல்லிக்கண்ணன், ஜெயகாந்தன், டொமினிக் ஜீவா போன்றோரும் அறிவியல் ரீதியாக இலக்கியத்தின் திறன்களை ஆராய்ந்தனர். வாழ்க்கையினதும், சமுதாயத்தினதும் உணர்வு வெளிப் பாடான இலக்கியத்தை ***அறிவியல், சமுதாயவியல்,*** இயங்கியல் விஞ்ஞான ரீதியாக அணுகுவதே சிறந்த திறனாய்வு என்றும் அதுவே ***மார்க்சிய அணுகு முறைத் திறனாய்வு*** என்பர். பல்கலைக்கழகக் கல்வி யின் போது எனது பேராசான்களாகத் திகழ்ந்தவர்கள் பேராசிரியர்கள், கலாநிதிகள் க. கைலாசபதி, கா. சிவத்தம்பி, நா. சுப்பிரமணியம்,

அ. சண்முகதாஸ், கா. கைலாசநாதக் குருக்கள், வி. சிவசாமி, சி. க. சிற்றம்பலம், கா. இந்திரபாலா போன்றோர். பேராசிரியர் கலாநிதி சி. மௌனகுருவின் நெறியாள்கையிலே "புதியதொரு வீடு" நாடகத் திலே நானும் பாத்திரமேற்றுப் பாடி நடித்துள்ளேன். சித்திரலேகா மௌனகுரு, கலாநிதி நு.ஃமான் பேராசிரியர்கள் கைலாசபதி, சிவத்தம்பி, சண்முகதாஸ், சுப்பிரமணியன், துரை மனோகரன், ஆகி யோரது இலக்கியத் திறனாய்வு விரிவுரைகளிலே வகுப்பில் இருந்து மாணவனாகக் கற்றேன். ***பெண்ணியம்*** இன்று திறனாய்விலே பிரதான முதன்மை இடம் பெறுகிறது. "இலக்கியமொழிப் பிரயோகத்திலே ஆணாதிக்கம் மேலோங்குவதாகவும், பெண் நிலை நோக்கு நின்ற அணுகுமுறை வரவேற்கப்படவில்லை, பெண் தளை நீக்கம் வேண்டும் என்பதும் பெண்ணிலை வாதிகளது குற்றச்சாட்டாகும். எழுத்தாளர்கள் பாலேஸ்வரி நல்லரத்தினசிங்கம் (திருகோணமலை) பத்மா சோமகாந்தன், பேராசிரியை சித்திரலேகா மௌனகுரு, செல்வி. திருச்சந்திரன், கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ், பேராசிரியை அம்மன்கிளி முருகதாஸ், திருமதிகள் அன்னலட்சுமி இராசதுரை, முருகபூபதி, தேவகௌரி, திருமதி சர்வமங்களம் கைலாசபதி, கோகிலா மகேந்திரன் போன்றோரும், பல முஸ்லிம் பெண் எழுத்தாளர்களும் பெண்ணியம் தொடர்பான விஷயங்களை அலசுகின்றனர்; நவீன பெண்ணியம் இவர்களனைவரதும் அபிலாஷை. எழுதுகின்றனர், மா நாடுகள் நடத்துகின்றனார், விவாதிக்கின்றனர்; சாடுகின்றனர். **நவீன பெண்ணியம் என்பதே இவர்களனைவரதும் அபிலாஷை.**

தமிழில் திறனாய்வுத்துறை நவீன இலக்கியங்களின் தோற்றத் துடனேயே பிரக்ஞை பூர்வமாக வளரத் தொடங்கியது. அதற்கு முன்னர் உரைப்பாரம்பரியமே தமிழ் இலக்கிய உலகில் ஆட்சியும் செல் வாக்குஞ் செலுத்தியது. ஏறத்தாழ 1930 களில் இருந்து நவீன இலக்கிய விமர்சனம் வளரத் தொடங்குவதைக் காணலாம். வ. வே. சு. ஐயரின் பின் 1930 இல் மணிக்கொடியைக் களமாகக் கொண்டு கு. ப. ரா. புதுமைப்பித்தன், சிட்டி முதலானோர் நவீன இலக்கியங்கள் பற்றிய விமர்சன முறைகளிலே இறங்கினர்.

அண்மைக் காலங்களில் நவீன இலக்கியக் கோட்பாடுகள், அமைப்பியல் வாதம், பெண்ணிலை வாதம், ***தலித்*** இலக்கிய நோக்கு என்பன தமிழ் விமர்சனத்துறையிலே பங்கேற்கத் தொடங்கின. இலக்கியச் சஞ்சிகைகளான *சரஸ்வதி, சாந்தி, எழுத்து, தாமரை* முதலானவை தமிழ் நாட்டில் இலக்கிய விமர்சனத்துக்குக் களம் அமைத்தன. *தீபம், கணையாழி, சுபமங்களா* என்பனவும் இலக்கிய சஞ்சிகைகளும்

விமர்சனம் உரம் பெறுவதற்குத் தகுந்த பங்களிப்பை நல்கின. ஈழத்தில் ***ஈழகேசரி*** யும் 1940 களில் ***மறுமலர்ச்சி***யும் விமர்சன வளர்ச்சிக்கு உதவின. சி. வைத்தியலிங்கம், சோ. சிவபாதசுந்தரம், இலங்கையர் கோன், அ. செ. முருகானந்தன், அ. ந. கந்தசாமி என்போர் இத்துறை யில் குறிப்பிடத்தக்கவர்கள்.

இலங்கையின் இலக்கிய விமர்சனத்துறையின் ஆரம்ப கட்டங் களில் இலக்கியத்தின் உருவம், உள்ளடக்கம் பற்றிய விமர்சனக் கண்ணோட்டங்கள் வெளியிடப்பட்டன. இதனையடுத்துத் தேசிய இலக்கியக் கோட்பாடு வளர்ச்சிபெறத் தொடங்கியது. தேசிய இலக்கியம் பற்றிய பிரக்ஞை நாற்பதுகளிலிருந்து வளரத் தொடங்கி ஐம்பதுகளிலிருந்து அது முதன்மைபெற ஆரம்பித்தது என்பர்.

தமிழிலக்கியத் திறனாய்வு நோக்கிலே இலங்கைப் பல்கலைக் கழகங்களின் ஆழமான விமர்சனப் பணிகள் விதந்து குறிப்பிடற்பாலன. பேராசிரியர் சுவாமி விபுலானந்த அடிகள் நவீன விமர்சன முயற்சி களுக்கு முன்னோடியாக விளங்கினார். முதல் தமிழ்ப் பேராசிரியராக விளங்கிய இவர் 'பயனுள்ளவற்றை அறிமுகப்படுத்தல்' என்ற முறை மையிலே தமது விமர்சனப் பணிகளை அமைத்துக்கொண்டார். மகாகவி பாரதியை உரிய முறையில் அறிமுகப்படுத்தினார். பேராசிரியர் கள் க. கணபதிப்பிள்ளை, வி. செல்வநாயகம் என்போர் பல்கலைக் கழக மாணவர் மத்தியில் தமிழில் இலக்கிய விமர்சனம் பற்றிய அறிமுகத்தையும், பயிற்சியையும் திறம்படச் செய்தனர். *தமிழ் உரை நடை வரலாறு, தமிழ் இலக்கிய வரலாறு* எனும் நூல்கள் விமர்சனத் துறையிலே பெரும் புகழ் பெற்றவை.

தமிழ் இலக்கிய விமர்சன ஆய்வறிவுத் துறையிலே புதிய ஜீவ ஒளியைப் பாய்ச்சிய பேராசிரியர், கலாநிதி க. கைலாசபதியின் வரவு பல்கலைக்கழகத்தில் இடம்பெற்றது. வரலாற்றுப் ***பொருள் முதல்வாத*** அடிப்படையைக் கொண்டு சமுதாய வளர்ச்சி அம்சங்களோடு இலக்கியத்தை இணைத்து நோக்கும் ***முற்போக்குப் பார்வையை*** அவர் தமது அணுகு முறையாகக் கொண்டிருந்தார். அவரது ***ஒப்பியல் நோக்கும், சமூகவியற் பார்வையும்*** இன்றும் முதன்மை பெற்று விளங்கு கின்றன. இலக்கிய ஆய்வுக்கும், இலக்கிய விமர்சனத்துக்கும் இடையி லான ***தூரத்தைக்*** கைலாசபதி பெருமளவு குறைத்திருந்தார். சங்க இலக்கியம் முதல் நவீன இலக்கியம் வரை அவரது பார்வையின் வீச்சுப் பரந்திருந்தது. ***இரு மகாகவிகள், Tamil Heroic Poetry, பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும். ஒப்பியல் இலக்கியம்,*** *தமிழ் நாவல் இலக்கியம்*

முதலான அவரது நூல்களும் பல்வேறு கட்டுரைகளும், பிறரது நூல் களுக்கு அளித்த முன்னுரை, அணிந்துரைகளும் தமிழ் இலக்கிய விமர்சனத் துறையிற் பெருந் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. யாழ் பல்கலைக்கழகத்திலே எனக்கும் இலக்கிய விமர்சனம் கற்பித்த பேராசிரியர் கைலாசபதியின் நூல்களை மாணாக்கர் தேடிப் பிடித்துப் படிப்பது அவசியம். கைலாசபதியின் விரிவுரைகள் ***சிந்தனைகளின் கதம்பம்*** ; ***சொல்லாடல் விரிவுரை அபாரம்*** ; **தரமிக்கவை கருத்தியல் செழுமை வாய்ந்தவை.**

தமிழ் இலக்கியத் திறனாய்வுத் துறையிலே இன்றும் ஈழத்தில் புகழ்க்கொடி நாட்டி உயிர்த்துடிப்புடன் செயற்படுபவர் எனக்கு யாழ் பல்கலைக்கழகத்திலே தமிழ் கற்பித்த பேராசிரியர், கலாநிதி கார்த்திகேசு சிவத்தம்பி ஆவார். பழந்தமிழ் இலக்கியம் முதல் நவீன நாடகம், மொழிபெயர்ப்புகள் வரை அவர் தமது பார்வையின் வீச்சை ஆழ அகலப்படுத்திப் பேசியும், எழுதியும் வந்துள்ளார் ; வருகிறார். தமது பயன்மிக்க விமர்சனப் பங்களிப்புகளினால் இலக்கியவுலகின் சிகரமென உயர்ந்து விளங்குகின்றார். ***தமிழில் சிறுகதைகளின் தோற்றமும் வளர்ச்சியும், நாவலும் வாழ்க்கையும், தனித்தமிழ் இயக்கத்தின் அரசியல் பின்னணி, யாழ்ப்பாணத்தின் புலமைத்துவமரபு, பேராசிரியர் கணபதிப் பிள்ளை, ஈழத்து தமிழ் இலக்கியத்தடம், தமிழில் இலக்கிய வரலாறு*** முதலானவையும் அவரது இன்னும் பல்வேறு நூல்களும், கட்டுரைகளும், அணிந்துரைகளும் திறனாய்வுத்துறையின் தரமான வளர்ச்சிக்கு உறுதுணை புரிந்துள்ளன. பேராசிரியர், கலாநிதி, சாகித்தியரத்னா கார்த்திகேசு சிவத்தம்பி அவர்கள் தலை சிறந்த கல்விமான்; பேராசிரியர், பேராசான்; மொழிபெயர்ப்பாளர்; சிந்தனை யாளர்; புதியபுதிய தமிழ்ச் சொற்களை உருவாக்கும் பெருவல்லமை படைத்தவர்; ஒப்பீட்டு ரீதியில் நுணுகி ஆராயுந் திறன்மிக்கவர்; மெச்சத்தக்க முறையிலே விரிவுரைகளாற்றும் தனித்திறன் மிக்கவர்; சிக்கல்களையும், கருகலானவற்றையும் சுளுவாகத் தீர்ப்பதில் சாணக்கி யமிக்கவர், ஆய்வறிவு நுட்பமும், மாணாக்கரை நெறிப்படுத்தும் மாண்பும், தமிழியல் ஆய்வரங்குகள், மாநாடுகள், கருத்தரங்குகள், கலந்துரையாடல்களிலே பங்கேற்றுத் தமிழுக்காகவே நேரச் செலவு செய்து தேமதுரத்தமிழோசை உலக மெல்லாம் பரவும் வகை செய்து வருபவர். சர்வதேசப் பல்கலைக்கழகங்களின் இளங்கலை மாணி, முதுமாணி, தத்துவமாணி, கலாநிதிப் பட்டப்படிப்புகளின் ஆய்வு மேற்பார்வையாளராகப் பணிபுரிபவர். அதிதிப் பேராசிரியர், யாழ்ப்பாணப்

பல்கலைக்கழகத்துத் தகைசார் பேராசிரியர். கிழக்குப் பல்கலைக் கழகத்திலே வருகை விரிவுரையாளராகவும், பேராசிரியராகவும் பணி புரிந்தவர். ***மல்லிகை***, ***ஞானம்*** சஞ்சிகைகளிலும், பல்கலைக் கழக ***இளங்கதிர்*** வெளியீடுகளிலும் பேராசிரியர் கா. சிவத்தம்பியின் இலக்கிய எழுத்து ஆளுமையையும் பன்முகப் பணிகளையுங்கண்டு தெரியலாம். இக் கட்டுரையாளர் (நூலாசிரியர்) (பல்கலைக்கழக மாணவனாக) இருந்தபோது பேராசிரியர், கலாநிதி கா. சிவத்தம்பி ஆசானிடம் கண்ட புதுமைகள் வலுமிக்கவை.

I. "ஏதாவதொரு புதுநெறியில், புதுத்தடத்தில் சிந்திக்குமாறும், எழுதுமாறும் தூண்டிவிடும் வல்லமை படைத்தவர் (ஆசிரிய மாணவர் உறவில்) என்ற அவரது அறிவாற்றற் பாதிப்பின் தன்மை நோக்கு." நான் அவரிலே கண்டது.

II. ஒன்றன்பின் ஒன்றாக அடுக்கடுக்காக எதுவிதத் தங்குதடையு மின்றிச் சுரந்துவரும் கருத்துச் சிந்தனையும் (வேகமும்), அவற்றைத் தாம் எண்ணியவாறே எடுத்துரைக்கும் மொழி வளமும், வல்லபமும் மாணாக்களுக்கு விளக்கம் செய்யும் அவரது ***அபார நுண்திறனும் கொண்ட பேராசான்*** என்பனவாகும்.

இலக்கிய எதிரிகளையும் வெகு நாகரிகமான முறையிலே நாசூக்காகவும், நக்கலாகவும் அற்புதமாகவுஞ் சாடும் வல்லமை கொண்டவர் பேராசிரியர். கா. சிவத்தம்பி. ***கருத்துக்களிற் பேதம், வாதம், முரண், விவாதம்*** என்பவற்றை ஏற்று நிற்கும் ***சகிப்புப் பண்புகள் (TOLARATION)*** கொண்டவர் பேராசிரியர் கலாநிதி கா. சிவத்தம்பி. இன்னும் கூறப் போனால் 'மாற்றம் இயல்பானது; மாறாதது எதுவும் வளராது' என்னும் சித்தாந்தத்தை ஏற்றுக் கொண்டு ***இலக்கிய இரட்டையர்களாக*** மிளிர்ந்த கைலாசபதியும் சிவத்தம்பியும் ***இலக்கியத் தின் கொள்கை மாற்றத்தை எழுத்தால் அங்கீகரித்துள்ளமை*** தான் நாம் ஏற்றுக்கொண்டு போற்றத்தக்கது; மெச்சத் தக்கது. இந்நெகிழ்ச்சிப் பண்பே *(Academic Flexibility)* தமிழ் இலக்கிய விமர்சனத் துறையில் சர்வதேச அங்கீகாரத்தையும் புகழையும் இவர்களுக்கு ஏற்படுத்திற்று என்றால் அது மிகையல்ல.

பல்கலைக்கழக மட்டத்தில் விதந்து குறிப்பிடத்தக்க இன்னொரு திறனாய்வாளர் பேராசிரியர், கலாகீர்த்தி சி. தில்லைநாதன் ஆவார்.

சமூகவியல் அணுகுமுறையிலே தமது விமர்சன முயற்சிகளில் ஈடுபடும் இவர் புதுமையான கண்ணோட்டத்தில் தமது கருத்துக்களை எளிமைப் பட எழுதி வெளிப்படுத்தியுள்ளார். ***வள்ளுவன் முதல் பாரதிதாசன் வரை, இலக்கியமும் சமுதாயமும், இலங்கைத் தமிழ் இலக்கியம்*** ஆகிய நூல்களையும் பல கட்டுரைகளையும் எழுதியுள்ளார். ***பேராசிரியர் மு. வரதராசனாரிடம்*** தமிழ் இலக்கியம், திறனாய்வு என்பன பயின்ற பேராசிரியர் சி. தில்லைநாதன், பேராசிரியர் கலாநிதி கைலாசபதியைப் போன்றே பத்திரிகைத் துறையிலும் நிரம்பிய அனுபவம் மிக்கவர். சி. தில்லைநாதன் அவர்களின் எழுத்தில் ***எளிமைப் பண்பும் இலகு நடையும்*** துலங்கும். இவர் பேராதனைப் பல்கலைக்கழகத் தகைசார் பேராசிரியர். ***இலங்கைத்தமிழ் இலக்கியம்*** என்னும் இவரது நூல் புதிது.

கருத்தியல் ரீதியாக ***முற்போக்குவாதம்*** என்பதற்கு எதிர்ப்பு களும், மாற்றுக் கருத்துக்களும் ஈழத்துத் திறனய்வுத் துறையிலே முனைப்புப்பெற்றன. எஸ். பொ. எனப்படும் எஸ். பொன்னுத்துரை, மு. தளையசிங்கம், அ.யேசுராசா, செம்பியன் செல்வன், செங்கை யாழியான் போன்றோர் வாதவிவாதங்களில் களமிறங்கினர். இப் போக்குப் பல்கலைக்கழகத்தினுள்ளேயும் வெளியேயும் ***இலக்கியச் சர்ச்சை***களை உருவாக்கிற்று. ***நற்போக்குவாதம்*** என எதிரணியினர் பெயர் சூட்டிக் கொண்டனர். இக்காலகட்டத்தில் இலக்கியத்திலே பேச்சு வழக்கு, (கொச்சைவழக்கு), செந்தமிழ்வழக்கு என்னும் பிரச்சினையும் கிளம்பிற்று. ***எழுத்து வழக்கின் தன்மைகள் பின்தள்ளப்பட்டுப் பேச்சு வழக்குப் பண்புகள்*** சிலாகிக்கப்பட்டன. புனைகதைகளான ***சிறுகதை, நாவல்களிலே பேச்சுவழக்கு முனைப்புப் பெற்றது.*** யதார்த்தம், இயல்பு, உண்மை, அனுபவம், பாத்திரப் படைப்பின் நம்பகம் என்பன அழுத்தம் பெற்றன. இவை நவீன ***இலக்கியத் திறனாய்வின் போக்கினையும் வீச்சினையும்*** நிர்ணயஞ் செய்தன. மேற்குலகக் கல்வி யாளரின் பாதிப்புத் தமிழ்இலக்கிய விமர்சனத்துறையில் பல புன்மைகளையுஞ் செய்துள்ளன என்பதும் சுதந்திரச் சிந்தனையோடு ஆழமாக மனங் கொள்ள வேண்டியதாகும்.

முற்போக்கு எழுத்தாளர் சங்கம், யாழ் இலக்கிய வட்டம், தெல்லிப்பழைக் கலைஇலக்கியக்களம், குரும்பசிட்டிச் சன்மார்க்க சபை அகில இலங்கைக் கம்பன் கழகம், ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் என்பன ஈழத்திலக்கிய விமர்சன வளர்ச்சிக்கு **நிறுவன ரீதியில்** பெரிதும் உதவின. கவிதை இலக்கியம் பற்றிய

கூர்த்த கவனிப்பும் ஈழத்திலக்கியகர்த்தாக்களது பணிகளைப் பற்றிய நுண்ணாய்வும் பேராசிரியர்கள் க. கைலாசபதி, சித்திரலேகா மௌன குரு, கா. சிவத்தம்பி, அ.சண்முகதாஸ், சி.தில்லைநாதன், எம். ஏ. நு.ஃமான், நா. சுப்பிரமணியன், கவிஞர் இ. முருகையன், க.குணராசா போன்றோரினால் வேகப்படுத்தப்பட்டன. ஆறுமுக நாவலர், பாவலர் துரையப்பாபிள்ளை, சி.வை.தாமோதரம்பிள்ளை, சுவாமி விபுலானந்த அடிகள், புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை,பண்டிதமணி, பேராசிரியர் சி.கணபதிப்பிள்ளை க. கணபதிப்பிள்ளை, பேராசிரியர் தனிநாயக அடிகள் போன்றோரை மறுமதிப்பீடு செய்யும் இலக்கியநுண்ணாய்வுப் பணிகள் தொடங்கப்பட்டன. ***நாவலரின் நூற்றாண்டு விழா மலர்*** ஈழத்திலக்கியத்தின் அத்திவாரத்தை - தடத்தை - செல் நெறியை - ஆழத்தை அறியப் பேருதவி புரிந்தது. நாவலர் பண்புகளும் பணிகளும் இறவாப்புகழுடையவை.

இன ஒடுக்குமுறை, சாதி, பாலியல், சமூகத்தீங்குகள், குற்றச் செயல்கள், தனிமனித நடத்தைகள், போராட்டம், யுத்தம், பெண்விடு தலை என்பன தமிழ்த் திறனாய்வியலிலே எழுத்துருவிலே பெரிதும் இடம் பிடித்தன. சிறுகதைகளும், கவிதைகளும், நாவல்களும், நாடகங் களும், தெருக்கூத்துக்களும், பட்டிமண்டபங்களும், தமிழர் தம் இலக்கி யம் பற்றிய புதிய, முனைப்பான கருத்துக்களை முன்வைத்தன. ***போராட்டக் கவிதைகள், தமிழுணர்ச்சிக் கவிதைகள்*** என்பன தோன்றின. முருகையன், சு. வில்வரத்தினம், மதுரகவி காரை அருளானந்தன். காசி.ஆனந்தன், புதுவை இரத்தினதுரை, சேரன், சோலைக்கிளி, வ. ஐ. ச. ஜெயபாலன், ஜெ. கி. ஜெயபாலன், சோ. பத்மநாதன், த. வில்வரத்தினம், ச. வே. பஞ்சாட்சரம், கல்வயல் வே. குமாரசாமி இன்னும் பல புதுமுகங்களுங் கவிதைத்துறையிலே பெருமளவிலே குறிப்பிடத்தக்க இலக்கியப் பங்களிப்புச் செய்தவர்களாவர்.

இன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும், பேராதனைப் பல்கலைக்கழகத்திலும், சபரகமுவ பல்கலைக்கழகத்திலும், கிழக்குப் பல்கலைக்கழகத்திலும், தென்கிழக்குப் பல்கலைக்கழகத்திலும், கொழும்புத் தமிழ்ச்சங்கத்திலும், கம்பன் கழகத்திலும் பல இலக்கிய வாதிகள் இலக்கியத்தின் தரம், தன்மை, மரபு, புதுமை, ஆழம், அகலம், ஆராய்ச்சி, பதிப்பு, படைப்பாற்றல், பெறுமானம், நூல்கள் என்பன குறித்த பலத்த பல்வேறு ***சர்ச்சைகளைக் கிளப்பியும் விவாதித்தும், எழுதியும்*** வருவதைக் காணமுடிகிறது. புதியபுதிய

கருத்துக்களும் கொள்கைகளும் எழுத்தாக்கங்களுங்கூட இனிவருங் காலத்தில் வேறொரு பாங்கில் புதுநெறியில் வளர்ச்சி காணக்கூடும். ***அறிவியல், விஞ்ஞானம், ஆய்வு, கண்டுபிடிப்புக்கள்*** என்பனவும் உலகிலே நிலவும் ***தொடர்புச் சாதன வளர்ச்சி வேகமும்*** இன்னும் புதிய செல்நெறியைத் தமிழ் இலக்கியத் திறனாய்விலே ஏற்படுத்தக்கூடும். மொழி தொடர்பான கூர்த்த அவதானமும், கலைப்பண்பு, அழகியல் மேன்மை பற்றிய பிரக்ஞைகளும் இனிவருங்காலத்துத் திறனாய்வுத் துறையை மேலும் வளம்படுத்தப் பெரிதும் உதவலாம். நாமும் இனியெதிர் காலத்தில் சிறப்பினை ஏற்றமுள்ளதாக்குவோம்.

இன்று ஒப்பீட்டுமுறைத் திறனாய்வும், மொழியியல், அழகியல் சார்ந்த திறனாய்வும் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டுள்ளன. பேராசிரியர்கள், கலாநிதிகள் க. கைலாசபதி கா. சிவத்தம்பி, வி.சிவசாமி அ. சண்முகதாஸ், துரை மனோகரன், சொக்கன், பி. நடராசன், சிற்பி, எஸ். பொ, வரதர், இ. க. சிவஞானசுந்தரம், முருகையன், செம்பியன் செல்வன், சோ. சந்திரசேகரன், செங்கையாழியன், நந்தி, மு. பொ, எஸ். எஸ். ஆனந்தன், த. துரைசிங்கம், கோகிலா மகேந்திரன், மனோன்மணி சண்முகதாஸ், சி. தில்லைநாதன், க. அருணாசலம், சபா. ஜெயராசா, சோ. கிருஷ்ணராசா, நா. சுப்பிரமணியன், சி. சிவலிங்கராசா, சி. சிவசேகரம், செ. யோகராசா, சி. மௌனகுரு, சித்திரலேகா மௌனகுரு, எம், ஏ. நு.ஃமான், துரை. மனோகரன், கே. எஸ். சிவகுமாரன், வாகீசகலாநிதி, கனகசபாபதி நாகேஸ்வரன் வி.மகேஸ்வரன் போன்றோரது நூல்களை மாணாக்கர் தேடிப் படித்தலவசியம். இன்று ***இலக்கிய நூற்பிரசுரவேகம்*** அதிகரித்துள்ளமை ***தமிழ்வளம்*** பெருகுவது குறித்த பெருமையைச் சுட்டுவதாயுள்ளது.

இளமையிலே (எனக்கு 1973, 74ஆம் ஆண்டுகளில்) காசு வாங்காமல் அம்பனைக் கல்விக் கழகத்திற் கற்பித்து நல்லறிவுச் சுடர் கொளுத்திய ***என் பேராசான் பேராசிரியர், முனைவர் சபா. ஜெயராசா அவர்களது கல்விக் கோட்பாடும் இலக்கியக் கோட்பாடும் (2004)*** என்னும் திறனாய்வுத்துறை சார்ந்த அரிய புதியதொரு ஆய்வுநூல் அண்மை யிலே அச்சில் வெளிவந்துள்ளமை தமிழ் கூறுநல்லுலகின் கவனஈர்ப்புக் குரியது. அது இணுவிலே வெளியிடப்பட்டது.

பேராசிரியர் கலாநிதி சபா.ஜெயராசாவின் இலக்கியச் சிந்தனை களும் ஆய்வறிப் பார்வையும் இலக்கியத்திறனாய்வின் பிறிதொரு பரிமாணத்தைக் குறிகாட்டி நிற்பன. இவரது நூல்கள் குறித்த தனித்த நுண்ணாய்வு அவசியம் செய்யப்பட வேண்டும்.

சோழப் பெருமன்னர் காலத்துத் தமிழ் இலக்கியச் செல்நெறி

தமிழ் இலக்கிய வரலாற்றில் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டு தொடக்கம் பதினான்காம் நூற்றாண்டு வரையான, ஏறக்குறைய நானூறு ஆண்டுகளை உள்ளடக்கிய காலம் சோழப் பெருமன்னர் காலம் எனப்படும். இது தமிழ் இலக்கிய வரலாற்றுக் காலப் பகுதிகள் எல்லாவற்றையும் விடவும் சிறப்புப் பொருந்திய காலமாகக் கொள்ளப் படுகின்றது. சோழப் பெருமன்னர் காலத்தைக் ***காப்பிய காலம்*** (காவிய காலம்), ***பொற்காலம், தமிழ்மன்னர் ஆட்சிக் காலம், சாதனை பொருந்திய காலம், சிற்றிலக்கியங்களின் தோற்றக் காலம்*** எனப் பலவாறு புகழ்ந் துரைக்கின்றனர் இலக்கிய விமர்சகர்கள்.

சோழர் காலம் இலக்கியத்திற் சிறப்புப் பெற்று விளங்கிய மைக்கு அக்கால அரசியல் நிலையும் பொருளாதாரமும் முக்கிய காரணிகளாகும். ஏனைய காலங்களைவிட, சோழர் கால அரசியல் ஏறக்குறைய நானூறு ஆண்டுகளைக் கொண்ட நீண்ட கால ஆட்சி யைக் கொண்டிருந்ததுடன் ***வீரமிக்க தமிழ் மன்னர்களையும்*** கொண்டு விளங்கியது. சோழப் பேரரசின் ஆட்சியெல்லை குமரி முதல் இமயம் வரை பரந்திருந்தது. இந்திய எல்லையைக் கடந்து இலங்கை, சுமாத் திராதீவுகள் எனக் கடல் கடந்த நாடுகளையும் தன் ஆதிக்கத்தின் கீழ் வைத்திருந்தது. மத்திய அரசின் கீழ் வாரியங்களாகப் பிரித்து ஆட்சி செய்தனர். மன்னன் மக்களின் குறைகளையறிந்து மக்களுக் கான சிறப்பான ஆட்சியை மேற்கொண்டான். இவ்வாறான பல காரணிகள் சோழப் பெருமன்னர் கால ஆட்சியைப் பலப்படுத்தி நிலைநிறுத்தின.

நாடு அமைதியுடன் விளங்கியதால் பொருளாதாரம் சிறப்புப் பெற்று விளங்கியது. சோழர் காலம் உள்நாட்டுத் தன்னிறைவு வர்த்தகத்தைக் கொண்டிருந்ததுடன் அரேபிய நாடுகளுடன் பண்டை மாற்றுப் பொருளாதாரத் தொடர்பையும் சிறப்பாக வைத்திருந்தது. விவசாயம் முதன்மை பெற்று விளங்கியது. மன்னன் பல குளங்களைக் கட்டிக்கொடுத்தான். ஆலயங்களுக்கும் மக்களுக்கும் நிலங்களை மானியங்களாக வழங்கினான். ஆலயங்கள் மக்களுக்கு நிலங்களை விவசாயத்திற்காக வழங்கின. அத்துடன் களஞ்சியங்களாகவும் விளங்கின. பஞ்சம் நிலவிய காலங்களில் மக்களுக்குப் பொருட்களை யும் உதவிகளையும் வழங்கின.

சோழப்பெருமன்னர் காலம் தமிழ் இலக்கிய வளர்ச்சியின் மகோன்னதமான காலமாகக் கொள்ளப்படுகின்றது. சோழர்காலம் தமிழ் மன்னர்களின் ஆட்சிக் காலமாக விளங்கியதுடன் பெருந்தொகை யான புலவர்களும் கவிஞர்களும் வாழ்ந்தனர். மன்னன் புலவர்களுக் குப் பட்டமும் பரிசும் வழங்கிக் கௌரவித்தான். வடமொழியின் வளர்ச்சிக் காலமாகவும் சோழர் காலம் விளங்கியது. சோழர் கால மக்கள் நூல்களை விரும்பிக் கற்றமையால் புலவர்கள் ஆர்வத்துடன் புதிய நூல்களை இயற்றினர். புலவர்களும் உலகப் புகழோங்க வாழ்ந்தனர்.

சோழப் பெருமன்னர் காலத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சி யினைப் பின்வருந் தலைப்புகளின் கீழ் இலக்கியத்தைக் கற்கும் மாணாக்கர் ஆழமாக ஆராயலாம்:

1. பெருங்காப்பியங்கள்.
2. சிற்றிலக்கியங்கள்.
3. புராணங்கள்.
4. தொகுப்பு முயற்சிகள்.
5. உரைநூல்கள்.
6. சமயதத்துவநூல்கள்.
7. இலக்கணநூல்கள்.
8. சோழர்கால இலக்கியப் பண்புகள் (செல்நெறிகள்)

1. பெருங்காப்பியங்கள்

சோழர்காலம் காப்பியங்களின் தோற்றக் காலம் என்று சொல்லத்தக்க வகையில் பெருமளவு காப்பியங்கள் தோற்றம்பெற்றன. சோழர் கால அரசியல் நிலையும் செல்வச் செழிப்பும் பெருமளவு காப்பியங்கள் தோன்றுவதற்கு ஏதுவாக இருந்தன. சோழப் பெருமன்னர் களின் தன்னிகரில்லாத் தலைமைத் தன்மையைப் புலவன் காவியமாக் கினான். கவிச்சக்கரவர்த்தி கம்பன் ***சோழனை இராமனாகவும், இராமனைச் சோழனாகவுங் கண்டான்*** என்று பேராசிரியர், கலாநிதி க. கைலாசபதி கூறியுள்ளார். சோழர் காலப் புலவர்கள் பல்துறை அறிவுடன் விளங்கியமையாலும் புலவர்களுக்கு இடையே போட்டிகள் தோன்றியமையாலும் பெருமளவு காப்பியங்கள் தொகுக்கப்பட்டுத் தோற்றம் பெற்றன எனலாம். சோழர் காலத்திலே தொகுக்கப்பட்டுத் தோற்றம் பெற்ற காப்பியங்களை ஐம்பெருங் காப்பியங்கள் ஐஞ்சிறு காப்பியங்கள் என வகுக்கலாம். ஐம்பெருங் காப்பியங்களுள் ***சீலப்பதிகாரம், மணிமேகலை*** என்பன சங்கமருவிய காலத்து நூல்களாகும். ஐம்பெரும் காப்பியங்களுள் இவையிரண்டும் தமிழ் நாட்டுக் கதை களைக் கூறுகின்றன. ஏனையவை பிறநாட்டுக் கதைகளைக் கூறு கின்றன. சோழர் காலத்திலே தோன்றிய பெருங் காப்பியங்கள் வருமாறு:

1. சிலப்பதிகாரம்.
2. மணிமேகலை.
3. சீவகசிந்தாமணி
4. வளையாபதி.
5. குண்டலகேசி.

ஐஞ்சிறுகாப்பியங்கள் வருமாறு:

1. உதயணகுமாரகாவியம்.
2. நாக குமார காவியம்.
3. யசோதர காவியம்.
4. சூளாமணி.
5. நீலகேசி.

சோழர்காலத்துக் காப்பியங்கள் வடநூல் மரபினைத் தழுவித் தமிழ்க் காப்பிய இலக்கணங்களுக்கு அமைய இயற்றப்பட்டவையாகும். கடவுள் வணக்கம், வாழ்த்து என்பவற்றை நூலின் ஆரம்பத்தில் கொண்டு, தன்னிகரில்லாத் தலைவனைக் கொண்டு, அவனுடைய நாடு, நகர், பிறப்பு, வளர்ப்பு, அவனுடைய செயற்கரிய செயல்கள் முதலியவற்றை அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நாற்பொருளும் பயப்பக் கூறுவது பெருங்காப்பியம் என்றும், அறம் முதலிய நான்கனுள் ஒன்றேனும் குறைவுபடுமாயின் அது **சிறுகாப்பியம்** எனவும் கூறுவர்.

ஒரு காப்பியத்திற்கான இலக்கணங்கள் எவையெனத் ***தண்டிய லங்கார*** ஆசிரியர் பின்வருமாறு கூறுகின்றார்:

வாழ்த்து வணக்கம் வருபொருள் இவற்றிலொன்று
ஏற்புடைத் தாகி முன்வர இயன்று
நாற்பொருள் பயக்கும் நடைநெறித்தாகி
தன்னிக ரில்லாத் தலைவனை உடைத்தாய்
மலைகடல் நாடு வளநகர் பருவம்
இருசுடர் தோன்றமென்று இனையன புனைந்து
நன்மணம் புணர்தல் பொன்முடி கவித்தல்
பூம்பொழில் நுகர்தல் புனல்விளை யாடல்
தேம்பிழி மகுக்களிச் சிறுவரைப் பெறுதல்
புலவியில் புலத்தல் கலவியில் களித்தல் - என்று
இன்னன புனைந்த நன்னடைத் தாகி
மந்திரம் தூது செலவுகள் வென்றி
சந்தியில் தொடர்ந்து சருக்கம் இலம்பகம்
பரிச்சே தகம்என்னும் பான்மையில் விளங்கி
நெருங்கிய சுவையும் பாவமும் விரும்பக்
கற்றோர் புனையும் பெற்றிய தென்ப.

என்று கூறப்பட்டுள்ளது.

குண்டலகேசி

குண்டலகேசி ஒரு பௌத்தத் தமிழ்க் காப்பியமாகும். புறத்

திரட்டில் பத்தொன்பது செய்யுட்கள் காணப்படுகின்றன. **குண்டலகேசி** என்றால் ***சுருண்டகூந்தலையுடையவள்*** என்று பொருள். பத்திரை என்ற வணிக மகளின் வாழ்க்கை வரலாற்றைக் கூறுவதாக இந்நூல் அமைந்துள்ளது. இந்நூலை ***நாதகுத்தனார்*** என்பவர் இயற்றியுள்ளார். ***குண்டலகேசி வீருத்தம்*** என்றும் இந்நூலுக்குப் பெயருண்டு, இந்நூல் தர்க்க நூலாயும் திகழ்வதோடு, பிறசமயக் கருத்துக்களையும் தாக்கு கின்றது. துன்பம் வரும்போது அதனைத் தாங்கிக் கொள்ளும் மனப் பண்பை வலியுறுத்திப் பின்வருமாறு கூறுகின்றது:

அறிவ தறிவார் அழுங்கார் உவவார்
உறுவது உறும்என்று உரைப்பது நன்று.

என்கிறது.

வளையாபதி

வளையாபதி ஒரு சமணத் தமிழ்க் காப்பியமாகும். புறத்திரட்டில் சேர்க்கப்பட்டிருக்கும் அறுபத்தாறு பாடல்களே எமக்குக் கிடைத் துள்ளன. விருத்தப்பாவின் முன்னைய வளர்ச்சி நிலையை இந்நூலிற் காணலாம். நாலடியாகவும் ஆறடியாகவும் இரண்டடி வேறு எதுகை பெற்றும் வருவதால் வரிப்பாடல் போலவும் கலித்துறை போலவுமிருந்து வளர்ந்த யாப்புத் தன்மையை இதிற் காணலாம். இந்நூலாசிரியரைப் பற்றி அறிய முடியவில்லை. ***வளையாபதியின்*** கதை *வைசிய புராணத்தின்* முப்பத்தைந்தாவது அத்தியாயத்திற் காணப்படுகிறது.

சீவகசிந்தாமணி

ஐம்பெருங் காப்பியங்களுள் தலையாயதாய் வைத்து எண்ணப் படுவது ***சீவகசிந்தாமணியாகும். தத்தகுணமாலையொடு தாவில் புகழ்ப்பதுமை, ஒத்த புகழ்க் கேமசரி,*** முதலாய மங்கையர் எண்மரைச் சீவகமன்னன் திருமணஞ் செய்துகொண்டு வாழ்வினை முற்றுந் துய்த்து இறுதியில் வீடுபேற்றினை நோக்கித் துறவுபூண்டதைக் கூறுகிறது. இந்நூலுக்கு ***மணநூல்*** என்ற பெயரும் உண்டு.

ஐஞ்சிறு காப்பியங்கள் அனைத்தும் **சமணத் தமிழ்க் காப்பியங்** களாகும் என்பர் விமர்சகர்கள்.

உதயணகுமார காவியம்

இந்நூல் ***உதயணன் கதை*** என்றும் வழங்குகிறது. இது வத்ச தேசத்து அரசன் உதயணன் கதையினை விருத்தப்பாவில் கூறுகிறது. ஆறு காண்டங்களும் 367 செய்யுட்களும் இந்நூலில் உள்ளன. காப்பிய அமைதி இந்நூலில் இல்லையெனவுஞ் சிலர் கூறுவர்.

நாககுமாரகாவியம்

ஐஞ்சிறு காப்பியங்களுள் இதுவும் ஒன்று எனவும் இந்நூலின் ஆசிரியர் ஒரு சமண சமயத் துறவி என்பதையும் தவிர இந்நூலைப் பற்றி வேறு ஒரு தகவலுங் கிடைக்கவில்லை.

யசோதரகாவியம்

உயிர்க்கொலை தீதென்று நிலை நிறுத்தவும் தருமத்தின் பயனை வலியுறுத்தவும் நீதியைப் புகட்டவும் எழுந்த ஒரு சமண நூலாகும். ஐந்து சருக்கங்களையும் 320 செய்யுட்களையுங் கொண்ட இந்நூல் உதயநாட்டு மன்னன் மாரிதத்தன் என்பவனிடம் உயிர்ப்பலி கூடாதென்று வற்புறுத்தற் பொருட்டு யசோதரன் என்பவனின் பல பிறப்புக் கதையைக் கூறுவதாக அமைகிறது. இந்நூலின் ஆசிரியர் யாரென்று தெளிவாக அறியமுடியவில்லை.

சூளாமணி

இந்நூலின் மூலக் கதை ஆருகத மகாபுராணத்தைத் தழுவியது. பாகவதத்தில் வரும் பலராமன், கண்ணன் போன்று திராவிடன், விசயன் என்ற இரு வடநாட்டு வேந்தர்களின் வரலாற்றைக் கூறுகிறது. பன்னிரண்டு சருக்கங்களையும் 2331 செய்யுட்களையுங் கொண்டுள் ளது. இந்நூலின் ஆசிரியர் ***தோலாமொழித்தேவர்*** ஆவர்.

நீலகேசி

இது ***நீலகேசித் தெருட்டு*** எனவும் அழைக்கப்படுகிறது. இந்நூல் **குண்டலகேசிக்கு** மறுப்பாக எழுந்த வாதநூலாகும். சமய ***திவாகர வாமனமுனிவர்*** இந் நூலுக்கு உரை எழுதியுள்ளார். இது பத்துச் சருக்கங்களையும் 895 செய்யுட்களையுங் கொண்டுள்ளது. ***நீலகேசி*** என்றால் கரிய கூந்தலை உடையவள் என்று பொருள். (கேசம், கூந்தல், மயிர்) (கேசத்தையுடையவள் - கேசி).

2. சிற்றிலக்கியங்கள்

சிற்றிலக்கிய வடிவங்கள் பல பல்லவர் காலத்தில் தோன்றி னாலும் சோழர் காலத்தில்தான் இவை பூரண வளர்ச்சியடைந்தன. அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நாற் பொருள்களையும் பூரணமாக உள்ளடக்கப்பட்டிருந்ததால் அது **பெருங்காப்பியம்** என்றும் இவற்றில் ஏதாவது ஒன்று குறைந்தால் அது **சிறுகாப்பியம்** என்றுங் கூறுவர். பெருங்காப்பியங்களின் பண்புகளையும் அல்லாமல் சிறு காப்பியங்களின் பண்புகளையும் அல்லாமல் இரண்டினது பண்புகளை யுங் கொண்டு விளங்குவன **சிற்றிலக்கியங்களாகும்.** இக் காலத்தில்

தோன்றிய சிற்றிலக்கியங்களாவன:

1. கலிங்கத்துப்பரணி.
2. மூவருலா.
3. குலோத்துங்கசோழன் பிள்ளைத்தமிழ்.
4. தக்கயாகப்பரணி.
5. நளவெண்பா.
6. நரிவிருத்தம்.
7. கொன்றைவேந்தன்.
8. ஆத்திசூடி.
9. மூதுரை.

3. புராணங்கள்

சோழர் காலத்திலே தோற்றம் பெற்ற இரண்டு புராணங்களாவன:

1. பெரியபுராணம். 2. கந்தபுராணம்.

என்பனவாகும். ***பெரிய புராணம்*** சேக்கிழார் சுவாமிகளாற் பாடப்பட்ட தாகும். இதனைத் ***திருத்தொண்டர்புராணம்*** என்றும் அழைப்பர். சுந்தரர் பாடியருளிய ***திருத்தொண்டர் தொகையையும்,*** நம்பியாண்டார் நம்பி பாடிய ***திருத்தொண்டர் திருவந்தாதியையும்*** மூல நூல்களாகக் கொண்டு சேக்கிழார் பெரியபுராணத்தைப் பாடினார். இந்நூல் 12 சருக்கங் களையும் நாலாயிரத்து இருநூற்றைமைம்பத்திரண்டு (4252) பாடல் களையுங் கொண்டுள்ளது. சுந்தரமூர்த்திநாயனாரைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு அவர் கைலாயத்திலிருந்து புறப்பட்டுத் தமிழ் நாட்டில் பிறந்தது முதல் மறுபடியும் மண்ணுலக வாழ்வைவிட்டுக் கைலாயம் சென்று சேர்தல் வரையில் அவருடைய முழு வரலாற் றையும் விவரமாகக் கூறுவதாக அமைந்துள்ளது. நாயன்மார்களிடத்தில் சேக்கிழார் பெருமான் கொண்டிருந்த பக்தியை இந்நூல் சிறப்பாக விளக்குகின்றது.

கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்
ஓடுஞ் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்.
கூடும் அன்பினிற் கும்பிட லேயன்றி
வீடும் வேண்டா வீறலின் வீளங்கினார்.

(திருக்கூட்டச்சிறப்பு, செய். 08),

எனச் சிவனடியாரின் பண்பைச் சேக்கிழார் விளக்கியுள்ளார்.

கச்சியப்ப சிவாசாரியரால் பாடப்பட்ட ***கந்தபுராணம்*** ஆறு காண்டங்களையும் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட செய்யுட்களையும் கொண்டுள்ளது. வடமொழியிலுள்ள ***ஸ்காந்தபுராணத்தின்*** ஒரு பகுதி யாகிய சங்கர சங்கிதையிற் காணப்படும் சுப்பிரமணியக் கடவுளின் கதையை எடுத்துக் கூறுவதாக அமைந்துள்ளது. இந்நூலில் முருகக் கடவுளின் பிறப்பு, அவர் கார்த்திகைப் பெண்களால் வளர்க்கப்படுதல், அப்போது நிகழ்த்திய திருவிளையாடல்கள், தேவர்களைச் சிறையில் அடைத்தல், சூரபன்மனை அழித்தல், அமரர்கள் துயர் களைந்த

அருட்டிறம், வள்ளி, தெய்வயானை இருவரையும் மணந்த செய்தி போன்ற இன்னோரன்ன செய்திகளையும் இந்நூல் கொண்டுள்ளது.

பெரியபுராணம், கந்தபுராணம், கம்பராமாயணம் ஆகிய மூன்று நூல்களையும் மாபெரும் சமய இலக்கியக் காப்பியங்கள் என்றுஞ் சிலர் கூறுவர். சோழர் காலத்தில் தோன்றிய ஐம்பெரும் காப்பியங்கள் ஐஞ்சிறு காப்பியங்கள் என்று கூறப்படுகின்றனவற்றுள் காணப்படாத ஒரு காப்பியத்திற்கான அனைத்துப் பண்புகளையும் இந்நூல்கள் கொண்டு விளங்குவதால் மாபெருங்காப்பியங்கள் எனக் கொள்வர் மக்கள். இவை எக்காலத்திற்கும் ஏற்புடைமையான நிலையான கருத்துக்களைக் கொண்டவை.

தமிழ்க்காவிய உலகிலே தனக்கெனத் தனியொரு சிறப்பினைப் பெற்ற நூலாகக் ***கம்பராமாயணம்*** விளங்குகின்றது. வடமொழியில் தோன்றிய ***வான்மீகி இராமாயணத்தைத்*** தழுவித் தமிழில் கம்பரால் இயற்றப்பட்டதே ***கம்பராமாயணம்.*** ஆறு காண்டங்களையும் 113 படலங் களையும் 10,500 பாடல்களையும் கொண்ட இந்நூல் போராண்மையும் சான்றாண்மையும் மிக்க இராமனைத் தன்னிகரில்லாத் தலைவனாகக் கொண்டு பாடப்பட்டதாகும். ***தண்டியலங்காரத்திற்*** கூறப்பட்ட ஒரு காப்பியத்திற்கான அனைத்துப் பண்புகளையும் தன்னகத்தே கொண்ட நூல் ***கம்பராமாயணமாகும்.*** தமிழுக்குக் ***"கதி"*** என்பதில் க. கம்பரா மாயணம்; தி - திருக்குறள் . கம்பனும் திருவள்ளுவருமே தமிழ்ப் பெருங்கவிகள். இவ்விரு நூல்களாலும் செந்தமிழ் வளம் நிலைக்கும்.

4. தொகுப்பு முயற்சிகள்

சோழப் பெருமன்னர் காலத்தில் பழந்தமிழ் இலக்கியங்களைத் தேடித் தொகுக்கும் தன்மையினைக் காணக்கூடியதாக உள்ளது. நிகழ்காலப் பெருமைகளோடு இறந்தகால இலக்கியச் செழுமை களையும் தமிழர் தம் வாழ்வின் முக்கிய அம்சங்களையும் பேண வேண்டும் அல்லது தொகுக்கவேண்டும் என்ற உணர்வு சோழர் காலத்தில் முகிழ்த்து உதயமானது. இதற்குச் சிறந்த உதாரணங் களாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்:

1. தேவாரத் திருமுறைகள் - நம்பியாண்டார்நம்பியாலே தொகுக்கப்பட்டன.
2. நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் - நாதமுனியாலே தொகுக்கப் பட்டது.

இவ்வகையிலே ***பெரியபுராணத்தையும்*** நோக்கலாம். இதில் கடந்த காலச் சைவ நாயன்மார்களின் வரலாற்றினைத் தொகுக்கும் முயற்சியினைக் காணக்கூடியதாகவுள்ளது. சிவனுக்குத் தொண்டு புரிந்த அடியார்களைப் பெருமைப்படுத்திப் பாடப்பட்ட நூல் ***பெரிய புராணம்*** எனப்படும் ***திருத்தொண்டர் புராணம்.***

5. உரை நூல்கள்

சோழர்காலத்திலே அதற்கு முன்னைய கால நூல்களுக்கு உரை எழுதும் பாரம்பரியம் சிறப்புப் பெற்றிருந்தது. செய்யுட்களில் எழுதப்பட்ட நூல்களுக்கே இக்காலத்தில் உரை எழுதப்பட்டது. இவ் வகையில் சோழர் காலத்தில் தோற்றம்பெற்ற உரைநடை நூல் களாவன:

1. *வீரசோழிய உரை.*
2. *யாப்பருங்கல உரை.*
3. *திருக்குறள் - பரிமேலழகர் உரை.*
4. *தொல்காப்பியம் - எழுத்ததிகாரம், இளம்பூரணர் உரை.*
5. *தொல்காப்பியம் - சொல்லதிகாரம், சேனாவரையர் உரை.*
6. *தொல்காப்பியம் - பொருளதிகாரம், பேராசிரியர் உரை.*

6. சமய தத்துவ நூல்கள்

முன்னைய காலங்களில் வளர்த்தெடுக்கப்பட்ட சமயங்களுக்கு விளக்கம் கூறும் முகமாக எழுந்த நூல்களே ***தத்துவ சாத்திரங் களாகும்.*** பயத்தின் அடிப்படையில் வழிபடப்பட்டுச் சமயம் பெரு வளர்ச்சி பெற்றது. இவ்வாறு பெருவளர்ச்சி பெற்ற சமயத்தைத் தத்துவ ரீதியில் நிறுவவும், விளக்கங் கொடுக்க வேண்டிய தேவையும் சோழர் காலத்தில் ஏற்பட்டமையால் சமய தத்துவநூல்கள் தோற்றம்பெற்றன. இவ்வகையில் சோழர் காலத்தில் தோன்றிய தத்துவ நூல்களாவன.

1. *திருவுந்தியார்*
2. *சிவஞானசித்தியார்*
3. *திருக்களிற்றுப்படியார்*
4. *சிவஞான போதம்*
5. *இருபாஇருப.·.து*
6. *உண்மைவிளக்கம்*
7. *சிவப்பிரகாசம்*
8. *திருவருட்பயன்*
9. *வினாவெண்பா*
10. *போற்றிப்ப.·.றொடை*
11. *கொடிக்கவி*
12. *நெஞ்சுவிடு தூது*
13. *உண்மை நெறிவிளக்கம்*
14. *சங்கற்ப நிராகரணம்*

7. இலக்கண நூல்கள்

சோழப் பெருமன்னர் காலத்திலே வடமொழியின் செல்வாக்குச் சிறப்புப் பெற்றிருந்ததால் வடமொழிக் கருத்துக்கள், யாப்பு அணிவகைகள் தமிழிலே புகுந்தன. தற்பவ, தற்சம, உருவங்களோடு பல வட சொற்களும் தமிழிலக்கியங்களிலே கலந்துள்ளன. தமிழ் மொழியிலும் காலத்திற்கேற்ற சில மாற்றங்கள் நிகழ்ந்தன. பேச்சு வழக்கோடு இவை நின்று விடாது எழுத்து வழக்கிலும் இடம் பெறத்தொடங்கின. அவற்றை விளங்கிக் கொள்ளுதற் பொருட்டு புதிய இலக்கண நூல்களை இக்காலப் புலவர்கள் இயற்ற வேண்டிய அவசியமும் தேவையும் ஏற்பட்டது. இவ்வகையில் சோழர் காலத்தில் தோற்றம் பெற்ற இலக்கண நூல்களாவன:

1. *யாப்பருங்கலவிருத்தி* } - *அமிர்தசாகரர்.*
2. *யாப்பருங்கலக்காரிகை* }
3. *வீரசோழியம்* - *புத்தமித்திரர்*
4. *நேமிநாதம்* - *குணவீரபண்டிதர்*
5. *நன்னூல்* - *பவணந்தி முனிவர்*
6. *தண்டியலங்காரம்* - *தண்டியாசிரியர்.*

மேற்குறிப்பிட்ட நூல்களுள் ***நன்னூல், நேமிநாதம்*** என்பவை ***தொல்காப்பிய*** மரபைப் பின்பற்றித் தமிழில் ஏற்பட்ட வளர்ச்சியைக் காட்டுகின்றன எனலாம்.

சோழர் கால இலக்கியப் பண்புகள்

தமிழிலக்கியம் சோழப் பெருமன்னர் காலத்திலே சிறப்பாக வளர்ந்துவந்துள்ளது. சோழ மன்னர்கள் தமிழ் மன்னர்களாக விளங்கிய தால் ***நாட்டு நலன் கருதி ஆட்சி செய்தனர்.*** இதன் பயனாகப் பகை, பிணி, வறுமை என்பன நாட்டை விட்டகல, செல்வம் மலிந்து நாடு பெருவளஞ்சிறந்து விளங்கியது. கல்வியறிவையும் கலைகள் பலவற்றையும் வளர்த்தலில் ***மக்களுக்கு ஊக்கம் பிறந்தது.*** சமுதாயம் உயிர்த்துடிப்பு டையதாய் விளங்கியது. உள்ளத் தெளிவும் உணர்ச்சிப் பெருக்கும் பொருந்தப்பெற்ற பல புலவர்களை அச்சமுதாயம் பிரசவித்தது. புலவர்கள் அச்சமுதாயத்தினையும் அதன் சிறப்புக்குக் காரணமாக இருந்த மாட்சிமிக்க மன்னரின் ஆட்சித்திறனையும் பாராட்டிப் பெருமைப்படுத்திப் பல நூல்களை இயற்றினர். இதன் காரணமாக இக்கால இலக்கியப் பண்புகளில் ஒன்றாக, சிறப்பாக ***உலகியலைப் போற்றும் பண்பு*** காணப்பட்டது. உதாரணமாக, ***கம்பராமாயணம், நள வெண்பா, கலிங்கத்துப்பரணி*** போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

தமிழிலக்கிய வரலாற்றிலே சோழர்காலம் வரையுள்ள இலக் கியங்கள் ஒன்றில் ***உலகியலைப் போற்றின*** அல்லது ***இறையுணர்வைப் போற்றின.*** ஆனால் ***சோழர்கால இலக்கியங்கள் உலகியலையும் இறை வழிபாட்டையும் ஒருங்கே சிறப்பிப்பது*** அவற்றின்கண் காணப்படும் சிறப்பியல்பு எனலாம். உதாரணமாகக் (***கம்பராமாயணத்தில்*** நாட்டுச் சிறப்பு, வீரம், பாசம் முதலிய உலகியல் அம்சங்களை உணர்த்து வதுடன் தெய்வப் பண்புகளும் இணைத்துப் போற்றப்பட்டுள்ளன.)

வடமொழிக் காவிய மரபைப் பின்பற்றிப் பல காவியங்கள் தோற்றம் பெற்றுள்ளன. தன்னிகரில்லாத் தலைவன் ஒருவனுடைய வாழ்க்கை வரலாற்றைக் கூறுவதன் மூலம் மக்களுடைய நல்வாழ் விற்கு இன்றியமையாத அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நாற் பொருட்களையும் கூறும் பேரிலக்கியங்களும் இவற்றில் ஒன்று குறைவு படும் போது தோன்றும் சிற்றிலக்கியங்களும் சோழர் காலத்திலேயே தோற்றம்பெற்றன.

சோழர் காலத்தில் பழைமை போற்றும் பண்பு காணப்பட்டது. தம் முன்னோர் இயற்றிய நூல்களைத் தேடித் தொகுத்தும், இசை வகுத்தும், உரை எழுதியும் மக்கள் மத்தியில் அவற்றை அறிய வைப்பதிலே சோழர்காலப் புலவர்கள் அயராது உழைத்தனர். நம்பி யாண்டார் நம்பி தேவாரத்திருமுறைகளையும், நாதமுனிகள் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தங்களையும் தேடித் தொகுத்தமை சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன.

சைவசமய உண்மைகளை ஆராயும் சித்தாந்த சாத்திரங்கள் பல இக்காலப் பகுதியில் தோன்றியமை சோழர்கால இலக்கியப் பண்புகளுள் ஒன்று. **தோத்திரங்களும், சாத்திரங்களும்** சைவத்தின் இருகண்கள் என்பர். பல்லவர் காலத்திலே தோத்திரங்கள் பல தோன்றி மக்களை ***இறைபக்தியில் ஈடுபடுத்திச் சமய உணர்வு நலன் பெற வழி வகுத்தன.*** சமயஉணர்வினால் ஏற்பட்ட இறை நம்பிக்கையை வலுவூட்டு வதற்குச் சமய உண்மைகளை ஆராய்ந்து கூறும் சித்தாந்த சாத்திர நூல்கள் தோற்றம் பெறலாயின. அவை ***மெய்கண்ட சாத்திரங்கள்*** எனப்படும்.

உரையாசிரியர்கள் பலர் தமிழ் இலக்கிய நூல்கள் பலவற்றுக் கும் இலக்கண நூல்கள் பலவற்றுக்கும் உரைகளை எழுதியமையாலே தமிழ் உரைநடை சோழர் காலத்திலே பெருவளர்ச்சி கண்டது.

இளம்பூரணர், சேனாவரையர், பேராசிரியர் முதலியோர் எழுதிய உரை விளக்கங்கள் பிற்காலத்தவர்களுக்கு உதவும் வகையில் அமைந் துள்ளன. இவ்வாறாகத் ***தமிழ் உரைநடை வளர்ச்சியிலும்*** சோழர் காலப்பகுதி தலைசிறந்து விளங்கிற்று.

மன்னர்களையும் வள்ளல்களையும் புகழ்ந்து பாடும் மரபு சங்க காலத்திலே காணப்பட்ட ஒரு முக்கிய இலக்கியப் பண்பாகும். இப்பண்பு சங்க மருவிய காலத்திலும் பல்லவர் காலத்திலும் மிக அருகியே காணப்பட்டது. இருப்பினும் சோழர் காலத்தில் மீண்டும் மன்னர் களையும் கொடை வள்ளல்களையும் புகழ்ந்து பாடும் மரபு, பண்பு தோற்றம் பெறுகின்றது. உதாரணமாக, ***குலோத்துங்க சோழன் பிள்ளைத் தமிழ், மூவருலா*** போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

போர்க்களத்தினைப் பாடுபொருளாகக் கொண்டு பாடப்பட்ட சில நூல்களில் தனிச் சிறப்புடையது செயங்கொண்டான் பாடிய ***கலிங் கத்துப்பரணியாகும்.*** இது புறப்பொருள் சார்பான ***போர்ப் பிரபந்தம்.*** ஏனெனில் இக்காலத்தில் புலவர்கள் பெரும் போர்களைக் காண நேர்ந்தது. இதன்காரணமாக இவ்வகை இலக்கியங்களையும் படைத் தனர். பின்னர் போர் ஒடுங்கியது. எனினும் புகழ் ஒருபோதும் ஒடுங் காது. தமிழின் பெரும் புகழ் இலக்கியத்தால் பெரிதும் நிலைக்கும்.

சோழர் காலத்திலே ***தாழிசை, துறை, விருத்தம்*** என்பன பெருவழக்குப் பெற்ற யாப்பு முறைகளாய் அமைகின்றன. ***தாழிசை யாப்பு, நாட்டார் பாடல் மரபை ஒட்டியது.*** தாழிசையிலே சந்த வேறுபாடு களைப் புகுத்தி ***உணர்ச்சி, பொருள், நிகழ்வு*** என்பவற்றில் வேறுபாடு களைக் காட்டும் இலக்கியப் படைப்புப் பண்புகள் இக்காலத்திலே சிறப்புடன் காணப்பட்டன.

உவமையணி, தற்குறிப்பேற்றம், உருவகம், உயர்வு நவிற்சி முதலிய அணிகளை இக்கால இலக்கியங்களிலே பரவலாகக் காண லாம். ***கம்பராமாயணத்திலே*** 96 வகையான அணிகளைப் பயன்படுத்தி யுள்ளான் கவிச்சக்கரவர்த்தி கம்பன்.

உசாத்துணை நூல்கள்

1. வரதராசன், மு., (2001), *தமிழ் இலக்கிய வரலாறு*, சாகித்திய அக்காதெமி, புதுடெல்லி.
2. தமிழண்ணல், (1998), *புதியநோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு*, இந்துவெளியீடுகள், மதுரை.
3. பாலசுப்பிரமணியன், சி., (2000), *தமிழ் இலக்கிய வரலாறு*, பாரிநிலையம், சென்னை.
4. செல்வநாயகம், வி., (1996), *தமிழ் இலக்கிய வரலாறு*, பூபாலசிங்கம் புத்தகநிலையம், யாழ்ப்பாணம்.

கவிச்சக்கரவர்த்தி கம்பன் கண்ட இராமனின் பேரெழில்

கரையறியாக் காட்டாற்று வெள்ளம் போலக்
கவிபொழிந்து வான்மீகி உலகுக் கீந்த
திரையறியா ஓட்டத்தைத் தேக்கிக் காட்டித்
திறமிகுந்த கால்வாய்கள் செய்து பாய்ச்சித்
தரையறியா இலக்கியக்கா வனத்தைத் தந்தான்
உரையறியாப் பயனிக்க உதவும் பாட்டை
உலகமெல்லாம் அனுபவிக்க உழைப்போம் வாரீர்.

(நாமக்கல் கவிஞர் வே. இராமலிங்கம்பிள்ளை)

புவியரசரெல்லாம் நிதமும் புகழ்ந்து பாராட்டும்
கவியரசர் தொழும் பெரிய கம்பநாட் டாழ்வான்.

(கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை)

பாமேதை, கவிச்சக்கரவர்த்தி கம்பனின் பிறந்த இடம் தேரழுந்தூர் என்றும், கம்பனின் தந்தை ஆதித்தன் என்றும் அறியக் கிடக்கின்றன. கோசலையின் மகன் இராமன். கைகேயியின் மகன் பரதன். சுமித்திரையின் மக்கள் இலக்குவணன், சத்துருக்கன். மூலநூல் ***வான்மீகிராமாயணம்***; வழிநூல் ***கம்பராமாயணம்.*** கதை தழுவிய பாடல்கள் *இராமாயணத்திலுள்ளன.*

> **"இன்று போய்ப் போர்க்கு நாளைவா"** என்ற கற்பனை இராம சரித்திரமாய்விட்டது. **"என் பின்னவன் பெற்ற செல்வம் அடியனேன் பெற்ற தன்றோ!"** என்ற இராமன் கூற்றின் பின், தம்பியாகிய இளங்கோவின் இராசலட்சணத்தைப் பெறாத *சிலப்பதிகாரச் செங்குட்டுவன்* நிலை என்னாம்!"

என்பது ***பண்டிதமணி, இலக்கிய கலாநிதி சி.கணபதிப்பிள்ளையின்*** கூர்த்த மெய்ஞ்ஞானச் சிந்தனை. ***தமிழுக்குக் "கதி" உண்டு. இலக்கியக் கல்வியால் என்க. க- கம்பராமாயணம், தி - திருக்குறள்;*** க - கம்பர்: தி. திருவள்ளுவர்.

"கதி" தான் தமிழின் விதி. அவை தான் தமிழர் மதி. ***கம்பராமாயணமும் திருக்குறளுந்தான் தமிழர் வாழ்விலே வழிகாட்டுவன***

ஓசை பெற்றுயர் பாற்கடலுற்றொரு
பூசை முற்றவும் தக்குபு புக்கென
ஆசை பற்றி யறையலுற்றேன் மற்றிக்
காசில் கொற்றத் திராமன் கதையரோ.

ஸ்ரீராம சரிதம் பரிசுத்த சமுத்திரம்; காசில்லாத சமுத்திரம். ப.ட்.றலைப்பட்ட அலைகள் ஆறுகள் மடங்கி அடங்குஞ் சங்கமம் ஸ்ரீராம சரிதம். உலகம் அவலக் கவலைகளைக் கழுவி ஒளிவிட்டுப் பிரகாசிக்கும் புண்ணிய தீர்த்தம் ***காசில் கொற்றத் திராமன்*** கதை.

இராமன் மனந்தூயன். இராமனுடைய அந்தக்கரணங்கள் நல்வழிப்பட்டவை. வேத நெறி பிறழாதவை; அந்தக் கரணங்களைத் தூண்டுந் தெய்வங்கள் எவைகளோ அவற்றின் தூண்டுதல்களை ஓரோர் சமயத்தில் உணர்ந்தவன் இராமன்.

'தருமம் என்று சொல்லப்படுவது ஸ்ரீராம பாணமே' என்பது வாலியின் வாக்கு. ஸ்ரீ ராமகதையோ மாக்கதை, மகாகதை; மகிமை வாய்ந்த கதை, பெருமை பொருந்திய கதை.

இம்பர் நாட்டிற் செல்வமெல்லாம்
எய்தி அரசாண்டிருந்தாலும்
உம்பர் நாட்டிற் கற்பகக்கா
ஓங்கு நீழல் இருந்தாலும்
செம்பொன் மேரு அனையபுயத்
திறல்சோர் இராமன் திருக்கதையிற்
கம்பநாடன் கவிதையிற் போற்
கற்றோர்க் இதயங் களியாதே.

இராமனிலும் இராமகதை மூத்தது. நீலோற்பலத்தைத் திரு மேனியாகக் கொண்டு அந்தத் திருமேனியில் கமலங்கள் மலர்ந்து பிரகாசிக்க உயிர் ஓவியம் ஒன்று எழில் செய்வதுண்டாயின் அந்த ஓவியமே ஸ்ரீ ராமன். ஆச்சிரமத்தில் வளர்ந்த ***இராமனுக்கு யாதும் ஊரே யாவரும் கேளிர்.***

கம்பருக்கு முந்தியவர் கபிலர்; பிந்தியவர் வில்லி.

ஸ்ரீ இராமனின் கருணைப் பிரவாகத்தைக் கண்ட **விசுவாமித்திர மகரிஷி,**

இவ்வண்ணம் நிகழ்ந்த வண்ணம் இனியிந்த வுலகுக்கெல்லாம்
உய்வண்ண மன்றி மற்றோர் குயர்வண்ண முறுவதுண்டோ
மைவண்ணத் தரக்கி போரில் மழைவண்ணத் தண்ணலேயுன்
கைவண்ணமங்குக் கண்டேன் கால்வண்ணமிங்குக் கண்டேன்.

என்று இராமனைப் புகழ்வாராயினார். இது இராமனின் வரத்தைப் பறைசாற்றும் கவி.

இராமனிடம் ***அரசை*** ஒப்படைத்துவிட்டுத் தசரதன் ***தவம்*** செய்ய விரும்பினான். அவன் விருப்பத்தை வசிட்டர் முதலாயினோர் ஏற்றுக் கொண்டனர். வசிட்டர் தசரதனை நோக்கி, "இராமனை விடச் சிறந்தவர் வேறுயாரும் இல்லை. ஆகவே அரசே! இனி உனக்கு உரியது ***புனிதமாதவம்*** தவிர வேறில்லை" என்று கூறினார். அதனைக் கேட்ட தசரதன் மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தான். அதனைக் கம்பன்,

மற்றவன் சொன்ன வாசகம் கேட்டலும் மகனைப்
பெற்ற அன்றினும் பிஞ்ஞகன் பிடித்த அப்பெருவில்
இற்ற அன்றினும் எறிமழுவாள் அவன்இழுக்கம்
உற்ற அன்றினும் பெரியதோர் உவகையன் ஆனான்.

என்று பாடுகின்றார்.

கம்பன் காவியம் எளிமைக்கு எடுத்துக்காட்டாக உள்ளது. எதிர்பாராச் சொற்றொடராலும் திடுக்கிடத் தக்க உவமைத் தொகுப்பாலும் வியப்பூர்வத்தைத் தூண்டுவதும், உணர்ச்சிப் பிழிவால் உள்ளத்தைக் கிளர்ந்தெழச் செய்வதும், படிப்பவனோடு அளவளாவும் தன்மையனாய்ப் பாடுவதும், உள்மனப் போராட்டங்களை நுழைபுலத்தோடு தெளிந்து உயிர்த்துடிப்போடு பாத்திரங்களைப் படைப்பதும் கம்பனுக்குக் கைவந்த கலைகள். சொல் லாற்றல், பொருட்செறிவு, கற்பனைவளம் கட்டுக் கோப்புச் செம்மை முதலியவற்றால் மகோன்னதத்தின் மணிமுடியைத் தொடும் பெருமை கம்பன் காவியத்தைப்போல் மில்டனின் காவியத்துக்கும் உரியது.

என்று குறிப்பிட்டுள்ளார் பேராசிரியர் எஸ். இராமகிருஷ்ணன் (கம்பனும் மில்ட்டனும்). அவர் மேலும் விளக்கும் பொழுது,

> *பொதுநிலை கடந்த பாத்திரங்களின் பெருஞ் செயல்களைப் பேசும் கதையை வீறுகொண்ட நடையில் விளக்கமாகப் பாடும் விழுமிய இலக்கியமே காவிய மாகும். அன்றும் இன்றும் மனிதர்க்குப் பொருட்செறி வாயுள்ள பிரச்சினைகளை அடித்தளமாகக் கொண்டு மனிதகுல வரலாறு அல்லது நாகரிகத்தில் ஒரு முழுச் சகாப்தத்தின் பல்திற அனுபவங்களைத் தொகுத்து நோக்கி வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கு வழிகாட்டுவது காவியம். தேசியம், சமயம் அல்லது பண்பாட்டு நிறைவான வளர்ச்சி காண்பதற்கு ஏற்ற இலட்சியங்களே மனித உருக்கொண்டாலன்ன உயிர்த்தெழும் தலைவனை உடையது காவியம்.*
> *(இராமகிருஷ்ணன், எஸ்., கம்பனும் மில்டனும், ப.43)*

என்று விளக்குகின்றார்.

கவி(தை)யுள்ளம் என்றால் என்ன!

"படைப்பில் எல்லா ஜீவராசிகளோடும் அவைகளின் சலனத் தோடும் ஒட்டிக் கொள்ளும் தன்மைக்குக் **"கவி(தை)யுள்ளம்"** என்று பெயர். எந்தக் கவிஞன் ***நவரசங்களையும்*** ***உவமையையும்*** வெகு லாவகமாகக் கையாளுகிறானோ, கையாளமுடிகிறதோ அவனே **உலகமகாகவி** என்ற பீடத்தில் அநாயாசமாக எவருடைய உதவியு மின்றி எவருடைய சிபார்சையும் கோராமல் ஏறி உட்கார்ந்து கொள் கிறான்." என்பர் பேராசிரியர் எஸ்.இராமகிருஷ்ணன்.

> ***இலக்கியத் திறனாய்வு நோக்கிலே எவ்வகை யான பாத்திரங்களாயினும் அவர்களிடம் நாம் விருப்பும் வெறுப்புங் கொள்ளும்படி படைக்க வேண்டும்.***

என்பார் பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தன்.

அறம் வெல்லும். பாவம் தோற்கும் என்பதை விளக்குவது ***கம்பராமாயணம்.*** காவியத்திலே பாத்திரங்கள் நம்மோடு நேரடியாகப் பேசுவதில்லை. ஆசிரியர் வழியாகப் ***பாத்திரங்கள்*** நம்மோடு பேசு கின்றன. உண்மை உலகைப் பிரதிபலிக்கும் பாத்திரங்கள் உயிர்த் துடிப்புக் கொண்டனவாக விளங்குவன. கவிதையில் வார்த்தைகள் புஷ்டியான தாதுடன் சிரஞ்சீவியாய் வாழ்கின்றன.

பாத்திரங்கள் மனித உள்ளத்தின் நித்திய
கனவுகளை உருவாக்கிய உண்மையான
குணசிருஷ்டி என்பதை உணரவேண்டும்.

என்கிறார் எழுத்தாளர் இரகுநாதன். பாத்திரச் சிருஷ்டி விசேடணங் களாலே இராமன் கதை; சீதை கதை; அனுமார் கதை என்பவைகளால் பேசப்படுகிறது. கம்பனில் ***உணர்ச்சிகள்*** மோதுகின்றன. ***தருமம், காமம், நேர்மை, வீரம், காதல்*** முதலிய பல உணர்ச்சிகளின் வடிவமாக இராமாயணப் பாத்திரங்கள் அமைந்திருக்கின்றன.

வாழ்வுக்குப் பொருள் கொடுப்பது கலை என்ற புதுமைப்பித் தனின் விமர்சனம் மிகப்பொருந்துவதாகும்.

தருமம் ஏன் வெற்றி பெறவேண்டும்? என்ற கேள்வியை எழுப்பியவர் ஹென்றி இப்ஸன்; ஒஸ்காவைல்ட், இப்ஸன் இவர்களின் வழிவந்த கலவையே பேர்னாட்ஷா.

வசன காவியம் மனிதனின் தெய்விகத் தன்மையையும் இலட்சிய புருஷனையுமே பற்றி எழுதுகிறது. நாவல் மனிதனை அவனுடைய சிறுமைக் குணங்களுடன் அவனுடைய வீழ்ச்சிகளுடன் அப்படியே மனித னாக எடுத்துக் காட்டுகிறது. என்பார், பேராசிரியர் கலாநிதி க.கைலாசபதி. (**பிச்சமூர்த்தி, ப . 66**).

பொருளே கவிதையின் உடல்; கற்பனையே அதன் ஆன்மா என்கிறார் அறிஞர் ***கோல்ட்ரிட்ஜ்.***

இனி, ***ஈன்றவள் கோசலையாயினும்*** தன்னை எடுத்து வளர்த் தவள் ***கைகேயி*** என்பதை எந்நாளும் போற்றும் தன்மையன் இராமன்.

கம்பன் காவிய உலகில் பலவகையான மனிதர்களைக் காண்கின்றோம். அவர்களுடன் நாம் உறவாடுகிறோம். இராமனின் வீரம்; இராவணனின் மாட்சியும் வீழ்ச்சியும்; பரதனின் தியாகமும் அன்பும்; சீதையின் கற்பு; தானமாலையின் அலறல்; மண்டோதரியின் சோகத் துடிப்பு; சூர்ப்பனகையின் வஞ்சகம்; ***அனுமனின் பக்தியும் சொற் செல்வமும்*** யாவற்றையும் தத்ரூபமாகக் காண்கிறோம். ***கம்பன் கவிதை*** மன்னன்; கற்பனைக் கலைஞன். கம்பனின் காவியம் கிரேக்க அவலச் சுவை நாடகங்களின் பெருமையையும் ***மில்டனின்*** சுவர்க்க நீக்கத்தின் மாட்சியையும் கொண்டு விளங்குகின்றது.

முத்தமிழ்த்துறை யின்முறை போகிய
உத்தமக்கவிகட்கொன்றுணர்த்துவேன்

பித்தர் சொன்னவும் பேதையர் சொன்னவும்
பத்தர் சொன்னவும் பன்னப் பெறுபவோ.

என்ற அவையடக்கச் செய்யுள் மனங்கொள்ளத்தக்கது. கலைஞனான கம்பன் வெறும் மனத்தை ஈடுபடுத்தாது தன் கவித்துவ ஆற்றலிலேயே மனத்தை ஈடுபடுத்தியுள்ளான். இரசிகனான கம்பன் செய்யுட்களை ***ஓசை, தாளம், அழுத்தம், அமைப்பு*** முதலியவற்றின் மூலம் வாசகர் களை இரசிக்கச் செய்திருக்கிறான். பாத்திரங்களின் உண்மையியல்பு களை உணர்ந்து அவற்றிற்குத் தக்கபடியும் செய்யுட் களையும் கதை நிகழ்ச்சிகளையும் அமைத்துக் காட்டுகிறார்.

கம்பனுடைய நடையைப் பற்றிப் ***போப்பையர்,*** **(G. U. Pope) Nothing can equal the sweetness of this real poet** என்கிறார்

"அஞ்சன வண்ணன் இராமன் கற்போர் அனைவரதும் நெஞ்சம் புகுந்தவன். கற்போர் மட்டுமன்றிக் காவியத்துள் உலா வரும் மற்றைய கதை மாந்தராலும் பெரிதும் விரும்பப்படுவன்."

(இலங்கை ஜெயராஜ், அழியா அழகு, ப. 1)

கம்பனையே அழையும் தம்பி, தமிழின் விமர்சகர் கம்பவாரிதி இ. ஜெயராஜ் நயம்பட எடுத்துக் காட்டும் இராமன் பெருமையைச் சான்றுகளோடு முதலிலே தருகிறோம்:

கண்ணினும் நல்லன் கற்றவர் கற்றிலா தவரும்
உண்ணினும் நீரினும் உயிரினும் அவனையே உவப்பர்.

(வசிட்டன் கூற்று)

அஞ்சன வண்ணன்என் ஆருயிர் நாயகன்.

(குகன் கூற்று)

காதல் எந்தன் உயிர்மேலும் இக்கரி யோர்பால் உண்டாம்.

(விசுவாமித்திரன் கூற்று)

ஓவியத்து எழுத ஒண்ணா உருவத்தாய்.

(வாலி கூற்று)

என்பன **கம்பவாரிதி** தன் நூலிற் தரும் சான்றாதாரங்கள்.

இராமனின் பெருமை பீறிட்டு நிற்கும் **அழியா அழகு** வெளிப் பட்டு இன்பஞ் செய்து நிற்கும் கம்பனின் கவிதாவிலாச முத்திரைப் பாடல் பின்வருமாறு அமைகிறது:

வெய்யோன் ஒளிதன் மேனியில் விரிசோதி யில்மறைய
பொய்யோ எனும்இடை யாளொடும் இளையா னொடும்போனான்
மையோ மரகத மோமறி கடலோ மழைமுகிலோ
ஐயோ இவன்வடி வென்பதோர் அழியாவழகுடையான்.

இராமன் எத்தனை ராமனெடி? *தசரத ராமன், கோதண்ட ராமன், ஜானகி ராமன், ரகுராமன்! ராமன் எத்தனை ராமனெடி?* இந்த *ராமன் யார்?* கொஞ்சம் முன்னோக்கிக் காண்போமாயின், வான்மீகி *இராமாயணத்திற்கான* கதையிலே நாரத முனிவர் வான்மீகிக்குக் கூறுவதாக வரும் பண்புகள் இவை:

மிக்க அடக்கமுடையவர்; வெகுபராக்கிரமசாலி;
மிகுந்த காந்தியுள்ளவர்; உறுதியுள்ளவர்
எல்லோரையும் தம் வசத்தில் அடக்கி ஆளுகிறவர்;
புத்திமான்; நிதி தவறாது நடப்பவர்; வாக்குச் சமார்த்திய
முள்ளவர்; சம்பத்து நிறைந்தவர்; சத்துருக்களை அழிப்பவர்;
வெகு பிரதாபமுள்ளவர்; உயர்ந்த மார்பு; விசாலமான
கண்கள் முதலிய சகல சாமுத்திரிகாலக்ஷணங்கள்
யாவும் தவறாது விளங்குகின்றன.

"தருமத்தை அறிந்தவர். சத்தியசந்தர்; பிரஜைகளுடைய நன்மையில் எப்பொழுதும் நோக்கமுடையவர்; நல்லோரை உடையவர்; நல்லொழுக்கமுள்ளவர்; தம்மை அடைந்தார்க்கும் கட்டுப்பட்டு நடப்பவர். அவர்களைப் பாதுகாப்பதிலே கவலை கொண்டவர். பிரம்ம தேவருக்கொப்பானவர்; சகல பாக்கியமும்நிரம்பியவர்; சகல ஜனங்களுக்கும் இஷ்டராக இருப்பவர்; இவ்வுலகத்திலுள்ள பிராணி, சமூகங்களையும் வருணாச்சிரம தர்மங்களையும் தமது கலாசாரத்தையும் தமது ஜனங்களையும் பாதுகாப்பவர்."

வேதங்கள் வேதாங்கங்கள் இவைகளின் தத்துவங்களை
அறிந்தவர். தனுர்வேதத்திலும் தேர்ச்சி அடைந்தவர்.
ஒவ்வொரு சாஸ்திரத்தின் உண்மையையும் உள்ளபடி
கண்டறிந்தனர். ஞாபகசக்தி உடையவர், வெகு யோக்யர்.
பெருந்தன்மையுடையவர்.வெகு சமர்த்தர். எல்லோராலும்
மரியாதை பண்ணத் தக்கவர். எல்லோரிடத்தும் சமமாக
நடப்பவர். எப்பொழுதும் அன்புள்ள பார்வையுடையவர்.
உண்மையில் அவரைத் தரும தேவதையின் அவதாரமாகவே
சொல்லலாம்.

(இஸ்மாயில், நீதிபதி மு. மு., 1982, ப. 2-3)

கம்பன் கண்ட இராமன் தெய்வம் என்ற கருத்தை வலியுறுத்தும் நீதிபதி மு. மு. இஸ்மாயில்,

ஒப்புயர்வற்ற உன்னத குணங்களாலும் பண்புகளாலும் ஒழுக்க சீலத்தாலும், அறத்தின் திறத்தினாலும் ஈடும் எடுப்பும் அற்ற வீரத்தினாலும் வரம்பற்ற வள்ளன்மையினாலும் எல்லையற்ற அருளினாலும் இராமன் ஒரு தெய்வமாகவே இடம் பெற்றுவிட்டான்.

என்கிறார்.(மு. மு. இஸ்மாயில், ப. 03)

கம்பன் கண்ட இராமனின் தனித்தன்மை என்னவென்றால் கவிஞனும் கதையிலே வரும் பிற பாத்திரங்களும் இராமனை இறைவனென்றே வாழ்த்தி னாலும் வணங்கினாலும் இராமனுடைய வாயிலிருந்து புறப்படும் சொல்லிலோ அவனுடைய செயலிலோ அவன் தன்னை இறைவனாகக் காட்டிக்கொண்டதாகக் கம்பன் சொல்லவேயில்லை.

என மேலும் கூறுகிறார் மு. மு. இஸ்மாயில்.

"காசில் கொற்றத்து இராமன், நடையில் நின்றுயர் நாயகன், மண்ணிடையாவர் இராகவனன்றி மாதவம் அறத்தொடும் வளர்ந்தார்; குணங்களால் உயர்ந்த வள்ளல், யாரும் செப்பருங் குணத்து இராமன், தோமில் குணத்தினான், எண்தரு குணத்தினான், ஏத்தரும் பெருங் குணத்து இராமன், மெய்த்தலை நின்றவீரன், தோன்றிய நல்லறம் நிறுத்தத் தோன்றினான், இயங்குபல் உயிருக்கு ஓர் உயிர் என நின்ற இராமன், தர்மம் நோக்கிய தோன்றல், பேர் அளிக்கப் பிறந்த இல் ஆயினான், அறத்தினுக்கு ஆருயிர்த் துணைவன்" எனப் பல்வேறு முறைமைகளிலே இராமனைக் கம்பன் புகழ்ந்துபாட, அனுமன்,

தருமமும் தகவும் இவர் தனம் எனும் தகையர்.

என்றும், வாலி,

தாய் என உயிர்க்கு நல்கித் தருமமும் தகவும் சால்பும் நீ என நின்ற நம்பீ. (வாலிவதை, 125)

என்றும் இராமனைப் புகழ்கின்றனர்.

இனி, இராமனின் திருமேனி வடிவழகினை நோக்கலாம்:

எழுதரிய திருமேனீ, அமைவு அரு மேனியான்.
சுந்தரத் திரள் தோள் அமைந்த மைந்தன்.
சீரித்த பங்கயம் ஒத்த செங்கண் இராமன்.
ஒவியத்து எழுத வொண்ணா உருவத்தான்.
பூங்கணை மயில்வினை மதனற்கும் வடிவு மேன்னையான்.

எனவரும் *இராமாயணச்* செய்யுட் சான்றுகள் இராமனது அழியா அழகைப் பேசுகின்றன.

இராமாயணத்துக்கு **சரணாகதி சாஸ்திரம்** என்ற பெயரை ஈட்டித் தந்ததே தன்னிடத்தில் அபயம் வேண்டியவரை அப்படி வேண்டியவர் யாராக இருந்தாலும் அவரை ஏற்றுக்கொண்டு அவருக்கு அடைக்கலம் அளிப்பது என்ற இராமனுடைய உயர்ந்த பண்புதான். இந்தப்பண்பு இராமனிடத்து அவனுடைய வீரத்துக்கும் கருணைக்கும் ஒப்பாகத் தலைதூக்கி நிற்கிறது.

தண்டகாவனத்து முனிவர்கள், **எந்தை!** என்று இராமனை விளித்து, உன்னைத் தவிர மற்ற யார் உளர் இடுக்கண் நீக்குவார்? அருளுடைவீர! 'நின் அபயம்யான்' என்று இறைஞ்சி,

> **அறத்தின் நீங்கிய அரக்கர் சிலர் உளர் அவர் நெருங்கு கின்றனர், ஆதலால் நாங்கள் தவத்துறையில் ஒழுகமுடிய வில்லை. அவர் செய்யும் கொடுமைகளால் பொறுக்கமாட்டா தவர்களாய் இருக்கிறோம். அவர் செய்யும் கொடுமையின் காரணமாகத் தவநெறியில் எங்களால் ஒழுக இயலவில்லை. நின் அபயம்யாம்.**

என்றனர்.

இவ்விடத்தில், விசுவாமித்திர முனிவர் வேள்விகாக்க இரா மனைத் தருமாறு தசரத மன்னனிடம் கேட்கிற பாடலை நோக்குதல் பொருந்தும்:

> **தருவனத்தில் யான் இயற்றும் தகை வேள்விக்கு**
> **இடையூறாய்த் தவஞ் செய்வோர்கள்**
> **வெருவரச் சென்று அடைகாம வெகுளி என**
> **நிருதர் இடை விலக்காவண்ணம்**
> **செருமுகத்துக் காத்தி என நின் சிறுவர்**
> **நால்வரினும் கரிய செம்மல்**
> **ஒருவனைத் தந்திடுதி என உயிர் இரக்கும்**
> **கொடுங் கூற்றின் உளையச் சொன்னான்.**

என்பது கம்பனது பாடல். இவற்றைக் கேட்ட தசரதன் சோகத்துடனும் அவலத்துடனும்,

> **சிந்தை திரிந்து திகைத்து அயர்ந்து வீழ்ந்தான்**
> **மைந்தன் அலாதுயிர் லேறிவாத மன்னன்.**

என்று பாடுகிறான். ***தசரதனுக்கு உயிர் இராமனே*** என்பதன் நுட்பம் ஓர்ந்து ஆழ்ந்து சிந்தித்துணரத்தக்கது.

இவ்விடத்தில், **மன்னன் உயிர்த்தே மலந்தலை உலகம்** என்னும் வழிவழி வாய்பாட்டை மாற்றி "வையம் மன்னுயிராக அம் மன்னுயிர் உய்யத் தாங்கும் உடல் அன்ன மன்னன்" என்று பேசுவான் கவிச்சக்கரவர்த்தி கம்பன். கம்பனின் ***மன வீரியையும் மனோ பாவத்தையும் வளத்தையும் நுண்மான் நுழைபுலத்தையும்*** எண்ணி எண்ணி வியக்கும் வகையில் கம்பனின் இலட்சிய ஓவியம் உருவாகி யுள்ளது" என்னும் கருத்து உணரத்தக்கது. இலக்கிய நோக்கிலே பாத்திர வார்ப்புக்குரிய உத்தி முறைமைகள் கருதத்தக்கன

வாலி இராமனை, **அடுசரம் தொடுத்த அறத்தின் மூர்த்தி** என்கிறான். இனி, இராமனைச் சுக்கிரீவன் புகழ்வதைப் பாருங்கள்:

> **வையம் நீ! வானும் நீ! மற்றும் நீ! மலரின்மேல்**
> **ஐயன் நீ ஆழிமேல் ஆழிவாழ் கையன் நீ!**
> **செய்ய தீ அனைய அத் தேவும் நீ!**
>
> (கிட். செய். 19.)

என்று சுக்கிரீவன் துதித்துப் போற்றுகின்றான்.

இராமனின் ***பேரழகையும் பேராண்மையையும்*** காதல் வீரம் ஆகிய இரு சுவைகளினூடும் கம்பன் விஸ்தாரமாக விளக்கிப் பாடு கிறான்.

உலாவரும் இராமனை மிதிலைமாடங்களில் நிற்கும் பெண்கள் கண்டு களிக்கின்றனர். இயற்கையாகவே, இயல்பாகவே ***பெண்கள் இளம் ஆடவரைக் கண்டு கண்குளிர எண்ணுவர்*** என்பது வள்ளுவனின் நுனித்த நோக்கு; உண்மைக் குணம். ஒரே (சம)காலத்திலக்கியமான *தடுத்தாட்கொண்டபுராணத்துள்ளும் (பெரியபுராணம்)* **கண்களெண்ணி லாத வேண்டும் காளையைக் காண.**(செய் 25) என்று பாடுகிறார். தெய்வ சங்கற்பத்தால் விதியின் வலியால் மிதிலையில் நின்ற சானகியின் கண்ணும் உலாவந்த இராமனின் கண்ணும் கலந்து ஒன்றின. அதனைக் கண்ட கவிச்சக்கரவர்த்தி, **அண்ணலும் நோக் கினான் அவளும் நோக்கினாள்** என்றான். **இருவரும் மாறிப்புக்கு இதயம் எய்தினர்** என்பது வாழ்க்கையின் விளக்கமாகும். ***அகமும் புறமும்*** சங்கமித்த பேரிலக்கியம் ***கம்பராமாயணம்.***

"தோள் கண்டாரும் தாள் கண்டாரும் தடக்கை கண்டாருமாகப்" பாகம் பாகமாகக் கண்டனரே தவிர (முடிவாக) முடியக் கண்டனரல்லர் என்ற கருத்து விரிவுபட ஆராயத்தக்கது. விருப்பமேனும், ஆய்வாராய்ச்சி இங்கு இந்நூலில் தற்போதைக்கு விலக்கப்படுகிறது. (விரிவஞ்சி விடுக்கின்றேன்)

இராமனின் தோள்கண்ட ஒருத்தி அதன் வலிமை கண்டு மயங்கி அதனையே கண்டு நிற்கிறாள். கம்பன் பாடல் இது:

தோள்கண்டார் தோளே கண்டார் தொடுகழல் கமலம் அன்ன
தாள் கண்டார் தாளே கண்டார் தடக்கை கண்டாரும் அ:தே
வாள்கொண்ட கண்ணார் யாரோ வடிவினை முடியக் கண்டார்
ஊழ்கொண்ட சமயத்து அன்னான் உருவு கண்டாரை ஒத்தார்.

கம்பனின் சொற்கோயிலில் இராமனை இருவடிவத்தில் காண் கிறோம். தெய்வநெறி இயல்புகளும் மனிதகுலம் பின்பற்ற வேண்டிய ஒழுக்க நெறியும் இராமகாவியத்திலே கம்பீரமாகக் காட்சியளிக் கின்றன.

ஒரு சொல், ஒரு வில், ஒரு கில் என்னும் நல்லியல்பைப் பின்பற்றினால் ***மனிதனும் தெய்வமாகலாம்*** என்பதே இக்காவிய நாயகன் உணர்த்தும் உண்மை. "மக்களுக்காகவே மன்னன் என்ற நியதியோடு அறநெறி தழைக்க அரசாட்சி, அருளாட்சி செய்த இராமனையே கம்பன் கண்டான்." (இஸ்மாயில், நீதிபதி மு. மு.,)

இராகவன் தன் புனிதவாளி பற்றிய செய்திகள் மிகவும் சுவார ஸ்யமானவை; நீண்ட விளக்கங்கள் கூறத்தக்கவை; பெரியளவிலே இலக்கிய இன்பஞ் செய்து நிற்பவை; சுவை நலம் தருபவை. ஓரிரு சம்பவங்களைச் சான்றாக நோக்கலாம்.

எதிரியின் பெருமையாலும் புகழப்படுபவன் ***இராமன்.*** இராமனின் எதிரி ***இராவணன்.***

அதிகாரச் செருக்கால் அறம் துறந்து, வஞ்சனை பயின்றும், கொடுமை இயற்றியும், காலவெறி கொண்டும் கெட்டான் எனினும் முன்னாளில் ***பெருந்தவம் செய்து உயர்ந்தவன் இராவணன்.*** அவன் அருங்கலை விநோதன். ஆயிரம் மறை உணர்ந்தவனாகவும் விளங் கினான். அவன் வீரத்தைச் சொல்லப்புகின் ***சொல்லே சோர்வடையும்.*** சீதையின் ***கற்புக் கனலால் காமவெறி எரிய,*** இராமன் பேராண்மையால் அதிகார, அகந்தை, மமதை அழிய மாவீரனாகவே இறுதிப் போரில் இறக்கிறான். ***இராவணனது மார்பில் புக்கோடி உயிர்பருகிப் புறம்***

போயிற்று இராகவன் தன் புனிதவாளி எனப் பாடுகிறான் கவிச்சக்கர வர்த்தி கம்பன். பாடலை முழுவதுமாக நோக்கலாம்:

முக்கோடி வாழ்நாளும் முயன்றுடைய
பெருந்தவமும் முதல்வன் முன்னாள்
எக்கோடி யாராலும் வெலப்படாய்
எனக்கொடுத்த வரமும் ஏனைத்
திக்கோடும் உலகனைத்தும் செருக்கடர்ந்த
புயவலியும் தின்று மார்பில்
புக்கோடி உயிர்பருகிப் புறம்போயிற்று
இராகவன்தன் புனித வாளி.

இப்பாடலிலே இராமனின் பேராண்மை விளக்கமுறும். இனி, இராமனின் பேராண்மையை விபரிக்கும் கம்பனது ***இராமாயணப்*** பாடலையும் பார்ப்போமா? அன்பர்களே!

கோசலை நாடுடை வள்ளல் என்கிறான் கம்பன். உயிர்ப் பிச்சை கொடுத்துப் பின் தருமத்தை - அறத்தைப் ***புனிதவாளி*** யால் நிலைநாட்டுகிறான் இராமன்.

ஆளையாவுனக்கு அமைந்தன மாருதம் அறைந்த
பூளையாயின கண்டனை இன்றுபோய்ப் போர்க்கு
நாளை வாவென நல்கினன் நாகிளங் கமுகின்
வாளை தாவுறு கோசல நாடுடை வள்ளல்.

என்பது ***இராமனின் பேராண்மை*** நிலை வெளிப்படும் இடம் எனலாம்.

அனுமன், இராமனைப்பற்றி ***இராவணனிடம்*** கூறும் கருத்துக்கள் சுந்தரகாண்டத்தில்,

மூலமும் நடுவும் ஈறும் இல்லதுஓர்
மும்மைத்து ஆய
காலமும் கணக்கும் நீத்த காரணன்
கைவில் ஏந்திச்
சூலமும் திகிரி சங்கும் கரகமும்
துறந்து தொல்லை
ஆலமும் மலரும் வெள்ளிப் பொருப்பும் விட்டு
அயோத்தி வந்தான். (சுந். செய். 75.)

என்று பாடப்பட்டுள்ளது.

போர் புரியவந்த **கும்பகர்ணனை இராவணனுக்காகப்** போரிடு வதைத் தவிர்த்து, இராமனிடத்தில் அடைக்கலம் புகுக என்று அறி வுறுத்தி அழைக்க வந்த **வீடணன்** இராமனைப் பற்றி,

மூவர்க்கும் தலைவர் ஆன மூர்த்தியர் அறத்தை முற்றும்
காவற்குப் புகுந்து நின்றார் காகுத்த வேடம் காட்டி.

(யுத். செய். 145.)

என்று உயர்த்திப் புகழ்கிறான். இந்திரசித்து, இராவணனி டத்திலே இராமனைக் குறித்து,

மானிடன் அல்லன் ; தொல்லை
வானவன் அல்லன் மற்றும்
மேல்நிமிர் முனிவன் அல்லன்
வீடணன் மெய்யின் சொன்ன
யான்எனது எண்ணல் தீர்ந்தார்
எண்ணுறும் ஒருவன் என்றே
தேன்நகு தெரியில் மன்னா
சேகுஅறத் தெரிந்த தன்றே. (யுத். 12)

இராவணனும், இராமன் இறைவன் என்ற உணர்வைப் பெற்ற பிறகும் அவனோடு தொடர்ந்து போரிடத் துணிந்தான். இராமன் மேல் தான் எறிந்த சூலம் பொடியாகிப் போவதைக் கண்ட இராவணன் முன்பு வீடணன் சொன்னதை நினைவு கூருகிறான்:

சிவனோ அல்லன் நான்முகன் அல்லன் திருமாலாம்
அவனோ அல்லன் மெய்வரம் எல்லாம் அடுகின்றான்
தவனோ என்னின் செய்து முடிக்கும் தரன்அல்லன்
இவனோ தான்அவ் வேத முதல்காரணன்.

(பால. செய். 38)

ஆகவே இப்பொழுது இக்கட்டுரையை வாசிக்கும் போது இராமனின் பன்முகத் தோற்றத்தையும் ஓரளவு ***ஊகித்தும், தரிசித் துணர்ந்தும் இரசித்தும்*** அனுபவித்துக் கொள்ள முடிகிறதல்லவா?. இலக்கிய இன்பம் கவியின்பம் மூலநூற் செய்யுட்களாலேயே இனிது மிளிரும். இதனை உணர்க. **மூலத்தை எழுத்துப்பிழையறக் கற்கப் பயிற்சியும் முயற்சியும் உணர்ச்சியும் அவசியம்.**

ஆகவே இராமன் யார்? என்ற வினாவுக்கு இப்படியும் - விடை காண முடியுமோ என்றும் எண்ணத் தோன்றுகிறது. அதாவது,

யாவர்க்கும் யாவற்றுக்கும் முதலும் மூலமுமான முழுமுதற் பொருள் மனிதனாக அவதரித்துத் தந்தையின் சொல்லைத் தலை மேற்கொண்டு அவனைச் சத்தியசந்தனாக்கிய தனையனாகவும், தன் வாழ்க்கைத் துணைவியிடம் அளவற்ற காதல் கொண்டிருந்த அன்புக் கணவனாகவும், தன்னிடத்தில் எல்லையற்ற பாசம் வைத்திருந்த தம்பி யிடம் அதற்கிணையான வாஞ்சை வைத்திருந்த அருமை அண்ணனா கவும், தன்னிடம் அன்பின் வந்த நண்பர்களிடத்துத் தன்னையே அடிமை யாக்கிக் கொண்ட அண்ணனாகவும், எத்தகைய சூழ்நிலையிலும் போர் அறத்தின் நெறியினின்றும் சற்றும் பிறவாத பேராண்மை படைத்தவனா கவும், தன்னை வஞ்சித்துத் தன் மனைவியையே தூக்கிச் சென்ற பகைவனிடமும் கருணை காட்டியவனாகவும், யாராலும் வெல்லப்படாத பகைவனைத் தான் வென்று நின்ற போதும் அந்தப் பகைவன் முன்னால் எப்போதோ யாரிடமோ போரில் புறமுதுகு காட்டியவனோ எனச் சந்தேகித்த போது தன் வீரமே பழுதுபட்டு விட்டது என்று எண்ணிய பெருவீரனாகவும், தன்னுடையதும் தன்னுடை ஆருயிர்த் துணைவியுடை யதும் தன் இன்னுயிர்த் தம்பியுடையவுமான எல்லையற்ற தன் சிற்றன் னையைத் தன்னிடத்துக் கொண்டிருந்த பாசம் காரணமாகத் தன் தந்தை துறந்ததை மாற்ற அந்தத் தந்தையிடமே வரம் கேட்ட வள்ளலா கவும். துன்பமும் தொல்லையும் தொடர்ந்து வந்துகொண்டிருந்தபோது சோகத்துக்கும் வருத்தத்துக்கும் கோபத்துக்கும் பிறமனிதர்களைப் போல இடம் கொடுத்தவனாகவும், வாழ்ந்த மனிதனே கவிச்சக்கர வர்த்தி கம்பன் கண்ட இராமன்.

விசுவாமித்திர மாமுனியின் தவத்தைக் காத்து அதை அழிக்க வந்த தாடகையைக் கொன்றவன். அவருடைய புதல்வர்களோடு போரிட்டு வென்றவன். மிதிலையிலே வேறு எந்த மன்னாதி மன்னனும் வளைக்க முடியாத ***சீவதனுசை உடைத்து*** அதனால் அதற்குப் பரிசாகச் ***சீதையை மணந்தவன்.*** மிதிலையிலிருந்து அயோத்திக்குத் திரும்பும் வழியிலே தன்னை எதிர்த்து வந்த ஈத்திரியவருணப் பகைவனைப் ***பரசுராமனுடைய விஷ்ணுதனுசை*** வளைத்து அவனுடைய ஆணவத்தை அடக்கியவன். இவ்வளவு ஆற்றல்களையும் பெற்ற மாவீரன் கம்பன் கண்ட இலக்கிய இராமன்.

இராமன் சிறந்ததொரு வில்வீரன் என்பதை அறியாதோர் இலர் எனலாம். தனது பெருவீரத்தால் அவன் பரசுராமனை வென்ற வீரன் என்று தசரதனால் போற்றப்படுவதைக் காண்கிறோம். சீதையை மணக்க

முன்வருவோருடைய வலிமையைப் பரிசோதிப்பதற்கென்று மிதிலையில் வைக்கப்பட்டிருந்த ***தேவதேவர் பிடித்த போர்வில்லை*** மிக இலகு வாக ஒடித்துச் சானகியைக் கைப்பிடித்த மணவாளன். போர் வல்லவ னான இராமன் இளமையிலேயே சகல வல்லமைகளையும் கற்றுப் ***பேரறிஞனுமானவன்.*** அதனை "ஓதுநூல் மல்கு கேள்விய வள்ளல்." என்னும் தொடர் நன்கு காட்டுகின்றது. வீரம். அழகு, கல்வி, நற்குண நற்செயல்கள் ஆகியவற்றிலும் சிறந்த அவன் புகழைப் பாடுவதிலே கவிகளுக்கெல்லாம் பெருமை.

கவியமை கீர்த்தி அக்காளை நாளையே புவியமை மணிமுடி புனையும் என்று கம்பரே கூறுகின்றார். கரிய செம்மலும் வரதனும் ஆகிய அந்த ஆண்டகையின் பேரெழிலுக்கு நிகர் வேறில்லை எனலாம். இராமன் முடிசூடச் செல்கின்றான் என்றபோது அந்த ***ஐயுறுஞ் சுடர் மேனியான் எழில்*** கண்டு மகிழ விரைந்த மகளிர் தொகையும் அன்னார் எத்திசையிலும் இராமனது எழிலுருவைக் கண்டு பேரானந்த மடைந்தமையும் எல்லாம், ***இராமன் பேரழகன்*** என்பதையே மிகுதியும் எடுத்துக்காட்டிநிற்கின்றன.

இராமன் தனது அன்பினாலும் இனிய பண்பினாலும் மக்கள் அனைவருள்ளத்தையும் கவர்ந்து தனதாக்கிக்கொண்ட செல்லக் குழந்தை. ***இராமன் நாளை முடிபுனையப் போகின்றான்*** என்ற சொல் நகரிலுள்ள மக்களது செவிக்கு அமுதமாக இருந்தது என்று அவர்களது மகிழ்ச்சி நிலையை விளக்க வந்த கவிஞரும் குறிப்பிட்டு மகிழ்கிறார். நகரநம்பியரும் முதுமகளிரும் வேறுபல மகளிரும் வேதியரும் சாதுகை மாந்தரெனப்படும் நல்லோரும் அதனைக் கேட்ட மகிழ்வால் முறையே இராமனது தம்பியரையும் கோசலையையும் சீதையையும் தசரதனை யும் ஒத்திருந்தாரென்றால் இராமன் அவர்களைக் கவர்ந்திருந்த சிறப்புக்கு அளவும் கூறலாமோ! பாற்கடலிலெழுந்த அமுதத்தை உண்பதற்காகத் திருமாலை நோக்கித் திரண்ட தோள்களைப் போன்று அரசர்கூட்டம் இராமனது முடிசூட்டினைக் காண்பதற்கு வெள்ளமாகத் திரண்டு வந்தது.

உறையொடும் நெடுவேலோய் உபநயன விதிமுடித்து
மறைபோதும் வித்திவரை வளர்த்தானும் வசிட்டன்காண்.

ஸ்ரீ ராமன் வசிட்டருடைய உத்தம மாணவன். அவருடைய ஆச்சிரமத்திலேயே வசிட்டரிடமே பயின்றவன். இதனை ஜனகனுக்கு

எடுத்துரைக்கிறார் விசுவாமித்திரர். இராமன் என்ற ஒரே முழு முதற்பொருளை வினை, உரி ஆகிய நம்பிக்கைகளுடன் இவற்றின் சாரமாகவும் - ஐம்பொறியாகிய தம் பகைப் புலன்களவிந்த மனத்தின் படிமமாகவும் படைத்து அந்த இராமனை நிதியும், வாழும் ஆரோக்கிய முமான உற்சாக மனிதர்கள் வாழும் ***கோசல நாட்டின் தலைவனாகவும்*** காட்டுகிறான் கவிச்சக்கரவர்த்தி கம்பன்.

உசாத்துணை நூல்கள்.

1. ஜெயராஜ், இ., (1997), ***அழியா அழகு,*** சென்னை.
2. சிவஞானம், ம. பொ., (1986), ***இலக்கியங்களில் புத்திரசோகம்,*** சென்னை.
3. கந்தையா, வீ. சி., (1964), ***கம்பராமாயணம், உரைவளம்,*** யாழ்ப்பாணம்.
4. வையாபுரிப்பிள்ளை, எஸ்., (1965), ***கம்பன் காவியம்,*** சென்னை.
5. சுப்பிரமணியன், அ. வே., (1987), ***கம்பன் காட்டும் களன்,*** சென்னை.
6. சாண்டில்யன், (1985), ***கம்பன் கண்ட பெண்கள்,*** சென்னை.
7. கணபதிப்பிள்ளை, பண்டிதமணி சி., (1962), ***இலக்கியவழி,*** யாழ்ப்பாணம்.
8. இராதாகிருஷ்ணன், கி., (1985), ***அயோத்தியிலிருந்து இலங்கை வரை,*** சென்னை.
9. நாவலர் சோமசுந்தர பாரதியார், (1970), ***தசரதன் குறையும் கைகேயி நிறையும்,*** சென்னை.
10. கணபதிப்பிள்ளை, பண்டிதமணி சி., (1987), ***செந்தமிழ்க் களஞ்சியம்,*** சுன்னாகம்.
11. இஸ்மாயில், நீதிபதி, மு. மு. (1982), ***கம்பன் கண்ட இராமன்,*** சென்னை.
12. சுப்புரெட்டியார், ந., (1988), ***தமிழ் இலக்கியங்களில் அறம் நீதி,*** முறைமை, சென்னை.
13. கணபதிப்பிள்ளை, பண்டிதமணி சி., (1980), ***கம்பராமாயணக் காட்சிகள்,*** யாழ்ப்பாணம்.
14. சீனிச்சாமி, து., (1994), ***தமிழில் காப்பியக் கொள்கை,*** சென்னை.
15. இராசாராம், துரை., (1978), ***கம்பராமாயணத்தில் சில படலங்கள்,*** சென்னை.
16. மாணிக்கம், வ. சுப., (1994), ***கம்பர்,*** சென்னை.
17. நல்லபெருமாள், எஸ்., (1988), ***கம்பன் காவிய சாரம்,*** சென்னை.
18. அருணகிரி, அ. கம்பவாணர், (1997), ***கம்பன் காட்டும் தீராக் காதலன்,*** சென்னை.
19. இஸ்மாயில், நீதிபதி மு. மு., (1987), ***உந்தும் உவகை,*** சென்னை.
20. அருணகிரி, அ., (1988), ***கம்பக் கதம்பம்,*** சென்னை.
21. அருணகிரி, அ., (தொகுப்பு), (1989), ***கம்பனுக்குச் சீட்டுக்கவி,*** சென்னை.
22. மதனகல்யாணி, ச., (1990), ***கம்பனோடு ஒன்றும் பிரெஞ்சு இலக்கியங்கள்,*** புதுச்சேரி.
23. அருணகிரி, அ., (1986), ***வானொலி வீருந்து,*** சென்னை.
24. கோபாலய்யர், வை., (1994), ***இராமாயண முனிவர்கள்,*** சென்னை.
25. மணிசித்தன், பாவலர்., (1993), ***கம்பனும் திருமங்கை மன்னனும்,*** சென்னை.
26. மணிசித்தன், பாவலர், (1992), ***பாட்டிலக்கியக் கம்பன்,*** சென்னை.
27. சத்தியசீலன், சோ., (1998), ***கம்பர் + வள்ளல் = ஆன்மநேயம்,*** சென்னை.
28. ஞானசம்பந்தன், அ. ச., (1996), ***கம்பன் எடுத்த முத்துக்கள்,*** சென்னை.
29. கிருபானந்தன், நி., (1989), ***கம்பன் காட்டும் அனுமன்,*** சென்னை.
30. குன்றக்குடி அடிகளார், தவத்திரு, (1994), ***கம்பன் கண்ட ஆட்சியில் சமூகம்,*** சென்னை.

கனகசபாபதி நாகேஸ்வரன்

ஈழத்துச் சிறுகதை வளர்ச்சி
(1930 முதல் 1950கள் வரை)

1930 ஆம் ஆண்டு தொடக்கம் 1950 ஆம் ஆண்டுகள் காலம் வரையிலான ஈழத்துச் சிறுகதை வளர்ச்சி பற்றி - இரண்டு தசாப்த கால வரையறைக்குள் - இவ்வாய்வுக் கட்டுரை கவனஞ் செலுத்துகிறது. இவ்விடயம் குறித்து முன்னோடி ஆய்வுகள் செய்தோராகவும், சிந்திப்பவர்களாகவும் இரசிகமணி கனக. செந்திநாதன், மு. பொன்னம்பலம், சொக்கன், கே.எஸ். சிவகுமாரன், சில்லையூர் செல்வராசன், செம்பியன் செல்வன், செ. யோகநாதன், பேராசிரியர்கள் க. கைலாசபதி, கா. சிவத்தம்பி, சி.தில்லைநாதன், க. அருணாசலம், எம்.ஏ.நு.மான் துரை மனோகரன், மனோன்மணி சண்முகதாஸ், நா. சுப்பிரமணியம், சி. மௌனகுரு, நந்தி சித்திரலேகா மௌனகுரு, சி. சிவலிங்கராசா, அ. சண்முகதாஸ், செங்கையாழியான் க.குணராசா, வரதர், திருமதி கோகிலா மகேந்திரன், குறமகள், தெளிவத்தை யோசப், சாரல்நாடன், அ. யேசுராசா, கலாநிதி செ. யோகராசா சி. வன்னியகுலம், டொமினிக் ஜீவா, டானியல், லெ. முருகபூபதி, மயிலங்கூடலூர் பி. நடராசன், இ.க.சிவஞானசுந்தரம் போன்றோரைக் குறிப்பிடலாம்.

1930- 1950 வரையுள்ள சிறுகதை வளர்ச்சிக் காலப்பகுதியை வசதிகருதி இரு கூறுகளாகப் பிரித்து ஆராயலாம்:

1. 1930 தொடக்கம் 1940 வரையுள்ள காலம். வடபகுதிச் சிறுகதை வளர்ச்சியின் ஆரம்பகாலம். தமிழ் நாட்டிலிருந்து வெளிவந்த ***மணிக்கொடி*** போல் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த ***ஈழகேசரி*** மறுமலர்ச்சிக்காலகட்டம்.

2. 1940 தொடக்கம் 1950 களில் மறுமலர்ச்சிக்காலகட்டம். முப்பது களில் ***ஈழகேசரி*** என்றால் நாற்பதுகளில் ***மறுமலர்ச்சி*** என்ற பத்திரிகை இருந்திருக்கிறது. 50 களின் ஆரம்பத்தில் ***சுதந்திரன் தேசாபிமானி, வீரகேசரி*** என்பவை இருந்துள்ளன. ஐம்பதுகளின் இறுதியிலிருந்து 60 களில் பேராசிரியர் க. கைலாசபதியை ஆசிரியராகக் கொண்ட ***தினகரன்*** ஈழத்துத் தமிழில் நவீன சிறுகதை இலக்கிய வளர்ச்சியில் ஆரம்பகாலப் பங்களிப்பைக் காத்திரமாகக் செய்துள்ளது.

இந்தியாவில் *கிராமஊழியன்*, *கலைமகள்*, *ஆனந்தவிகடன்*, *சூறாவளி*, *மணிக்கொடி* போன்ற சஞ்சிகைகள் சிறுகதைகளைப் பிரசுரித்து வந்துள்ளன. சுதந்திரப் பண்பாடு தமிழ்நாடு – யாழ்ப்பாணம் என்ற பாகுபாட்டை அதிகம் பேணவிடாதளவிலே மேலோங்கியிருந்த காலகட்டம், இலங்கையில் ஜனநாயக மயப்படுத்தப்பட்ட நவீன ஆங்கிலக் கல்விப் பயிற்சியினால் நவீன இலக்கியங்களின் மீதான ஆர்வம் தமிழ்நாட்டில் ஏற்பட்ட நவீன இலக்கிய விழிப்புணர்வின் பாதிப்பு முதலான அம்சங்கள் இலங்கையிலே தமிழ்ச் சிறுகதையின் தோற்றத்துக்கு உந்துசக்திகளாக விளங்கின. ஆரம்ப காலத்தில் நவீன இலக்கியங்களின் தோற்றம் மத்தியதர வகுப்பினருடன் தொடர்புபட்டதாக அமைந்தது. பேராசிரியர், கலாநிதி க.அருணாசலம் இப்பண்பினைப் பின்வருமாறு இரத்தினச்சுருக்கமாக எழுதியுள்ளார்:

> 19ஆம் நூற்றாண்டளவில் ஆங்கிலேயர் ஈழம் முழுவதையும் தமது ஆதிக்கத்திற்கு உட் படுத்தியதை யடுத்தே ஈழத்தின் அரசியல், சமூக, பொருளாதார, பண்பாட்டுத் துறைகளிற் பாரிய மாற்றங்கள் ஏற்படலாயின. நிலமானிய அமைப்பு முறையின் சிதைவு, அரசியற்றுறையிலான சீர் திருத்தங்கள், கல்வி குறிப்பாக ஆங்கிலக்கல்வி விருத்தி, மத்தியதர வர்க்கத்தின் தோற்றம், அரசியல் துறையிற் பொது மக்கள் பங்கு பெறத் தொடங்கியமை, மேலைநாட்டு இலக்கியங்களின் தொடர்பு, தமிழ்நாட்டு எழுத்துக்களின் தாக்கம் முதலியன ஏறத்தாள 1930 ஆம் ஆண்டையொட்டி ஈழத்திலும் சிறுகதை இலக்கியம் தோன்றுவதற்கான சூழ்நிலையை ஏற்படுத்தின.[1]

தமிழ் நாட்டைப்போலவே ஈழத்திலும் நாவலின் தோற்றத்திற் குப் பின்னரேயே சிறுகதையிலக்கியம் முகிழ்க்கலாயிற்று. 1930 களிலிருந்தே தமிழ்ச்சிறுகதைகள் உருவப்பிரக்ஞையுடன் எழுதப் பட்டன. இலங்கைத்தமிழ்ச் சிறுகதையின் முன்னோடிகளாக இலங்கையர்கோன், க. தி. சம்பந்தன், சி.வைத்தியலிங்கம் எனும் இம்மூவரையுமே பெரும்பாலான இலக்கிய விமர்சகர்கள் குறிப்பிடு வதுண்டு. இவர்களது கதைகள் *கலைமகள்*, *கிராமஊழியன்* முதலிய பத்திரிகைகளில் வெளியாகின. தஞ்சாவூரைப் பிறப்பிடமாகக் கொண்ட கோ. நடேசையர் 1920 களின் பிற்பகுதியில் இலங்கைக்கு வந்து

பெருந்தோட்டத் துறையில் தொழிற்சங்கவாதியாகவும், இனங்காட்டி திரு.இராமசாமியின் சேர்வையின் சரிதம் என்ற சிறுகதையை 1931இல் எழுதினார். கோ. நடேசையரின் இப்படைப்புச் சிறுகதையின் வடிவத்தை முழுமையாகப் பெறவில்லையெனினும், இச் சிறுகதையே இலங்கைத் தமிழ்ச் சிறுகதையின் தோற்றத்தைக் கோடிகாட்டி நிற்கிறது.[2] என்று கருதுகிறார் கலை இலக்கிய விமர்சகர் கலாநிதி துரை.மனோகரன். எனினும், நடேசையர் இக்கதையின் மூலம் அற வழிப்போதனை செய்ய முனைந்துள்ளார்.

சிறுகதை முன்னோடிகள் குறித்தெழுதிய ***செங்கையாழியான்*** கலாநிதி க. குணராசா,

> "1930 ஜூன் 22 ஆந் திகதி யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரத் தொடங்கிய ***ஈழகேசரிப்*** பத்திரிகையின் படைப்புத் தளமும் சிறுகதை கணிசமாக வெளிவரக் காரணமாயின. 1930 இல் நவீன உருவப் பிரக்ஞை கொண்ட ***மரியாமதலேனா*** என்ற சிறு கதை இலங்கையர்கோனால் எழுதப்பட்டுக் கலைமகளில் வெளி வந்தது. 1931 இல் மலையகப் பத்திரிகை யாளரான கோ. நடேசையர் ***திரு இராமசாமி சேர்வை யின் சரித்திரம்***, மூலம் சிறுகதைத் துறைக்குக் காலடி எடுத்து வைக்கிறார். 1934 இல் நாவலியூர் சோ.நடராஜன் ***மாலினி*** என்ற சிறுகதையுடன் ***ஈழகேசரி*** யூடாகச் சிறுகதைத்துறைக்கு வருகிறார். 1936 இல் சிறுகதை உலகிற்குச் சோ. சிவபாதசுந்தரம் ***தோட்டத்து மீனாட்சி*** என்ற ஆனந்தவிகடன் சிறுகதையுடன் பிரவேசிக்கிறார். அதேயாண்டு சு. நல்லையா (சுயா) ***அன்னையின் கட்டளையும் அது தான்*** என்ற ***ஈழகேசரிச்*** சிறுகதையுடன் சிறுகதைத் துறைக்குப் பிள்ளையார் சுழியிடுகிறார். 1938 இல் ஈழத்துச் சிறுகதை உலகிற்குச் சம்பந்தன், ஆனந்தன், பாணன் ஆகிய மூவர் வருகின்றார். ***கலை மகளில்*** சம்பந்தனின் முதலாவது சிறுகதையான ***தாளலயம்,*** ***ஈழகேசரியில்*** ஆனந்தனின் ***ஹரிஜனங்களின் கண்ணீர்,*** அதே பத்திரிகையில் பாணனின் ***அவிந்தமலர்*** ஆகியன வெளிவருகின்றன. 1939 களில் ஈழத்துச்

சிறுகதை உலகிற்குச் சி.வைத்தியலிங்கம் **ஏன் சிரித்தார்** என்ற கலைமகள் கதையுடன் பிரவேசிக் கிறார். அதேயாண்டு ஈழகேசரி மூலம் பவன் என்பவர் **தியாகி** என்ற கதையுடன் சிறுகதை உலகிற்கு வருகை தருகிறார். ஆக, இலங்கையர்கோன், நடேசையர், நாவலியூர் சோ.நடராஜன், சோ. சிவபாதசுந்தரம், சுயா, சம்பந்தன், ஆனந்தன், பாணன், சி. வைத்தியலிங்கம், பவன் ஆகிய பத்துப் படைப்பாளிகளும் ஈழத்துச் சிறுகதை இலக்கியத்தின் முதல் முன்னோடிகளாகின்றனர்."புகழ்பூத்த இலக்கிய விமர்சகரும், பேராசிரியருமான கலாநிதி கார்த்திகேசு சிவத்தம்பியின் மேற்கோளை எடுத்துக் காட்டி மேலும் விளக்கந்தர முயலும் கலாநிதி க.குணராசா பின்வருமாறு எழுதுகிறார்:

ஆரம்ப காலகட்டத்தின் முக்கிய எழுத்தாளர்களாய் விளங்கி யோர் சி.வைத்தியலிங்கம், இலங்கையர்கோன், சம்பந்தன் ஆகியோர்

என்கிறார் பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி, (புதுமை இலக்கியம்,1997, ப.24)

சிறுகதையுலகில் பிரவேசித்து இப்புதிய இலக்கிய வகை யைத் தெரிந்து சிறுகதை படைத்தவர்கள் சி.வி.வேலுப்பிள்ளை, அ. செ. முருகானந்தன், சோ.தியாகராஜன், வரதர், அ.ந. கந்தசாமி, கனக. செந்திநாதன், சு.வே, நாவற்குழியூர் நடராசன், இராஜ. அரியரத்தினம், கே. கணேஸ். கசின். சொக்கன், சு.இராஜநாயகன், தாழையடி சபாரத்தினம், கு. பெரியதம்பி ஆகியோராவர். ஆக, ஈழத்துச் சிறுகதையின் முன்னோடிகளாக இந்த இருபத்தாறு படைப் பாளிகளையும் கொள் ளலாம்.[4] என்கிறார் இரசிகமணி கனக.செந்திநாதன்.

இருபதாம் நூற்றாண்டின் முதல் ஐந்து தசாப்தங்களில் சிறுகதைத்துறைக்குப் பங்களிப்புச் செய்தவர்களில் 25 எழுத்தாளர்கள் இனங்காணப்படவேண்டியவர்கள். இலங்கையர்கோன் (1930), வ. கோ. நடேசையர் (1931), நாவாலியூர் சோ. நடராசன் (1934), சோ. சிவபாதசுந்தரம், சுயா (1936) சோ. தியாகராசா (1936), ஆனந்தன் (1938) அ.செ. முருகானந்தன் (1940), வரதர் (1940), அ . ந. கந்தசாமி (1941), கனக. செந்திநாதன் (1943), நாவற்குழியூர்

நடராசன் (1943), சு.வே. (1943), இராஜ.அரியரத்தினம் (1945), கசின் (1947), சொக்கன் (1947), தாழையடி சபாரத்தினம் (1945), கு.பெரியதம்பி (1947) கே.கணேஸ் (1949), சி.வி.வேலுப்பிள்ளை (1949), சு.இராஜநாயகன் (1949) ஆகியோரே சமூகசீர்திருத்தக்கால முன்னோடிச் சிறுகதையாசிரியர்களாவர். இவர்களது படைப்புகளுக்குக் களமாக ஈழத்தில் *ஈழகேசரியும், மறுமலர்ச்சியும்* அமைந்தன.

ஈழகேசரிச் சிறுகதைகள்

ஈழகேசரி பற்றிக் கலாநிதி க.குணராசா பின்வருமாறு கூறுகிறார்.

> 1930 – 1958 காலகட்டத்தில் ஈழகேசரியில் 514 சிறுகதைகள் வெளிவந்திருக்கின்றன. ஈழகேசரியின் முதலாவது சிறுகதை 1933ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் வெளிவந்தது. அளவெட்டி க.சிவலிங்கம் என்பார் பறைச்சேரியில் தீ விபத்து அல்லது வேதாந்த ஐயங்கார் என்ற சிறுகதையை எழுதியிருந்தார் .. ஈழகேசரியில் மூன்று தலைமுறை எழுத்துக்கள் இடம்பிடித்துள்ளன. சி.வைத்தியலிங்கம், இலங்கையர் கோன், சம்பந்தன் இவர்களின் சிறுகதைகள் பற்றிய மதிப்பீடு மறுபரிசீலனைக்கு உள்ளாக்க வேண்டிய அவசியம் எழுந்துள்ளது. இவர்கள் படைத்த அத்தனை படைப்புக் களும் ரொமான்டிசப் பண்புகள் கொண்டவை என்று ஒதுக்கிவிட முடியாதவை. இவர்களால் படைக்கப் பட்ட வெள்ளிப் பாதசரம், மச்சாள், பாற்கஞ்சி, கடற்கரைக் கிளிஞ்சல், நெடுவழி, அவள் முதலான சிறுகதைகள் கற்பனைக் கதைகளல்ல. இந்த மண்ணில் ஆழமாகக் காலூன்றி எழுதப்பட்ட மண்வாசனைப் படைப்புக்கள். சம்பந்தனின் சிறுகதைகளிலும் வைத்தியலிங்கத்தின் சிறுகதைகளிலும் பேச்சு வழக்கு அவ்வளவு தூரம் முக்கியம் பெற வில்லை என்றாலும் இலங்கையர்கோன் அந்த வழக்கினை அளவாகவும் கலைத்துவத் தோடும் கையாண்டுள்ளார்.[5]

எனச் செங்கை ஆழியான் விளக்குகின்றார்.

ஆரம்பகாலச் சிறுகதையாளர் பற்றியும் அவர்களது படைப்பு உத்திநுட்பங்கள் பற்றியும் இனி நோக்கலாம். இலங்கையர்கோனும்,

சி.வைத்தியலிங்கமும் ஏறத்தாழ ஒத்தபோக்குக் கொண்டவர்கள். இருவரும் மிக நெருங்கிய உறவினருமாவர். இலங்கையர்கோன் ஆங்கிலத்தோடு தமிழையும் வடமொழியையும் இலத்தீனையும் கற்ற வர். சி. வைத்தியலிங்கமும் தமிழோடு ஆங்கிலத்தையும் வடமொழி யையும் படித்தவர். வரலாற்று இதிகாசக் கதைகளையும், சமூகக்கதை களையும் இவர்கள் எழுதினர். ந.சிவஞானசுந்தரம் என்ற இயற் பெயரைக்கொண்ட ***இலங்கையர்கோன்*** ஏறத்தாழ முப்பது சிறுகதை களை எழுதியுள்ளார். தமிழ்நாட்டுச் சிறுகதையாசிரியர் கு.ப.ரா இவரது ஆதர்ஷ எழுத்தாளராக விளங்கினார் என்பர் இலக்கிய விமர்சகர்.

இலங்கையர்கோன் தனித்துவம் வாய்ந்த ஓர் உரைநடை யைப் பயன்படுத்தினார். உரையாடல் வாயிலாகச் சம்பவங்களை விளக்கிச் செல்லுந்திறன் அவருக்கு இயல்பாகவே கைவந்திருந்தது. தமது சமூகச்சார்பான சிறுகதைகளில் பேச்சுவழக்கை இயல்பறிந்து இலங்கையர்கோன் பயன்படுத்தியுள்ளார். மனிதமனத்தின் நுண்ணிய தான மனவுணர்வுகள், ஆண் பெண் உறவு ஆகிய சம்பவங்களைக் கலைமெருகுடன் கையாள்வார்.

செங்கையாழியனின் தகவல்கள் வருமாறு:

1962 இல் *வெள்ளிப்பாதசரம்* எனும் மகுடத்தில் 15 சிறுகதை கள் கொண்ட தொகுப்பு வெளிவந்தது. ஈழத்துச் சிறுகதை முன்னோடி களுள் ஒருவரின் கதைப் படைப்புகள் மொத்தமாகத் திரட்டித் தரும் நூல் இதுவே. இந்நூலிலுள்ள அநுலா, மரியாமத லேனா, மேனகா, மணப்பரிசு, தாய், யாழ்பாடி, சிகிரியா, கடற்கோட்டை போன்றன வரலாற்று நிகழ்ச்சி கொண்டவை. இந்நூலுள் அடங்காத கதை களாக வஞ்சம், சமாதானம், கடற்கரைக் கிளிஞ்சல், தேவ லோகக் காதல், கடலிலே ஒரு மீன், அந்தத்தந்தி, தேவியும் தவமிருந்து, செங்காந்தள் என்பவற்றைக் கூறலாம். இலங்கையர் கோனின் வெள்ளிப்பாதசரம், முதற்சம்பளம், தந்தைமனம் என்பன யதார்த்தப் பண்பு காட்டி நிற்கின்றன. *பாலுறவையே பெரிதும் தங்கள் கதைப் பொருளாகக் கொண்டனர். பாத்திரங்களின் இயக்கங்களை விபரிப்பதைவிட உணர்வுநிலைக்கே அதிக அழுத்தங் கொடுத்தனர். அந்தவகையில் உணர்ச்சி மிகைப்பு இக்காலக் கதைகளில் ஒரு பொதுப்பண்பாகவுள்ளது. உணர்ச்சிமிகைப்பை வெளிப்படுத்துவதற்குக் காவியப்பாங்கான அலங்காரமொழிநடை அவசியம். "இலங்கையர் கோன் படைத்துள்ள பாத்திரங்கள் உணர்ச்சியின் அடிமைகள்" என்று*

கூறுவர் பேராசிரியர் கலாநிதி க. கைலாசபதி. இலங்கையர் கோனின் வெள்ளிப்பாதசரம் என்ற சிறுகதை யாழ்ப்பாணத்துக் கிராமிய மண் வாசனை கமழ எழுதப்பட்ட ஓர் உன்னதப் படைப்பாகும். கணவன் மனைவிக்கிடையே உண்டாகும் பிணக்கினை விபரிப்பது இக்கதை. சி. வைத்தியலிங்கம் கிராமியத்தைத் தமது படைப்புகளிற் கொண்டு வருவதிலும், மெல்லிய மனவுணர்வுகளைத் துல்லியமாக வடிப்பதிலும் இலங்கையர்கோனைப் போன்றே திறமையுடன் விளங்கினார். புதுமைப்பித்தன், கு.ப.ரா, ந. பிச்சமூர்த்தி, த.நா. குமாரசாமி, க. நா. சிதம்பரசுப்பிரமணியன் போன்றோர் இவரைச் சார்ந்த தமிழ்நாட்டு எழுத்தாளராவர். கு.ப.ராவின் பாதிப்பே இவரிடத்து அதிக மாகக் காணப்படுகிறது என்பர். இவரது சிறுகதைகள் சில *கங்காகீதம்* என்ற தலைப்பில் தொகுதியாக வெளிவந்துள்ளது. இத்தொகுதியில் இடம் பெறாத *பாற்கஞ்சி* என்ற சிறுகதை இவரின் படைப்புகளில் மிகவும் குறிப்பிடத்தக்கதாகும். பேச்சுவழக்கை இயன்ற வரை கையாள முற்பட்டனர்.[6]

சி.வைத்தியலிங்கம் பற்றி எழுதிய ***இரசிகமணி*** கனக. செந்தி நாதன் பின்வருமாறு கூறுகின்றார்:

> ஈழத்துச் சிறுகதைத்துறையிலே சுயா, பாணன், ஆனந்தன் எனப் பலர் முன்னரே எழுதத் தொடங்கி யிருந்தாலும் நவீன சிறுகதை உத்திகளைத் கொண்ட கவர்ச்சிகரமான படைப்புகளைப் படைத்து, ஈழத்தின் சிறுகதைத்துறைக்கு வழி காட்டிய முதல்வர் என்கிற பெருமையச் சம்பாதிப் பவர் சி.வைத்தியலிங்கம்.[7]

மேனாட்டு உத்திமுறைப் பயிற்சியுடன் சிறுகதைக்குத் தற்கால வண்ணக்கோலங் கொடுத்ததில் சி. வைத்தியலிங்கம் முன்வரிசை யில் முதல்வராக நிற்கின்றார். ***கலைமகளையும்,*** கு.ப.ராவின் பாணி யையும் பற்றிப் பேசுபவர்கள் குறைப்படுகின்றார்கள். இருப்பினும் கிராமப்புறங்களின் வர்ணனைகளும், களனி ஆற்றங்கரை வர்ணனை களும் ஈழநாட்டிற்கே உரியவை. கருவுக்கேற்ற பகைப்புலத்தினை வீச்சுடனும் வளத்துடனும் அமைத்துக் கலைத்துவம் ததும்புஞ் சில அழகான சிறுகதைகளை எழுதியிருக்கிறார். கதையின் கடைசிப் பகுதியிலே இறுதி வசனத்திலே திருப்பும் வியப்பு முடிவுக்கோட்

பாட்டினை ஈழத்துச் சிறுகதைத் துறைக்கு ஓரளவு வெற்றியுடன் அறிமுகப்படுத்தி வைத்திருக்கின்றனர். எண்ணிக்கையைப் பொறுத்த மட்டில் இருபத்தைந்து சிறுகதைகளைத் தானும் எழுதாத இந்தச் சிறுகதைச் சிற்பியை இன்றுங்கூட எழுத்துலகம் போற்றுகின்ற தென்றால் இவரது சிறுகதைகளின் வலிமைக்கு வேறுசான்றுகள் தேவையில்லை. வட மொழிப்பிரேமையினால் வடசொற்கள் இவரது கதைகளிலே மிகுதி என்று குறைப்படுவோருமுளர். மூன்றாம்பிறை, கங்காகீதம் என்பன முறையே தமிழ்நாட்டு ஈழநாட்டுச் சிறுகதைத் தொகுதிகளிலே இடம் பெற்றிருக்கின்றன. இவற்றுடன் பாற்கஞ்சி, நெடுவழி ஆகிய கதை களும் வாழக்கூடிய வளம்மிக்கவை என்பர் ஈழத்து முன்னோடி இலக்கிய விமர்சகர் இரசிகமணி கனக. செந்திநாதன். கனக. செந்திநாதன் பின்வருமாறு மேலும் எழுதுகிறார்:

> **இலங்கையர்கோன் பிறநாட்டு நல்ல சிறு கதை களையும் நாடகங்களையும். மொழிபெயர்த்துத் தமிழ் வீமர்சகர்களுக்கு உதவினார். இலங் கைச் சரித்திரக் கதைகளையும், பழங்காலப் புராணக் கதைகளையும் மெருகிட்டுப் புதிய சிறு கதை களாக்கினார். சரித்திர நாடகங்களையும் இலக்கிய நாடகங்களையும் எழுதினார். நாடகங்களின் தன்மைக்கு ஏற்பச் செய்யுள் நடையையும் கையாண்ட புதுமையை இவரது எழுத்துக்களிலே காணலாம். தேசிய இலக்கியம் *மன்வளம்* என்று பிற்காலத்தில் எழுப்பப் பட்ட கோஷங்களுக்குப் பொருத்தமான சிறுகதை யாகத் திகழும் *வெள்ளிப் பாதசரத்தை* 1942 ஆம் ஆண்டிலேயே எழுதி வீட்டார். மொழிபெயர்ப்பு நாவ லாகிய முதற்காதலும், நாடக நூல்களாகிய மிஸ்டர் குகதாசன், மாதவி மடந்தை ஆகியனவும் அவரது காலத்திலேயே வெளிவந்தன. தந்தை மனம், கடற் கரைக் கிளிஞ்சல் என்னுஞ் சிறுகதைகள் தமிழ் நாட்டு ஈழநாட்டுச் சிறுகதைத் தொகுதியிலே இடம் பெற்றிருக்கின்றன.**

மு. பொன்னம்பலம் திறனாய்வு சார்ந்த சில பார்வைகள் என்னும் நூலிலே (2000) பின்வருமாறு எழுதுகிறார்.

> **1930 களில் தமிழ் நாட்டுக்கு சிறு கதை களின் பாதிப்பால் இங்கு சிறுகதைகள் எழுதப்பட்டன.**

> அக்கதைகளில் பல ஈழத்து மண்ணைக் குறிப்பாக யாழ்ப்பாணத்து மண்ணைப்பிரதிபலிக் காதவையாக இருந்ததோடு அவை சிறுகதைக் குரிய பண்பு களைக் கொண்டிருந்தனவென்பது முக்கியமான ஒன்றாகும். ஆனால் 1940களில் எழுந்த மறுமலர்ச்சி இயக்கத்தோடு இக்குறை பாடுகள் நீக்கப்பட, நம் மண்வாசனை தரும் சிறு கதைகள் தோன்றின. அடுத்துவந்த 1950 களில் நமது சிறுகதைகளின் தரம் மேலும் ஒரு படி கூடுகின்றதென்றே கூற வேண்டும்.[8]

சி. வைத்தியலிங்கத்தின் கதைகள் என முன்றாம்பிறை, கங்காதீபம், பாற்கஞ்சி, ஆகியன தொகுப்புக்களாக வெளிவந் துள்ளன. நெடுவழி, பீச்சைக்காரன், அழியாப்பொருள், உள்ளப் பெருக்கு, இப்படிப் பலநாள், விதவையின் இருதயம், தியாகம், பைத்தி யக்காரி, களனிக் கங்கைக் கரையில், மின்னி மறைந்த வாழ்வு, என் காதலி, நந்தகுமாரன், டிங்கிரி மெனிக்கா, பூதத்தம்பிக் கோட்டை என்பன இவரால் எழுதப்பட்டன. நந்தகுமாரன், தியாகம், பூதத்தம்பி கோட்டை என்பன வரலாற்று நிகழ்ச்சிப் படைப்புக்களே என்றும் பிறிதொரு விமர்சன முண்டு.

இலங்கையர்கோன், வைத்தியலிங்கம் கதைகளில் நடப்பியல் வாழ்வுடன் ஒட்டிய யதார்த்தப்பண்பு காணப்படுவதில்லை. எனினும் பொதுவாக இவர்கள் ஒரு கற்பனையான கனவுச் சூழலிலேயே தங்கள் பாத்திரங்களை உலவவிடுகின்றனர்.[9] என் பார் இ.க.சிவஞானசுந்தரம்.

சி. வைத்தியலிங்கம் கதைகள் காதல், ஏக்கம், வெற்றி தோல்வி, மனிதனின் ஆசாபாசம், பலவீனமான உணர்வு என்பவை சுட்டும். களனி கங்கையிலே, கங்காதீபம், பாற்கஞ்சி, ஏன் சீரித்தாள், பார்வதி, பைத்தியக்காரி, அநாதை, தியாகம், அழியாப்பொருள் ஆகிய கதைகளில் இப்பண்புகளைக் காணலாம். சந்தர்ப்ப வசம், இளமைத் துடிப்பு, வயது வந்த ஆண் பெண் காதல் உறவு, பெற்றோர்குறுக்கீடு, சாதி சமய வேறுபாடு, பொருளாதார ஏற்றத்தாழ்வு, காதல் நிறை வேறாமை, காதலர் சோகமுடிவு என்பன பித்துப்பிடித்து அலையும் சுவையுடன் மனதைவிட்டு அகலாத பாத்திரங்கள் மூலம் கதை களிலே சித்திரித்துள்ளார்.

களனி கங்கைக் கரையில் என்ற சிறுகதை மூலம் நன்றாக உழைத்து உண்ணும் ***பறையர் குல ஏழை*** ஒருவனுக்கும் ஏழைப் பிச்சைக்காரிக்கும் ஏற்படும் காதல் உறவு மூலைமுடுக்குகளுக்குப் போகாது தெருவீதிகளில் அவர்களது காதல் லீலைகள், சிட்டுக் குருவி போன்ற சுதந்திர இன்பம், பெற்றோர் குறுக்கீடு, தடைசெய்தல், காதல்நிறைவேறாது காதலி ***பொன்னி*** களனி கங்கையில் குதித்து உயிர் மாய்த்தல், பின் காதலன் உயிர்துறப்புப் பற்றிச் சித்திரிப்பார் ஆசிரியர் ஓரிடத்தில்.

"அவர்களுக்குத் தெரிந்தது நீ ஏழை; பிச்சைக்காரி என்பதே. உன்காதல் அவர்களுக்குக் குப்பையில் முளைத்திருக்கும் குப்பை மேனி மாதிரி. கந்தையன் அவர்களின் விருப்பப்படி கல்யாணம் செய்தல் வேண்டும். அவர்கள் கண்குளிரப் பார்க்க வேண்டும். இதற்குமேல் அவர்களின் மூளை எட்டிப் பார்க்கவில்லை."

இப்பகுதியின் மூலம் காதல் உறவு நிறைவேறாமை, சோக முடிவு என்பனவற்றைச் சிறப்புற எடுத்துக்காட்டுவார்.

க.தி. சம்பந்தன், 25 கதைகள் வரை எழுதியுள்ளார். 1967 இல் இவரது ஐந்து சிறுகதைகள் ***வீவேகி*** சஞ்சிகையில் ஒன்றாக வெளியிடப்பட்டன. விதி, மனிதன், புத்தரின் கண்கள், தாராபாய், துறவு, கூண்டுக்கிளி, தூமகேது, மனித வாழ்க்கை, சபலம், சலனம், அவள், அவன், இரண்டு ஊர்வலங்கள், கலாக்ஷேத்திரம், மகாலட்சுமி, மதம், துறவு என்பன சம்பந்தன் எழுதிய கதைகள். ***புத்தரின் கண்கள்*** வரலாற்று நிகழ்ச்சி கூறுவது.

சமகாலத்தவராக இருந்தபோதிலும் மற்றைய இருவரிலி ருந்தும் சம்பந்தன் வேறுபட்டவராக விளங்குகின்றார். மற்ற இருவரும் சமூக நோக்குடன் தமது படைப்புகளை அளித்துள்ளனர். சம்பந்தன் தூய இலக்கியவாதியாக விளங்குவதையே விரும்பினார். இலக்கியத் தைப் பயபக்தியுடன் அணுகவேண்டும் என்ற நோக்கு அவரிட மிருந்தது. இலக்கியத்தில் யதார்த்தச் சித்திரிப்பை அவர் விரும்புவ தில்லை. எவ்வாறாயினும் அவரது சிறுகதைகள் தமிழ்ச் சிறுகதைத் துறையை வளம்படுத்தின. வடமொழிப்புலமையும் கொண்ட சம்பந்தன் காவிய ரசனை கொண்டவராக விளங்கினார். சம்பந்தனது உரைநடை தனித்துவமானது, சொற்களைச் செட்டாகப் பயன்படுத்தி, பாத்திரங் களின் மனவுணர்வுகளைத் துல்லியமாகத் தமது எழுத்திற் கொண்டு

வர முயன்றுள்ளார். கவித்துவம் பொருந்திய உரைநடையையே கையாண்டுள்ளார். சம்பந்தன் யதார்த்தப் பண்பைக் கொள்கை ரீதியாக நிராகரிப்பவராகக் காணப்படுகிறார்.

"யதார்த்தச் சித்திரிப்பால் நமது மனம் தூய்மையடைவதற்குப் பதிலாக மேலும் மோசடைகிறது. யதார்த்தம் என்பது பைத்தியக் காரத்தனம். இத்தகைய யதார்த்தப் பண்பில் எழும் தேசிய இலக்கியங் கள் சர்வதேச இலக்கியங்களுக்கு ஒவ்வாதது, தேவையில்லாதது." என்ற அவரது இலக்கியக்கொள்கைக்கேற்பவே அவரது கதைகளும் யதார்த்தத்துக்குப் புறம்பான அழகிய கற்பனைச் சித்திரங்களாக உள்ளன. சம்பந்தனின் ஆக்கங்களில் வெளிப்படும் காவியப்பாங்கான அழகு நடையே அவரை மற்றையோரிலிருந்து தனித்துவமானவராக இனங்காட்டி நிற்கிறது.

சம்பந்தன் ஆத்ம உணர்வினை வெளிப்படுத்தியவர் என்ற வரிசையில் முன்னிற்பவர். சம்பந்தன் நாவலர் வழிவந்த சைவப்பாரம் பரியத்தின் தொடர்ச்சியாக வருபவர். கூடவே பண்டிதமணி சி.கணபதிப் பிள்ளையின் வழித்தோன்றலாக இலக்கிய, இலக்கணச் சொல் விற்பன்னராக வடமொழி, இலக்கியத்தில் தேர்ச்சிபெற்றதன் காரண மாக மணிப்பிரவாள நடையையும் அழகுறப் பயன்படுத்தித் தனது அடையாளத்தை நிலைநிறுத்துகிறார். சம்பந்தனின் சிறுகதைகள் எதிலுமே சாதீயத்தையோ, ஆண்டான் அடிமைத் தனத்தையோ காணமுடியாது.

> **மனிதரின் ஆத்மகொந்தளிப்புகளும் நியாயம் தேடும் மனப்பாங்கும் ஒவ்வொரு மனிதனை யும் மதிக்கின்ற, நேசிக்கின்ற பாத்திரங்களே அவரால் வார்க்கப்படுகின்றன. சம்பந்தனின் பாத்திர வார்ப்புக் களில் வளர்ச்சியை காணமுடியவில்லை அல்லது வாழ்க்கைக்கு உகந்து வாழும் வழிமுறை களைக் கற்பிக்கவில்லை எனச் சிலர் குறை கூறலாம்.**[11]

உலகப் புகழ் பெற்ற ஈழத்து இலக்கிய விமர்சகர் பேராசிரியர், கலாநிதி, சாஹித்திய இரத்தினம் கார்த்திகேசு சிவத்தம்பி,

> **சம்பந்தனின் சிறுகதையில் காவியம் இருக்கும்**
> **காவியத்தில் சிறுகதை இருக்கும்.**

என்கிறார்.

பேராசிரியர் சிவத்தம்பி தமது விமர்சனமொன்றில் இவ்வாறு குறிப்பிட்டதிலிருந்து சம்பந்தனின் எழுத்தினை ஓரளவு புரிந்து கொள்ளலாம். 1998 இல் வெளியிடப்பட்ட ***சம்பந்தன் சிறுகதைகள்*** 1930 தொடக்கம் 1950 வரையான காலகட்டத்தில் எழுதப்பட்டதென்ற தகவல் மிகவும் ஆச்சரியப்பட வைக்கிறது. காரணம் ***மதம்*** என்ற சிறுகதை இந்து முஸ்லிம் கலவரத்தை அடிப்படையாகக் கொண்டது. ***பிரயாணி*** என்ற சிறுகதை பெண்ணியச் சிந்தனையினை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது. **ஈழத்தின் இன்றைய கொந்தளிப்புச் சூழல்கள்** ஏற்கனவே அவரின் தீர்க்கதரிசனமாகவுள்ளதையும் குறிப்பிட்டே ஆக வேண்டும். இவரது சில கதைகளில் இரண்டு பாத்திரங்கள் ஐயங்களைத் தெரிவிக்கும் விதத்திலும் தத்துவ தரிசனத்தை வெளிப்படுத்துவனவாகவும் அமைந்துள்ளன.

யாழ்ப்பாணத்து மொழி நடையையோ பேச்சு வழக்கினையோ சம்பந்தனது கதைகளிலே காணமுடியாமைக்கு இந்தியச் சஞ்சிகைகளுக்கு அவர் எழுதியமையும் காவியப் பாங்குப்பண்புகளுமே காரணங்களாலாம்.

> **ஈழத்துத் தமிழ்ச் சிறுகதையின் வரலாற்றுப் பாதையில் சம்பந்தன் சி. வைத்தியலிங்கம், இலங்கையர்கோன் போன்றோரிலிருந்தும் அதே வேளை எஸ்.பொன்னுத்துரை, மு. தளையசிங்கம் போன்ற நற்போக்கு பிரபஞ்ச யதார்த்தவாத இலக்கியக் கொள்கையாளரிலிருந்தும் வேறுபட்டுத் தனக்கெனத் தனித்துவமான இலக்கியப் பாதையை அமைத்தார். வாழ்க்கையின் பூரணத்துவத்தைக் தத்துவார்த்த வழிநின்று தனது ஆக்கங்களை வெளிப்படுத்திய சம்பந்தன் உணர்ச்சியை விட அறிவிற்கே முதலிடம் கொடுத்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.**[10] என்று எடுத்துக்கட்டுகிறார் சூரியகுமாரி பஞ்சநாதன்.

சோ. சிவபாதசுந்தரம் ஈழத்து இலக்கிய முயற்சிகளின் மரபினையும் தரத்தினையும் வாழ்த்தியவர். ***காஞ்சனை*** என்னும் சிறுகதை தமிழ்நாட்டுச் சிறுகதைத் தொகுதியில் இடம்பெற்றிருக்கிறது.

சம்பந்தன் தமிழாசிரியராகப் பணிபுரிந்துகொண்டு சிறுகதைத் துறையில் பெருவெற்றியீட்டியவராவார். **வீதி, புத்தரின் கண்கள்** ஆகிய கதைகள் **கலைமகளில்** வெளிவந்த காலத்திலே தான் அவரது திறமை எழுத்திலே கனதியாக வெளிப்பட்டது:

> **தேர்ந்தெடுத்த சொற்களை வைத்துக் கொண்டு ஓரிரண்டு பாத்திரங்களையே நடமாடச் செய்ய அற்புதமான சிறுகதைகளைப் படைக்குங் கலை சம்பந்தனிடம் லாவகமாக அமைந்துள்ளது. இவரது படைப்புக்களிலே வடசொற்களும் சாதாரண மான வாசகருக்கு விளங்காத சொற்களும் மிகுதி யாகக் காணப்படுகின்றன என்பது உண்மையேயா கும். இருப்பினும், எண்ணிக்கையில் நம்பிக்கை வைக்காது தரம் ஒன்றினையே குறிக்கோளாகக் கொண்டு, தான் எழுதுஞ் சிறுகதைகளை அழகாக எழுதுகின்றார், என்கிற புகழுக்கு உரியவர். வீதி மனிதன் ஆகிய அவரது கதைகள் தமிழ்நாட்டு ஈழநாட்டுச் சிறுகதைத் தொகுதிகளில் இடம்பெற்றி ருக்கின்றன.**[11] என்பார் இரசிகமணி கனக செந்திநாதன்.

குல.சபாநாதன், சோ. சிவபாதசுந்தரம், சி. வைத்தியலிங்கம், இலங்கையர்கோன், சம்பந்தன் ஆகியோர் **ஈழகேசரிக்** குழுவினர் என்று கூறக்கூடிய வகையில் இலக்கிய முயற்சியில் ஈடுபட்டனர் எனினும் இன்று அக்கால இலக்கிய முயற்சிகளைப் பின்னோக்கிப் பார்க்கும் பொழுது, மேற்கூறிய இலக்கிய கர்த்தாக்கள் **மறுமலர்ச்சி** இலக்கியத்தையோ இலக்கியத்தின் உட்பிரிவுகளையோ புதிய புதிய பரிசீலனைகளையோ அதிகம் வளர்த்தனர் என்று கூறுவதற்கில்லை. ஆங்கில விமர்சகர்கள் கூறும் *(Romanticisim)* என்னும் கனவுலகக் காட்சிகளில் ஈடுபடச்செய்யும் இலட்சிய பூர்வமான சிந்தனைகளிலும் உணர்ச்சிகளிலும் மயங்கி எழுதினர் என்றுதான் சொல்லலாம்.

பொதுவாக நோக்குகையில் இம் மூவரது கதைகளிலும் மணிக்கொடி எழுத்தாளர்களுள், ஒரு பிரிவினரான கு.ப. ரா. பிச்ச மூர்த்தி, சிதம்பர சுப்பிரமணியன், மௌனி ஆகியோரது சிறுகதைகளின்

நேரடித்தாக்கமும் மேலைநாட்டுச் சிறுகதைகளின் பாதிப்பும் காணப்படுகின்றன. பழைய வரலாற்றுச் சம்பவங்கள், புராண இதிகாசங்களில் இடம்பெறும் நிகழ்ச்சிகள் மனிதனின் மென்மையான உணர்வுப் போராட்டங்கள் ஆண், பெண் உறவு கிராமியப் பண்புகள் முதலியன இம்மூவரது சிறுகதைகளிலும் முக்கியம் பெற்றுள்ளன. இவர்களது சிறுகதைகள் பல ஈழத்தைக் களமாகக்கொண்டு அமைந்துள்ள போதும் அவை ஈழத்து மக்களுக்கேயுரிய பிரச்சினைகளைப் பிரதிபலிக் காமற் பொதுவான மனவுணர்வுகளைப் பிரதிபலிப்பனவாகக் காணப்படுகின்றன. இலங்கையர்கோன், சி. வைத்தியலிங்கம் ஆகியோரது கதைகள் சிலவற்றிற் சமூக உணர்வு மெல்லியதாக இழையோடினும் முனைப்புப் பெறவில்லை. எனினும் முன்னோடிகளான இவர்கள் மூவரும் கலைமெருகுகுன்றாத வகையில் உருவ அமைதியுடன் தமது கதைகளைப் படைத்துள்ளமை போற்றத்தக்கது. ஈழத்து மண்ணிலே தமிழ்ச் சிறுகதை இலக்கியம் வேரூன்றி வளர்ச்சியடையவும் தமிழ்நாட்டுச் சிறுகதைகளுக்கு ஈடுகொடுத்து நிற்கவும் இம்மூவரும் வழி சமைத்தனர் என்பதில் ஐயமில்லை. [13]

மறுமலர்ச்சிக் சிறுகதைகள்:

1940 ஆம் ஆண்டு தொடக்கம் ஈழத்துத் தமிழ்ச் சிறுகதை வரலாற்றிலே ஏறத்தாழ 1950களின் முற்பகுதி வரையிலான காலப் பகுதியை ***மறுமலர்ச்சிக்காலம்*** எனலாம். மறுமலர்ச்சிக் கருத்துக்களையும் சமுதாய நல ஈடுபாட்டையும் கொண்ட கதைகள் எழுந்த காலகட்டம் இதுவாகும். 1940களில் அ.செ. முருகானந்தம், அ.ந.கந்தசாமி, வ. அ. இராசரத்தினம், வரதர், கனக. செந்திநாதன், சொக்கன், சு.வேலுப்பிள்ளை, க. சிவகுருநாதன் (கசின்), சு.நல்லையா, தாழையடி சபாரத்தினம், சு. இராஜநாயகன், க.ச.அரியநாயகம், குறமகள், தேவன் - யாழ்ப்பாணம் முதலியோர் சிறுகதை எழுதும் முயற்சியில் இறங்கினர்.

வரதரின் சிறுகதைகளின் தொகுப்பாகக் ***கயமை மயக்கம்*** என்னும் தொகுதி வெளிவந்துள்ளது. வரதரின் சிறுகதைகளில் மராட்டிய எழுத்தாளர் காண்டேகர், புதுமைப்பித்தன், கு.ப.ரா முதலியோரின் பாதிப்புக் காணப்படுவதை விமர்சகர் எடுத்துக்காடுவர்.

அ. செ. முருகானந்தம் என்னும் அழகு செல்வ. முருகானந்தம் இலங்கையின் ஆரம்பகாலச் சிறுகதையாசிரியரிலே தமக்கெனத் தனித்துவமான ஓரிடத்தை இலங்கைத் தமிழ்ச் சிறுகதை

வரலாற்றிலே பதித்துள்ளார். ***மறுமலர்ச்சிச்*** சஞ்சிகையின் இணையாசிரி யராகவும் விளங்கிய முருகானந்தம் தமது இலக்கியப் பார்வையின் எல்லை களை யாழ்ப்பாணத்துடன் மாத்திரம் நிறுத்திக்கொள்ளாது, திருகோணமலை, கொழும்பு, மலையகம் என இலங்கையின் நாலாபுறங்களுக்கும் விரிவுபடுத்தினார். நூற்றுக்கு மேற்பட்ட சிறுகதை களை எழுதியவராக அவர் விளங்குகிறார். ***மனிதமாடு, எச்சில்இலை, வாழ்க்கை, வண்டிச் சவாரி, காளிமுத்துவின் பிரஜாவுரிமை*** முதலியன குறிப்பிடத்தக்கன. தொகுதியின் பெயர் ***மனிதமாடு*** என்பதாகும்.

> **தென்னிந்திய மரபை அழுங்குப்பிடியாகப் பின் பற்றும் போக்கினை வீடுத்து ஈழத்திற்கெனத் தனித்துவமான இலக்கியப் பாரம்பரியம் வளர்வதற்கும் இக்காலப் பகுதி எழுத்தாளர் வித்திட்டனர்.**"[14]

என்ற எழுத்தாளரும், விமர்சகருமான செம்பியன் செல்வனின் கருத்து மனங்கொள்ளற்பாலது.

அ.ந. கந்தசாமி, வ.அ.இராசரத்தினம், அ.செ. முருகானந்தம் முதலியோர் கிழக்கிலங்கை, மலையகம், கொழும்பு முதலிய பிரதேசங்களைப் பிரதிபலிக்கும் கதைகளை எழுதியுள்ளனர் என்பது மனங்கொள்ளத்தக்கது. கனக. செந்திநாதனின் சிறுகதைகளின் தனித்துவப் பண்புகளாக, பழைமைப் பண்பு, சமயச் சூழல், யாழ்ப் பாணக் கலாசாரம் என்பன மிளிர்கின்றன. பிரதேச மண்வாசனை மிகுந்த சிறுகதைகள் பலவற்றை எழுதிய கனக.செந்திநாதன் பழைமையைப் போற்றும் அதே நேரம் பழைமையினடியாகப் புதுமையை வரவேற்கவும் தயங்கவில்லை. கிழக்கிலங்கையைச் சேர்ந்த வ.அ.இராசரத்தினம் அப்பிரதேசத்தினைக்களமாகக் கொண்டு கிழக்கிலங்கை மக்களின் வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் சிறு கதைகள் பலவற்றை எழுதியுள்ளார். சு.வேலுப்பிள்ளையின் கதை களிற் சம்பவங்களிலும் பார்க்கச் சம்பவங்களினடியாகத் தோன்றும் உணர்வு நிலை முக்கியத்துவம் பெறுகிறது.

சொக்கனின் கதைகளிலே சமய, தத்துவ, புராணக் கருத்துக் கள் மனிதனின் பொதுவான இயல்புகள், குணக்கேடுகள், வாழ்க்கை முரண்பாடுகள் முதலியன முக்கியத்துவம் பெற்றுள்ளன. மனித இன்னல்களைக் கண்டு துன்பமுறும் வேதனைக்குரல் மேலோங்கிக் காணப்படுகிறது.

வரதரின் கதைகள் பலவற்றிற் சமுதாயச் சீர்திருத்த ஆர்வமும் காந்தீயப்பற்றும் மேலோங்கி நிற்கின்றன. காதல், கற்பு, பெண்மை,

வீரம் முதலியவற்றுக்குத் தமது கதைகள் மூலம் புரட்சிகரமான கருத்துக்களைக் காட்டியுள்ளார்.

அ.ந. கந்தசாமியின் சிறுகதைகள் பற்றிக் கலாவிமர்சகர் ***செம்பியன் செல்வன்*** பின்வருமாறு மேலுங் கூறுவர்:

> **இவர் மார்க்ஸிய சித்தார்த்தங்களினால் வசீகரிக்கப்பட்ட ஒரு சமூகப் புரட்சித்தொண்டனாகவே தரிசனம் தருகின்றார். ஆயினும் இவரின் படைப்புக்களில் இச் சித்தாந்தங்கள் கலாபூர்வமாக வெளிவருவதிலிருந்தே இவர் சமுதாய சோஸலிச இலக்கிய மக்கள் எழுத்தாளராகின்றார். இதுவே இவரை ஏனைய மாக்ஸிஸ சித்தாந்தகாரரிலிருந்து வேறுபடுத்துவதுடன் தனித்துவம் மிக்கவராகவும் காட்டுகிறது. சித்தாந்தக்காரர் எழுத்தாளராவதற்கும் எழுத்தாளர் சித்தாந்த அபிமானியாக மாறுவதற்கு முள்ள நுணுக்கமான வேறுபாட்டின் எல்லைக்கோடாக இவர் விளங்கினார் என்பதனை இவரின் சிறுகதைகள் நன்கு எடுத்துக்காட்டுகின்றன.**

நாயினுங் கடையர், இரத்த உறவு, ஐந்தாவது சந்திப்பு என்பன அ.ந.கந்தசாமி எழுதிய கதைகளுள் விதந்து கூறத்தக்கன. ***நாயினுங் கடையர்*** என்னும் சிறுகதை மிகச்சிறந்த சிறுகதை மாத்திர மன்றி மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளரின் அவலநிலையைச் சித்திரிப்பதுமாகும். சு.வே. எனப்படும் சு.வேலுப்பிள்ளையின் கதை களிலே பேச்சு வழக்கை அதன் இயல்பறிந்து அவர் பயன்படுத்தி யுள்ளார். ***மண்வாசனை*** என்ற சிறுகதை இவ்வகையிற் குறிப்பிடத் தக்க ஒரு படைப்பாகும்.

இக்காலகட்ட ***சிறுகதைகள்*** பற்றிப் பேராசிரியரும் புகழ் பூத்த இலக்கிய விமர்சகருமான, கலாநிதி கா.சிவத்தம்பி, ***தமிழில் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும்*** எனும் தமது நூலில்,

> **இவர்களது சிறுகதைகளில் யாழ்ப்பாணம் வெறும் களமாக மாத்திரம் அமையவில்லை. யாழ்ப்பாணத்து வாழ்க்கைப் பிரச்சினைகளே இவர்களது சிறுகதைக்குப் பொருளாயின.**[15]

என்கிறார்.

எழுத்தாளர், விமர்சகர், கவிஞர் மு.பொன்னம்பலம் (மு. பொ) பின்வருமாறு தமது கருத்தினை முன்வைத்துள்ளார்:

கனக. செந்திநாதனின் *வெண்சங்கு* சிறுகதைத் தொகுதி பிரதேச மனங்கமழும் கதைகளுக்கு நல்ல உதாரணம். சு.வே. தமது சிறுகதைகள் பலவற்றை உருவகக் கதைகளாக்கித் தமிழுக்கு அழகு சேர்த்ததோடு வடபகுதிச் சிறுகதை வளர்ச்சியில் தனக்கென ஒரு தனியிடத்தையும் பெறுகிறார். இவரது *உப்பங்கழி* போன்ற உருவக்கதை ராஜாஜியின் பாராட்டுக்கு இலக்கானதும் இச்சந்தர்ப் பத்தில் குறிப்பிடப்படவேண்டியதொன்றாகும். இராசநாயகனின் சிறுகதைகளில் ஒருவகைத் தத்துவ விசாரணை இழையோடுவதைக் காணலாம். இந்த விதத்தில் இவரது கதைகளுக்கும் இவரது முன்னைய பரம்பரையைச் சேர்ந்தவரான சம்பந்தனது கதைகளுக்கும் மெல்லிய தொடர்பு இருப்பதைக் காணலாம். மொத்தத்தில் இக்காலப் பகுதியின் சிறுகதைகள் உருவம், உள்ளடக்கம் ஆகியவற்றில் ஒப்பீட்டளவிலே முன்னைய பரம்பரையிலிருந்து மிகவும் வேறுபட்டன வாகவும் வளர்ச்சியைக் காட்டுவனவாகவும் இருந்தன. மறுமலர்ச்சிக் குழுவினர் உண்மையாகவே முன்னைய பழைமைபேண் மரபிலிருந்து விடுபட்டிருந்தனர் என்பதற்கு *வரதர்* இனக்கலவரத் தின் பின்னணியில் வைத்து எழுதிய *வீரம்* என்னும் கதையைக் காட்டலாம். இனக்கல வரத்தின் போது தன்கற்பையிழந்த பெண்ணை ஏற்றுக்கொள்ளும் ஓர் ஆடவனின் பார்வை வீரவைக் களமாகக் காட்டும் கதை இது. 1948 இல் சுதந்திரம் பெற்ற கால கட்டத்திலே பெரும்மாற்றம் ஏதும் ஏற்படவில்லை. ஏறத்தாழ 1950களின் நடுப்பகுதியிலிருந்தே பலதுறை களிலும் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்படலாயின. 1950 களின் நடுப்பகுதியிலிருந்து தேசிய விழிப்புணர்வு முக்கியம் பெறலாயிற்று.

இனரீதியான பிரச்சினைகளும், சமூகரீதியான முரண்பாடு களும் விசுவரூபம் எடுத்துப் போராட்ட உணர்வுகள் மேலோங்கத் தொடங்கின. இந்நிலையில் எழுத்தாளர் மத்தியிலும் அரசியல், சமூக ரீதியான விழிப்புணர்வு ஏற்பட ஆரம்பித்தது. அதேவேளை சமூகத்தின் அடிமட்டதில் இருந்தும் எழுத்தாளர்கள் தோன்றிச் சிறு கதைத் துறைக்குத் தம்மாலானபங்களிப்பினை நல்கினர்.

"1950களிலே தோன்றிய இப்புதிய பரம்பரையினரில் ஒரு சாரார் தாம் வரித்துக்கொண்ட ***மாக்ஸியக் கோட்பாட்டின்*** அடிப்படை யிலே தமது இலக்கிய முயற்சிகளை ஆற்றினர். சமுதாய மாற்றம் பற்றிய உணர்வைத் தமது சிறுகதைகளில் வெளிப்படுத்துவதில் அக்கறை செலுத்தினர். செ. கணேசலிங்கன், டொமினிக் ஜீவா, கே.டானியல், என்.கே.ரகுநாதன், காவலூர் ராசதுரை, எஸ். அகஸ்தியர், நீர்வை பொன்னையன் போன்றோர் தமக்கென ஒரு கோட்பாட்டை வரித்துக்கொண்டு எழுதியவர்களாவர். இப்பரம்பரையில் மறுசாரார் எத்தகைய கோட்பாடுகளையும் வரித்துக் கொள்ளாமல் இலக்கியவாதிக்குரிய மனிதாபிமான உணர்வின் அடிப்படையில் சமுதாயத்தின் பல்வேறு கோலங்களையும், பிரச்சினைகளையும் இலக்கிய உணர்வுடன் புலப்படுத்த முனைந்தனர். வ.அ. இராசரத்தினம், எஸ். பொன்னுத்துரை, நந்தி, முத்துலிங்கம், மு. தளையசிங்கம், கே.வி.நடராசன், பித்தன், அ.ஸ.அப்துல் ஸமது முதலியோர் இத்தகையவர்களாவர்."என்கிறார் கலை இலக்கிய விமர்சகரும், என்பேராசானுமாகிய (இந் நூலாசிரியருக்குப் பல்கலைக் கழகத்திலே கற்பித்த) கலாநிதி துரை. மனோகரன்.

இத்தகைய இருசாராரும் இலங்கைத் தமிழ்ச் சிறுகதை வளர்ச்சியிலே தம்மாலான தரமான பங்களிப்புக்களைச் செலுத்தி யுள்ளனர். அதேவேளை மார்க்ஸிஸ எழுத்தாளர் சிலரின் படைப்புக் களில் இடம்பெறும் *பிரசாரவாடை* அவர்களது எழுத்தின் கலைத் துவத்தைச் சற்றுக் குறைத்துவிடுவதுமுண்டு.[16]

50களில் சிறுகதைத் துறையிலேற்பட்ட இத்தகைய புதிய போக்கு அரசியல் விழிப்புணர்வும் சமுதாயச்சார்பும் கொண்டதாக வளர்ச்சியுற்றது. முற்போக்குச் சிந்தனைகளின் அடிப்படையில் ***தேசியம், மண்வாசனை*** என்பவை முன்னரைவிட மேலும் வலுப்பெறத் தொடங்கின. இலக்கியம் சுவைப்பதற்குரிய ஒன்று மாத்திரமன்றி அது சமுதாயத்தின் ஒரு பயன்பாட்டுக் கருவியுமாகும் என்ற உணர்வும் 50களிலிருந்து ஏற்படத்தொடங்கியது.

முற்போக்குச் சாயலும், ஒரு கூட்டான இயக்கமுமே அடுத்த தசாப்தத்தில் உருவாக்கப்பட்ட முற்போக்கு இலக்கியத்துக்கு ஓரளவு காரணமாய் இருந்திருக்குமோ என எண்ணத்தோன்றுகிறது.

1950களின் ஆரம்பத்தில் முற்போக்கு எழுத்தாளர் சங்கம் உருவாக்கப்பட்டது. ஏற்கெனவே இருந்துவந்த பரவலான முற்போக்குப் பார்வையின் அருட்டல் தக்கசமயம் வந்தபோது முற்போக்கு எழுத்தாளர் சங்கமாக உருவெடுத்தது என்றே கூறவேண்டும்.

முனைப்புடன் நிமிர்ந்த மார்க்ஸிய இடதுசாரிப்பார்வை இலவசக் கல்வியால் நேர்ந்த பரவலான கல்வியறிவு, இதற்கேற்றாற்போல் வடபகுதியில் நிலவிவந்த சாதீய அடக்குமுறைகள், கொடுமைகள் எல்லாமாகச் சேர்த்து இவற்றால் பாதிக்கப்பட்ட தமிழ் பேசும் புத்திஜீவிகளை, எழுத்தாளர்களை ஓரணியில் கிளரச்செய்தன. அரசியலில் இடதுசாரிப்பார்வை கொண்ட இவர்கள் அதே பாவைவையை இலக்கியத்திலும் பாய்ச்சிச் சமூகமாற்றத்தை எற்படுத்த விரும்பினர். இவர்கள் தமது இலக்கியப் பங்களிப்பாகச் சிறுகதைகள் எழுதியபோது அவை யாழ்ப்பாணச் சமூகத்திலே புரையோடியிருந்த சாதீய அடக்குமுறைகள், சமூக ஏற்றத்தாழ்வுகள் என்பவற்றுக்கு எதிரான போர்ப் பிரகடனமாகவும், இனபேதமற்ற தொழிலாளர் விடுதலையிலேயே இக்கொடுமைகளுக் கெல்லாம் தீர்வு உண்டென்ற **மார்க்ஸிஸ அரசியல் பார்வையின் இலக்கிய வெளிக்காட்டல்களாகவும்** அமைந்தன. இக்காலகட்டக் கதைகளின் உருவ உள்ளடக்கங்களிலும் பெரிய அளவு மாற்றம் ஏற்பட்டது. டானியல், ஜீவா போன்றவர்கள் யாழ்ப்பாணச் சமூகத்தில் நிலவும் சாதிமுறைக் கொடுமைகளைத் தமது படைப்புக்கள் பலவற்றில் வெளிக்கொணர்ந்தனர். என்.கே. ரகுநாதனின் ***நிலவிலே பேசுவோம்*** சிறுகதை ***இச்சாதியம் எப்படிப் படித்தவர் மத்தியிலும் ஊறியுள்ளது என்பதையும். அதை மறைப்பதற்காக அவர்கள் எப்படிப் போலி மறைப்புக்கள் இடுகின்றனர் என்பதையும் எள்ளல்புரியும் சிறந்த சிறுகதையாகும்.*** டொமினிக்ஜீவாவின் ***ஞானம்*** சிறுகதை இதன் வேறொருவகை வெளிக்காட்டலாகும். அடக்கியொடுக்கப்பட்டிருக்கும் ஆசைகள் குடிபோதையில் எவ்வாறு வெளிக்காட்டப்படுகின்றன என்பதை மிகத் தத்ரூபமாகச் சித்திரிக்கின்றது இக்கதை. இக்கதையைத் திரு.ஏ.ஜே. கனகரத்னா மொனாக் *(Monarch),* என்ற தலைப்பில் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்திருந்தார். கே.டானியலின் ***திருநாள்*** என்னும் சிறுகதை வழமையான முற்போக்காளரின் கதைகளிலிருந்து வேறுபட்டது. வழமையான சமூக ஏற்றத்தாழ்வுகளை, போலி மறைப்புக்களையெல்லாம் ஈவிரக்கமற்ற முறையில் சாடும் **கே.டானியல்** அதே தீவிரப்போக்கில் தன்னைச் சுய விசாரணைக்குள்ளாக்கிச் சாடும்

போக்கையும் இக்கதையிற் காணலாம். தன் ஏழ்மை வாழ்க்கைக்குத் தானும் காரணமாக இருப்பதைத் தன் நடத்தையும் இருப்பதை கே.டானியல் மிக நுணுக்கமாகக் கலையழகோடு விபரித்துச் செல்கிறார்.

நான் மீண்டும் அழைக்கிறேன். இப்போது என் குரலில் சற்று அதிகாரமே தொனிக்கிறது. பாழாய்ப்போன இந்த அதிகார மனதை எண்ணும் போதும் நான் மானங்கெட்ட மனிதன். பத்தாண்டுகளுக் கிடையில் மூன்று குழந்தைகளுக்கு அப்பனாகிவிட்டு விழிக்கிறேன். தூ மானங்கெட்ட அப்பன்.

என்னும்போதும் சுயவிமர்சனப் போக்கைக் காணலாம்.

"எஸ். பொ. எனப்படும் எஸ். பொன்னுத்துரை முற்போக்கு அணியில் ஆரம்பத்தில் சேர்ந்தவராய் இருந்தும் இவரது கதைகளில் இத்தகைய சமூகக்கொடுமைகளுக்கு இலக்கான ஒருவனது மன நிலையைப் பார்க்கமுடியாது. மாறாக, கூட்டுமொத்தமாக யாழ்ப் பாணத்தின் பாரம்பரியப் பழக்கவழக்கங்கள் அழிந்துபோவது, இத்தகைய பழக்க வழக்கங்களின் பிடியில் சிக்கித்தவிக்கும் மனிதர்கள் அவற்றைத் தக்கவைப்பதில் எதிர்நீச்சலிடும் மனிதர்கள் என்று பரந்துபட்ட தன்மையின் விசாரணைகளாக இவரது கதைகள் இருப்பதைக் காணலாம். ***நிழல், ஒளி*** என்ற தலைப்பில் இவர் ***தினகரனில்*** எழுதிய கதைகளில் முன்னது யாழ்ப்பாணத்து அண்ணாவி நாடகமுறை அழிந்துபோவதையும் பின்னது அது மட்டக்களப்பில் உயிர்ப்புடன் இருப்பதையும் காட்டுவனவாயுள்ளன. இவரது ***பங்கம், சடங்கு*** என்னும் கதைகள் யாழ்ப்பாண வேலி மறைப்புக்குள் ஏற்படும் கோரங்களை மிகக் கலாரூபமாக வெளிகொணர்ந்த கதைகளாக உள்ளன" என்று குறிப்பிடுகிறார் விமர்சகர் மு. பொன்னம்பலம்.

முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் தோற்றம், அதனோடு சம்பந்தமுடைய எழுத்தாளர்கள் பெற்றுக்கொண்ட இடதுசாரி அரசியல், சமூகப் பார்வை, கூட்டான இயக்கம், அதனால் ஏற்பட்ட கருத்துப் பரிவர்த்தனைகள் இவையெல்லாவற்றிற்கும் மேலாக ***இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தோடு*** 50 களின் நடுப் பகுதியில் தம்மை இணைத்துக் கொண்ட **பேராசிரியர்கள் க. கைலாசபதி, கா. சிவத்தம்பி** ஆகியோரது நெறியாள்கை முதலிய பல காரணங்கள் இக்காலத்தில் வடபுலத்துச் சிறுகதை வளர்ச்சிக்குப்

பெரிதும் உதவின. 50களின் நடுப்பகுதியைப் பல விடயங்களிலும் அதாவது சமூக, பொருளாதார, அரசியல், கலை, இலக்கிய கலாசார குணரீதியான போக்கைக் (Qualitations Change) காட்டிய காலமாகக் கொள்ள வேண்டும்.

மலையகச் சிறுகதைகள்

இந்நாட்டின் தமிழ்ச்சிறுகதை வளர்ச்சி பற்றி நோக்கும் போது மலையகம் தொடர்பான சிறுகதைகளும் தனித்து நோக்கத்தக்கவை. மலையகம் பற்றிய இலங்கை எழுத்தாளர்களின் பார்வை 1930 களிலேயே ஆரம்பித்து விட்டது. கோ.நடேசையரின் திரு.இராமசாமி சேர்வையின் சரிதம், மலையகம் பற்றி இலங்கையில் எழுதப்பட்ட முதற் சிறுகதை எனக் கொள்ளப்படத்தக்கது. நாற்பதுகளிலிருந்து மலையகத்துக்கு வெளியே வாழ்ந்த இலங்கை எழுத்தாளர்களான அ.செ.முருகானந்தம், அ.ந.கந்தசாமி, வ.அ. இராசரத்தினம், இ.நாகராசன், செ. கணேசலிங்கன், கே.டானியல் முதலியோர் மலையகத் தொழிலாளர் பற்றிய சிறுகதைகளை எழுதியுள்ளனர். அதன் பின்னர் தொழில் நிமித்தம் மலையகத்தில் வாழ்ந்து வந்துள்ள எழுத்தாளர்களும் மலையகத்தை மையமாகக் கொண்டு எழுதியுள்ளனர். நந்தி, யோ.பெனடிக்பாலன், தி. ஞானசேகரன், புலோலியூர் க. சதாசிவம் போன்றோர் இவ்வகையில் பங்களிப்புச் செய்துள்ளனர்.[16]

50களின் இறுதியில் பகீரதன் இலங்கைக்கு வந்து தமிழ் நாட்டைவிட ஈழத்து எழுத்தாளர்கள் 10 வருடம் பிந்திக்கிடக்கின்றார் கள் என்று கூறஅதற்கெதிராக ஈழத்து எழுத்தாளர்கள் திரண்டெழுந்து பதில் கூறியதும் ***காரசாரம்*** என்ற தலைப்பில் வாரா வாரம் சில்லையூர் செல்வராசன் எழுதிவந்ததும் டாக்டர் மு.வ.வை நாவலாசிரியராக ஏற்றுக்கொள்ளலாமா? என்று காவலூர் ராசதுரை தனது ஆழமான விமர்சனப் போக்கால் அளந்து பார்த்ததும் ஆகிய விமர்சனப் போக்கு களால் உருவாக்கப்பட்ட ஈழத்து இலக்கியம் 60களின் விடிவோடு இன்னுமொரு முக்கிய கட்டத்தை அடைகிற தென்றே கூறவேண்டும்.

இதுவரை இக்கட்டுரையிலே எடுத்துக்காட்டிய கருத்துக்களி னூடே 1930 தொடக்கம் 1950கள் வரை நிலவிய சிறுகதைகளின் பொதுப்பண்புகளை மனங்கொண்டு இக்கருத்துக்களின் பின்னணி யிலே மேலும் நுனித்துக் கூர்மைபெற ஆராயமுற்படுவோர் ஆழமாக ஆய்வு செய்ய முடியும். கருத்துக்களின் ஏற்புடைமை, ஒவ்வாமைகள் குறித்த எந்தவொரு முடிந்தமுடிவும் இக்கட்டுரையிலே இடம்பெற வில்லை. ஆய்வுப்போக்கின் அணுகுமுறைகளையும், நோக்குநிலை களையும், கோணங்களையும், கண்ணோட்டங்களையும், பார்வை

களையும், விமர்சனங்களையும், கண்டனங்களையும், புகழ்ச்சி களையும், விதந்துரைகளையும் கூட வாசகர்கள் அறிந்துணர்ந்து கொள்ள வேண்டும் என்ற நோக்கில் இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது என்பதை வாசகர் உணர்ந்து கொள்வார்களாக. பல்கலைக்கழகக் கல்விமான்களும், படைப்பாளர்களும், ஆய்வாளரும், பிறரும் முன் வைத்துள்ள கருத்துக்கள் இக்கட்டுரையிலே இடம்பெற்றுள்ளன வென்பது பிரதானமான அம்சமெனலாம். ஆய்வுப்பார்வையும், எழுத்தாளர் பார்வையும் இணைந்தவோர் ***இணைநோக்கு விமர்சனப் பார்வை*** இக்கட்டுரையின் இயல்நெறியாயும்,செல்நெறியையும் அமைந் துள்ளது. இவ்விணைப்புக் கொள்கையிற் கூட இலக்கிய ரீதியான விமர்சனக் கருத்துவேறுபாடுகள் இருக்கலாம். அக்கருத்து வேறு பாடுகள் மூலம் ஆரோக்கியமான இலக்கிய விமர்சனவளர்ச்சி ஏற்படுத்தப்பட வேண்டும் என்னும் எதிர்பார்ப்பே இக்கட்டுரையாளரது வேணவா. படைப்பு நுட்பம் என்பது தனித்தனி வேறுபாடுகள் பல வற்றைக் கொண்டமைவது, **ஒவ்வொருவருக்குமுரிய தனித்துவ மென்ப தொன்று என்றுமுள்ளதென்ற கூர்த்தமெய்ஞ்ஞானம் எஞ்ஞான்றும் ஒப்ப ஏற்றுக்கொள்ளப்படத்தக்கதே. கருத்தியலின் வளர்ச்சி, கொள்கை கோட்பாடுகளையும் மேலும் முற்போக்கானதாக்கும் என்பது மனத்திருத்தத்தக்கதே.**

முடிவாக, இலங்கைக் கலைக்கழகத் தமிழ் இலக்கியக் குழுவும் அதன் (அன்றைய) தலைவர் பேராசிரியர் கலாநிதி க. அருணாசலம் அவர்களும், குழுவுறுப்பினர்களும் ஏகமனதாக இக்கட்டுரைத் தலைப்பிலே ***என்னைக் கட்டுரை படிக்க வேண்டும்*** எனக்கேட்டுக் கொண்டமைக்கு என் உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். யாழ்ப்பாணத்திலுள்ள இலக்கிய விமர்சகர்களான பேராசிரியர், முனைவர் சபா. ஜெயராசா, பேராசிரியர் நந்தி, மயிலங்கூடலூர் பி.நடராசன், கவிஞர் சோ.பத்மநாதன், கலாநிதி செ.யோகராசா இன்றும் பலர் சபையிலேயும் தனிப்படவும் கூறிய விமர்சனக் கருத்துக்களும் ஓரளவு இக்கட்டுரை யில் இயன்ற வரையில் சேர்க்கப்பட்டுள்ளன. இன்னும் பல்வேறு பட்டோரதும் கருத்துக்களாலே இக் கட்டுரை இன்னும் மேலும் புதுமெருகு பெறலாம் என்பதையும் இவ்விடத்திலே குறித்து இந்தள விலே இவ்வாய்வை நிறைவு செய்கிறேன்.

குறிப்பு: (யாழ்ப்பாணப் பல்கலைக் கழகக் கைலாசபதி கலை யரங்கில் 2002 இல் நவம்பர் மாதம் நடைபெற்ற இலங்கைக் கலைக் கழகத் தமிழ் இலக்கியக்குழு ஏற்பாடு செய்த **"*தமிழில் நவீன***

இலக்கியங்கள்" என்னும் கருத்தரங்கில் இவ்வாய்வாளரால் (இந் நூலாசிரியரால்) இக்கட்டுரை சமர்ப்பிக்கப்பட்டது.)

அடிக்குறிப்புகள்

1. அருணாசலம், க., (1990), "ஈழத்துத் தமிழ்ச் சிறுகதை கள்" *தமிழியற் கட்டுரைகள்,* ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை, யாழ்ப்பாணம். ப.50-51.
2. துரை.மனோகரன், (1997), *இலங்கையில் தமிழ் இலக்கிய வளர்ச்சி,* கலைவாணி புத்தக நிலையம், யாழ்ப் பாணம், கண்டி. ப 154 –164.
3. செங்கையாழியான், *இலங்கைச் சிறுகதை வரலாறு,* (2001), வரதர்வெளியீடு, ஆனந்தா அச்சகம், 226, கே.கே.எஸ் வீதி யாழ்ப்பாணம், ப. 21.
4. செந்திநாதன் , இரசிகமணி , கனக., (2000), *ஈழத்து இலக்கிய வளர்ச்சி,* அரசுவெளியீடு, கொழும்பு.
5. செங்கையாழியான், *மு.கு.நூ.*
6. *மேலது.*
7. செந்திநாதன், இரசிகமணி, கனக., *மு.கு.நூ.*
8. பொன்னம்பலம், மு. (2000), *திறனாய்வு சார்ந்த சில பார்வைகள்.*
9. சிவஞானசுந்தரம், இ. க., (2002), "1950 வரை ஈழத்துச் சிறுகதைகளின் முக்கிய பண்புகள் அவற்றை நிர்ணயித்த காரணிகள்," முகத்துவாரம் கொழும்பு இந்துக்கல்லூரி *வெள்ளிவிழா மலர்,* கொழும்பு, ப. 26-30.
10. சூரியகுமாரி பஞ்சநாதன், *"ஈழத்துத் தமிழ்ச்சிறுகதை வளர்ச்சி யில் சம்பந்தன்",* விபவி (சஞ்சிகை), ப. 6-8.
11. செந்திநாதன், கனக., *மு.கு.நூ.* ப .56.
12. அருணாசலம், கலாநிதி, க., *மு.கு.நூ,* ப. 52.
13. *மேலது.*
14. செம்பியன் செல்வன, (எ + டு) *ஈழத்துத் தமிழ்ச்சிறுகதை மணிகள்,* முன்னோடிகள் வெளியீடு, திருகோணமலை. ப.88.
15. சிவத்தம்பி, கா., (1978), *தமிழில் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும்,* தமிழ்ப்புத்தகாலயம், சென்னை.
16. துரை.மனோகரன், (1977), *இலங்கையில் தமிழ் இலக்கிய வளர்ச்சி,* ப.166.

கதிர்காமப் பிரபந்தங்கள்

மானுடத்துவம் வரையறை செய்ய முடியாத, அளவிடற்கரிய தெய்விக சக்தியும், பழம் பெருமையும், அற்புதங்களும், வரலாற்றுப் பெருமையுங் கொண்டு விளங்குவது இலங்கையின் தென்பகுதியில் அமைந்துள்ள கதிர்காமத்திருத்தலம். இத்தலத்துறையும் கந்தப் பெருமானைப் பாடுபொருளாகக் கொண்டு - காவிய நாயகனாகக் கொண்டு - கி.பி 14 ஆம் நூற்றாண்டிலிருந்து இற்றைவரை பல்வகைப் பட்ட பிரபந்தங்கள் என்ற இலக்கிய வடிவங்கள் கிளர்ந்தெழுந்துள்ளன. இவை வரலாறு, மூர்த்திச் சிறப்பு, தலத்தின் சிறப்பு, தீர்த்த விசேடச் சிறப்பு, வனங்கள், வாரணங்கள், மந்திகள் புள்ளினங்கள், யாத்திரை, தெய்வத்தமிழ்மாட்சி இன்னும் பலவகைச் சிறப்புகளையெல்லாம் எடுத்துரைக்கின்றன. பெரிய கதிர்காமம், சின்னக் கதிர்காமம், செல்லக் கதிர்காமம் என்றெல்லாம் அங்கு திருத்தலங்கள் அமைந்துள்ளமையையும் நாம் இவ்விடத்திலே நினைவுகொள்வது அவசியமாகிறது. வடஇலங்கையில் நல்லூர், செல்வச்சந்நிதி என்பன இன்றும் கீர்த்திபெற்ற அற்புதங்களும் அனுபூதியும் நிரம்பிய முருகத் திருத்தலங்களாகும். வட்டுக்கோட்டையில் சின்னக் கதிர்காமம் எனும் தலம் ஒன்றும் அமைந்துள்ளது. எல்லாக் கதிர்காமத்திலேயும் செந்தமிழ் முருகன் உறைந்து உன்னத அருளைப் பொழிகிறான். வேலன் ஆகிவந்து அடியார் பிணிகள் போக்குகிறான். ***பரிபாடல், திருமுருகாற்றுப்படை, கந்தபுராணம், திருப்புகழ், கந்தசஷ்டி கவசம், கந்தரனுபூதி, கந்தரலங்காரம், வேல் விருத்தம், மயில் விருத்தம், சேவல் விருத்தம்*** என்பன முருகனைப்பாடும் தமிழ் நூல்கள்.

கதிர்காமத் தலத்தின் தொன்மையை அறுதியிட்டுக் கூற முடியாதுள்ளது. ***மகாவம்சம்*** எனும் சிங்கள வரலாற்று நூல், இத்தலத் தின் வரலாறு தேவநம்பியதீசன் என்ற மன்னன் காலத்துடன் ஆரம்பமா வதாகக் கூறுகிறது. ***யாழ்ப்பாண வைபவமாலை*** என்ற நூல் கி.மு. 543இல் விஜயன் வருகையோடு இவ்வாலயத்தைத் தொடர்பு படுத்திக் கூறுகின்றது. கதிர்காமத் திருத்தலத்தின் தொன்மைமிகு பழைமையை நிலைநாட்டப் புராண இலக்கியச் சான்றுகள் அத்தியா வசியமாகின்றன. (கதிர்காமக் காடுகளில் வியாழபகவானின் சாபத் தாலலைந்த ஜராவசு என்ற கந்தருவனை, சிகண்டி முனிவர் வீசிய வெற்றிலை வேலாகமாறிக் கொன்ற புராணச் செய்தியைச், சீவக சிந்தாமணி சுட்டும் இலக்கியச்சான்று கொண்டு நிரூபித்தல் இங்கு

இன்றியமையாததாகிறது. இராமபிரானாற் சீதையைத் தேடிவர இலங்கைக்கு அனுப்பப்பட்ட அனுமன் இத்தலத்தை வழிபட்டு அனுக்கிரகம் பெற்ற செய்தியையும் இங்கு நினைக்க வேண்டியுள்ளது. கதிர்காமத்தின் மற்றுமொரு பெயரான **ஏமகூடம்** முருகக் கடவுளுக்குப் போரின் முன் பாசறைத் தலமாக விளங்கியதென்ற ***கந்தபுராணக்*** குறிப்பும் மனங்கொள்ளத்தக்கதே.

வள்ளிநாச்சியாரைக் கந்தக்கடவுள் கதிர்காமத்திலேயே மணம் புரிந்தார் என்ற ஐதிகமும் எடுத்துக்காட்ட வேண்டியதொன்று. இத்தலத்தின் தெய்விகத் தொடர்பும், வள்ளியம்மையார் மரபில் வந்தவர்கள் எனக் கருதப்படும் பெண்கள் இன்றும் வெள்ளைச் சேலைக் குறுக்குக் கட்டுடன் ஆலாத்தி (ஆராத்தி) எடுத்தலும் என்றும் புதுமையானவை. வேட்டுவ மரபில் வெள்ளைச் சேலை அணிந்த மூன்று பெண்கள் (குறுக்குக் கட்டுடையோராக) ஆராத்தி எடுப்பதை இக்கட்டுரையாளர் கதிர்காமத்திலே நடைபெறும் தீர்த்தோற்சவத்தின் (நேர்முக வருணனையின்) போது நேரிலே கண்டு அதிசயத்தார். நாட்டார் வழக்காறுகளின் உண்மையும் சிந்திக்கற்பாலது. அருணகிரிநாதப் பெருமான் கதிர்காமத்தலத்தின் மீது, உயர்ந்த தத்துவக் கருத்துக்கள் அடங்கிய ***திருப்புகழ்ப்*** பாடல்களைப் பாடியுள்ளார்.

யாழ்ப்பாணத்து ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்திலெழுந்த பரராசசேகரம் என்ற வைத்திய நூல் ஏறத்தாழ நாற்பத்தைந்து பாடல்களில் கதிரைமலைக் கந்தனைச் சார்பு வகையாற் போற்று கின்றது. இவற்றால் கி.பி.14ஆம் நூற்றாண்டுக் காலத்தைக் கௌமார சமய எழுச்சிக்காலம் எனக் கூறுவது மிகையாகாது. தருமையா தீனத்துப் பத்தாவது மகா சந்நிதானமாகப் 17ஆம் நூற்றாண்டில் விளங்கிய சிவஞானதேசிக சுவாமிகள் ***காசிக் கதிர்காமத் திருவருட்பா*** என்ற அருமையான நூலை எழுதியுள்ளார். இப்பிரபந்தங்களை யெல்லாம் தமிழ்மக்கள் தேடிப் பெற்றுப்படித்து முருகப்பெருமானின் பரங் கருணையினாலே பெரும் பயன் அடையவேண்டும் என்பது நூலாசிரியரது பெருவேட்கையாகும். இந்தப் பக்திப்பாசுரங்களே மனத்துயரைத் தீர்க்கவல்லன.

சிங்கள நூல்களிற் சில முருகக் கடவுளின் தோற்றத்தைத் திரித்துக் கூறுகின்றன. சில தமிழ் நூல்களினை அடியொற்றிச் செல்லுகின்றன. பெரும்பாலான ஆங்கில நூல்கள் தமிழ்ப் பிரபந்தங்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றுகின்றன.

திருமுறைகளில் முருகன் பற்றிய குறிப்புகள்

கி.பி 7-14 ஆம் நூற்றாண்டு வரை இயற்றப்பட்ட பன்னிரு திருமுறைகள் குமரன் பற்றிய குறிப்புகளைத் தருவன. ***திருஞானசம் பந்தர் பத்துத் தேவாரங்களிலே கந்தனைப் பாடியுள்ளனர்.*** திருநாவுக் கரசர் திங்களூரிலேரிலே அரவந் தீண்டியிறந்த அப்பூதியடிகளின் மகனை உயிர்ப்பிக்கவேண்டிப் பாடிய தேவாரத்தில் **ஆறுகொலாமவர் தம் மகனார்முகம்** என ஆறுமுகமுடைய குமரனைப் பாடியுள்ளார். சுந்தரரும் தம் தேவாரங்களிலே சிவனுடைய மருமகளே வள்ளி யென்றும், குறவர் தலைவன் மகளென்றும், தேவரும் விரும்புவதில் குமரனென்றும் பலவாறாகப் பாடியுள்ளார். மாணிக்கவாசகர் ***திருப் பொற்சுண்ணத்தில் நல்வேலன் தாதை*** என்றும், ***திருவுந்தியாரில் குமரன்றன் தாதைக்கே உந்தீபற*** என்றுங் குறிப்பிட்டுள்ளார். பத்தாம் பதினொராந் திருமுறைகளிலும் முருகக் கடவுள் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.[1] இலங்கையிற் 14ஆம் நூற்றாண்டுவரை உப்பு ல்வன் கந்தக்குமார, சமன், விபீஷண ஆகிய நான்கு தெய் வங்கள் வழிபடப்பட்டதாகக் கூறப்படுகின்றது.[2] முருகவழிபாடு இலங்கை முழுவதும் மிகத் தொன்மைக் காலத்திலேயே நிலவியது என்பது தெளிவாகத் தெரியவருகின்றது.[3] இலங்கையிலே கதிர்கா மம், செல்லச்சந்நிதி, மண்டூர் திருக்கோயில் ஆகிய பிரசித்தி பெற்ற முருகத் தலங்களிலெல்லாம் வாயைத் துணியாற் கட்டியோர் (கப்புபுறாளைமார்) மௌன பூசை செய்யும்முறை காணப்படுகின்றது.[4]

காங்கேசன்துறை, கந்தரோடை, கந்தவனக் கடவை, குமார புரம் ஆகியன வடஇலங்கையில் முருகன் பெயரோடு சார்ந்த பழம் பெரும் ஊர்களாயுள்ளன. கிழக்கிலங்கையிலே மண்டூர், திருக் கோயில், வெருகல் என்பன இத்தகைய பழைமை வாய்ந்த முருகத் தலங்கள். திருக்கோயிலுக்குக் கந்தபாணந்துறை என்ற பெயரும் உண்டு. இவ்விடங்களின் மகிமையை எடுத்தியம்பவும் வலுமிக்க சான்றாதாரங்களாக முருகவழிபாட்டினைப் புலப்படுத்தவும், கல்வெட் டுக்களும், மான்மியங்களும், பிரபந்தங்களுங் காணப்படுகின்றன.

கதிர்காமக் கோயிலின் பூசகராயும், அறங்காவலராயும் விளங்கு பவர்கள் **கப்புறாளைகளே.** இவர்கள் வேட்டுவமரபிலே வந்தவர்களா வர். (வைதிகமரபு தமிழரிடையே வந்து கலந்த பொழுது) முருகன் சுப்பிரமணியனாதி அவன் சிவபெருமானின் திருப்புதல்வனாகவும்

கொள்ளப்படலானான். வடமொழிப் புராணக்கதைகள் அவனைப் படிப்படியாக ஆரியத் தெய்வமாக்கிவிட்டன.[5]

முருகபக்தியின் மாட்சியை இன்னுஞ் சைவத்தமிழர் மத்தியில் ஜெப, தவ, விராதாதிகள் துலக்குகின்றன. பஜனைகள், ***கந்தரலங்காரம், கந்தரனுபூதி, திருப்புகழ், கந்தசஷ்டி கவசம்*** என்பன இசைத்தல், அங்கப்பிரதட்சணம், அடியழித்து வணங்குதல், கர்ப்பூரச்சட்டி எடுத்தல், கலைகொண்டு ஆடல், நேர்த்திகள் செலுத்துதல், செதிற் காவடி, பாட்டுக்காவடி, பாற்காவடி, பன்னீர்க் காவடி, துலாக்காவடி ஆகிய பயங்கர நேர்த்திகளை உடலை வருத்திச் செலுத்துதல், தண்ணீர்ப் பந்தல், அன்னதானம், மாமிச உணவு தவிர்த்தல், முருகனாலயத்திலே தங்கியிருந்து உபவாசம் அனுட்டித்தல், கந்த சஷ்டி விரதமிருத்தல், முருகன் புகழ் பேசுதல், கேட்டல், ஆன்மிகப் புனிதம் போற்றுதலாகிய செல்களையுங் காணலாம். இவை ***ஈழநாட்டு மக்களின் முருகபக்தியின் மாட்சிமையை*** எடுத்துக்காட்டு வனவாக அமைவன.

கதிர்காமத்தில் தீர்த்தமாய் அமைவது ***மாணிக்ககங்கை.*** இந்த ஆறு நமுனகுலகந்த மலையில் உற்பத்தியாகும் பரப்ப ஓயா என்ற மாணிக்க கங்கையாக 55 மைல் நீளம் உடைத்தாய்க் கதிர்காமத் தலத்திற்கூடாகப் பாய்ந்து ஊவா மாகாணத்தை ஊடறுத்துச் சென்று தெற்கே இந்துமாக்கடலிற் சங்கமமாகிறது.

கதிரகாமம் என்னும் சொல் யானை வாழும் கிராமம் எனப் பொருள்படும் கஜரகம என்பதன் சிதைவெனக் கூறுவர் சிலர். கதிரு என்ற நச்சுமரங்களடர்ந்துள்ளதால் இக்கிராமம், கதிருகிராமா என மருவிக் *கதிரகம* என வழங்கியிருக்கலாம். இவை சிங்களச் சொற் களாகக் காணப்படுகின்றன. கதிர்காமம் என்பது தனித்தமிழ்ச் சொற் றொடர். கதிர் என்பது ஒளி. கதிர்காமம் இருமடியாகுபெயர். மேலும், கதிர் என்பது ஒளியெனவும் அதாவது சுடரிற் பிறந்த முருகக்கடவுள் எனவும், காமம் என்பது அன்பெனவும் கொண்டு கதிர்காமம் எனப் பெயர் விளங்கங்கொள்வர் பலர். [6] **தமிழ்ச் சொல்லின் *சித்தாந்த விளக்கமே* உண்மையான அடிப்படையினைப் பெரிதும் விளக்கு வதாகும்.**

கதிர்காமப் புராணம் என்ற நூல் கதிர்காமத்தை **ஜோதிஷ்கா மகிரி** என்றே குறிப்பிடுகின்றது.[7] அங்கியின் சோதி தாங்கியதன்

பெயர் சோதிகாமம் [8] என்கிறது ***கதிர்காமப்புராணம்.***

கொடிநிலை கந்தழி வள்ளீ என்ற
வடுநீங்கு சீறப்பின் முதலன மூன்றும்
கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே.[9]

உருவமற்ற தத்துவங் கடந்த நிலையிலேதான் முருகப்பெருமான் கதிர்காமத்திலே கோயில் கொண்டுள்ளான். மந்திர, தந்திர, ஆகம, வைதிகக் கிரியைகள் இவ்வாயலத்திலே நடைபெறுவதில்லை. இமயம் தொடக்கம், தேவிநுவர வரை ***அருவ வழிபாடாற்றும் குமரக் கோட்டம்*** இ.ந்து ஒன்றேயாம். கைலாசமலையிலே தென்றிசைக் கடவுளாகச் சிவபெருமான் எழுந்தருளிச் சின்முத்திரை காட்டி முனிவர் கட்கு வேதங்களை உபதேசிக்கச் சிவபெருமானுக்கு எதிர்முகமாகத் தெற்கேயிருந்து வடக்குநோக்கிக் குமரக்கடவுள் பிரணவப் பொருளை உரைக்கும் ஆச்சாரிய சுவாமியாகக் கதிர்காமத்தில் எழுந்தருளியுள் ளார் எனக் கூறப்படுகிறது.[10] **கந்தவெற்பு** என்பது கதிர்காமத்தையே குறிக்கின்றது.[11] நவரத்தினங்கள் குயிற்றப்பட்ட சிந்தாமணி ஆலயத்தின் நடுவே, இந்திரநீலத்தாலான சிம்மாசனத்திற் பெருமான் தேவர்கள் துதிக்க வீற்றிருந்தனர்.[12] வீரவாகுதேவர் யுத்தமுடிவிலே தென்னாடு திரும்பும் வழியில் வேல் வைத்துப் பூசித்த இடமே வல்லி யாற்றங்கரையெனப்படும் செல்வச்சந்நிதியாம். அங்குள்ள எழுந்தருளி வேலில் இன்றும் வெற்றிலையடையாளங் காணப் பெறுகிறது.[13]

கதிர்காமக் கொடியேற்றத்திலன்று வேலனுப்புதல், தீர்த்த முடிவில் வேலை வரவேற்றலாகிய பூசைவழிபாடுகள் இத்தலத்தில் நடைபெறுவன. பேராசிரியர், கலாநிதி ஆ. வேலுப்பிள்ளை இவ்விரு தலங்களுக்கிடையேயுள்ள (கதிர்காமம், தொண்டைமானாற்றுச் செல்வச் சந்நிதி) அத்யந்தத் தொடர்புகளைச் சுட்டிக்காட்டியுள்ளார்.[14] ***காசப்பா என்பான் (கேசதாது நாயகன்) கீர்த்திக்கு எதிராக நடத்திய போரிலே முதலாம் விஜயபாகு என்ற இளங் கதாநாயகனான கீர்த்தி, கதிர்காம நகரை இடித்துத் தகர்த்துப் பின்னொருபோதும் வரலாற்றுப் பிரசித்தி பெற்று விளங்காது செய்தனன் எனக் கூறப்படுகிறது.***[15] ***தென்னிலங்கையின் உறுகுணைப் பகுதியிற் சிற்றரசனாக விளங்கிய கவந்தீச என்ற மன்னனின் மைந்தன் துட்டகைமுனு அக்காலத்து***

அநுராதபுரியை ஆண்ட எல்லாளன் என்ற தமிழ் மன்னனை வென்றாற் கதிர்காம ஆலயத்தைக் கட்டுவிப்பதாக வேண்டுதல் செய்தான். எல்லாளனைப் போரில் வென்றபின் இவ்வாலயத்தைக் கட்டினான் எனக் கந்தஉபாத என்ற சிங்கள நூல் கூறுகின்றது எனச் சேர். பொன் அருணாசலம் குறிப்பிட்டுள்ளார்.[16]

கதிர்காமத்தில் ஸ்ரீ வள்ளியம்மன் ஆலயமானது சிங்கள இனம் உற்பத்தியாவதற்கு முன்னமேயே இங்கு இருந்ததெனப் பாக்கர் என்பவர் பூர்விக இலங்கை *(Ancient Ceylon)* என்ற நூலிற் சுட்டிக் காட்டியுள்ளார்.[17]

யாழ்ப்பாண வைபவமாலையானது கி.மு. 500 ஆம் ஆண்ட ளவில் விஜயன் என்ற மன்னன் கதிர்காமப்பெருமானுக்குக் கோயி லொன்றைக் கட்டினான் எனக் கூறுகிறது.[18] கி.பி 1640 ஆம் ஆண்டு இலங்கையைத் தரிசித்த **ரீபெய்ரோ** என்ற போர்த்துக்கேயன், தான் எழுதிய ***இலங்கைச்சரித்திரம்*** என்ற நூலிற் கதிர்காமம் பற்றிக் குறிப்பிட்டுள்ளான்.[19] சேர். பிரௌன்றிக் என்ற ஆங்கிலத் தேசாதிபதி (கி.பி. 1818) காலத்தில் டாக்டர் டேவிஸ் என்பவரும் ஆலயத்தைத் தரிசித்ததாகக் கூறப்பெறுகிறது.[20] தேவநம்பியதீசன் காலத்திற் கொண்டுவரப்பட்ட வெள்ளரசு மரம் நடுவிழாவிற் கதிர்காமத்துச் சிற்றரசர் கலந்துகொண்டாரென ***மகாவம்சம்*** கூறுவதை இவ் வாசிரியருங் கூறுவர்.[21] பரணவிதான என்பவர் கி.மு. மூன்றாம் நூற்றாண்டிற் புத்தபகவான் தியானத்திலமர்ந்து பதினாறிடங்களில் மூன்றாவது இடமாகக் கதிர்காமத் தலத்தைக் குறிப்பிட்டுள்ளார்.[22] காமேசன் என்ற பெயருடைய கந்தப்பெருமானை வணங்கி, விரதங் களை அனுஷ்டித்து இஷ்டசித்திகளைப் பெறுவர் எனவுங் கூறுகிறது.[23]

கதிர்காம முருகன் மீதெழுந்த பிரபந்தங்கள்.

1. கதிரைமலைப்பள்ளு
2. கதிர்காமத் திருவருட்பா
3. கதிரேசன் பேரில் ஆனந்தக்களிப்பு
4. கதிர்காமத்து ஏசல்
5. கதிர்காமக் கும்மி
6. கதிர்காமப் பேரின்பக்காதல்

7. கதிரை யாத்திரைவிளக்கம்
8. கதிர்காமப்புராணம்
9. கதிரை நான்மணிமாலை
10. கதிர்காம சுவாமி பேரில் கிளித்தூது
11. கதிர்காமத்து அம்மானை
12. திருக்கதிரகாமப் பிள்ளைத்தமிழ்
13. கதிர்காம மும்மணிமாலை
14. கதிரைச் சிலேடைவெண்பா
15. கதிர்காமமாலை
16. கதிர்காமப் பதிகம்

என்பன ஈழத்துக் கதிர்காமத்து முருகன் மீதெழுந்த பிரபந்தங்கள்[24] எனலாம்.

கதிர்காமக்கோவிலர் திருவருட்பா இருபத்திரண்டு பக்கங் களைக் கொண்டமைவதுடன் ம. வே. திருஞானசம்பந்தபிள்ளை என்பாரின் நுண்பொருள் விளக்கவுரையுடனும் காணப்படுகிறது. பூரணப்பிரமம், தேவர்களும் நால்வேதங்களும் தேடிக் காணாத பேரின்பப் பொருள் ஆனந்தஅருள், அமுதமழை, அனந்த கல்யாண குணங்கள், அகண்ட பரவெளி, உயிர்க்குயிர், அருட்கருணையம் மேருகிரி, சிற்பரனருளிய சிந்தாமணிக்குவை, செந்தேன் பாயும் நெடுங்கடல், தெளிந்த அமுதம், பிறவி நீக்க அடியார்கள் தேடும் மருந்து. கற்பகச் சோலை என்று வந்துள்ள ஏற்றமிகு வருணனைக் கருத்துக்களைக் கந்தன் பெருமையுடன் கலந்து பேசுகின்றார்.[25] ***ஆனந்தக்களிப்பு*** பிரபந்தமாக விளங்கும் நூல்களும் ஒன்று. கதிர்காம வேலவர் மீது பாடப்பட்ட ***ஆனந்தக் களிப்பானது*** வினாவுக்கு விடையாய்க் கதிரைக்குமரன் பற்றிய செய்திகளைக் கண்ணிகளாற் கூறி நிற்கிறது.[26]

> **கதிரும் மதியுங் கலங்க அதி வேகமாகவரும் மயிலில் ஏறி விளையாடுபவன். காலாயுதமாஞ் சேவற்கொடி உடையவன். நால்வகைமுத்திகள் அளிப்பவன், பரநாதன். இத்தன்மையோன் தன்னை ஆதரிக்க வேண்டுமெனக் கேட்கிறார். பின் மயிலேறும் பெருமானின் நாமங்களை இருபத்தொரு வரிகளிற் பாடுகின்றார்.**[27]

கதிர்காமத்துஏசல் ஆறு பக்கங்களைக் கொண்ட வினா விடையாக அமைந்த சிறிய பிரபந்தம். இது தங்கம் இராமசாமி

என்பவரால் இயற்றப்பட்டது. கதிரேசன் ஆனந்தக்களிப்பைப் பாடிய ஆசிரியரே ***கதிர்காமத்துஏசல், கதிர்காமக்கும்மி*** இரண்டையும் இயற்றி யிருக்கலாம் என்பது சொல்லாட்சி, நடை இவற்றால் பெறப்படும். ஏசல் என்ற பிரபந்தத்தை ஆசிரியர் கடவுளரியல்பை உலகியலிற் காட்டிக் கற்பனையிற் பக்தி செய்யத் தேர்ந்தார் எனலாம்.[28] வள்ளியை முருகப்பெருமான் மணம் முடிக்குமுன் தெய்வானையைத் திருமணம் செய்த செய்தியையும் கூறுகிறது ***கதிர்காமத்துஏசல்.***[29]

முத்துக்குமார கவிராசர் என்பவர் (1798 – 1851) ***ஞானக் கும்மி*** ஒன்றை இயற்றியுள்ளார் எனத் தெரியவருகிறது.[30]

மங்கைய ரெல்லோரும் வாருங்கடி யிந்த
மாணிக்ககங்கை நீராடுங்கடி.[31]

என்றும்,

எத்திசையும் புகழ் மால்மருகன் றன்னை
ஏத்திக் கொண்டாடலாம் வாருங்கடி.[32]

என்றும் பாடுவர்.

இனிக் குமரப்பெருமான் சந்நிதியில் திரை மறைப்புப் பற்றிப் பாடும் கதிர்காமக் கும்மி,

திரைமறைப்பு வழமையடி கந்தன்
சேவடி காண்ப தருமையடி.[33] எனப் பாடுகிறது.

கதிரைமலைப் பேரின்பக் காதல் என்னும் பிரபந்தம்,

அணுவுக்கணு, அண்டபரிபூரணன், மந்திரம்,
ஞானமருந்து, மறைக்கொழுந்து, ஞாலச்சிறப்பு
காய்ச்சியபாலில் நெய்போற் கலந்துள்ளவன்[34] என

அனைத்தும் ஆறுமுகப் பரம்பொருளேயென ஆணித் தரமாக அறுதியிட்டுரைக்கின்றார்.

கதிர்காமத்துக்குப் பாதயாத்திரை

கவிஞர் விநாயகமூர்த்திச் செட்டியார் கதிரையாத்திரை விளக்கம் என்னும் பிரபந்தத்திலே, தாம் பாதயாத்திரை செய்யத் தீர்மானித்து யாழ்ப்பாணத்திலுள்ள வண்ணார்பண்ணை வைத்தீஸ் வரனை முதலிலே வணங்குகிறார்:

வந்தேன் வீதி வலமாய் - அங்கு
வாழும் வயித்தீசரனை வாழ்த்திக் கொண்டே.[35]

என்பது பாடல் பின்னர் நல்லூர்க்கந்தன் சந்நிதியை அடைந்து வரலாற்றுப் புகழ்பாடி,

போறேன் கதிரை மலைக்கு – நானும்
போக வழித்துணையாய் வா நீயென்றேன்.[36]

என்கிறார்

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் கீர்த்தனைகள் காவேரி, துசாவந்தி, ஆகிரி, கல்யாணி ஆகிய இராகங்களில் அமைந்தன.[37]

கதிர்காமச் சுவாமிபேரில் கிளித்தூது

இந்நூல் கதிர்காமத்திலுறையும் சுவாமி பேரில் காதல் கொண்ட பெண்ணொருத்தி கிளியைத் தூதாக அனுப்பி மாலைபெற்று மனக் கவலையைத் தீர்த்தமை பற்றிக் கூறுகின்றது. கதிர்காமச் சிறப்புக்களைக் கூறி வேலும் மயிலும் துணையோடு நூலை முற்று விக்கின்றார்.[38]

உலகத் தமிழ் மாந்தர் அனைவரும் உணரும் வண்ணமாகத் ***தக்கின கைலாச புராணம்*** முதலாப் புகழ்பெற்ற கதிர்காமப் புகழை ஓதுகின்றேன்[39] என்று கூறுகின்றார் ***கதிர்காமப்புராண*** ஆசிரியர் சி. நாகலிங்கம். அவர் பின்வருமாறு தொடர்கிறார்:

..... சூரனை இருகூறாக்கி ஊர்தியாம் மயிலாகவும்
கொடியாஞ் சேவலாகவும் கொண்டனர். பின்
முருகவேள் கதிர்காமத்திலே தெய்விகத் திருக்கர
மொன்றை நிர்மாணிக்கச் செய்து சிலகாலம் அங்கிருந்து
பின் திருப்பரங்குன்ற மேகினர்.[40]

வள்ளி எனுங் குறக் கொடியின் ஈடு இணையற்ற அழகினை, நாரதர் கூறக் கேட்ட முருகப்பெருமான் அம்மாதை மணக்க மனங் கொண்டனர். வேட்டுவகுல வேந்தனாக வடிவு கொண்டு வள்ளி மலையை அடைந்தனர். அங்கு களவொழுக்கத்தில் வள்ளியை அடைந்தனர்.[41]

கதிர்காமத்து அம்மானை என்னும் பிரபந்தத்தில்,
வள்ளியைத் தினைப் புனத்திற் கண்ட நாரதர் அவளது
உருவைச் சித்திரமாகத் தீட்டி முருகக்கடவுளிடம் கொடுக்கின்றார்.[42]

கன்னியர்கள் கூடிக் கங்கை நீர்தானாடி
பொன்னுலக மென்று புகழ்ந்து மகிழ்ந்திருங்கள்.[43]
... வாவிதனிற் கயல்கள் மகிழ்ந்து விளையாடுவதும்
கூவுங் குயில் மயில்கள் குரலோசை மெத்தவுண்டு.[44]

எனவருவனவுங் கண்டின்புறத்தக்கனவாம்.

திருமணத் தத்துவம்

அழகிய கண்களுடைய வள்ளியம்மையார், தெய்
வானையம்மையார் இருவரையும் தழுவியவனாகக்
குமரக் கடவுளின் தோற்றங் கூறப்படுகின்றது.[45]

கதிரை நான்மணிமாலை எனும் பிரபந்தம் 1936 இல் நெ. வை. செல்லையா அவர்களால் இயற்றப்பட்டுள்ளது. கதிர்காமத் தலம் சம்பந்தமான விபரங்களை முதலியார் இராசநாயகமே கூற, ஆசிரியர் இந்நூலை ஆக்கினார் எனக் குறிப்பிட்டுள்ளார்.

கதிர்காம மும்மணிமாலை தி.சதாசிவஐயரால் இயற்றப்பட்டது. மும்மணிமாலை என்பது வெண்பா, கட்டளைக் கலித்துறை, அகவல் என்பவற்றால் அந்தாதித் தொடையில் அமைவது.

மும்மணியா வன சொன்ன புட்பராகம்
உறுவயிடூரியங் கோமேதகமேயென்றாங்
கோதுவர்.[46]

எனத் திருவிளையாடற் புராணங் கூறுவதாக ஐயவர்கள் எடுத்துக் காட்டுகிறார்.

சஞ்சலம் நீங்கவுன் சரணதாமரை கண்டு
தரிசிக்க வென்று தருவாய்.[47]

எனச் சோமசுந்தரப்புலவர் கண்ணுக்கு ஒளிவேண்டி நிற் கின்றார். மேலும், அற்புதங்கள் காட்டி அடியார்க்கு அருள் பாலிக்கும் முருகா, விழி குளிரவுன் திருவுருக்காட்டியருள்வாய் என இரந்து நிற்கின்றார். *திருப்பதிகம்* எனும் பிரபந்தத்தினை த.நடராசா என்பவரும் சிவ அடியான்சாமி என்பவரும் இணைந்து இயற்றியுள்ளனர்.

தைப்பூச நாள்அதனிற் சனங்க ளெல்லாம்
சகஸ்தர நாமங்களினால் குதித்து வாழ்த்திய[48]

என்னும் பாடலில் ஆசிரியர் த.நடராசா, தைப்பூச நாளிலே முருகக் கடவுளைப் போற்றிக் கொண்டாடப்படுந் தன்மையைப் பாடுகிறார்.

கதிரைமலைப்பதிகம் எனும் பிரபந்தம் நூலாசிரியர் சி. ஆறு முகம்பிள்ளையால் கி.பி. 1969 இல் திருக்கார்த்திகைத் தினத்தன்று கதிர்காமச் சந்நிதியில் வெளியிடப்பட்டது. பதினொரு பாடல்களை உடைய பதிகம் இது. பாடல்கள் ஒவ்வொன்றும் **காட்சியது தந்தெனக் கடைத் தேற்றியருள் புரிவையே** என முடிவடைகின்றன. ஆசிரியர் கதிர்காமமே ***சிற்சபை*** எனப் போற்றி நிற்கிறார் அவர்.

சிற்சபையில் மாதர்கள் சிறந்தவா லாத்திகள்.[49]

என்ற பாடலில் மாதர்கள் ஆலாத்தியெடுத்தலைக் கூறி வெகு விரைவிலே சித்திரவடிவேலேந்தித் தன் முன்னே காட்சி கொடுத்துத் தீவினையகற்றிக் கடைத்தேற்றுமாறு இரந்தும் குழைந்தும் கனிவுடன் கேட்கின்றார்.

கதிர்காமமாலை பின்வருமாறு ***கதிர்காமம்*** எனும் ஊரை வருணித்துள்ளமை இங்கு கருத்தத்தக்கது.

மைக்கார் படியும் சோலை சூழ் கதிரைப்பதி.[50]
கொந்துற்ற சோலைக் கதிர்காமம்.[51]
விண்பட்ட சோலைக் கதிர்காமம்.[52]
வளர்வான் பொழிற்கண் கோற்றேன் பொழியும் கதிர்காமம்.[53]
மலர்ந்ததேன் கொந்தார் கொம்பர் அரைக்காதம்
மணக்குல கதிர்காமம்.[54]
மலர்த்தேன் பொழியும் விரவுற்ற சோலைக் கதிர்காமம்.[55]

என முல்லைநிலக்காடுகளின் மாண்பு பிரபந்தங்களிற் பரவ லாகப் பேசப்படுகிறது.

பிரபந்தங்கள் ஒவ்வொன்றும் சிறந்த அறிவுக் கருவூலங் களாகக் கருத்துக்கு விருந்தளிப்பவையாகத் தோன்றுவன. ஆயுந் தோறும் நவநவமான கருத்துக்களைச் சுரந்தளிப்பன. **இக்கட்டுரைக்கு எடுத்துக்கொண்ட பொருள் ஆய்வுக்கும் அப்பாற்பட்ட பெரும் பொருள்.**

ஆகம ஆசாரசொரூபன் ஞானக் குமரனாம் கதிர்காமக் கந்தன் பற்றிய பிரபந்தப் பொருள் பல்வேறுபட்ட அணுகு முறை களையும், பல்வேறுபட்ட நோக்குகளையும், காட்சி விரிவடையுந் தன்மையினையும் இவற்றிலே காணக்கூடியனவாக உள்ளன. ***பழைமையும் போற்றப்பட வேண்டும்; புதுமையும் வரவேற்கப்பட வேண்டும். இந்நிலையில் முற்றாகப் பழைமை இறந்தொழிதலைத் தமிழ் மக்கள் தடுத்து அதற்கு ஆக்கம்தரல் வேண்டும் என்பது வேண்டுகோள்.***

இக்கட்டுரையிலே குறிக்கப்பட்டுள்ள முருகப் பிரபந்தங்களை விட, இன்னுங் கிடைக்காதவை ஏட்டுவடிவிலே; காணப்படலாம், மறைத்து வைக்கப்பட்டிருக்கலாம், மொழிபுரியாமல் கவனிப்பாரற்ற நிலையில் இருக்கலாம். அவற்றையும் முயன்று தேடிப்பெற்று ஆய்வு செய்து அச்சேற்றுவிப்பது கதிரைக்குமரனுக்குச் செய்யும் சிறந்ததொரு தமிழ்த் தொண்டும், சமயப்பணியுமாகும்.

அடிக்குறிப்புகள்.

1. Ratna Navaratnam, *Karthigeya*. P. 161.
2. Heins Beshart, *உலக இந்து மாநாட்டு மலர்*, (1982), ப.111.
3. சொக்கலிங்கம், க., *உலக இந்து மாநாட்டு மலர்*, (1982), ப. 251.
4. சந்தனா நல்லலிங்கம், *கதிர்காமப் பிரபந்தங்கள்*, 1985, அலமு அச்சகம், ராயப்பேட்டை, சென்னை, ப. 09.
5. *மேலது*, ப. 10.
6. சபாநாதன், குல., *கதிர்காமம்*, ப. 5.
7. குமாரசுவாமி, வ., *கதிரைமலைப்பள்ளு*, ப. 17.
8. நாகலிங்கம்பிள்ளை, சி., *கதிர்காமப்புராணம்*, ப. 73.
9. *தொல்காப்பியம், நச்சினர்க்கினியர் உரை*, ப. 255.
10. Ratna Navaratnam, *Karthigeya*, p. 190.
11. கச்சியப்ப சிவாசாரியார், *கந்தபுராணம்*, (3), ப. 228.
12. நாகலிங்கம்பிள்ளை, சி., *கதிர்காமப்புராணம்*, ப. 56.
13. ஆறுமுகசாமி ஐயர், செல்லச்சந்நிதிச் *சித்திரத்தேர் மலர்*, செல்வச்சந்நிதி, தொண்டைமானாறு.
14. வேலுப்பிள்ளை, ஆ., *தமிழர் சமயவரலாறு*, ப. 229.
15. Paranavithana, S. *Epigraphia Zeylanica*, Vol, iii. P. 118.

16. *Sir Ponnambalam Arunachalam Studies and Trans*lation, P. 118.
17. நாதன், எஸ். எஸ்., **கதிர்காமத் திருமுருகன்,** ப. 08.
18. சபாநாதன், குல., *கதிர்காமம்,* ப. 09.
19. புலவர் சிவங்கருணாலய பாண்டியனார், **திருக்கதிர்காமப் பிள்ளைத்தமிழ்,** ப. 12 – 13.
20. குமாரசுவாமி, வ., *கதிரைமலைப்பள்ளு,* ப. 48.
21. Amarasekara, H. E. A . *The Kataragama God shirine and legends,* P. 290.
22. Paranavithana, S., *Epigraphia Zeylania,* Vol . iii. P. 215.
23. நாகலிங்கம்பிள்ளை, சி., *கதிர்காமப்புராணம்,* ப. 60.
24. சந்தனா நல்லலிங்கம், *கதிர்காமப் பிரபந்தங்கள்,* (1985), அலமுஅச்சகம், ராயப்பேட்டை, சென்னை, ப. 47 – 48.
25. ஸ்ரீலஸ்ரீ சிவஞானதேசிகசுவாமிகள், *கதிர்காமவேலர் திரு வருட்பா,* ப. 03.
26. சந்தனா நல்லலிங்கம், மு. கு. நூல், ப. 63.
27. இராமசாமிப்பிள்ளை, கதிரேசன்பேரில் ஆனந்தக்களிப்பு, ப. 01.
28. சந்தனா நல்லலிங்கம், மு. கு. நூல், ப. 66.
29. இராமசாமிப்பிள்ளை, *கதிர்காமத்து ஏசல்.*
30. சதாசிவம்,ஆ., *ஈழத்துத் தமிழ்க்கவிதைக் களஞ்சியம்,* ப. 250.
31. இராமசாமிப்பிள்ளை, கதிர்காமக் கும்மி, ப. 30.
32. மு.கு. நூல், ப. 31.
33. மு. கு. நூல், ப. 40.
34. சோமசுந்தர ஐயர், **கதிரைமலைப் பேரின்பக்காதல்,** ப. 9.
35. விநாயகமூர்த்திச் செட்டியார் **கதிரைப் பாதயாத்திரை விளக்கம்,** ப. 03.
36. மு. கு, நூல்.
37. சந்தனா நல்லலிங்கம், மு. கு. நூல், ப. 75.
38. மு. கு. நூல், ப. 80.
39. நாகலிங்கம்பிள்ளை சி., *கதிர்காமப்புராணம்,* ப. 05.
40. மு. கு. நூல். ப. 66.
41. மு. கு. நூல், ப. 67.
42. நல்லதம்பிப்புலவர், *கதிர்காமத்து அம்மானை,* ப. 27.

43. மு. கு. நூல், ப. 47.
44. மு. கு. நூல், 48.
45. சோமசுந்தரப்புலவர், *கதிரைச்சிலேடைவெண்பா*, ப. 56.
46. சதாசிவ ஐயர், தி., *கதிர்காமமும்மணிமாலை*, ப. 01.
47. சோமசுந்தரப்புலவர், *கதிரைச்சிலேடைவெண்பா*, ப. 192.
48. நடராசா, த. அ., *திருப்பதிகம்*, ப. 19.
49. ஆறுமுகம்பிள்ளை, சி. *கதிரைமலைப்பதிகம்*, ப. 7.
50. செல்லையா, நெ. வை., *கதிர்காமமாலை*, ப. 07.
51. மு. கு. நூல், ப 06.
52. மு. கு. நூல், ப 11.
53. மு. கு. நூல், ப 11.
54. மு. கு. நூல், ப 11.
55. மு. கு. நூல், ப 12.

பெண்கள் ஒடுக்கப்படும் இனமா?

உலகம் என்பது உயர்ந்தோர் மேற்றே என்பது மானுட வாழ்க்கை வரலாற்றின் அடிப்படைகளுளொன்று. மனித வாழ் வோட்டம் ஒரு குறிப்பிட்ட வரம்புக்குள்ளாகவே அசைந்து, சிறந்து, உயர்ந்து பெருமிதத்துடன் ஓடிக் கொண்டிருக்கிறது. புரிந்துணர்வும், முரண்பாடுகளும், மோதல்களும் வேற்றுமைகளும், இயலாமை களும், சாணக்கியமும் ஒன்றுடனொன்று சேர்ந்தியைந்தே உலக இயங்கியல் முறைமை ஒழுகிவருகிறது. எனினும் எது உயரியது? எது மேன்மையுடையது? எது போற்றத்தகுந்தது? எது ஏற்புடையது? எது போஷிக்கத்தக்கது? எது நிராகரிக்கத்தக்கது? எது வணங்கி வழிபடத்தக்கது என்ற பார்வைகளும் தடுத்து நிறுத்த முடியாதபடி மேற்கிளம்பும் நிலையையும் நாம் கண்டுகொள்ளா மலிருக்க முடியாதல்லவா? இந்த இரு வேறுபட்ட ஆய்வு முறைகளினூடேயும் ***பெண்கள் ஒ(டு)துக்கப்படும் இனமா?*** என்ற உணர்வினை இக் கட்டுரையின் ஆய்வுப் பொருளாக அமைத்துக் கொண்டு சிலபல கருத்துக்களைச் சிந்திப்போம்.

ஒருசிலரது கருத்துப்படி இப்பொருள் குறித்த கண்ணோட்டமும் கருத்துக்களுமே முன்னிலைப்படுத்தி ஆராய்ந்து அறியப்பட வேண்டுமே தவிர 'யார் கூறுகிறார்' என்பதனைப் பார்த்தல்கூடாது என்று விவாதிப்பர். இன்னுஞ் சிலர், இத்தகு கருத்துக்களை இன்னார் தான் கூற வேண்டும் என்று ***விதிமுறையில்*** அழுத்திக் கூறுவர். அதாவது கூறுபவரது தகுதி இங்கு பேசப்படுகிறது. **முன்னையது விளக்கமுறை நோக்கு; பின்னையது விதிமுறைநோக்கு** என்று நாம் விளங்கிக் கொள்ள முடிகிறதல்லவா? புரிந்துணர்வு பல பிரச்சனை களைத் தீர்த்து வைக்கிறதல்லவா?

இதுவரை காலமும் பெண்ணியம், பெண்விடுதலை, பெண் களின் உரிமை, பெண் சுதந்திரம், பெண் தளை நீக்கப் போராட்டம் என்பன அரசியல், பொருளாதார, சமூக கலாசார மேலைப்புலச் சார்புநிலைகளிலேயே பெரிதும் கூர்மையுடன் நோக்கப்பட்டுள்ளன. எனினும் இந்நிலைப்பாட்டினை விட இலக்கியம், சமயம்,பண்பாடு, கலை, சமூகம், விழுமியங்கள், வாழ்வியல் நெறிப்பாடுகள், இல்லறக் கடமைகள் என்ற பிறிதொரு இயல்பு வகையிலான ஜனரஞ்சக நோக்கு அணுகுமுறையும் ***பெண்கள் ஆய்வு*** பற்றி, பெண்ணினம்

பற்றி மிகக்கூர்மையுடன் நிலவுவதையும் நாம் பிரக்ஞையுடன் ஆழமாக மனங்கொள்வது அவசியம்.

பெண்களது பிரச்சினைகள்பற்றி எழுதுவோரும் கதை எழுது வோரும், ஆய்வு நடத்துவோரும் யார்? எவர்? என்று பார்ப்பதுவும் தகுதி நோக்கிலே இப்பொருள் பற்றிப் புரிந்துகொள்வதற்கு உதவு வதாகலாம். இதிலே சம்பந்தப்படுவோர் ஆணா, பெண்ணா? ருதுவான வளா இல்லையா? கற்றவரா? கல்லாதவரா? பட்டதாரியா? இல்லையா? கன்னியா? சுமங்கலியா? முற்போக்காளரா? பிற்போக்கு வாதியா? காதல் திருமணம் புரிந்தவரா? அல்லது பேசி முடிந்தவரா? விதவையா? தபுதாரனா? உயரதிகாரியா? வேலைக்காரியா? கற்பழிக் கப்பட்டவளா? இரண்டாந்தாரக் குழந்தை பெற்றவளா? முதற்றாரமா? உயர்குலமா? இழிகுலமா? கணவன் உயர்சாதியா? மனைவி உயர் சாதியா? பேராசிரியரா? பேராசிரியையா? படையதிகாரியா? ஜனாதிபதியா? போராளியா? எதிர்ப் போராளியா? மலடியா? சோரம் போனவளா? உடலை விற்பவளா? காமுகனா? இலக்கியவாதியா? சட்டத்தரணியா? புலவனா? விமர்சகனா? விசரனா? விசரியா? வெள்ளைக்காரனா? வெள்ளைக்காரியா? கறுப்பனா? கறுப்பியா? (மேலைநாட்டுச் சிந்தனையா? அல்லது கீழைத்தேயச் சிந்தனையா என்ற கூர்மையான நோக்கு நிலைகளும் **எந்த மதத்திலே** சொல்லப் பட்டுள்ள தென்ற நோக்கும் இவ்விடயத்திலே இன்று செல்வாக்குச் செலுத்தி பெரிதும் முன்னணி வகிப்பதனை நாம் காணமுடிகிற தல்லவா? எது எவ்வாறிருந்த போதிலும் இவ்விடயம் முற்றும் முழுதுமாகத் தீர்மானிக்கப் பட்டு விட்டதொரு ஆய்வு நெறியிலே செல்லக்கூடிய விடயமல்ல. இவ்வாய்வு என்பதிலே நாம் அதி கூடுதற் கவனமும் அக்கறையும் ஆர்வமுங் கொண்டே ***இவ்வாய்வுத் தலைப் புப்பற்றிச்*** சிந்தித்து விவாதிப்போம். ***இவ்விடயம் ஒரு வீவாதப் பொருள் என்பது இங்கு முதலிலே ஒத்துக் கொள்ளப்பட வேண்டும்.*** விவாதத்திலே விவாதிப் போர் தத்தம் அணுகுமுறை, நோக்குநிலை, கண்ணோட்டம், சார்பு நிலை இவற்றையே ஆதாரமாகக்கொண்டு விவாதிப்பதுண்டு. மேலே குறிப்பிடப்பட்டுள்ள பேதங்களை பாராது விட்டு விட்டால் பல்வேறு சிக்கல்களையும் வேண்டாத விவாதங் களையும் கருத்துக்களையும் விட்டு விலக்கிவிட முடியும்; தவிர்த்து விடலாம் என்பது என் துணிபு. அது தான் முடியுமா? மேலும் சிந்திப் போமாக.

பெண்கள் **ஒதுக்கப்படும் இனமா?** என்ற வினாவுக்கான மிகச்சரியான விடை **இல்லை** என்பதேயாகும். பெண்கள் அனை வராலுமே மதிக்கப்படத்தக்க **மான்புறு இனம்** என்பதே உண்மை. அவ்வாறெனில் பெண்ணினம் கேவலமாக ***அவமதிக்கப்பட்டுக் கணிக்கப்படாதவர்*** களாகவும் உள்ளனர் என்று கூறுபவர்கள் தான் யார்? எவர்? எந்த அமைப்பு? என்பதனை நாம் அறிய வேண்டியதும் அவசியமாகிறதல்லவா?

தமிழினத்துப் பெண்களின் தலைமைத்துவ, தனித்துவ விழு மியம் ***கற்புடைமை*** என்பதே. (சிலர் இச் சொல்லைக் காறி உமிழ்வர்) கற்பு என்று ஒன்றில்லை என்பர். மேலைத் தேசத்து நாகரிக விழுமியம் ***எப்படியும் வாழலாம்*** என்ற பெண்நிலைசார் ***சுதந்திர முழக்கமே.*** இம்முரண்பாடுதான் இன்று உலகிலே ***கடும் மோதலாக*** உருவெடுத்து மதர்த்து, வீங்கிக் கூர்மைபட நிற்கிறது. இதன் அடிப்படையில் ***பண்பாடு*** உள்ளது. பண்பாட்டுக் குளப்பமும், எழுந்தமானக் கருத்தோட்டங் களும், மேலாதிக்க உணர்வுமே பெண்களது சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்னும் அம்சங்களைப் பாதிக்கச்செய்கின்றன. இம் முரண்பாடுகளே மகோன்னதம், ***இழிதகைமையெனும் தரக் கற்பிதங் களையும்*** உண்டாக்கிவிடுகின்றன. எல்லாவற்றுக்கும் மேலாக மதச் சார்பான ஒழுக்கவியல் நியதிகளும் நெறிமுறைகளும் இதுவரை பெண்ணிலைவாதிகளாலே இழிவும், ஏளனமுஞ் செய்யப்பட்டு வந்துள்ள ***செயலில் அசிங்கநிலை*** இப் பொருள் பற்றிய (பெண்ணிலை வாதம் பற்றிய) பல்வேறு ***கீழ்த்தர, கேவல நிலைமையுடனான நோக்கு*** நிலைகளுக்கு வழிவகுத்துள்ள துரதிஷ்ட நிலைமையையும் நாம் கண்முன் நிகழ்வதைக் காணத்தவறக் கூடாது. ***கலாசார உடைப்பு, அரசியற் புரட்சி, ஆன்மிக நிராகரிப்பு, சமய நம்பிக்கையா?*** என்பன பற்றிய வினாக்கள் மாபெரும் ***குளப்ப நிலைகளையே*** தோற்று வித்து விட்டுள்ளன. இதனால் எது மெய், உண்மை என்ற ***தெளிவு*** இன்று பலரிடத்தும் இல்லாது போய்விட்டது. இத்தகு போக்கு களுக்குக் காரணம் ***கொள்கையில் பற்றுறுதியும் திடநம்பிக்கை இல்லா மையும் எதிர்காலத்திற்கான பேணல்நிலை*** என்னவென்று புரியாமையு மேயாம்.

பெண்களைப் (பெண்ணித்துப்) பெண்களே அடக்கியொடுக்கு கிறார்கள் என்பது ஒரு சாராரது முறைப்பாடு. இல்லை ஆண் வர்க்கமே பெண்களை எல்லா விதத்திலும் அடிமைப்படுத்திக் கொடுமைப்

படுத்திக் கேவலத்துக்குள்ளாக்குகின்றனர் என்று இன்னுஞ் சிலர் பெரும் பழி கூறுகின்றனர். திருமணமாகாத துறவிகளும், பிறரும் தமக்கும் இவ் விடயத்துக்கும் எதுவிதத் தொடர்புமில்லை என்று கருதி ஏகாந்தவாழ்வு வாழ்கின்றனர். குடும்பத்தில் கணவனே - கொண்டவனே,- ***தொட்டுத்தாலி கட்டிய புருஷனே கொடிய யமன், நஞ்சு*** என்றுஞ் சிலர் வீறு கொண்டு போதிக்கின்றனர். இன்னுஞ் சிலர் பெண்ணுக்கு எதிரி அவருக்குள்ளே உள்ள ***அறியாமை*** என்பர். மேலுஞ் சிலர் ***கல்வியறிவின்மையே*** பெண்ணின் எல்லாக் குளறு படிக்கும் அடிப்படை என்பர். மேலும் பலர் ***படித்த பெண்களால்*** தான் கருத்துக் குளப்பமும் பிரச்சினைகளும் என்று கூக்குரலிடு கின்றனர். மேலுஞ் சிலர் பெண்மை என்ற, ***இயல்பான பெலவீனமே அலட்டுகிறது*** என்பர். ***உடலின் தசைப் பிடுங்கலே*** கருத்தின் தளம் பலுக்குக் காரணம் என்பர்.பல்கலைக்கழகத்துப் பெண் பட்டதாரிகளின் **புரட்சிப் போராட்டமே** இது என்பர்.

இன்று தமிழ் இனத்தில், தமிழ்ச் சமுதாயத்தில் பெண்ணியம் எனும் கருத்தியல், பெண் விடுதலை, பெண்ணடிமைத் தனத்துக்கு எதிரான போர்க்குரல், பெண்களை அடக்கியொடுக்கி அடிமை களாகவே நடத்தும் முறைக்கு எதிரான கிளர்ச்சி, பெண்களைச் சுரண்டுதல், காம இச்சையுடன் பெண்களுடன் சேட்டைவிடுதல், பழகுதல், நக்கலடித்தல், பெண்களைக் கேலி செய்தல், கிண்டல் செய்தல், நக்கலடித்தல், நையாண்டி பண்ணுதல், லோட்டி கட்டுதல், ஏளனப் படுத்துதல், இம்சித்தல், சித்திரவதை செய்தல், கற்பழித்தல், வேலை வாங்குதல். அடிமைப்படுத்தி வக்கிர பாலியல் செயற்பாடு களால் ஆதிக்கம் செய்தல் என்னும் அனைத்துக் காரியங்களுக்கும் எதிராகப் ***போர்க்கொடி*** தூக்கி நிற்கும் பான்மையைக் காணுகிறோம். இன்னும் இன்று மேற்குலகிலும் நமது நாட்டுப் பல்கலைக்கழகங் களிலேயும், கல்விக் கூடங்களிலேயும், இலக்கியங்களானவற்றிலும், (நாவல், சிறுகதைகளிலும்) நாடகங்களிலேயும் அரசியற்கட்சி மாதரணி வட்டாரங்களிலேயும், பெண்கள் வட்டங்களிலேயும், பத்திரிகை, பிரசாரக் கூட்டங்களிலும், படையணி எழுச்சிப் போராட்ட நிகழ்வுகளிலும், சிறைச்சாலைகளிலும் அகதிமுகாம்களிலும் கூடப் ***பெண்கள் உரிமை*** பற்றிப் பெரிதாகவே சர்வதேச மட்டத்திலே பேசப்படு கிறது ; எழுதப்படுகிறது; காட்சிப்படுத்தப்படுகிறது. ஐ. நா. சபையும் நாடுகளிடையே மாநாடு நடத்தி இதுபற்றி அறைகூவல் விடுக்கிற இத்தகு விரிவான சிந்தனைக்கும், பிரசாரத்திற்கும், மறுமலர்ச்சிக்கும்

சமூகத்திற் காரணம் ***கல்வி யறிவுவளர்ச்சி மேம்பாடு, அரசியல் வழிப்புணர்ச்சி, விடுதலை வேட்கை, சமூகப் பிரக்ஞை*** என்றுங் கூறலா மல்லவா? சிந்திப்பீரா? விடையுண்டா?

பெண்கள் தளைநீக்கம் அல்லது விடுதலைபற்றிய விழிப் புணர்வு, ஒடுக்கு முறைபாரபட்சம், சந்தர்ப்பமின்மை அல்லது வாய்ப்பு மறுக்கப்படும் நிலை, சுரண்டல், கல்வியறிவின்மை, விவேகமின்மை, சமூக ஏற்றத்தாழ்வுகள், (சாதி, இனம் எனும் பாகுபாடுகளுடன் ஒதுக்கப்பட்டுள்ள - ஒடுக்கப்பட்டுள்ள நிலைமை), சீதன ஆண்வர்க்க மேலாதிக்கம், பொறாமை, இயற்கையாகவே பாலியல் வேற்றுமை களினாலுண்டாகும் பாலியல் மனப்பிறழ்வுகள், வேட்கைகள், ***தமக்கில் லாத பாலியல் உறுப்புகள்*** பற்றிய கற்பனை உணர்வெழுச்சியினால் உந்தப்பட்ட தவிப்பு மனோ நிலைகள், இயல்பாய்க் கிளரும் அடக்கு முடியாத காம உணர்ச்சி இச்சை, சிந்தனை வன்மம், வெறித்தனம், காடைத்தனம், பாலியற் பிறழ்வுணர்ச்சி மேலீடு, வக்கிர ஆசைகள் என்றின்னோரன்ன குணாம்சங்களினாலே பெண்விடுதலை, பெண் ணியம் பற்றிய ***எழுத்துக்களும், பேச்சுக்களும், கருத்துக்களும், விவாதங்களும், பட்டிமண்டபங்களும், எடுகோள்களும், நாவல்களும், விமர்சனங்களும்*** பெண்கள் பற்றிய பல்வேறு செய்திகளையும் தகவல் களையும் பரப்பிப் பிரசாரப்படுத்தி அலசி நிற்கின்றன.

இவ்விடத்திலே இயற்கையின் அல்லது பிரபஞ்சத்தின் இயல்பு நிலையினை - இயற்கை நியதியை - ஒரு கணம் எண்ணிப்பார்ப்பது அவசியமாகிறது. உலகிலே பெருவழக்காக ஏற்றுக்கொள்ளப்பட் டுள்ள விஞ்ஞான உண்மை பெண்ணே (படைப்புப்பொருளே) முதலிலே ***தோற்றம் பெற்றாள்*** என்ற கருத்தாகும். படைப்பின் மூலம் பெண் - (அதுதான் மண், பூமி, நிலம்.) ***சூரியனைக் கண்டு தாமரை மலரும்*** என்பது ***வெறும் இலக்கணமல்ல, வெற்று வசனமுமல்ல. உலகின் உண்மை இலக்கணமுமாகும்.*** வெகு நாகரிகமாகவே தமிழிலே சொல்லி வைத்துள்ளனர். ***பெண் என்பவள் ஆண்களினாலே மலர்ச்சியுறுபவள்*** என்னும் யதார்த்தம் - இயற்கை - இங்கு உண்ட ல்லவா? பெண்களே! இதனை ஏற்றுக் கொள்ளும் ***மனப் பக்குவமும், பண்பாடும்*** பொறுதியும் உங்களிடம் உண்டா? என்று நீங்களே ***மனச் சாட்சியைத்*** தொட்டுத் தீர்மானித்துக் கொள்ளுங்கள். இது உங்களுக் குள்ள சுய - (தனிமனிதச்) சுதந்திரம்; தனிமனித உரிமை. ***பேசவும், எழுதவும் சுதந்திரமாகவே நடக்கவும்*** பெண்களுக்கும் அனைத்து உரிமையும் உண்டு.

உலகம் ***ஆண் பெண்*** அல்லது ***பெண் ஆண்*** என்று தானே மனிதத் தோற்ற உருவினைக் கொண்டுள்ளது. ஏன் முதலில் ஆண் என்று சொல்லுவான்? என்ற பெண் அறிவிலிகளின் வினாவுண்டு. இதிலென்ன அதிசய முண்டு! பரிச்சயப்பட்ட பிரபஞ்சத்தில் நன்கு அறிந்துகொண்ட மனித உருவினர் தானே ஆணும் பெண்ணும்? இதிலே யார்? அல்லது எவர் அல்லது (எது) ***பெரியது? வல்லது? முதன்மையானது?*** என்ற வினாவும் எழுதல் கூடுமோ? அப்படியெழு மானால் அவ்வாய்வு ***சொல்*** பற்றிய ஆய்வே. அது நிறைவு பெற முடியாத முடிவிலி ஆய்வாக வல்லவோ அமையும்? ***எனவே உலக இயற்கைப் படைப்பியல் உண்மையை*** நிராகரிக்காது விருப்பு வெறுப் பின்றி ஆதரித்து ஏகமானதாக ஏற்றே ஆகவேண்டும் என்ற உண்மை நிலைப்பாட்டை - மனோநிலையை முதலிலே (பெண் விடுதலை பற்றி சிந்திப்பவர்களினால்) உள்வாங்கப்படுவதோடு அங்கீகரிக்கப் படவும், ஏற்றுக்கொள்ளப்படவும், நடை முறைக்கிடவும் வேண்டும் என்பதுதான் ***சரியான சிந்தனைக்கான நீதி முறையாகலாம். இயல்பான அடிப்படைகள் ஒப்ப ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்*** என்ற கருத்தை அனைவருமே அனுவதித்து ஏற்றுக்கொள்வர் என்பது என் திடமான நம்பிக்கை.

குடும்பம் என்னும் அலகு தனித்துப் பெண்ணுக்கு மட்டும் உரித்தானதொன்றன்று. உலக வழக்கிலே பெண்ணும் ஆணும் அல்லது ஆணும் பெண்ணும் சேர்ந்து - இணைந்து - அன்பு செய்து புரிந்துணர்வுடன் வாழும் இயல்பு வாழ்க்கை நெறியே ஏற்ற முறுகிறது. சிந்தனைப் பரிணாமம் என்பது அனுபவத்தின் வெண்சூட்டினாலேயே முழுமை பெற்றுச் சிறக்கிறது. மானுட வரலாறு, பெண்ணின வரலாறு, வாழ்க்கை வரலாறு என்பன மேற்சொன்ன பரிணாமத்தினாலேயே பெருமையும் ஏற்றமும் பெறுகின்றன. இது ஒரு அணுகு முறை; நோக்குநிலை; பார்வை; வாழ்வு முறைமை.

எதிர்ப்புணர்வும், எதிர்ப்புக் குரல்களும், கண்டனங்களும், பேரணிகளும், ஹர்த்தால்களும், போராட்ட முஸ்தீபுகளும் என்பன சமூகத்தில் வலிமை, அரசியலாதிக்கம், செல்வாக்குச் செலுத்து வொருக்கு (ஒருபிரிவினர்க்கு) எதிராக மற்றொரு பிரிவினர் (குழுவினர், கட்சியினர், கொள்கையர், போக்கினர்) புரியும் பிரசார வெளிப்படுத்தல்களாகும். எனினும் உலகிலே எந்நாட்டிலும் பெண்கள், ***பெண்ணினம் ஏற்றம் பெற்று வாழ்ந்தால் அந்நாடு பல்வகையிலும்***

சிறப்புடைய, வளமுடைய நாடாகவே கணிக்கப்படும்; மதிக்கப்படும். இது பொதுநியதி, நியதி, வீதி என்பன காண்க.

பெண்கள் விலைப்பொருட்களாகவுள்ள நாடுகளிலேதான் விபரீதங்களும், விபசாரங்களும், விநோதமான மரணந்தரும் நோய் களும் உண்டாகிப் பரவுகின்றன, பரப்பப்படுகின்றன அன்புக்கும், அருளுக்குமுள்ளவளே பெண்; அவள் குடும்பத் தலைவி. ஆனால் இன்று உடலை விற்றும், உயரதிகாரிகளுக்கு அவர்களின் காம இச்சைக்கு இரையாகியும் தவிப்போர் எத்தனை எத்தனை? இலங்கை யிலே மலை யகத்திலே கூலிவேலை செய்யும் பெண்கள் கற்பழிக் கப்படுவதும், உடலுறவுக்குப் பலாத்காரம் செய்யப்படுவதும் இன்றைய இயல்புத் தன்மையென்று வந்துவிட்டது. காரணம் அரசியலில் மேலாதிக்க உணர்வும், இனவெறி அடக்குமுறைத் தொழிற்பாடு களுமே எனலாம்.

நிலப்பகுதியில் உலகின் அரைப்பாகமாக விளங்கும் தெற்கு, தென்கிழக்கு ஆசிய நாடுகளிலே நிலவும் கலாசார, பண்பாட்டு விழுமியங்கள் ***கணவனுக்கு அடங்கி*** வாழ்பவளே ***பெண்*** கட்டுப்பட்டு பாரம்பரிய ஒழுகலாற்றைப் பின்பற்றி மரபார்ந்த வாழ்வு வாழ்பவளே ***மனைவி*** என்று கருத்தியல் முத்திரை குத்தப்பட்டுள்ளது. இக் கருத்தினை மறுதலித்து நடப்பவள் ***அடங்காப்பிடாரி, ஆண்மீச்சுக்காரி, இல்லறத் துக்கு லாயக் கற்றவள், தன்னடக்கமற்றவள்*** எனப் பலவாறு இழித்துரைக்கப்படுகிறாள். ***தனித்தியங்கும் வல்லமை*** அற்றபோது ***தற்கொலையும்*** செய்து கொள்கின்றனர் ***பெண்கள்.*** ஆண் தனது விருப்பங்களை, சுயநலன்களைப் பெண்ணானவள் நிறைவேற்றத் தவறுமிடத்து அவளை வன்சொற்களாற் கடிந்து அடக்க முற்படு கிறான். குடிவெறியிலும், அதிகாரமமதையிலும், ஆண் என்ற நினைப் பிலும் பெண்ணை, மனைவியை ***அடித்தல், உதைத்தல், வெட்டுதல், நெருப்பாற் சுடுதல், குரல்வளையைநெரித்தல், மயிரைப் பிடித்து இழுத்தல், முலைகளில் முரட்டுத்தனமாக அடித்தல், கடித்தல், நெருடல், பெண் உறுப்பில் நோவை உண்டாக்கல், வாயினால் கடித்துக் குதறுதல், மிருகப் புணர்ச்சி செய்தல், இயற்கைக்கு மாறாகப் புணர்தல், இம்சைப்படுத்தல்*** போன்ற பல்வேறு சித்திரவதைகளுக் குள்ளாக்கப்படுகின்றனர். யதார்த்த நோக்கிலே ஆணைவிடப் பெண், கல்வியிலோ அல்லது தரத்திலோ உயர்ந்து செல்கின்ற போதும் இந்நிலையேயேற்படுகின்றது. வேலைக்குச் செல்லாத பெண்கள்

தங்கள் உழைப்பு இன்பங்கள் யாவற்றையும் கணவனுக்கும், குழந்தைகளுக்கும் அர்ப்பணிக்கும் ஒரு ***தியாகச் சுடராகக்*** காணப்படுகின்றனர். எனினும் இன்றும் அவளது உழைப்போ அவளது தியாகமோ அர்ப்பணிப்போ செல்லாக் காசாகத்தான் கருதப்படுகிறது; காணப்படுகிறது. இதுவும் 'விதி'யின் நிர்ணயமோ?; பிறப்பின் தனித்துவமோ? முழுச் சமூகமுமே இதுபற்றிச் சிந்திக்கவேண்டும். தான் திருந்துவதா? சமூகம் திருத்துவதா? உலகம் திருந்துமா? எது ஏற்புடைமையோ?!

> **பெண்கள் மீதான கலாசார அடக்குமுறை**
> **(பெண் எழுத்தாளர்களை) மௌனிகளாக்கி**
> **விடுகிறது. ஒரு ஆணுக்குள்ள சுயாதீனம்**
> **பெண்ணுக்குச் சமூகரீதியாக மறுக்கப்படுகிறது.**
>
> (கலாநிதி எம்.ஏ. நு.மான், *புதுமை இலக்கியம்*, 1996, ப. 99.)

பேராசிரியர், கலாநிதி எம். ஏ. நு.மான் அவர்களின் ஆழமான இக்கருத்து மனங்கொளத்தக்கது. விரும்பியோ விரும்பாமலோ கருத்துத் தொடர்புக்கு 'மொழி' என்ற நிலை உலகில் நிலைக்கும் வரை ***இலக்கியம், எழுத்தாளர்கள்*** எனும் முதன்மைகள் ***பெண்ணிலை வாதம்*** தொடர்பான விவாதத்தில் அதிமுதன்மையிடம் பெறுவது தவிர்க்கவியலாததே. இது ***இலக்கியத்துக்கும் சமுதாய வியலுக்கு முள்ள அத்யந்த*** உறவு; எழுத்தாளனுக்குரிய சுதந்திரம்; படைப்பாளி காணும் சமூகக் களம்; சமூகப்பிரக்ஞை.

பெண்உடலமைப்பு

நடைமுறைக் கருத்துக்களை முன்வைக்க ***மொழியே*** ஊடகம். பெண்களை யாரும் ஒதுக்காமலே அவர்கள் தாமாகவே ஒது(டு)ங்கியிருக்க வேண்டியதொரு இயற்கைத் தேவையோடு ***(வீட்டுக்குத் தூரம், சூதகம், மாதவிலக்கு)*** அவர்களது உடலமைப்பு தொடர்பு கொண்டுள்ளது. (சந்ததி, பிள்ளைப்பேறு, வம்ஸோற்பத்தி, மகப்பேறு, புதல்வரைப்பெறுதல் (புதல்வியையும் உள்ளடக்கிய சொல்) சற்புத்திரப்பேறு என்னும் **கருவள நிலைப்பாடு** பெண்களிடத்தே காணப்படுகிறது. இவை **மாற்றமுடியாத இயற்கை இயல்பு.** இதனால் ***பெண்களே பெண்களை அடக்கி ஒதுக்கிவைக்கிறார்கள் என்று கூறுவதும் தவறா காதல்லவா?*** இவை வெளியிலே பேசப்படும் கருத்தாக அமையலாமா என்பதிலும் (தீட்டு) இழிவு உண்டல்லவா? ***மகாபரதம் (பாஞ்சாலி சபதம்)*** சூதக - மாதவிலக்கு நிலையிலே இருந்த பாஞ்சாலியின் தலைமயிரைப் பற்றியிழுத்த ***துச்சாதன, துரியோதனர்களது*** மூர்க்கத்

தன்மையான வன்செயலை முன்னதாகவே விபரிக்கின்றதல்லவா? இத் தொடர்பிலே ***தமிழிலக்கியப் பாரம்பரியத்தை நீளநினைந்து நிரம்பிய கருத்துவளம் பெறுக.*** ஒவ்வொரு வரும் இது தகுமா? நியாயமா? சுவாரஸ்யமான விவாதமல்லவா? என்பதை உணர்க. ***மானுடம் சாகக் கூடாது.*** உணர்ச்சியுடன் தொழிற்படவேண்டும். சீண்டினால் உணர்ச்சி பொங்கும். மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொழுத்துவோம்.

இன்று பெண்ணிலை வாதிகள் என்று வெளிக்காட்டித் திரிவோர் பல்வேறு ***அன்னியக் கருத்துக்களையும் ; கோட்பாடு களையும் சித்தாந்தங்களையும், ஒப்பீடுகளையும் போராட்ட வரலாறு களையும், பாலியல் வீடயங்களையும், நூல்களையும், மாறுதல் களையும், நிர்வாண உடுப்பு நடப்புக்களையும்,*** தலைமயிரை ஒட்ட வெட்டுதலையும் சிறக்கப் பாடியும், எழுதியும் விவாதித்தும் பிரசாரப் படுத்தியும் வருகின்றனர். சிற்சில சந்தர்ப்பங்களிலே பெண்கள் ***முன்னிலை வகித்து*** பற்பலதுறைகளிலேயும் முன்னுரிமை பெற்றுச் ***சாதனை*** நிகழ்த்திய வரலாறுகளும் பல உண்டு. எனவே சாதனை யும், வரலாறும் பெண்களால் நிறுவப்படும்போது அவர்கள் போற்றப் படும் இனம் என்பதே முடிவாகிறதல்லவா? ***மானுடப் பெண் தனது அன்பின் வெளிப்பாட்டினாலே தாய்மையின் பூரிப்பினாலே அருள் நிலைத் தன்மை பெறுகிறாள்" என்று கருத்துச் சொன்னால் இப்படிச் சொல்பவர் தான் பெண்ணிலை வாதத்தின் முதல் எதிரி என்று குறிப்பிடும் இழி நிலையே இன்று நிலவுகிறது.*** எனவே நன்மை நல்லுணர்வு, நல்லறிவு, நன் நோக்கம், தெய்விகம் என்பன கொலுவேறும் பொழுதுதான் உலகம் ***தூய்மை*** பெறும் ; ***தெளிவுபெறும் தூய சிந்தனை களே தூய செயல் களுக்கான அடிப் படையாகும்.*** ஆகவே பெண்கள் பற்றிய, குறைகளையுடைய முற்றுப் பெறாத தீர்க்கமுடியாத நபுஞ்சகக் கருத்துக்களை விலக்கி, நிறைவான ***மேன்மைமிகு*** கருத்துக்களைப் பரப்பி விதைப்போமாக! ***பண்பட்ட நிலமே பண்புடைய பெண்*** என்பதைப் பொய்மையாக்கலாமா? அடக்கு முறை ஒழிக. சமத்துவம் ஓங்குக; குடும்பம் வாழ்க.

தமிழில் அகப்பாடல்களும் பக்திப்பாடல்களும்

அனைத்து அகவுணர்வுகளையும் ***அரிஸ்டாட்டில்*** இன்பம் துன்பம் என்ற இரு எல்லைக்குள் அடக்குகிறார். ***பிளேட்டோ*** விருப்பு வெறுப்பு என்ற இரு எல்லைக்குள்ளும், ***வைல்ஸ்*** என்பவர் நல்லது கெட்டது என்ற இரண்டினுள்ளும் அடக்குகின்றார். மேலைநாட்டவர் களைப்போல் முரண்பட்ட உணர்வுகளைக் கொள்ளாமல் சங்கத் தமிழ்ச் சான்றோர் இருவேறுபட்ட, அதாவது காதல், வீரம் என்ற இரு உணர்வு களையே அடிப்படையாகக் கொண்டமைந்தனர். அவ்வுணர்வுகளிலும் காதலுணர்வையே அவர்கள் சிறப்பாகக் கருதினர்.

இன்றைய மேனாட்டு இலக்கியத் திறனாய்வாளர், காதலுக்கு வகுக்கும் இலக்கணம், தமிழர் இலக்கியங்களிலே இரண்டாயிரமாண்டு களுக்கு முன்னாலேயே நிகழ்ந்திருந்தமை வியத்தற்குரியது.

அகம் என்ற சொல்லே நுண்மைவாய்ந்தது. அகத்திணை இயல் என்னுஞ் சொல்லுக்கு இளம்பூரணர், போகநுகர்ச்சியாகலான், ***அதனால் ஆய பயன் தானே அறிதலின் அகம் என்றார்*** என்று கூறுவர். நக்சினார்க்கினியர்

> **ஒத்த அன்பான ஒருவனும் ஒருத்தியும் கூடுகின்ற காலத்துப் பிறந்த பேரின்பம் அக்கூட்டத்தின் பின்னர் அவ்விருவரும் ஒருவர்க் கொருவர் தத்தமக்குப் புலனாக இவ்வாறு இருந்ததெனக் கூறப்படாத தாய், யாண்டும் உள்ளத்துணர்வே நுகர்ந்து இன்புறு வதோர் பொருளா தலின் அதனை அகம் என்றார்.**

எனவே அகத்தே நிகழ்கின்ற இன்பத்திற்கு அகமென்றது ஓர் ஆகு பெயராம் என்று கூறுவர். உள்ளெழுந்த வேட்கை உடல் வழிப்படர்ந்து உள்ளத்தைக் குளிர்விப்பது ஆதலின் உள்ளம் என்பதே தொடர்புற்றதாய் அகம் என்றசொல் அமைகிறது. 'உள்ளப்புணர்ச்சி மெய்யுறுபுணர்ச்சிக்கு நிகர்' என்ற இறையனார் களவியல் உரைகாரரின் குறிப்பும், இலக்கியங்கள் உள்ளத்தை அகம் என்ற சொல்லால் சுட்டுவதும், உள்ளத்தால் உள்ளலும் தீதே என மன நிலையையே செயலுக்கு நிகராகத் திருவள்ளுவர் போற்றுவதும் பிறர் நெஞ்சுபுகா மாண்பே கற்பென வரையறுக்கப்படுவதும் காதற்

செயலுக்கு அகமே காரணமாதலைச் சுட்டும். அதனால் உள்ளத்தோடு அகத்தோடு - தொடர்புற்ற காதல் பற்றிய செயல்கள் அகமாகிறது.

உள்ளம் ஈடுபாடு கொண்டு நாடுகின்ற பொருள் இன்பமாகவும் விருப்பமாகவும் நல்லதாகவும் தோன்றுகிறது. அனைத்துணர்வுகளும் செயல்களும் அக ஈடுபாட்டினை அடிப்படையாகக் கொண்டமைகின்றன. மனித சமுதாயத்தின் அமைப்பிற்கும் அகவுணர்வுக்கும் உயிர் நாடியாக விளங்கும் காதல் உணர்வில் உள்ளம் ஈடுபட்டு இருந்தால், காதலாகிய இவ்வகநாட்டத்தையே அகம் எனக் குறியீடு செய்துள்ளனர்.

தமிழ் என்பதற்கே அகம் என்ற பொருளும் இருப்பதை இலக்கணங்கள் காட்டுகின்றன. குறிஞ்சிப்பாட்டின் துறைக்குறிப்பு, ஆரிய அரசன் பிரகதத்தனுக்குத் தமிழ் அறிவுறுத்தற்குப் பாடியது என்பதாகும். **இந்நூல் என்னுதலிற்றோ எனின் தமிழ் நூதலிற்று என்பது களவிய லுரை விளக்கம். ஒண்தீந் தமிழின் குறைவாய் நுழைந்தனையோ** என்ற திருக்கோவையார்ச் செய்யுளடியும் நினைத்தற்பாலது. இவ்விடங்களில் 'தமிழ்' என்ற சொல் 'அகம்' என்ற பொருளிலேயே ஆளப்படுகிறது.

ஒவ்வொரு நூலும் அவ்வக்காலச் சூழ்நிலையை ஒட்டியே எழுந்தமை இலக்கிய வரலாறு காட்டும் உண்மையாகிறது. சான்றாக, களப்பிரரின் ஆட்சிக் காலத்தில் அறம் புதையுண்ட போது அற நூல்கள் தோன்றின. அந்நிய மதங்களான சமண, பௌத்த மதங்களின் ஆதிக்கத்தைத் தடுக்கும் முயற்சியாகச் சைவ, வைணவ மதங்கள் பக்தி இயக்கத்தைத் தோற்றுவிக்க, அதன் சார்பாகப் பக்தி நூல்கள் தோன்றின.

சங்கப்பாடல்கள் அகம், புறம் என்ற இருபெரும் பிரிவுகளை உடையன. காதல் தழுவிய பாடல்கள் அகமாகவும், மற்றவை புறமாகவும் கருதப்பட்டன.

எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது
தானமர்ந்து வரூஉ மேவற் றாகும்.

(தொல்)

இச் சூத்திரத்தினாலே அகவுணர்ச்சி இன்பம் என்பது எல்லாவுயிர்க்கும் உண்டு. என அறிய முடிகிறது.

அகக்காமம் ஆண் பெண் இருபாலாரான உயர்திணை, அ.·. றிணை உயிர்க்கெல்லாம் பொதுவானது. உடம்பொடு ஒட்டிய

இயற்கையது. இளம்பூரணர் கருத்தில், போகநுகர்ச்சி அகம் என்றும், அறஞ் செய்தல், மறஞ் செய்தல் புறமென்றும் பிரிக்கப்படுகிறது. புறத்திணைப் பொருளான வீரம் மக்களுட் சிலருக்கே உரியது. அகம் தானே அறியப்படுவது என்றும், புறம் மற்றவர்களுக்கும் புலனாவது என்றும் அமைவது இன்னொரு வேறுபாடாகக் காட்டப்படுகிறது. நச்சினார்க்கினியர் காட்டும் வேறுபாடும் சிறப்பாக அமைகிறது. அகம் காதலர் மட்டும் அனுபவிப்பது. தாமடைந்த இன்பத்தை ஆண்களுக்குள் கூட உரைக்க முடியாத தன்மையது. புறமாவது எல்லோரும் அனுபவிப்பது, பிறருக்கும் உரைக்கக் கூடிய தன்மையது.

சங்க அகப்பாடல்களிலே கலித்தொகையும், பரிபாடலும் மற்றவற்றைவிட வேறுபடுகின்றன. ***தொல்காப்பியம்,*** அகப்பாடல்கள் கலியிலும் பரியிலும் (கலித்தொகையிலும் பரிபாடலும்) அமைய வேண்டும் என்று கூறச் சங்க இலக்கியப் பாடல்கள் அகவற்பாவில் அமைந்துள்ளன. அகத்திற்குரிய ***பரிபாடலில்*** புறத்துறைப் பகுதிகள் அமைந்துள்ளன.

பரிபாடலில் பண்கள் வகுக்கப்பட்டதேன்? அகக்கருத்துகள் பண்ணுடன் பாடப்பட்டது ஏன்? பிரசார நோக்கில் அமைந்திருக்குமா? இது ஆராய்வுக்குரியது. குறிஞ்சியும் நெய்தலும் முதல், கருப்பொருளில் மட்டும் மாறுபட உரிப்பொருளில் ஏன் மாற்றம் இல்லை? நெய்தற் கலியில் மட்டும்தான் நெய்தலுக்குரிய இரங்கற் பொருள் தொனிக்கிறது.

அகத்திணையின் அன்புப் பண்பினை விரிவாகவும் விளக்கமாகவும் அறிவதற்கு ஐந்திணையே உறுதுணையாக அமைகிறது. தமிழில் அகப்பொருள் நூல்கள் ***நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறு நூறு, கலித்தொகை, பரிபாடல், முல்லைப்பாட்டு, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, நெடுநல்வாடை*** என்பனவாகும்.

அகஇலக்கியம் பெரும்பான்மை நாடக வழக்கையொட்டியும் சிறுபான்மை உலகியல் வழக்கையொட்டியும் அமைந்துள்ளது. 'சுவைபட வருவனவற்றையெல்லாம் ஓரிடத்து வந்தவையாகத் தொகுத்துக் கூறுதல்' நாடக வழக்கு எனப்படும். இப்பண்பு கிரேக்க இலக்கியத்திலும் இருப்பதாகக் கூறப்படுகிறது. அகப் பொருளே நாடக வழக்குப் பற்றி வரும் என்பது புறப்பொருள் நாடகவழக்காக வராது என்பதும் இளம்பூரணரின் கருத்தாகும். ஆற்றுப்படையில் பொருநன் பிறிதொரு பொருநனை ஆற்றுப்படுத்துவதுபோல் பாடும் நாடக வழக்கு விதி விலக்கு என்க.

அகப்பாடல்களில் முதல், கரு, உரிப்பொருள் கூறப்படுதலின் அவை நாடக வழக்கைக் காட்டிப் பாட்டின் கருத்தும் பொருளும் வாழ்க்கையினின்றும் கொள்ளப்படுதலின் உலக வழக்கையும் சேர்த்து வழங்குகிறது.

தன்னிகரில்லாத தலைவன் தலைவியரைப் படைக்கும் **காப்பிய மரபு** இங்கு முகிழ்க்கிறது.

சங்க இலக்கிய அகப்பாடல்கள் பெரும்பாலும் தலைவியின் காதல் வாழ்வைப் படம்பிடித்துக் காட்டுவதற்காகவே பாடப்பட்டதாகத் தெரிகிறது. அதனால்தான் தலைவன் தலைவி பிறப்பிலிருந்து நிகழ்ச்சி ஆரம்பமாகாமல் தலைவியின் காதல் வாழ்விலிருந்து தொடங்குகிறது. காதல் வாழ்வில் இடையூறாக இருக்கும் செவிலியே மாறுபட்ட பாத்திர மாக மாறுகிறாள். பகல் இரவுக் குறிகள், தலைவனின் பிரிவு, (தலைவிக்குத் தாய் காவலாயிருத்தல்) தாய்க் காப்பு, நொதுமலர் வரைவு ஆகியவை திருப்பு முனைகளாயமைந்து இலக்கியகளவு நாடகத்தை விறுவிறுப்புடையதாக்குகின்றன. தலைவன் தலைவி களவு வாழ்விற்காகவே தோழி, செவிலி, நற்றாய், பாங்கன் ஆகியோர் பாத்திரங்களாகப் படைக்கப்படுகின்றனர்.

தோழியும் செவிலியும் தலைவன் தலைவியரின் காதலுக்கு முறையே துணையாகவும் தடையாகவும் இருக்கும் குறிப்புகளே இலக்கியங்களினூடே நமக்குக் கிடைக்கின்றன.

அகத்துறைச் சங்கப் பாடல்கள் ஒற்றைக்காட்சி நாடகமாக (One Scene Play) அல்லது ஒரு கூற்று நாடகமாக (Dramatic Monologue) அமைந்திருக்கின்றன. ஆனால் ***கலித்தொகையில்*** பல பாடல் கள் ஓரங்க நாடகமாக விளங்குகின்றன. ***முல்லைக்கலியில்*** ஏறு தழுவுதல் பாடல்கள் நாடகப் போக்கிலமைந்துள்ளன.

ஆண், பெண் மாந்தர் காதலிப்பது இன்றும் நடைபெறும் நிகழ்ச்சியே. சங்கப்புலவர்கள் காதலுணர்வென்னும் அடித்தளத்தில் கற்பனை மாந்தர் நிகழ்ச்சிகளை வைத்து நாடகப் போக்கில் பாடல்களை யாத்துள்ளனர். இதனால் காதலர்வாழ்வினை அறிவதில் உள்ள மன நிறைவும் இன்பமும் சுவைஞர்க்குக் கிடைக்கிறது.

அகத்திணைப்பாடல்கள் சுட்டிப்பொருள் பெயர் கொள்ளாமல் தலைவன் தலைவி தோழி எனப் பொதுப்படையாகவே அமைகின்றன.

மக்கள் நுதலிய அகனைந் திணையும்
சுட்டி யொருவர்ப் பெயர்கொளப் பெறாஅர்.

(தொல்)

ஐந்திணைக் காதல் ஒழுக்கங்கள் எல்லா மக்களுக்கும் பொதுவாதலின் அவற்றைத் தழுவி "ஒருவர் பெயர் சுட்டிப் புலவர் பாடார்" என்று ***தொல்காப்பியர்*** குறிப்பிட்டுள்ளார். இதே கருத்தை அரிஸ்டாட்டிலும் கூறுகிறார்.

வாய்மொழி இலக்கியப் பண்பைச் சங்க இலக்கியப் பாடல்கள் பெற்றுள்ளன. தனிப்பட்டோர் வாழ்வில் காணப்பெறும் காதலுறவில் இனியனவாக எல்லாமே காட்டக்கூடிய நற்கூறுகள் நிரம்பியிருக்கும் என்று சுட்ட இயலாது. வாழ்க்கை என்பது இன்பமும் துன்பமும் கலந்த ஒரு கலவையாதலின் இலக்கியப் புலவன் சமுதாயத்தில் பல்வேறு நிலைகளில் வாழும் காதல் மாந்தரிடம் காணப்பெறும் நற்காதற் கூறுகளைத் தேர்ந் தெடுத்து அவற்றைக்கொண்டு பண்பும் பயனும் கொண்ட இலக்கியத்தைப் படைக்கிறான் என்பதையே சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன.

அகம் என்பது உரிப்பொருளே. ஒரு சிலர் வாழ்க்கையில் மெய்யாக நிகழ்ந்த காதற்பான்மைகளைப் புலவன் கண்டிருப்பான்; கேட்டிருப்பான். அகக் காட்சியும் கேள்வியும் சில பாடல்களை இயற்றத் தூண்டியிருக்கும்.

அகத்திணை இலக்கியம் பாலியற் கல்வி ஊட்டும் இலக்கிய மாகவும் அமைகிறது. சங்க இலக்கியப் புலவர்கள் மாசற்ற பாற் கல்விக்கு இசையாதவற்றை வழங்கியிருந்தாலும் அதனை வர வொட்டாது ஒதுக்கினர். பலநூறு ஆண் பெண் மனநிலைகளைப் புனைந்து காட்டுகிறது. அதனைப் படிக்கும் மக்கள் தம் காதல் உள்ளத்தை அதில் காணுமாறு செய்கிறது. பெயர் சுட்டினால் இத் தன்மை இயலாது.

தமிழிற் சங்க அகஇலக்கியம் பெண்ணின் கற்பை வலியுறுத்தும் இலக்கியமாக இருக்கிறது. தலைவியின் தலைமைப் பண்பாகக் கற்புடைமையே சுட்டப்படுகிறது. தலைவியின் காதல் கற்பாகாமல் தோல்வியுற்றதாகவோ உயிர்துறந்ததாகவோ இலக்கியம் கூறுவ தில்லை. கற்பு முருகனையும் எள்ளுகிறது. (நற் 34:9-11) 'பெண் கற்பு கடவுட் கற்பாம்' என்பதே அகஇலக்கியம் துணிந்த துணிபு. அக இலக்கியம் கற்புடைய பெண்ணின் கற்பைச் சோதிப்பதாகவோ ஐயுறுவதாகவோ காட்டவில்லை. இற்பரத்தை, காமக் கிழத்திக்கும் கற்பைக் காட்டுகிறது. கற்புக்கு முக்கியத்துவம் கொடுக்கும் நோக்கத் துடன் நிறை வாழ்வுப் பயனையும் அக இலக்கியங்கள் அறிவிக்கின்றன.

புறஇலக்கியம் ஆண்மையின் சிறப்பைப் பாட அக இலக்கியம் பெண்மையின் பெருமை பேசுகிறது. தோழியும் செவிலியும், அன்னை

யும், பரத்தையும் அக இலக்கியத்தில் கொள்ளும் வாய்ப்பு மிகப் பெரியது. தலைவியே அகப்பாட்டிற்குத் தலைமையள் ஆதலின் பெண்பாலர் பலர் இடம் பெறுகின்றனர்.

சங்க இலக்கியம் தலைவனின் காதலைவிட தலைவியின் காதலையே பெரிதும் நுட்பமாகக் கொண்டு விளங்குகிறது. அதனால் மற்ற மகளிரின் கூற்றும் தலைவியின் காதலையே சுற்றி வருகிறது. பெண்மைக்கு அளிக்கும் ஏற்றமும் நோக்கமும் குடும்ப உயர்வுப் பயனும் இவற்றினாலே தெரியவருகிறது.

இலக்கியமும் உளவியலும் மிகநெருங்கிய தொடர்பு கொண் டவை. சங்க இலக்கியம் வாழ்வியலை அடிப்படையாகக் கொண்டு எழுந்த நாடகப் பாங்கு பெற்றிருப்பதால் உளவியலுடன் முற்றும் தொடர்புகொண்டுள்ளது. அகஇலக்கியத்தில் வரும் துறைகள், மெய்ப்பாடுகள் கூற்றுக்கள் முதலியன மனித இயல்பை ஒட்டியவை ; உளவியலுடன் ஒப்பிடத்தக்கவை. அவை பெண்டிரின் மன இயல் பினைத் தெளிவாக எடுத்துக்காட்டும் சிறப்புடையன. சங்கப்பாடல்கள் அமைப்பாலும் நடையாலும், உரையாடலின் தன்மையாலும், கருத் தமைதியிலும், நிகழ்ச்சிப் பின்னலாலும் உளவியல் அடிப்படையில் ஒத்து நிற்பவை.

சகல அகஇலக்கியங்களிலும் இடம்பெறும் அகமாந்தர்கள் தோழி, தலைவி, தலைவன், தாய், செவிலி, பரத்தை என்போராவர்.

அகத்திணைக் கவிஞர் திணை, துறைகளிலும் உணர்வுகளை வெளியிடும் பாங்கிற்குச் சிறப்பிடம் தருகின்றனர். உணர்வுகளின் தன்மைகளையும் அவ்வுணர்வுகள் தோன்றும் பின் புலங்களின் தன்மையும் மனத்துட் கொண்டு கவிஞர்கள் குறிப்பிட்ட சூழலில் குறிப்பிட்ட அக மாந்தர்களை மட்டும் அறிமுகப்படுத்தும் காணப் படுகிறது.

அகவிலக்கியங்களிலே தலைவனிடம் வரைவுகடாவும் தோழி கூற்றில் களவை அன்னை அறிந்த செய்தியும் அலர் பரவிய சூழலும் பெரிதும் எடுத்துரைக்கப்படுகின்றன. எனினும் தலைவியின் தாயோ, தமரோ, நேர்நின்று களவைக் கண்டதாகவோ அல்லது கடிந்ததாகவோ கூறுமாறு பாடல்கள் அமைக்கப்படுவதில்லை.

சங்க இலக்கியம் உளவியல் இலக்கியமாதலின் பிற்காலத்து இலக்கியங்களிற் காணப்படும் பெண்ணின் உடல் வருணனையைக்

காணமுடியாது. புற உறுப்புகளின் வருணனை இடம்பெறினும் மாந்தரின் உணர்வுகளை விளக்குவதற்காகவே அவை பயன்படுத்தப்பட்டுள்ளன.

சங்ககாலப் புலவர்கள் பொருளின் தேவையை உணர்ந்திருந்த தால் பல ஆற்றுப்படை இலக்கியங்கள் தோன்றின. எனினும் பொருளின் பால் கொள்ளும் பற்றை வெறுத்தனர். அகப்பாடல்களில் கவிதையிலும், கலையிலும் தோய்ந்த புலவருள்ளம் பொருளைப் புன்மையாக மதித்தல் புலப்படுத்தப்படுகிறது. அதைப் பிணியாக உருவகித்துப் 'காமர் பொருட் பிணி' (குறுந்: 255:7) 'மன்னாப் பொருட்பிணி' எனப் பொருளின் புன்மை புலப்படுத்தப்படுகிறது.

மனித வாழ்க்கையின் பல்வேறு கூறுகளையும் வருணித்துத் தெளிவுபடுத்துதற்காகவே பண்டைத் தமிழ்ச் சான்றோர் இயற்கையைப் பயன்படுத்தியுள்ளனர் என்கிறார் பேராசிரியர் டாக்டர். மு. வரதராசன். **ஸ்டாப்:போர்ட்டு** என்னும் மேலை நாட்டறிஞரும் இக்கருத்துடையவரே. இயற்கையின் ஆதிக்கத்தையொட்டிப் பேராசிரியர், கலாநிதி ஆ.வேலுப்பிள்ளை சங்ககாலத்தை ***இயற்கைநெறிக்காலம்*** என்று கூறுவர். பேராசிரியர், கலாநிதி க.கைலாசபதி 'வீரயுகம்' என்பர்.

காதலனுபவவுணர்ச்சி பருவநிலைக்கு ஏற்றவாறு மாற்றப் படுவது சங்கப் புலவருடைய கற்பனையில் காணஇயலாது. ஆனால் வடமொழி இலக்கியங்களில் (சாகுந்தலம், மேகதூதம்) மரங்களும் செடிகளும் மாந்தருடன் பேசுந்தகையன. ஆனால் அத்தகைய **கற்பனை யைச்** சங்கப்புலவர்கள் காட்டினார்களல்லர். மானிட உணர்வுகளோடு இயற்கையின் எழிலை இணையுறச் செய்தது பண்டைத் தமிழிலக்கிய மரபு. காதலுணர்வுகளின் பல நிலைகளைக் குறிப்பிட்ட நிலப்பகுதி களுக்கும். பருவங்களுக்கும் நேரங்களுக்கும் வகுத்தனர். இம்மரபு பண்டைத் தமிழிலக்கியத்தில் காணப்படுகிறது. இவ்வடிப்படையில்தான் முதல், கரு, உரிப்பொருள்களை வகுத்தனர். அவர்கள் திணை களையும் இயற்கையின் அடிப்படையிலேயே வகுத்தனர். போருக்குச் செல்லும் போதுகூட மலர்களைச் சூடிச் செல்லும் மரபு இயற்கையின் பால் அவர்கள் கொண்டிருந்த பொது ஈடுபாட்டினையே உணர்த்தும்.

நச்சினார்க்கினியார், முதற்பொருளைவிடக் கருப்பொருள் சிறந்தது ; கருப்பொருளை விட உரிப்பொருள் சிறந்தது, ஆகவே உரிப்பொருளே மிகச்சிறந்தது என்பர். இளம்பூரணர் முதற்பொருளை வைத்துத் திணையைத் தீர்மானிக்கவேண்டும் என்பார்.

சங்க அகப்பாடல்கள் நிலத்தையொட்டி அமைந்திருப்பதால் நிலப்பாடல் மரபையொட்டியதாக **டாக்டர் தமிழண்ணல்** கூறுவர்.

இயற்கை தன் ஆற்றலால் மனித வாழ்க்கையைக் கவரவும் மாற்றவும் வல்லது என்ற உண்மை புறப்பாடல்களைவிட அகப்பொருட் பாடல் களில் தான் மிகத் தெளிவாகப் புலப்படுகிறது. அகப்பொருட் பாடல் களைப் போலப் புறப்பொருட் பாடல்களில் இயற்கை விளக்கம் பெருவர விற்றாக இல்லை என்பர் டாக்டர் மு.வ. இக்கருத்தைப் பேராசிரியர் தனிநாயக அடிகளாரும் உடன்பாட்டுடன் ஏற்பர். இதற்குத் தகுந்த காரணத்தைச் சுட்டிக்காட்டுகிறார் **டாக்டர்.வ. சுப. மாணிக்கம்.** இயற்கை யைப்பற்றி இடையிடையே குறிப்பிடும் அகஇலக்கியம் இன்பத்தையும் நல்குகிறது. அகத்திணை இலக்கியங்கள் குறிப்புப் பொருள் உணர்த்துவன. உள்ளுறை பயன்படுத்தப்படுகிறது. தலைவியின் ஆற்றாமையை வெளிப்படையாகக் கூறுவதும் தலைவனை வரும்படி கூறுவதும் பெண்மைக்கு இழுக்காதலால் குறிப்புப் பொருள் ஆகின்றது. வரைவு மேற்கொள் என்று நேராகக் கூறமுடியா நிலையில் குறிப்புப் பொருள் மூலம் வரைவு தூண்டப்படுகிறது.

களவொழுக்கத்தால் அலர் உண்டாதலையும் அலர் கெடுத்துத் தலைவன் வரைவான் என்ற நம்பிக்கையைப் புலப்படுத்த வும் அன்னை அறிந்து கோபித்து அலர் காரணமாதலைச் சுட்டவும் குறிப்புப் பொருள் ஆளப்படுகிறது. இற்செறிப்பு நிலையில் தலைவனுக்கு நேராக உணர்ந்த அந்நிலையில் தலைவியின் குறிப்புப் பொருள் பயன்படுத்தப்படுகிறது. நோய்க்குக் காரணம் அறியாமல் தவிக்கும் தாய்க்கு உண்மை தெரிவிக்க நனி நாகரிகத்துடன் குறிப்பாக உணர்த்தப்படுகிறது.

சங்க அகஇலக்கியம் தனக்கெனச் சில உயர்ந்த மரபுகளை யும் விதிமுறைகளையுங் கொண்டதால் குறிக்கோள் இலக்கியமாக அமைகிறது. கற்பனை இலக்கியம்போல் தோன்றினும் இது ஒரு நெறிக்குள் அடங்கியே செல்கிறது.

"புறத்திணை இலக்கியம் சாவு பற்றியே கூறுகிறது. சங்க அகவிலக்கியங்கள் சாவுச் செய்தியைக் கூறுவதில்லை. எனவே ***சங்க அகவிலக்கியம் வாழ்வீலக்கியமாகிறது.*** **இக்காலத்துப் புதினங்கள் நடப்பியல்** (Realism) காட்டுவதுபோல் சங்க இலக்கியங்கள் காட்டுவ தில்லை. இன்னவாறு வாழ வேண்டும் என்ற **குறிக்கோளியல்** (Ideal-ism) காட்டுவது."என்கிறார் பேராசிரியர், கலாநிதி பொ.பூலோகசிங்கம் அவர்கள்.

ஓர் இளைஞன் தான் காதலித்த நங்கையை
அவள் பெற்றோர் இசையாமை காரண

மாகவோ, அல்லது அழகும் செல்வமும் மிக்க மற்றொரு நங்கையைக் கண்டதாலோ முன்னவளைக் கைவிட்டுப் பின்னவளைப் பற்றிக் கொண்டான் என்ற மரபு இல்லை.

என்றும்,

சங்க அகத்திணை மரபில் களவுக் காலத்துத் தலைவி கருவுற்றதாகவும், வயாவும் வருத்தமும் அடைந்ததாகவும், கருக்கலைக்க முயன்றதாகவும், முயன்றும் முடியாமல் கன்னித்தாயாக மாறியதாகவும் குறிப்புக்கூடக் கிடைக்காது. என்று பேராசிரியர் பொ. பூலோகசிங்கம் மேலும் விபரிக்கிறார்.

கற்பு வாழ்வில் தலைவன் வேற்று நாட்டிற்குச் சென்று பொருளீட்டும் பொழுது அங்குப் பரத்தையர்களின் வலையில் சிக்கிப் பொருளையெல்லாம் இழந்து வீடு திரும்பினான் என்று பாடும் மரபு கிடையாது.

என்று மேலும் விளக்குகிறார் கலாநிதி. பொ.பூலோகசிங்கம்.

கணவனது பரத்தமைக்காக மனைவி அவனை வெறுத்தொதுக்கினாள் என்று பாடும் மரபு இல்லை. ஒருவர் பொறை இருவர் நட்பு என்பதே கற்பியலின் உயிர்நாடியாகக் கொள்ளப்பட்டிருக்கிறது. பரத்தையர்கள் பால் உறவு கொண்டாலும் தலைவன் பரத்தையை மணம் புரிந்ததாகக் கூறுவதும் கிடையாது. எனவே அகஇலக்கியங்கள் குறிக்கோளுடன் இயங்கி நன் முடிவையே பயனாக அறிவிக்கிறது.
என்று கூறுவர் பேராசிரியர் பொ.பூலோகசிங்கம்

காலந்தோறும் மனிதன் புறத்தோற்றத்தில் மாறுபடினும் அக வுணர்வுகளால் மாறுபடுவதில்லை. அதிலும் காதலுணர்வு என்றைக்கும் இருக்கும் உணர்வு. அதனை விளைக்கும் சூழல்கள் மாறலாம். அதை உணர்த்தும் நிலைகள் மாறலாம். காதல் உள்ளமட்டும் சங்கப் பாடல்களும் வாழும். இதனை ரி.எஸ்.எலியெற்,

> "good love poem, though it may be addressed to one pason is always meant to be overhead by other people surely to proper language of love that is of communication to the beloved and to one else is prose."
>
> (Eliot, T. S.,The three voices of poetry, p. 6.)

என்று கூறுகின்றார்.

சங்கப் புலவர்கள் தம் உணர்வுகளையும் சிந்தனைகளையும் அடிப்படையாகக்கொண்டு படைத்தது போன்று காணப்படுவதும் தன் உணர்வுகளுக்கும் சிந்தனைகளுக்கும் ஏற்பச் சுவைக்கின்றனர். சங்க இலக்கியங்கள் பெயர் சுட்டா ஒருவனின் காதல் உணர்வுகள் ஆதலின் சுவைக்கின்ற ஒவ்வொருவரும் தன் உணர்வுகளையே காண்பதற்கு வாய்ப்பாகிறது.

சங்க இலக்கியங்களிலே தலைவனின் அன்பினை நாடி நிற்கும் தலைவி சமய இலக்கியங்களில் இறைவனின் அருளை நாடும் தலைவியாகக் காட்டப்படுகிறாள். சங்க இலக்கியப் பெயர் சுட்டா நிலை மாற்றம் பெறுகிறது. சமய அக இலக்கியங்களுக்கு இறைவனின் புகழ்பாடும் நோக்கம் இருத்தலின் இறைவனின் பெயர் சுட்டப்படுகிறது. சங்க அகத்துறைகளேயன்றித் தலைவன் தலைவி செயலைத் தாய்க்கு உரைத்தல், நற்றாய் செவிலிக்குக் கூறல் எனப் புதிய துறைகள் சமய இலக்கியத்தில் கால்கொள்ளச் சங்க அகத்துறைகள் காரண மாகின்றன.

கற்பனை இலக்கியங்களைவிட மானுடம் பாடும் இலக்கியங் களைச் சிறப்பாகப் போற்றும் இன்றைய ஆய்வாளர்களுக்குச் சங்க இலக்கியம் எடுத்துக்காட்டு இலக்கியங்களாகப் பயன்படுகின்றன. சங்க அகஇலக்கியம் மக்கள் வாழ்வோடு பின்னிப் பிணைந்து மானுடம் பாடுகிறது. இன்று மனிதத்துவப்படுத்திப் (Humanisation of literature) பாடும் இலக்கியங்களுக்கெல்லாம் வழிகாட்டியாக அமைகிறது.

சங்க அகஇலக்கியம் பின்னால் வந்த இலக்கியப் படைப்பாளர் களுக்கு வழிகாட்டியாக அமைகிறது. இளங்கோ முதல் கண்ணதாசன் வரை அனைவருக்கும் சங்கப்புலவர்களே முன்னோடிகளாக நிற் கின்றனர். ஈராயிரமாண்டு முன்பிருந்த காதல் துறைகள் இன்னும் கவிஞர் பாடல்களில் காணப்படுகின்றன. யார் பாடியதாயினும் எவ்வகைப்பாட்டாயினும் அகத்துறைக் கூறுகள் கலவாமல் இருக்காது. தமிழ்ச்சமுதாயம் அகத்திணைக் கல்வி ஊறப்பெற்றது. அவ்வூற்றம் நிலத்தின்கீழ் நீரோட்டம்போல நீங்காமல் சுரந்து ஓடிவருகிறது. நாளை பாடும் பாட்டிலும் உரைநடையிலும் கூடக் காதல் நெஞ்சங்களைக் காணமுடியும். தமிழில் அகப்பாடல்களும் பக்திப்பாடல்களும் மிகமிக நுட்பமானவையன்றோ.

அறநெறிப் போதனையில் தமிழிலக்கியங்கள்

மனித இனத்தை வையத்துள் வாழ்வாங்கு வாழ வைக்கும் இலக்கியங்களாகத் தமிழில் அறநெறி இலக்கியங்கள் விளங்கு கின்றன. உலக மொழிகளிலே தோன்றியுள்ள இலக்கியங்களெல்லா வற்றுள்ளும் தமிழ்மொழியிலேயே அறச்சார்பான இலக்கியங்கள் எண்ணிக்கையாலும் அதிகமெனலாம். தமிழர் தம் வாழ்விலே அறம் இருவகையாகப் போதிக்கப்பட்டது.

I. செய்யுள் வடிவில் II. கதைமரபில்

வாழ்வின் செம்மைக்கு உறுதுணைபுரியும் அறம் என்னும் கோட்பாடு தமிழிலக்கிய வரலாற்றிலே அதிமுதன்மையிடத்தினைக் கொண்டுள்ளது. உலகப் பொதுநெறியை உணர்த்தும் வகையில் உள்ளமையும் நிதானித்து மனங்கொள்ளத்தக்கது மிகவும் ஆழமாக வும், அழகாகவும், எக்காலத்துக்கும், எவ்விடத்துக்கும், எம்மதத்திற்கும் பொருந்தக்கூடிய நிலையில் அமைந்துள்ளவை. தமிழ் அறவிலக் கியங்கள் சமயம், வாழ்வு, கல்வி, நீதி, பொருள், இன்பம், வீடு என்பன பற்றியும் மனிதனின் அன்றாட வினை செயல், குறித்தும் எடுத்துப் போதித்து நன்னெறியும், நல்லொழுக்க நடத்தையும் போதிப் பனவே அற இலக்கியங்களின் தலையான பணிகளாயுள்ளன. அறத் துடன் இணைத்து நோக்கத் தகுந்த முறையிலே வாழ்வு, காதல், போர், உழைப்பு, பொருளீட்டல், நட்பு, விருந்து, அன்பு, அரசாட்சி என்பனவற்றைக் கொள்வது அவசியமாகும். ***அறக்கடவுள்*** என்னுஞ் சொல் நமது அடிமனதிலே என்றும் நிலைத்து நம் வாழ்வைத் தூய்மை செய்வதுடன் நல்வினையாற்றவும் உதவவேண்டும்.

அறமும் அன்புமே முதலும் ஈறுமாகக் கொண்டு ஈட்டப் படுதலும் நுகரப்பெறுதலும் செய்யப் பெறுதலும் வேண்டும் என்பது ஒல்காப் பெரும் புகழ்த் **தொல்காப்பியரின்** கருத்தாகும்.

இன்பமும் பொருளும் அறனும் என்றாங்(கு)
அன்பொடு புணர்ந்த ஐந்திணை.

(தொல்: பொருள்: நூற்: 27)

என்பார்.

வாழ்க்கை வாழ விதியாகக் கல்வி அமையுமாயின் கல்விப் போதனையின் விதியாக அறம், நீதி, தர்மம் அமையும் என்பது ஒருதலை. இந்நிலவுலக வாழ்விலே மக்கள் எல்லோரும் அடைதற் கரிய உறுதிப் பெருள்களை அறம், பொருள், இன்பம், வீடு என உலகினரும் சமயத்தவரும் பாகுபடுத்திக் கூறுவதை நாமறிவோம். எல்லா உயிர்களாலும் விரும்பி நுகரப்படுவது இன்பம். அந்த இன்பத்துக்குக் காரணமாக அறிவுடைய மக்களால் ஈட்டப்படுவது பொருள்; பிறர்க்குத் தீங்கு நினையாத மாசற்ற மனத்தால் பொருள் செய்தொழுகும் முறை **அறம்** என்று, **இன்பமும் பொருளும் அறனும்** என்ற நூற்பாவால் வகுத்துக்காட்டினார் **தொல்காப்பியர்.** செய்கைமுறை பற்றி அறம், பொருள், இன்பம் எனவும் எண்ணுதல் மரபு. இம்முறையில் எண்ணுவதை,

அந்நிலை மருங்கின் அறம்முதலாகி
மும்முதற் பொருட்கும் உரிய என்ப.

(தொல்: இளம்: செய் 6)

என்று கூறுவர் தொல்காப்பியர்.

செயலின் தூய்மைக்கு அறம் கட்டளையிடுகிறது. அறவழியில் பொருளாக்கி அப்பொருளால் இன்பம் நுகர்தலே மக்களது விழுமிய நல்வாழ்க்கை முறையாகும். தொல்காப்பிய நெறியையே வள்ளுவப் பெருந்தகையும் அறம், பொருள், இன்பம் என முப்பாலாக வகுத்தருளினார் என்பது உணரத்தக்கது.

அறதிற்கே அன்பு சார்பென்ப அறியார்
மறத்திற்கு மஃதே துணை.

(குறள்,76)

எனவரும் குறளும் அதன் விழுமியபொருளும் நுனித்துச் சிந்தித்தற் குரியது. **அன்பு** சிவமெனவும்படும் என்பது திருமூலரது கொள்கையா யுள்ளது. அறிவிலரே - அறிவற்றோரே - அன்பையுஞ் சிவத்தையும் இரண்டென எண்ணிப் பேதலிப்பர்; மலைவர். எனவே உண்மை அன்பு இன்றி யாதாவது ஒரு பயன் கருதி ஆற்றும் அறம் நன்மை பயவாமை நன்கு அறியப்படும். இங்ஙனம் பயன்கருதி அறம் செய்வார் தமது கைப்பொருளாலன்றிப் பிறரது பொருளாற் செய்தற்குந் துணிவர்.

எல்லாவுயிர்களிடத்தும், எல்லா மக்களிடத்தும் நெகிழ்ந்த அன்பு கொண்டு எவ்வுயிர்க்கும், எவர்க்கும் தீங்கு நேராத முறையில் பெயர் புகழை வேண்டாது அறம் செய்வதே செய்வோர்க்கும் பிறர்க்கும்

உண்மையில் பயன்படுவதாகும். அன்றியும் **தொல்காப்பியனார் அறம்** என்பதை ஒன்றாகக் கூறினரேயன்றி அதனை இல்லறம் துறவறம் என்று இரண்டாகப் பகுத்தோதினாரில்லை.

அறம், பொருள், இன்பம், வீடு அடைதல் நூற்பயனே.

(நன்: சூத்.10)

என்பது ***நன்னூல்*** விதி. வடமொழிவாணர்கள் இக்கருத்தையே தர்மம், அர்த்தம், காமம், மோட்சம் என்று கூறுவர். **இன்பம்** அறம் என்றும், **பொருள்** புறம் என்றுங் கூறிவிடலாம்.

திருவள்ளுவர் அறத்துப்பாலில் தனிவாழ்க்கையை வரை யறுத்து அறத்தைப் போற்றி மனம் தூய்மை பெற்று வாழும் வகையைத் தெளிவாகப் பேசுகிறார். அறம் என்ற சொல் விரிந்த பொருளை யுடையது. மனிதன் புரியும் நற்செயல்களனைத்தையும் இதில் அடக்கிக் கூறலாம். ***அறம்*** என்ற சொல் நீதியைக் குறித்து நிற்பதுடன் அதற்கு மேலும் பல பொருள்களைத் தரும். அறம் என்ற சொல் இடத்திற் கேற்பப் பல பொருள்களில் வழங்கப்படுகின்றது. கருத்துப் பொருள் இப்படிப் பலவகைகளில் இருந்தாலும் அவையெல்லாவற்றுக்கும் அடிப்படையாகவுள்ள அதன் சொற்பொருள் ***அற்றது*** என்பதாகும். அதாவது பற்றற்றநிலை; தன்னலப்பற்றற்ற தூய்மை; நுட்பம்; ஆற்றல் கொண்ட அந்நிலையை ***உண்மை*** என வழங்கலாம். ***நன்மை*** என்றும், ***நேர்மை*** என்றும், ***குணம்*** என்றும் ***நல்ஞாழ்*** என்றும் ***கடமை*** என்றும் பிறவானும் கருதலாம். ஆகவே தொல்லாசிரியர்கள் ***அறம்*** என்பதைப் பல்வேறு கருத்துக்களிலும் ஆள்வர்.

பொதுவாக நல்ல - ஆசறு நல்ல நல்ல - கருத்துக்களையெல் லாம் ***சிவம்*** என்ற சொல்லால் நம் பண்டையோர் உணர்த்துவது போல ***அறம்*** என்ற சொல்லும் பல நல்ல கருத்துக்களையெல்லாம் தன்னுள் அடக்கியுள்ளது எனலாம். எல்லாம் வல்ல முழுமுதற் கடவுளைச் ***சிவம்*** என்று வழங்கி வணங்கினால் அதன் இயக்கத்தை, செயலை செயலாற்றலை, அருளை ***அறம்*** எனலாம். இக்காரணத் தால் ***அறம்*** திருவருட்சக்தியாகிய அம்மையைக் குறிக்கும்; அதாவது சிவத்தின் ஆற்றலை நெறிமுறையை, எதிரற்ற இயக்கவல்லமையைக் குறிக்கும். அம்மை, அப்பன் வேறு என்பது பொருந்தாததைப் போலவே, அன்பும் சிவமும் வேறு அல்ல என்பது போதரும், ***திருக்குறளின்*** அறத்துப்பாலில் கூறியுள்ள அனைத்துக் கருத்துக்களும் அறத்தில் அடங்கும்; ஏனைய இரண்டு பால்களிலும் கூறப்பெற்றுள்ள சில

கருத்துக்கள் ஒரோவழி அறத்தில் அடக்கிக் காட்டலாம். 32 அறங் களையும் அம்பாள் செய்வதாகவும் ஆன்மிக வழக்கிலே சொல்லப் படுவதுண்டு.

மறந்தும் பிறன்கேடு சூழற்க; சூழின்
அறம்சூழும் சூழ்ந்தவன் கேடு .

(குறள்.204)

கருதிய முடிவை அடைய முடிந்தாலும் முடியாவிட்டாலும் அதற்கு உரியவழி தூய்மையாகவே இருக்கவேண்டும் என்பதே வள்ளுவரின் அசைக்கமுடியாத கோட்பாடு அறநெறியைப் போற்றி வாழ்வதால் இந்த உலக வாழ்வுக்கு இடையூறாகும் என்றாலும் அந்த இடையூற்றினை ஏற்றுக்கொள்வதே நல்லது என்று திருவள்ளுவர் கருதுவார்.

திருமுருகாற்றுப்படையில்,

அறுநான் கிரட்டி இளமை நல்லியாண் (டு)
ஆறினிற் கழிப்பிய அறனில் கொள்கை.

(திருமுருகு: வரி:188-189)

என்ற அடிகளில் குறிப்பிடப்பெறும் ***அறனில் கொள்கை*** என்பதற்கு ***நாற்பத்தெட்டுயாண்டு பிரமச்சரியங்காத்து அந்தணர் அறத்தை எப்பொழுதும் கூறுகின்ற கோட்பாட்டினையுடையவர்கள்*** என்று பொருள் கூறுவர் நச்சினார்க்கினியர்.

பெரும்பாணாற்றுப்படையிலுள்ள அறம்புரி செங்கோல் என்பதற்கு 'அறத்தைவிரும்பின் செங்கோலினையுடைய' என்று பொருள் கூறுவர். ஓர் அரசன் போரில் பெறும் வெற்றி, படைப்பலத்தால் மட்டிலும் அன்று; அ.்.து அறனெறி வழுவாத ஆட்சியாலேயுமாகும் என்று ***புறநானூறு*** கூறும். ***புறநானூற்றிலிடம்பெறும்*** பாடல் வருமாறும்,

கடுஞ்சினத்த கொல் களிறும் கதழ்பரிய கலிமாவும்
நெடுங்கொடிய நிமிர்தேரும் நெஞ்சுடைய புகன் மறவரும் என
நான்குடன் மாண்ட தாயினும் மாண்ட
அறநெறி முதற்றே அரசின் கொற்றம்.

(புறம். 55.)

இது பாண்டியன் இலவஞ்சிகைப் பள்ளித் துஞ்சிய நன் மாறனுக்கு மதுரை மருதன் இளநாகனார் கூறியதாகும். இதில் படை பலத்தைவிட **அறநெறி** அதிகமாக வற்புறுத்தப் பெறுவதைக் காணலாம்.

அரசனுக்கு வெற்றி தருவது அவன் கையிலுள்ள **வேல்** என்று பலர் எண்ணுகின்றனர். அது தவறென்றும், அவன் ஏந்திய செங்கோல் தான் உண்மையாக வெற்றி தருவது என்றும் திருவள்ளுவர் கூறுவர்:

வேலன்று வெற்றி தருவது மன்னவன்
கோல் அதூஉம் கோடாது எனின்.

(குறள்.546)

தமிழிலுள்ள அகத்திணை இலக்கியங்கள் ***அறத்தொடு நிற்றல்*** என ஒன்றைக் குறிப்பிட்டுச் சொல்கின்றன. ஒழுக்கநெறியில் ஒருகூறு ***அறத்தொடு நிற்றல்*** என்பது. இதை விளக்கினாலே அக இலக்கியங்கள் அறத்தைக் கட்டிக் காப்பதை அறிந்துகொள்ளலாம்.

அறத்தொடுநிற்றல்:

தமிழிலக்கியங்கள் சுட்டும் ***அறத்தொடு நிற்றல்*** என்றால் என்ன?

தலைவனும் தலைமகளும் காதல் வாழ்வில்
களவு முறையில் நடைபெற்ற காதல் வாழ்வில்
இதுகூறும் அறம் வழுவாமல், அதாவது
அறத்தொடு பொருந்தவே நடந்திருப்பதாகக்
காட்டி நிற்பதே இது. ஈண்டு அறம் என்பதை
முறை, தக்கது என்று கொள்ளல் வேண்டும்.

என்கிறார் ***இறையனார் களவியலுரையாசிரியர்.***

மாறுகோள் இல்லா மொழி என்று இறையனார் கூறுவார். அறத் தோடு நிற்கும் முறையும் ஒருவித ஒழுங்கிலேயே நடைபெறு வதாக அகத்துறை இலக்கணமும், அகத்துறைப் பாடல்களும் உணர்த்து கின்றன.

தலைவி பாங்கிக் கறத்தொடு நிற்கும்
பாங்கி செவிலிக் கறத் தொடு நிற்கும்
செவிலி நற்றாய்க் கறத் தொடு நிற்கும்
நற்றாய் தந்தை தன்னையர்க் கறத்தொடு
நிற்கும் என்ப நெறியறிந் தோரே.

என்பது நாற்கவிராசநம்பியார் கூறும் விதி.

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.

(குறள், 45.)

என்பது அறநெறி ; அருள்மொழி, அறத்தின் பயன் எல்லாம் சிறக்கும் இல்வாழ்க்கை வாழ்கின்றவனே வாழ முயன்றவர்கள் எல்லோரிலும் தலையானவனாகத் திகழ்வான் என்கிறார் வள்ளுவர்.

வாழ்க்கை தொடங்குவது இல்லறத்தில்; அதுவும் இளமைக் காலத்தில்; வாழ்க்கை முடிவது துறவறத்தில். தன்னையுங் காத்துப் பிறரையும், துறந்தார் நல் கூர்ந்தார், இறந்தார், மாணி நிலையிலும், வானப்பிரஸ்த நிலையிலும் முற்றத்துறந்த யோக நெறியிலும் வாழ்பவர்களையும், தென்புலத்தார், தெய்வம், விருந்து, ஒக்கல், தான் என்ற ஐவரையும் காக்கவல்லது **இல்லறம்.** அதற்கு உழைத்துப் **பொருளீட்டும் ஆற்றலும், பகுந்துண்ணும் திறனும் வேண்டும்; இளமைக் காலமே இதற்கு ஏற்றது. அற இலக்கியங்களிலே இக்கருத்துக்களைப் பரக்கக் காணுகிறோம்.**

(பண்டைய இலக்கியங்களான சங்கப்பாடல்களும், அறநெறிக் காலத்துப் பதினெண்கீழ்க்கணக்கு இலக்கியங்களும் அறக்கருத்துக் களை மிகவும் துல்லியமாகப் போதித்து நிற்கின்றன. புறத்திணை யுள்ளும் போரறம் பற்றியனவும் அரிய நுண்ணிய செய்திகளைக் கூறுவன தமிழ் அறநூல்கள். பண்டைத்தமிழ் வேந்தர்கள் போர் செய்யும் திறம் வியப்பூட்டுவதாகும். ***அறமற்ற போரை*** இன்றும் வெறுத்தொதுக் குவர். அறத்துடன் கூடிய ***தர்மயுத்தம், அறப்போர்*** ரீதியான உலக வாழ்வுக்கும் தர்மத்துடன் கூடிய அரசாட்சிக்கும், நிலைபேற்றுக்கும், அவசியமானதாகும். போர் செய்கின்ற போதும் போர் தொடங்குகின்ற போதும் இவ் வேந்தர்களிடத்து அறமே தலைசிறந்து நிற்பதைக் காண முடிகிறது. ***அறத்தின் மண்டிய - மறப்போர் வேந்தர்*** (புறம் : 62) என்று கழாத்தலையார் பாடுகிறார். தம்மோடு எதிர்நின்று பொருந்தும் வேந்தன் அஞ்சியபோது அவனோடு பொருதுவது வீரமன்று; போர் அறமுமன்று. **பகையும் போரும் இவ்வுலகில் எக்காலத்தும் இருந்து வரும். ஆயினும் பண்டைக்காலப் போர் முறையில் அறம் கடைப்பிடிக் கப்பட்டது.** அக்காலத்தில் அரசன் ஒருவன் மாற்றரசனுக்குரிய நாட்டின் மீது படையெடுக்குங்கால் அந்நாட்டில் வாழும் உயிர்களையெல்லாம் நாசமாக்குவதில்லை; பசுக்களையும், பார்ப்பனர்களையும், பெண்டி ரையும், பிணியாளர்களையும் இவர் போன்ற பிறரையும் போர் நிகழும் நிலத்தைவிட்டுப் புறத்தே போய்விடும்படி எச்சரித்து அவர்களை

அகற்றுவான். இத்தகைய அறப்போர் பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப்பெருவழுதியிடம் அமைந்திருந்ததாக நெட்டிமையார் என்ற புலவர் பாராட்டுகிறார்.

ஆவும் ஆனியற் பார்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடையீரும் பேணித்
தென்புலம் வாழ்நர்க்(கு) அருங்கடன் இறுக்கும்
பொன்போற் புதல்வர் பெறாஅ தீரும்
எம்அம்புகடி விடுவதும் நும் அரண் சேர்மின்என
அறத்தாறு நுவலும் பூட்கை மறத்தின்
கொல்களிறு மீமிசைக் கொடிவிசும்பு நிழற்றும்
எங்கோ வாழிய குடுமி.

(புறம் : 9)

என்று அறப்போரைப் புகழ்கின்றார் புலவர்.

மெல்லியலாய் வாழ்ந்த மங்கை நல்லாளாகிய கற்புக்கடம் பூண்ட கண்ணகி தன் கணவன் கோவலனுடன் புகழைக் காப்பதற் காகச் சீறி எழுகின்றாள்; இதனைச் சீறிய கற்பு என்பர். சிலப்பதி காரத்திலே,

பொங்கி எழுந்தாள் வீழுந்தாள் பொழிகதிர்த்
திங்கள் முகிலொடுஞ் சேன்நிலங் கொண்டெனச்
செங்கண் சிவப்ப அழுதாள்தன் கேள்வனை
எங்கணா என்னா இணைந்தேங்கி மாழ்குவாள்.

(சிலப்: துன் : வரி 30 - 33)

என்று இளங்கோவடிகள் பாடுகிறார்.

சீறியெழுந்த கண்ணகி,

பாய்திரை வேலிப் படுவொருள் அறிதி
காய்கதிர்ச் செல்வனே கள்வனோ என்கணவன்.

(சிலப்: துன் : வரி: 50 - 51)

நின்கணவன் கள்வனல்லன்; இவ்வூரினை ஒள்ளொரி உண்ணும் என்று மறுமொழி தருகின்றான் **கதிரவன்.** செல்வச் செழிப்பில் பிறந்து வளர்ந்து கணவனது போற்றாவொழுக்கம் காரணமாக மதுரை வந்து காற்சிலம்பு விற்கச் சென்ற கணவனை இழந்து கைம்பெண் கோலத் துடன் அழும் கண்ணகி அரற்றிய ஓலம் கல்நெஞ்சத்தையும் கரைக்கும்; உருக்கும். அரண்மனையை விட்டு வெளிவரும் கண்ணகி

மட்டார் குழலார் பிறந்தபதிப் பிறந்தேன்
பட்டாங்கில் யானுமோர் பத்தினியே யாமாகில்
ஒட்டேன் அரசோடு ஒழிப்பேன் மதுரையும்.

(சிலப்: வஞ்: வரி: 35 - 37)

என்று சீறுகிறாள். ஆவேசத்தின் கொடுமுடியில் நின்ற காலத்தும் அறிவுணர்வு பிறழாது செயற்படுகின்றாள். தீக்கடவுளை நோக்கி,

பார்ப்பார் அறவோர் பசுபத்தினி பெண்டிர்
மூத்தோர் குழவி யெனுமிவரைக் கைவிட்டுத்
தீத்திறந்தார் பக்கமே சேர்க.

(சிலப்: வஞ்: வரி: 53 - 55)

என்று வேண்டுகிறாள் வீரபத்தினி.

அறநெறிப்படி நில்லாது மனம் போனபடியெல்லாம் போகும் மனிதர்களின் செயல் இப்படித்தான் முடியும் என்பதற்கு "இராவணன் நின்ற நாணநிலை" எடுத்துக்காட்டாகும். கம்பன் இராமாயணத்திலே

"அறங்கடந்தவர் செயல் இது" என்று உலகெலாம் ஆர்ப்ப
நிறங்கரிந்திட நிலம் விரல் கிளைத்திட நின்றான்;
இறங்கு கண்ணினன் எல் அழி முகத்தினன் தலையன்;
வெறுங்கை நாற்றினன்; விழுந்துடையாலன்ன மெய்யன்."

(கம்: யுத்: 250)

தேவர்களாக இருந்தாலும் அக்கிரமத்தால் ஒன்றையும் வெல்ல முடியாது என்பதை மனத்தில் உறுதியாகக் கொள்வாயாக என்று அறத்தின் நாயகன் இராமன் இராவணனுக்கு உபதேசம் செய்கின்றான்.

ஆளை யாவுனக்(கு) அமைந்தன மாருதமறைந்த
பூளை யாயின கண்டனை இன்றுபோய்ப் போர்க்கு
நாளை வாவென நல்கினன் நாகிளங் கமுகின்
வாளை தாவுறு கோசலை நாடுடை வள்ளல்.

(கம்: யுத்: 256)

என்று அறத்தின் நாயகன் காலத்தையும் கொடுத்து வேறொரு வாய்ப்பையும் தருகின்றான். இவன் அல்லவா அறம் வளர்த்த நாயகன்? இவ்வாறு எதிரிக்குத் துன்பம் வந்தபோதும் அதனைத் தனது வாழ்வுக்குத் துணையாகக் கொள்ளாது எதிரிக்கு மீண்டும் ஒரு சந்தர்ப்பத்தைத் தருவதல்லவா பேராண்மை!

வாலி உயிர்விடுந் தருணத்தில் சுக்கிரீவனை அணைத்துக் கொண்டு சில கூறும்போது பரம்பொருளே அறநெறி நிறுத்துவதற் காகவே இராமனாக அவதரித்து வந்துள்ளது என்று கூறுவான்.

மறைகளும் முனிவர் யாரும் மலர்மிசை அயனம் மற்றைத்
துறைகளின் முடிவும் சொல்லும் துணிபொருள் துணிவில் தூக்கி
அறைகழல் இராம னாகி அறநெறி நிவத்து வந்தது
இறையொரு சங்கை யின்றி எண்ணுதி எண்ண மிக்கோய்.

(கிட்: வாலி: 132)

இதிகாசங்களான ***பாரதம், இராமாயணம், சிவரகசியம்*** என்பன வும் காப்பியங்களான ***சிலப்பதிகாரமும் மணிமேகலையும்*** அறக்கருத் துக்களையே பெரிதும் விபரிக்கின்றன. வாழ்வியல் அறம் குறித்த கதைகளும் கருத்துக்களும் சமூக, சமய, அரசியல் ரீதியாக அறநீதி புகட்டுவனவாக அமைந்துள்ளன. இலட்சிய அரசினைக் கூறும் ***இராமாயணம் பாரதம்*** இலட்சிய சமூகத்தையும் எடுத்துக்காட்டுகின்றன. பெரியோரை மதித்து நடப்பது அறப்பண்பு. தவறினால் உலக இழிவு விருந்தோம்பும் அறப்பண்பை ***மகாபாரதமும் திருக்குறள்*** பேசுகின்றன. பாண்டவர்கள் வனவாசம் செய்தபோது காட்டிலே வரும் முனிவர் களைத் திரௌபதி உபசரித்தமை, ஏகபத்தினி விரதம் ***இராமாயணத் தீலே*** பேசப்படுவதையும்; சிவபத்தனான இராவணன் மாற்றான் மனைவி யை விரும்பியதால் அழிகின்றான்; அறக்கற்புத் தீக்குளிக்கிறது. ***சர்வதேச சகோதரத்துவம் குகனொடும் ஐவரானோம் முன்பு*** என்னும் பாடலினாலே கம்பனாலே எடுத்துரைக்கப்படுகிறது. கண்ணன்மூலம் ***நன்றி மறவாதிருக்கும் பண்பு பாரதத்திலே*** உண்டு. இராமனும், கிருஷ்ணனும் பரமாத்மாவாகவும் அவதார புருஷர்களாகவும் காட்டப் படுகின்றார்கள். பகவத் கீதையில் ***தர்மம் குன்றி அதர்மம் தலைதூக்கும் போது நல்லவர்களைக் காக்கவும் தீயவர்களை அழிக்கவும் நான் யுகந்தோறும் அவதரிப்பேன்*** என்று கூறுகிறார். தருமதேவதை -அறக் கடவுள் கண்ணுக்குத் தெரியாதது. இராவணன் போன்ற அரக்கர் களை அழிக்கவே இராமாவதாரம் நிகழ்கிறது. ஆணவம், அதிர்மம், அநீதி, அக் கிரமம், அநியாயம், அடக்குமுறைக்குணம், அடாவடித்தனம், அலங் கோலங்களை அழிப்பது அறம்தான்.

தாம்தாம் செய்தவினை தாமே அனுபவிப்பார்.
தன்வினை தன்னைச் சுடும்.
வினைவிதைத்தவன் வினையறுப்பான்.
செய்தீவினையிருக்கத் தெய்வத்தை நொந்தாக்கால்.
நீதியே செல்வத்திருப்பெருந்துறையுறை சிவனே.

என்றெல்லாம் அறம் வெல்லும் என்பது வலியுறுத்தப்படும். வினைப்பயன் - முடிவு - (நல்வினை, தீவினை) மோட்ஷ நரகங் களாகும். நரகலோகம் கொடிய துன்பங்களையுடையது. தீவினையாளர்

களும், அரக்கர்களும், அரக்கிகளுமே நரக லோகத்தில் அதிகாரம் செலுத்துவார்கள். **அறவழி வாழ்வு வாழ்ந்தோரே இந்திரலோகத்தி லிருப்பர்.**

பிராமண, ஷத்திரிய, வைசிய, சூத்திர, தர்மம் என்று ஆச்சிரம தர்மங்கள் பேசப்படுகின்றன. **அரசனது உயிருக்கு மேலானது அறம்** என்பது தமிழிலக்கிய உயர்நீதிப் போதனையாகும்.

கொங்குவேளிர் என்ற புலவரே முதன்முதலாக நீதிப் பெருமை நூலோதியுமாராய், என்று தாமியற்றிய பெருங்கதையில் நீதி என்ற சொல்லைக் கையாண்டுள்ளார்.

மனிதனின் அறவாழ்வீலே ஒழுக்கம் தலையாயது. எக்காலத் தும் எவ்விடத்தும் இடையறாது மேற்கொண்டு ஒழுகுவதையே ஒழுக்கம் என்பர். நடை, சீலம், விதித்த கடமைகளிலிருந்து வழுவாது நடத்தல், உலகத்தோடொட்ட ஒழுகுகை, செல்லுகை, வழி, உயர்ச்சி, குலம் எனப் பலபொருள் கூறப்படுகிறது. வடநூலார் ஆசாரம் என்பர். தமிழிலே **ஆசாரக்கோவை** என்னும் அறநூல் அறநெறிப் பாடசாலையிலே பாட நூலாக்கப்படவேண்டும். **ஆசரித்தல்** என்பது பற்றி நடத்தல். இந்திய மதங்களின் அச்சாணி ஆசாரநெறியாகும். எனவே தூய ஒழுக்கமே இந்தியமதங்களின் முக்கிய சிறப்பியல்பாகும். ஒழுக்கத்தின் அங்கங் களாக அன்பு, அறம், அருள், நட்பு, பொறை, பணிவு, இன் சொல், ஈகை, விருந்தோம்பல் எனப்பல உள்ளன. **அறத்துக்கு ஆதாரம் வேதங் களும் ஸ்மிருதிகளுமாம். தர்மம் அறத்தின் ஊற்று. அறத்திற்கு ஒழுக்கமே ஆதாரம்.** அறம் என்பதைத் தர்மம், நீதிபோன்ற சொற்கள் விளக்கி நிற்கும். பொருள்களை நோக்கினால் நீதி எனும் சொல் நியமம், முறை மை, ஒழுக்கநெறி, மெய்ம்மை, உலத்தோடு பொருந்துகை, இயல்பு, தர்ம சாஸ்திரம், நடத்துவது. உபாயம், பார்வதி எனப் பல பொருள் களில் வழங்கப்படுகின்றன. தர்மம் எனும் நற்செயல், விதி, தருமநூல், ஒழுக்கம், கடமை, நீதி, தானம் முதலிய அறம் இயற்கை எனப் பல பொருள்களில் வழங்கப்படுகின்றன. இவ்விடத்திலேதான் தருமம் என்ற சொல் வழக்கு உணர்ந்து கொள்ளத்தக்கது. **தானத்துக்கு வானம் வழங்கவேண்டும் (மழையை) என்கிறார் வள்ளுவர். அது தெய்வநீதி, தேவ அறம்.**

அறம் எது என்பதற்குப் பரிமேலழகர் தரும் விளக்கம் வருமாறு

அறமாவது மனு முதலிய நூல்களில் விதித்தன
செய்தலும் விலக்கியன ஒழிதலுமாம். அஃது
ஒழுக்கம், வழக்கம், தண்டம் என மூவகைப்படும்.
ஒழுக்கமாவது அந்தணர் முதலிய வருணத்தார்
தத்தமக்கு விதிக்கப்பட்ட பிரமச்சரியம் முதலிய

நிலைகளினின்று அவ்வவற்றுக்கோதிய அறங்களில் வழுவாதொழுகல் .

அறத்தின் வடிவாக விளங்கும் இந்து மதத்திற்கு அறக் கருத்துக்களையும் அறக் கடமைகளையும் வேதங்களே முன்னின்று தருகின்றன.

தருமம், அறம், நீதி, ஆசாரம், ஒழுங்கு என்பன போதனைக்கு-பேச்சிற்கு, உபதேசத்திற்கு, பிரசங்கத்துக்கு மட்டுமுரிய தொன்றல்ல. **இந்துதர்மம் வாழ்ந்து அனுபவப்படுத்தற்குரிய உரைகல்லாகும். சமூகத் திற்கும் உலகத்திற்கும் தர்மங்கள் உள்ளன.** அற வாழ்வை மேற் கொண்டால் கல்வி, அன்பு, ஈகை, இரக்கம், திண்மை, பொறுமை, வைராக்யம், ஒற்றுமை, உண்மை, உரிமை, ஒப்புரவு, சமத்துவம், தூய்மை, பக்தி, ஞானம் போன்ற சனாதனகுணங்கள் பெருகி வளர் கின்றன.

அறமே முத்தி, வீடு பேறளிக்கவல்லது என்பது சைவநீதி. இந்து சமயத்தில் வருண தர்மங்கள், வருமாறு:

1. அறக்கடமைகள்
2. வர்ணக் கடமைகள்
3. ஆச்சிரமக்கடமைகள்
4. பொதுக்கடமைகள்

பெண்கள் கடமைகள், ஆசாரங்கள் பற்றி இந்துமதம் கூறியுள்ள தூய்மையான, உயரிய உன்னதமான விளக்கங்களைப் பிற மதத்தினரது நூல்கள் கூறுவதாயில்லை. காலத்தால் முற்பட்ட இலக்கியங்களிலிருந்தும், நீதிநூல்களிலிருந்தும் வருவன பொதுநீதி நோக்கி அறியப் பட வேண்டியன ஆயின் பெண்களுக்கெதிரான அடக்குமுறையான, ஆண்வர்க்க நலன் கருதிய கருத்துக்களென்று இவற்றை யாரும் கருதிவிடலாகாது.

சுக்கிரநீதி வடமொழிநூல். அறச்செயல் பற்றிய கருத்தாகக் கூறுவன வருமாறு: அறநெறிப் பாடசாலைகளிலே இவை பொறிக்கப் பட்டிருத்தல் வேண்டும் நடக்குமா? தமிழ்மொழி என்பதால் அமுலாக முடியாது.

1. **தத்தங் கடமையைச் செய்யாதொழிதலும், அருளின்மையும் பிறர்க் குத் துன்பஞ் செய்தலும், வெகுளி மேற்கோடலும் எப்பொருளிலும் தீயசெயலே இயற்கையாதலும், பகுப்புணர்வின்மையும் ஆகிய இவை களையுடையார் மீலேச்சரெனப்படுவர்.**
2. **பொய்யுரை மொழிதல், ஆராயாது வலிந்து செய்தல், வஞ்சகம், அறிவின்மை, பேராசை, தூய்மையின்மை, இரக்கமின்மை, செருக்கு ஆகிய இவ்வெட்டும் மகளிர்பால் இயற்கையாக உள்ள பிழைகளாகும்.**

இவற்றினை உணர்வது மகோன்னத வாழ்வுக்கு அத்தியாவ சியமாகும். உணர்க.

கனகசபாபதி நாகேஸ்வரன்

மலையகக் கூத்துக்களிலே சமயக் கருத்துக்கள்

மலையகத்திலே வாழும் இந்துசமயத்தைச் சார்ந்த தமிழ்பேசும் மக்களின் கூத்துக்களாக, காமன் கூத்து, அர்ச்சுனன் தபசு, பொன்னர் சங்கர், மதுரை வீரன் என்பவற்றை நிரற்படுத்திக் குறிப்பிடலாம். மக்களது கலையும் பண்பாடும் நம்பிக்கைகளும் சடங்குகளும் பெரு மளவில் இன்றும் சமயச் சார்புடனேயே நிலவிவருவதனை அவதானிக்க முடிகிறது. இலங்கைவாழ் இந்திய வம்சாவழியினரின் வாழ்க்கை முறை யாகவும் இந்துமதம் காணப்படுகிறது. 1837 ஆம் ஆண்டிற்குப் பின்னர் கோப்பி, தேயிலை, இறப்பர் மற்றும் தென்னந் தோட்டங்கள் உருவாக்கப்பட்டன. இந்தியத் தொழிலாளர்கள் இலங்கைப் பெருந் தோட்டங்களில் நியமிக்கப்பட்டனர். தமிழ் நாட்டிலிருந்து மலிவான தொழிலாளர்களாக இவர்கள் இங்கு பணத் தைக்காட்டி அழைத்து வரப்பட்டனர். இம்மக்கள் இலங்கையின் சனத் தொகையில் ஒரு புதிய கூறாக இணைந்துகொண்டனர். உழைக்கும் மக்களான இவர்கள் தென்னிந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்த பொழுது அங்கு நிலவிய சமயம், சமயக்கடவுளர், நம்பிக்கைகள், சடங்குகள், கூத்துக்கள், கலைகள், வாத்தியக்கருவிகள், விளையாட்டுக்கள், அணிகள், உடை கள், பண்பாடுகள் மொழிவழக்காறுகள்,அனைத்தையும் தம்முடன் சுமந்துகொண்டு வந்தனர். இவற்றுள் சமயஞ்சார்ந்த கூத்துக்கள், நம்பிக் கைகள், சடங்குகள் பற்றியதோர் நுண்ணாய்வாகவே இக்கட்டுரை அமைகிறது.

இவ்விடயங்கள் சார்ந்த முன்னோடி ஆய்வாளர்களாக பேராசிரியர்கள் சோ. சந்திரசேகரன், செ. சிவஞானசுந்தரம்(நந்தி) பேராதனைப் பல்கலைக்கழகத்துப் பேராசிரியர்கள் சி. தில்லைநாதன், க. அருணாசலம், கலாநிதி. துரை மனோகரன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேராசிரியர் கலாநிதி அ. சண்முகதாஸ், வீரகேசரியின் இணை ஆசிரியர் வ. தேவராஜ், சாரல்நாடன், சி. வி. வேலுப்பிள்ளை, தெளிவத்தை ஜோசவ், மலைத்தம்பி, குறிஞ்சித் தென்னவன் அந்தனி ஜீவா, மலைச்செல்வன், டி. எம். பீர் முகம்மது, எம். எஸ். எம் ராமையா, தமிழோவியன், மல்லிகைக்குமார், மொழிவரதன், மாத்தளை சோமு, மாத்தளைக் கார்த்திகேசு, மாத்தளை வடிவேலன், மு. நித்தியானந்தன், இரா. சிவலிங்கம், பத்திரிகையாளர் க. ப. சிவம், கே. கணேஸ், கோகிலம் சுப்பையா, கலையொளி முத்தையாபிள்ளை,

கே. கணேஷ், செந்தூரன், க.பொன்னுத்துரை, இராமன், இராமானுஜம் இன்னும் பலரையும் குறிப்பிடலாம். குறிப்பாக அண்மைக் காலத்தில் மலையக மக்களின் சமய நம்பிக்கைகளும் சடங்கு முறைகளும் என்னும் நூலை வெளியிட்ட கலாநிதி ந. வேல்முருகு, செல்வி அம்பிகை வேல்முருகு குறிப்பிட வேண்டிய ஆய்வாளர்களாவர்.

மலையகத்திலே நாடகங்களும் கூத்துக்களும் நடத்தப்பட்டன. அர்ச்சுனன் தபசு, அரிச்சந்திர விலாசம், நந்தன் சரித்திரம், மதுரை வீரன், பொன்னர் சங்கர் என்னும் நாடகங்கள் மேடையேற்றப்பட்டன. 1939க்கு முன்னர் இந்தியாவிலிருந்து வந்த கலைஞர்களே மலை யகத்தில் நாடகங்களையும் கூத்துக்களையும் நடத்தினார்கள். லங்கா தகனம், கண்டிராசன் கதை, இராமாயணம், சத்தியவான் சாவித்திரி, குலேபகாவலி, அரிச்சந்திர மயானகாண்டம் என்பன மேடையேற்றப் பட்டன.

மருதையான், மதுரைவீர சுவாமி, மருதை வீரன் என்று அழைக் கப்படும் மதுரைவீரன் நாட்டார் நிலை வீரனாகக் கருதப்பட்டுத் தெய்வ அந்தஸ்துப் பெற்றிருப்பதனை அவதானிக்கலாம். மதுரைவீரன் கதையில் சில நிகழ்ச்சிகள்திருமலை நாயக்கர் காலத்தில் நடைபெற் றவை. **மதுரைவீரன் தாழ்த்தப்பட்ட வர்க்கத்தினன்.** நாயக்கர் பாளை யங்களில் தோற் பொருட்கள் செய்து ராணுவத்திற்கும் மக்களுக்கும் விற்பனை செய்துவந்தார்கள். திருச்சி மாவட்டத்தில் பொம்மணன் என்ற பாளையக்காரனிடம் வேலை செய்துவந்த மதுரைவீரனைப் பொம்மணன் மகள் பொம்மி காதலிக்கிறாள். சாதி வேறுபாடு காரண மாக இருவரும் மணம் செய்துகொள்ள முடியாது. எனவே திருச்சிக்கு உடன்போக்காக வந்துவிடுகிறார்கள். வரும்வழியில் பொம்மணன் படையோடு வந்து போராடுகிறான். படை அழிந்து பொம்மணன் இறந்துபோகிறான். மதுரைவீரன் திருச்சியில் இராணுவத்தில் சேர்ந்து பல பகைவர்களை முறியடித்து வாழ்ந்துவரும் பொழுது திருச்சி நாயக்கரது மகளைக் காதலித்து அவளை அடிக்கடி அவனது வீரத்தைப் பயன்படுத்திக் கொள்ளத் திருமலைநாயக்கர் விரும்பிய தால் அவனை மதுரைக்கு அழைத்துக்கொள்கிறான். பொம்மியோடு மதுரைசென்ற மதுரைவீரனைத் திருமலைநாயக்கன் ஒரு படைப்பிரிவின் தலைவனாக நியமிக்கிறான். கள்ளர்கள் கோவிலைச் சேர்ந்த கள்ளர் கள் மதுரை இராச்சியத்தில் பல இடங்களில் கொள்ளையடித்து வந்தார்கள். திருமலைநாயக்கர் இக் கள்ளர்களை ஒடுக்க மதுரை வீரனை அனுப்பினான். மதுரைவீரன் நாடகமும் கூத்தும் பயிலப்பட்டு வந்திருக்கலாம். இங்கு மிகவும் முக்கியமானதோர் அம்சம் கூர்ந்து

அவதானிக்கப்பட வேண்டியுள்ளது. அதுதான் புராணக்கதைகள் வழங்கும் சமூகங்களைப்பற்றிய அறிவாகும். மேலும் புராணக் கதைகள் என்றால் அவை எத்தகைய கதைகள்? புராணக் கதைகட்கும் ஏனைய கதைகட்கும் தொடர்பு உண்டா? உண்டென்றால் எத்தகைய தொடர்பு? அவற்றிற்கிடையே உள்ள ஒற்றுமை வேற்றுமைகள் யாவை? மேலே எழுப்பப்பட்ட வினாக்கள் எல்லாம் வரையறை வகைப்படுத்தல், ஒப்பீட்டு ஆய்வு போன்றவற்றுடன் தொடர்புடையவை.

> **புராணம் கடவுளரைப் பற்றிய ஒரு கதை; உலகத் தொடக்கம் படைப்பு, அடிப்படைச் சம்பவங்கள் போன்றவை பற்றிய ஒருசமய வரலாறு; கடவுளரின் முன்மாதிரியான செயல்களின் விளைவாக உலகம், இயற்கை, பண்பாடு போன்றவை அவற்றின் பகுதி களுடன் சேர்த்துப் படைக்கப்பட்டு, ஒழுங்குபடுத்தப்பட்டு அவை இன்றும் நிலைபெற்றிருப்பது பற்றியதொரு விளக்கம். சமூகத்தின் சமய மதிப்புக்களையும் விதிகளையும் புராணம் வெளிப்படுத்து கிறது; உறுதிசெய்கிறது; பின்பற்றி நடக்கவேண்டிய நடத்தை ஒழுங்கு முறைகளை நல்குகின்றது; சடங்குகளின் பயன்பாட்டு நோக்கங்களின் பலனுக்குச் சான்று பகர்கின்றது; வழிபாட்டின் புனிதத்தன்மையையும் நிலைநாட்டுகிறது. புராண த்தின் உண்மை யான சூழலினைச் சடங்குகளிலும் கரணங் களிலும் காண வேண்டும். சடங்கின்போது புராணம் நடித்துக் காட்டப்படுவதன் மூலம் உலகின் ஒழுங்குமுறை பாதுகாக்கப் படுகிறது; புனிதமான முன்மாதிரிச் செயல்களைப் பின்பற்றி அவற்றைப் போலச் செய்வதன் மூலம் உலகின் ஒழுங்குமுறை பாதுகாக்கப்படுகிறது. ஒருபடைப்புச் சம்பவம் மீண்டும் நடித்துக் காட்டப்படல் புராணம், சடங்குபோன்ற இரண்டின் பொதுநோக்க மாகலாம். இவ்வாறாக முந்தைய சம்பவம் நிகழ்காலத்திற்கு மாற்றப்படுகின்றது; மேலும் அதன்பயன், அதாவது நோய் வாய்ப்பட்ட ஒருவனைக் குண மாக்கல், மீண்டும் இங்கே இப் பொழுது அடையப்பெறுகிறது. இவ்வாறாகத் தொல்லூழிக் காலத்தில் உருவாக்கப்பட்டுப் புராணங்களில் பிரதிபலிக்கப்படும் உலக ஒழுங்கு தற்கால மக்களுக்கு ஒரு முன்மாதிரியான செய லாகவும் மாதிரியாகவும் மறுபடியும் சுட்டப்படும் சம்பவங்கள் உண்மையான மதிப்பு புடையவை.**

என்று விளங்குகிறார் லாரிஹாங்கோ (1972 : 13)

தற்பொழுது எவையெல்லாம் செய்யப்படுகின்றனவோ அவை யெல்லாம் சரியானவையே என்று காரணம்காட்டி விளக்குதலே இக் கதைகளின் முதன்மையன பயன்பாடாகும். மாலினோன்வ்கி குறிப் பிடுவதுபோலச் சமூகச்செயல்கட்கு உரிமைப் பத்திரங்களாக, ஆவணங்களாக புராணக்கதைகள் அமைகின்றன; சட்ட முன்னு தாரணங்களை அளிக்கின்றன. புராணக்கதைகள் சான்றுகளாக முன் மாதிரிகளாகப் பயன்படுகின்றன. உலகினைப்பற்றிய ஏறக்குறைய ஒரே தன்மையான விளக்கங்களைப் புராணங்களின் மூலம் அடையலாம்; இவ்விளக்கங்களின் அடிப்படையில் கடவுளர், பண்பாட்டு வீரர் போன் றோரின் படைப்புச் செயல்கள், உருவாக்கச் செயல்கள் அமை கின்றன. உலகு குறித்த புராணிய நோக்கு நிலைத்த ஒன்றாகக் கருதப்படுகிறது. அந்நோக்கில் மாற்றங்கள் இல்லை; வளர்ச்சியுமில்லை. மானிடச் செயல்கள் எல்லாவற்றிற்கும், மாபெரும் தொடக்கம் குறித்த சம்பவங் களின் புலனறிவுக்கெட்டிய செயல்கட்கும்கூடக் கொள்கை ரீதியான முன்னுதாரணங்களையும் முன் மாதிரிகளையும் காணமுடியும். இச் சான்றுகளைத் தன் மனத்தில் பாதுகாத்து வைத்திருந்து அவற்றைப் பின்பற்றி நடப்பதில்தான் ஒரு சமயவாதியின் பங்கு அமைந்துள்ளது. புராணங்கட்குப் பல்வேறு குறிப்பிட்ட பயன்பாடுகள் உள என்பதில் ஐயமில்லை. ஆனால் அவை நடத்தைகளை அறிந்துகொள்ளுதற்கு ஓர் அடிப்படையையும் நடத்தைகட்கு ஒரு செயல் ரீதியான அடிப்படை யையும் நல்குகின்றன. இந்த நோக்கில் பார்த்தால் புராணக்கதைகள் மெய்ப்பொருள் மூல ஆராய்ச்சித் தன்மை பற்றியன என்று கூறலாம்; அவை உலகினைப் பற்றிய நோக்கினைச் சேர்த்து இணைத்து வைத்துள்ளன. மேலும் வாழ்க்கை, பிரபஞ்சம் போன்றவற்றின் இயல்பு களை விளக்குகின்றன.

புராணக்கதைகள் சடங்குகளில் நாடகவடிவில் நடிக்கப்படுவதன் மூலமாகவும் (நடிக்கப்படும் புராணம்) ஒரு பொதுவழிபாட்டுமுறைச் சுவடிபோல் வாசிக்கப்படுவதன் மூலமாகவும் (எடுத்துரைக்கப்படும் புராணம்) உயிருடன் நிலைத்து வாழக்கூடும். இவற்றில் வாய்மொழி ஊடகமும், வாய்மொழியல்லாத ஊடகங்களும் (பிரசங்கம், துதிப் பாடல், வேண்டுதல்கள், ஓவியங்கள், சமய நடனங்கள்) பயன்படுத்தப் படலாம். இதைப்போன்று சமயக்கலைகளிலும் புராணங்கள் நிலைத் திருக்கக்கூடும். வரையறுக்கப் இந்த வடிவங்களோடு பேச்சு, சிந்தனை, கனவுகள் இன்னும் ஏனைய நடத்தைப் பாங்குகள் வழியாகவும் புராணியப் பாத்திரமாக வெளிப்படுத்திக் கொள்ளக்கூடும். சமயங்கள் பலவற்றில், பண்பாடு எவ்வாறு தோன்றியது என்பது குறித்த கதைகட்கு

அண்டப்பிறப்புப் பற்றிய புராணக்கதைகள் தனிச்சிறப்பான ஓர் அதிகாரத்தை நல்குகின்றன.

நேரடியான பொருளில் புராணமென்ற சொல்லைப் பயன்படுத்தினால் எல்லாப் புராணக்கதைகளும் அண்டத்தோற்றம் பற்றியனவல்ல. ஆனால் அண்டத்தோற்றம் பற்றிய புராணக்கதைகளுக்கு இணையான உலகத்தோற்றம் பற்றிய வேறுகதைகளும் உள. அவற்றைத் தன்னுடைய சமூக அடையாளத்திற்குரிய **இறுதியான மூலம்** என்று சமூகக் குழு ஏற்றுக்கொள்கிறது. வேறொருவகையிற் சொன்னால் இந்த அடிப்படையில் **அண்டப்பிறப்பு** என்ற சொல் உலகம் எவ்வாறு தொடங்கிற்று, நாம் அடைய விரும்பும் குறிக்கோள்கள் எவ்வாறு தீர்மானிக்கப்பட்டன என்ற கதைகளை எல்லாம் உள்ளடக்கியது.

காமன் கூத்து

மத்திய மலையகத்திலே ஆண்டுதோறும் மாசி மாதத்தில் வளர்பிறை மூன்றாம் நாள் தொடங்கி நிறைநிலாவரை காமன் பண்டிகையை மதச்சடங்காகப் பக்தியுடன் மக்கள் கொண்டாடுவர். சில தோட்டங்களிலே காமன் பண்டிகை (காமன் கூத்து) பதினைந்து நாட்கள் நடைபெறாது ஒரு சில நாட்களே நடைபெறுவது வழக்கம். காமனுக் கெனக் கோவில் இல்லை. ஆனால், பெரும்பாலான தோட்டங்களில் அப்பண்டிகைக்கென ஒதுக்கப்பட்ட **காமன்பொட்டல்** எனப்படும் **வட்டக் களரி** நிரந்தரமாக இருக்கும். விழாவுக்கு நாள் குறித்தும் காமன் கூத்து நடத்தும் வாத்தியார் தலைமையில் ஆற்றங்கரை அல்லது நீரோடைக்குச் சென்று **கரகம்** பாலிக்கப்படும். அருவிக்கரைக்குச் சென்ற அனைவரும் நீராடிய பின்னர் விழாச் சிறப்பாக நடக்க இறைவனை வேண்டிக் குடத்தில் அல்லது செம்பில் தூயநீர் எடுத்துப் பூசை செய்யும் நிகழ்ச்சியே கரகம் பாலித்தலாகும். பூசை முடிந்ததும் காமன்கூத்தில் பங்குகொள்வோரைப் புனிதப்படுத்தியதற்கு அறிகுறியாக மஞ்சள் நீரில் தோய்த்தெடுத்த நூலைக் கையில் கட்டுவதைக் **காப்புக் கட்டுதல்** என்பர். இந்நிகழ்ச்சிகள் முடிந்ததும் கலசநீரோடும் கரகத்தோடும் யாவரும் காமன் பொட்டலுக்கு வருவர். கலசத்தில் மாவிலை சூழ்ந்த தேங்காய் வைத்து மஞ்சள் கட்டப்பட்டிருக்கும். காமன்பொட்டல் அல்லது மன்மதஸ்தாபனம் செய்யுமிடம் தோட்டத்தில் ஓர் ஒதுங்கிய சுத்தமான பகுதியில் அமையும். அதற்கென ஒரு இடத்தைத் தேர்ந்தெடுத்துத் தண்ணீர் தெளித்து, சாணத்தால் மெழுகி மஞ்சள் நீர் தெளித்து, கூத்தின் அடித்தளமான ஆடலும் பாடலும் மெற்கொள்ளக் கூடியதாக ஓர் அடி உயரமும் ஆறடி நீளமுமான ***காமன் திண்ணை***

அல்லது மேடை ஒன்று அமைக்கப்படும். சில தோட்டங்களில் நிரந்தர மாக ஒரே இடத்தில் இத்திண்ணையை அமைப்பதுமுண்டு. தோட்ட த்தில் காமன்கூத்து ஆரம்பிக்கப்பட்டபோது இந்தியாவிலிருந்து வாத்தி யார் கொண்டு வந்த மண்ணைப் புதைத்துள்ள இடமாகவும் அவ்விடம் கருதப்படுவதுண்டு.

காமன் சின்னமாக ***கம்பம் நடுதல்*** அல்லது ***காமன் நடல்*** அல்லது ***காமன் ஊன்றுதல்*** நடைபெறும்.

> **அன்பாய் வளர்த்ததொரு இன்பமுள்ள பேய்க்கரும்பும், ஓங்கார மாவிலையும் ஓசையுள்ள பொன்னரசும், ஆனைசேனை வைக்கோல் பிரிதானாகச் சுத்தியபின் அதனுள் விராட்டியொன்று அன்பாகத் தானூட்டி, ஆழக்குழிதோண்டி அதிலே பால் ஊத்தி, அழகான வெள்ளரிப்பணம் சதிராகவே போட்டு, சொந்தமாய்க் காமன் நட்டு தப்பு முழக்கத்துடன் பாடிப் பூசைசெய்து வழிபாடு நடாத்தப்படும்.**
>
> *(வேலுப்பிள்ளை சீ.வி., (தொகுப்பாசிரியர்), 1983* ***மலைநாட்டு வழிபாட்டுப் பாடல்கள்****, கலைஞன் பதிப்பகம், சென்னை ப. 87 - 88)*

விழா ஆரம்பத்திலிருந்து ஒவ்வொரு நிகழ்ச்சியின் போதும் மங்களத் தப்பு அடிக்கப்படும். காமன் ஊன்றியதும் கூத்து ஆரம்பிப் பதற்கு அறிகுறியாக ***லாவணி*** பாடி மன்மதன், ரதி வேடந்தாங்கு வோர் கம்பத்தைச் சுற்றிச் சிறிது நேரம் ஆடுவர். **லாவணி** என்பது **இசைப் பாடலாக நடைபெறும் வீவாதம்.** கம்பம் நட்டதிலிருந்து காமன் கூத்து முடியும்வரை அதில் பங்குகொள்வோர் அனைவரும் விரத மிருந்து மிகவும் தூய்மையாக வாழ்வார்கள். காமன் கூத்திற்காகக் கம்பம் நட்ட மறுநாளிலிருந்து கூத்து ஆரம்பமாகும். மன்மதன் ரதி வேடந் தாங்கியோரின் ஆட்டங்கள் இந்நிகழ்ச்சிகளில் முக்கிய இடத்தை வகிக்கின்றன. மாலையில் கம்பத்தருகில் பூசை முடிந்த பின்னர் **மன்மதனும் ரதியும்** ஆடை அணிகளை அணிந்து திருமணத்திற்கு முன்னர் ஆடும் **காதல் லீலை** ஆட்டங்களை ஆடுவர். இவர் களது ஆடல் பாடல்களுக்குத் ***தப்பு*** பிரதான இசைக்கருவியாக அமைகிறது. லயங்களைச் சுற்றி ஒவ்வொரு வீடாக ஆடிவரும்போது, ஆட்டம் முடிந்ததும் பூசைசெய்து உண்டியலில் ***காமன் காணிக்கை*** இடுவார்கள். சிலர் தமது வீடு நாடிவந்த கூத்தர்களையும் கோஷ்டியினரையும் தங்கள் தகுதிக்கேற்பச் சிற்றுண்டிகள் கொடுத்துக் கௌரவிப்பதுண்டு.

காமன்கூத்தில் இறுதி நாளான காமதகன விழா மிக முக்கிய மானது. ***காமதகன*** விழா விடியும்வரை நடைபெறும் நிகழ்ச்சி ஆகும். பெரும்பாலும் பௌர்ணமி தினத்தன்று அல்லது வெள்ளி, சனிக்கிழமை நாட்களாக நாட்குறிப்பது வழக்கம். விடியும்வரை விழாவில் கலந்து மறுநாள் பகல் நிகழ்ச்சிகளிலும் கலந்து ஒய்வெடுப்பதற்கு வசதியாக இவ்வேற்பாடுகள் அமையும்.

காமதகன விழாவன்று காமன்பொட்டல் சாணத்தால் மெழுகப் பட்டு, கம்பத்தைச் சுற்றிப் பச்சைப் பந்தல் கட்டப்படும். நான்கு மூலை களிலும் வாழை அல்லது கரும்பு நடப்படும். இப்பந்தலுக்கு அருகில் மணவறைப் பந்தலும் கம்பத்துக்கு எதிரில் சற்றுத் தொலைவில் ஒருவர் ஏறி அமரத்தக்க ஓர் உயர்ந்த மேடையும் அதன் அருகில் மூவர் அல்லது நால்வர் அமரத்தக்க சிறிது தாழ்ந்த மேடையும் அமைக்கப்படும். காமன் பொட்டலைச் சுற்றித் தோரணங்கள் கட்டி அலங்கரிக்கப்படுவதுடன் மின்விளக்குகளால் அலங்கரிக்கப்படுவது முண்டு.

காமதகனத்தன்று தோட்டம் திருவிழாக் கோலம் கொள்ளும். மக்கள் நீராடி விரதமிருந்து காமதகனக் கூத்தினைப் பார்ப்பார்கள். மாலையில் காமனுக்குப் பூசை நடைபெறும். கூத்து நள்ளிரவு ஆரம்ப மாகும் வரை சில தோட்டங்களில் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்படுவ துண்டு. நள்ளிரவு கூத்து ஆரம்பமாவதற்கு அறிகுறியாகத் தப்பு அடிக்கப்படும். பெண்கள் மாவிளக்கு எடுத்து வருவதுடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும். தப்பு முழங்க ஊர்வலமாக வந்து காமனுக்குப் பூசை நடைபெறும். இதன் பின்னர் திருமண நிகழ்ச்சிக்காக ரதிவேடம் பூண்டவர் மணவறையில் அமருவார். மன்மதனை ஆடை அணிகலன் களால் அலங்கரித்து மங்களத் தப்புடன் அழைத்துவந்து திருமணப் பாடல்கள் பாடி அதற்கேற்ப ஆடி **ரதிக்குத் தாலி** கட்டப்படும். தாலி கட்டியதும் ரதியும் மன்மதனும் அருகில் உள்ள லயன்களுக்கு ஊர் வலமாக ஆடிச்சென்று மீண்டும் காமன் பொட்டலுக்குத் திரும்பி வந்து இருவருமாகப் பல்வேறு ஆட்டங்களை ஆடிக்கொண்டிருக்கும் போது சங்கு, சேகண்டி (சேமக்கலம்), தப்பு முழங்கச் சிவனார் வேட மிட்டவர் கண்மூடித் தவநிலையில் இருப்பார். மூன்று அல்லது நான்கு தேவர்கள் தாழ்ந்த மேடையில் அமர்ந்திருப்பர். இந்திரனின் தூதன் விடியற்காலை வேளையில் ஓலைகொண்டு வந்து மன்மதனிடம் கொடுப்பார். இதன் பின்னர் மன்மதன் புறப்பட ரதியிடம் விடைபெறும் ஆட்டம் இடம்பெறும். சிவனுடைய தவத்தினை அழிப்பதற்கு மன்மதன் ரதியிடம் விடைபெறும் ஆட்டம் இடம்பெறும். சிவனுடைய தவத்தினை அழிப்பதற்க மன்மதன்

புறப்பட, ரதி தடுப்பதும் மன்மதன் தர்க்கம் செய்வதும் வாக்குவாதங்கள் மிகுவதும் காமன் தன் விருப்பப்படி போருக்குச் செல்வதும் முக்கியமான உச்சக்கட்டம் ஆகும். கரும்பால் செய்யப்பட்ட வில்லையும் மலர்க் கணையையும் ஏந்திச் சிவனை நோக்கிப் போருக்குச் செல்பவர்போல் வில்லில் நாணேற்றி ஆடுவதுடன் போருக்குச் செல்லும் பாடல்களை யும் பாடுவர். மன்மதன் சிவன் மீது அம்பெய்ததும் சிவன் தவம் கலைந்து சினங்கொண்டு மன்மதனை எரிப்பார். அப்பொழுது ஏற்கனவே குவித்து வைக்கப்பட்ட தேயிலைக் குச்சுகள் எரிக்கப்பட்டுக் காமதகனம் மேற்கொள்ளப்படும்போது விடிந்து சூரிய உதயமாகும். ரதிவேடம் தரித்தவர் வெள்ளைச் சேலை அணிந்து மடிப்பிச்சை எடுத்து வரும்போது ***ஒப்பாரி*** வைக்கப்பட்டுப் பொட்டலில் அவல ஆட்டம் ஆடப்படும். இவ்வொப்பாரிப் பாடல்கள் அச்சிற் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

1. மங்களதாஸ், திரிசிரபுரம் ***நவீன நவரத்தின மதன ரதி ஒப்பாரி,*** சரஸ்வதி புத்தகசாலை, கொழும்பு.
2. தியாகராஜ செட்டியார், ***மன்மதன் ரதி ஜனன காண்டம்,*** *(வில்லடிப்பாட்டு),* சரஸ்வதி புத்தகசாலை. கொழும்பு

ஒப்பாரி பாடும்போது மக்கள் ***ஐயோ*** என்று அவலக்குரல் எழுப்புவர். இதனைத் தொடர்ந்து சிறு தேர் கட்டி மன்மதனைப் போன்ற படம் ஒன்றினைத் தூக்கிக்கொண்டு வெள்ளைச்சேலை கட்டிய ரதியுடன் லயங்கள் தோறும் ஒப்பாரி பாடிவரும் போது மடிப்பிச்சையாகப் படியரிசியும் காணிக்கையும் கொடுக்கப்படும். இதன்பின் ***காமன் எரிந்த கட்சி*** யைச் சேர்ந்த நீர்நிலைக்குச் சென்று ஈமக்கிரியைகளைச் செய்து விழாவை முடிப்பர். ***எரியாத கட்சியை*** யைச் சேர்ந்தோர் மூன்றாம் நாள் மாலை ***உயிர்த்தெழும்*** விழாவினை நடத்துவார்கள். அதற்காக மன்மதன் வேடம் தரித்தவர் வெள்ளைத் துணியால் மூடப்பட்டுக் கம்பம் ஊன்றிய இடத்தில் படுத்திருப்பார். ரதி சிவனிடம் மன்மதனை உயிர்ப்பிக்கும்படி மாங்கல்யப்பிச்சை கேட்டு மன்றாடுவாள். சிவன் இரங்கித் தாண்டவம் ஆடியபடி நீர்தெளித்து மன்மதனை உயிர்ப்பித்து ரதியுடன் சேர்த்து வைத்துப் பூசை செய்யப்பட்டு விழா முடிவுறும். சில தோட்டங்களில் சேகரித்த பொருட்களைக் கொண்டு ***காமன் வீருந்து*** நடைபெறும்வதுண்டு. (மேலும் தகவலுக்குப் பார்க்க, சி. தில்லைநாதன், பேராசிரியர் (1977), மலையக இந்துக்களின் தெய்வங் களும் வழிபாடுகளும் ***இந்து தருமம்,*** இலங்கைப் பல்கலைக் கழகம், பேராதனை, ப. 49 - 50)

அர்ச்சுனன் தபசு, பொன்னர் - சங்கர்

சமய நம்பிக்கைகளைக் கலைகளூடாக வளர்க்கும் ஏதுக்க ளாகக் காமன் கூத்து, அர்ச்சுனன் தபசு, பொன்னர் சங்கர் என்பன விளங்குகின்றன. அர்ச்சுனன் தபசு கூத்து நடைபெற முன்னர் எழுபது அடிக் கம்பம் நடும்போது வழிபாடுகள் நடத்தி ***மாயவருக்கும் சிவனுக்*** **கும்** பூசைசெய்வது வழக்கம். அர்ச்சுனன், கிருஷ்ணன், காளி போன்றோர் மேடையில் தோன்றும்போது தீபாராதனை செய்யப்படுவதும் தேங்காய் உடைத்து அபிஷேகம் செய்யப்படுவதும் வழக்கம். அர்ச்சுனன் தவம் செய்வதற்காக எழுபது அடிக்கம்பத்தில் ஏறும்போது **கோவிந்தா** எனச் சத்த மிட்டு வணங்குவதும் கம்பத்திலிருந்து பூமாரி பொழியும்போது மக்கள் அம்மலர்களைப் பொறுக்கிக் கண்களில் ஒற்றிக்கொள்வதும், அர்ச்சுனன் கம்பத்திலிருந்து இறங்கியதும் அனைவருக்கும் திருநீறு கொடுப்பதும் சமய நம்பிக்கைக்கு வலுவூட்டுகின்றன. இந்நடைமுறை கள் தமிழ்நாட்டிற் காணப்படும் தெருக்கூத்துக்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவையாக விளங்குகின்றன. இதேபோன்று சில தோட்டங்களில் ஆடப்படும் பொன்னர் சங்கர் கூத்து தெய்வ அந்தஸ்துப் பெற்ற **குன்றுடையானின்** பெருமையை உணர்த்தும் விழாவாகவும் இறுதிக் காட்சியான ***படுகளக்காட்சி*** சமயச் சடங்காகவும் கருதப்படு கின்றன.

மலையகத் தோட்டச் சமூக அமைப்பில் இக்கூத்துக்களும் சடங்குகளும் கலைநிகழ்ச்சிகளுங் குறிப்பிடத்தக்க சமூக முக்கியத் துவம் பெற்றவையாக உள்ளன. தோட்டச் சமூகத்திலுள்ள பாகுபாடு களைப் புலப்படுத்துவனவாக அவை விளங்குவதுடன், **ஒவ்வொரு சாதியினரதும் கடமைகளும் உரிமைகளும் வரையறுக்கப்படுகின்றன.** இவைபற்றிய விரிவான ஆராய்ச்சியினைப் பேராதனைப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறைப் பேராசிரியர், கலாநிதி சி. பத்மநாதன் விரிவாக நிகழ்த்தியுள்ளார்.

பிராமணர் அல்லாதவர்களதும் ஆதித் திராவிடர்களதும் கடமை களைத் தொடர்ந்தும் கடைப்பிடிக்கச் செய்வதன் மூலம் தோட்டங்களில் தொடர்ந்தும் சாதி அமைப்புப் பேணப்பட்டது. உதாரணமாகக் காமன் கூத்தில் கிரியைகளையும் பூசைகளையும் பிராமணரல்லாத உயர்சாதிப் பண்டாரமே மேற்கொள்வார். ஆதித் திராவிடரல்லாத உயர் சாதியினர் சமைத்த உணவுவகைகளையே யாவரும் உண்பர். **காமன் கூத்தில் தப்பு அடிப்பதன் மூலம் சலவைத் தொழிலாளர்கள் தீப்பந்தங்களை ஏற்றுவதன் மூலமும் சாதிப் படிமுறையானது தொடர்ந்தும் தோட்டங்களில்**

பேணப்படுவதற்கு வழியமைக்கப்பட்டது. இன்றும் தொழிலின் மேன்மை யாலே சாதி பெரிதும் பேணப்படுகிறது.

வேற்றுமைக்குள் ஒற்றுமை ஏற்படுவதும் இயற்கையானதே. இச்சடங்குகளும் விழாக்களும் குடும்ப அங்கத்தவர்களையும் உற்றார், உறவினர்களையும், நண்பர்களையும் தோட்ட மக்களையும் அயல் கிராமத்தவரையும் ஒன்றிணைக்கவும் இடைவினைகள் ஏற்படவும் உதவு கின்றன. தாம் ஒரே தோட்டத்தினைச் சேர்ந்தவர்கள் என்ற மனோ பாவத்தை வளர்ப்பதுடன் ஏனைய தோட்டங்களையும் கிராமங்களை யும் ஒப்பிட்டுப் பார்க்கவும் உதவுகின்றன. **தோட்டங்களில் ஒற்றுமை மூலம் சாதனைகளை ஏற்படுத்த முடியும் என இவை புகட்டுவதுடன்** அயல்தோட்டங்களிலும் கிராமங்களிலும் வாழும் மக்களையும் குறிப் பாக **சிங்கள மக்களைத் தமிழ்மக்களுடன் இணைக்கும் பாலமாகவும்** இவை விளங்குகின்றன. சட்டம், ஒழுங்கு, கடமை, கட்டுப்பாடு ஆகிய வாழ்வின் விழுமியங்களை மக்களுக்குப் போதிக்கின்றன. விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை, சகிப்புத்தன்மை, பொறுமை, மன அமைதி, மனவைராக்கியம், கூச்சம் தெளிதல், வாழ்வில் நம்பிக்கை, சகோதரத் துவம், ஒருவரையொருவர் புரிந்துகொள்ளல் என்பவற்றைத் தனிநபர் களுக்கும் சமூகத்திற்கும் போதிக்கின்றன. **சமூகத்திலுள்ள கலைஞர் கள் ஆதரிக்கப்பட்டுக் கலைகள் வளர்க்கப்படுகின்றன.**

மதச்சடங்குகளின் போதும் திருவிழாக்கள், பண்டிகை நாட்கள், தொழிற்சங்க மகாநாடுகளின்போதும் இயல், இசை, நாடகங்கள், நாட்டியம், கிராமிய விளையாட்டுக்கள் என்பன நடத்தப்படுகின்றன. சில நிகழ்ச்சிகளில் இயல், இசை, நாடகம் என்னும் மூன்றும் கலந் துள்ளதுடன் சில நிகழ்ச்சிகள் சடங்குகளாகவும் பொழுதுபோக்கிற் கான ஆடல், பாடல், விளையாட்டு நிகழ்ச்சிகளாகவும் உள்ளன. உதாரணமாக, காவடி, கரக ஆட்டங்களைக் கூறலாம்.

நம்பிக்கைகள்

இலங்கைவாழ் இந்திய வம்சாவளியினரின் வாழ்க்கை முறை யாக இந்துமதம் மிகுந்த செல்வாக்குப் பெற்றுத் திகழ்கிறது. இந்துமத வாழ்க்கை நடைமுறை வீட்டிலிருந்து சுடுகாடு வரையும் பிறப்பதற்கு முன்னரிலிருந்து இறந்ததற்குப் பின்னரும் வழிமுறைவழி முறையாகக் கடைப்பிடிக்கப்படுகின்றன. தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த வாழ்வில் சமயம் பெற்றிருந்த முக்கியத்துவத்தினை உணர்ந்த பெரிய கங்காணிமாரும், கணக்கப்பிள்ளைகளும் தோட்ட நிர்வாகத்தினரும் வழிபாட்டு முறைகளை ஊக்குவித்தனர்.

நீண்டதூர ஆபத்தான பயணம், கள்ளர் பயம், காடுகளுக் கூடாகப் பயணம் செய்யும்போதும் பெருந்தோட்டங்களை அமைப்பதற் காகக் காடுகளை அழிக்கும் போதும் ஏற்பட்ட விபத்துக்கள், கொடிய மிருகம், ஐந்துக்கள் என்பவற்றிலிருந்து பாதுகாப்பு, வெளியுலகத் தொடர்புகள், தனிமையான வாழ்க்கை, மழை, வரட்சி, குளிர், கடுங் காற்று, வெள்ளம், தொற்றுநோய் போன்றவற்றிலிருந்து பாதுகாப்புப் போன்ற தேவைகளின் நிமித்தமும் **மதநம்பிக்கை** வளரலாயிற்று. வழிபாட்டுத் தலங்கள் ஓய்வு நேரப் பொழுதுபோக்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் இடங்களாகவும், பல்வேறு கலைகள், இலக்கியம், விளையாட்டுக்கள் என்பன வளர்க்கப்படும் இடங்களாகவும் விளங்கிய தால் சமூகத்தில் செல்வாக்குச் செலுத்தின. கடின உழைப்பின் பின்னர் உடலுக்கும் உள்ளத்துக்கும் ஆறுதலளிக்கும் இடங்களாகவும், சில வேளைகளில் நேர்த்திக் கடன்களை நிறைவேற்றுமிடங்களாகவும், மக்களை நன்னெறிப்படுத்தும் இடங்களாகவும் பண்பாட்டையும் சமூக அமைப்பையும் தொடர்ந்து பேணும் இடங்களாகவும் வழிபாட்டுத் தலங்கள் விளங்கின.

நம்பிக்கைகள், சடங்கு சம்பிரதாயங்கள் முதலியன நாட்டார் வழக்காறுகள் மிகப் பரந்துபட்டவை, நாட்டார் கலாசாரத்தின் பெரும் பகுதியை உள்ளடக்குபவை. அப்பாற்பட்ட எண்ணப் பதிவுகளையே நம்பிக்கைகள் எனலாம். பழங்குடி மக்கள் கிராமத்தவர்கள் ஆகியோரி டம் மட்டுமன்றி நாகரிக சமூகங்களிடத்தும் இத்தகைய நம்பிக்கைகள் உள்ளன. வாழ்க்கையின் பல நிலைகளிலும் இத்தகைய நம்பிக்கை யைக் காணலாம். மலையகத்திலே **தமிழ்பேசும் இந்து மக்களும், கிழக்கிலங்கையிலே வாழும் தமிழ்மொழி பேசும் முஸ்லிம் மக்களும் கொண்டுள்ள சில பொதுவான நம்பிக்கைகளையும்** இங்கு சுட்டுவது மிகப்பொருத்தமாகும்.

காகம் கரைதல், முளிவளம் பார்த்தல், பல்லி சொல்லுதல் கண்துடித்தல், புருவம் துடித்தல், தோள் துடித்தல், நல்லநேரம் பார்த்தல் என்பன பொதுவான நிமித்தங்களாகும். இரட்டை வாழைப் பழம் சாப்பிட்டால் இரட்டைப்பிள்ளை பிறக்கும் என்பது இவர்கள் மத்தியில் நிலவும் ஒரு நம்பிக்கை. கிரகண வேளையில் கர்ப்பாஸ்திரீ கள் ஒருகாரியமும் செய்யப்படாது. ஏதாவது செய்தால் குழந்தை ஊமையாகப் பிறக்கும். கிரகண வேளையில் மீன் அறுத்தால் அல்லது விறகு பிளந்தால் பிள்ளையும் நாசித்துவாரம் பிளந்தபடி பிறக்கலாம். பட்சி பறக்கும் மாலைப்பொழுதில் பிள்ளைத்தாச்சி வெளியில் நிற்கக் கூடாது. நின்றால் பிள்ளைக்குப் பார்வைத் தோஷம் உண்டாகும்.

குழந்தை வயிற்றிலிருக்கும்போது தாய்மீது தவளை பாய்ந்தால் பிறக்கும் குழந்தை தவளைபோல் மெலிந்து பிறக்கும். குழந்தை வயிற்றிலிருக்கும் போது பெற்றோர் பிராணிகளைத் துன்புறுத்தினால் குழந்தை குறைபாடு களுடன் பிறக்கும். கால் வழியாகப் புறப்பட்டுப் பிறந்த குழந்தைக்கு வீசேட ஆற்றலுண்டு. உழுக்குச் சுழுக்குள்ள இடத்தில் அவ்வாறு பிறந்தவன் தன் காலால் தடவினால் சுகம் உண்டாகும். மெலிந்த குழந்தையை யானையின் கால்களுக்கிடையே கொடுத்து வாங்கினால் அது கொழுத்து வலுவுடனும் வனப்புடனும் வளரும். குழந்தைக்கு மேற்பல் முதலில் முளைத்தால் அது வாயாடியாக இருக்கும். புதன்கிழமை பிறந்த குழந்தை புத்திசாலியாக இருக்கும். பேசத் தொடங்குமுன் குழந்தையைக் கண்ணாடிமுன் காட்டக்கூடாது. காட்டினால் அது ஊமையாகிவிடும். கிழக்கிலங்கை முஸ்லிம்கள் மத்தியில் பெண்குழந்தை பிறப்பது வீசேடமாகக் கருதப் பட்டது. மூன்றாங்கால் பெண்பிறந்தால் மூலையெல்லாம் பொன்னாகும் ஆறாம்கால் பெண் பிறந்தால் அடுக்களையெல்லாம் பொன்னாகும், அஞ்சாங்கால் பெண் அழுதாலும் கிடைக்காது என்ற பழமொழிகள் இந்த நம்பிக்கையை உணர்த்தும். எட்டாவதாகப் பிறக்கும் குழந்தை ஆணாகிலும் பெண்ணா கிலும் துஷ்டத்தனமுள்ளதாக இருக்கும். *எட்டாங்கால் நெட்டுரீ* என்ற பழமொழி இதை உணர்த்துகின்றது. எட்டாவது குழந்தை பெற் றோருக்குக் கூடாது என்று கூறுவர்.

சடங்கு சம்பிரதாயங்கள் என்பன ஒரே வகைப்பட்ட நடத்தைக் கோலங்களைக் குறிக்கும். அவை முற்றிலும் மரபு ரீதியானதாகவும் ஒழுங்கமைக்கப்பட்டவையாகவும் இருக்கும். பிறப்பு, பூப்படைதல், திருமணம், மரணம், தொழில் நடவடிக்கை, விழாக்கள் போன்ற நிகழ்வுகளுடன் இவை தொடர்புள்ளன. இவை பொதுவானதாகவும் கூட்டுமுயற்சி சார்ந்தனவாகவும் உள்ளன. குடும்ப, சமூக உறவுகளைப் பலப்படுத்தும் சாதனமாகவே இவை செயற்படுகின்றன. இத்தகைய நிகழ்ச்சிகளில் மனிதர்கள் சமூகப் பிணைப்புள்ளவர்களாக மாறுகின் றனர். மனிதன் தனது சொந்தத் - தனிப்பட்ட கருத்துக்களுக்கு மேலாகக் கூட்டு வாழ்க்கைக்கு ஈர்க்கப்படுகிறான். நம்பிக்கைகளும் ஐதிகங்களும் இந்தக் கூட்டு வாழ்க்கையைக் குறியீட்டு வடிவில் வெளிப் படுத்துகின்றன. சடங்கு சம்பிரதாயங்கள் அவற்றுக்குச் செயல் முறை வடிவம் கொடுக்கின்றன. இவ்வகைப்பட்ட சடங்கு சம்பிர தாயங்கள் பல மலையக மக்கள் மத்தியிலே வேரூன்றி நிலவுகின்றன.

பெண்கள் சம்பந்தப்படாத வாழ்க்கை வைபவம் எதுவும் நாட்டார் வழக்கில் இல்லையென்றே கூறலாம். பிறப்பு, பருவமடைதல், திருமணம், குழந்தைப்பேறு, இறப்பு என்ற முக்கிய கட்டங்களில் இதனைப் பார்க்க முடிகிறது. நவீன வைத்திய வசதிகள் இல்லாத காலத்தில் பிள்ளைப் பேறு வீட்டிலேயே நடைபெற்றது. வயதுமுதிர்ந்த ஊர்ப் பெண்கள் சிலர் மருத்துவிச்சிகளாகச் செயலாற்றினர். சில கிராமங்களில் மருத்துவ மாதர்களும் இருந்தார்கள். பிரசவம் முடிந்ததும் ***பிறந்த குழந்தை ஆணாயின் உலக்கை எடுத்துக் கூரைக்குமேலாக எறிவதும், பெண்ணாயின் வீளக்குமாற்றைக் கூரைக்கு மேலால் எறிவதும் வழக்கி*** லிருந்தன. தாய் வீட்டிலேயே பிரசவம் நடைபெறுவது வழக்கம். தாய் வீட்டாரே குழந்தை பிறந்து 31 ஆம் நாள்வரை செலவைப் பொறுப் பார்கள். இது பெரும் பாலும் முதலாவது குழந்தைக்கே நடை பெறும். தாய் மாமன் குழந்தைக்குக் காப்பு, சங்கிலி, அரைஞாண் முதலிய அணிகலன்களை அணிவித்துச் சுற்றத்தாரை அழைத்து விருந்து செய்து 30 ஆம் அல்லது 31 ஆம் நாளில் கொண்டாட்டம் நடைபெறும். 41 ஆம் நாள் தாய் மாமன் குழந்தையை ஏணையில் இடுவர். ***ஏணையில் குழந்தை உறங்கு வதனால் குழந்தையின் தலை உருண்டையாகப் பந்துபோல் வரும் என்றும், குழந்தை சேலையின் அரவணைப்பில் துயில் கொள்ளும் என்றும் நம்பினார்கள்.***

கரணங்கள், பாரம்பரிய சமயங்கள் அல்லது நம்பிக்கைகளுடன் தொடர்புள்ள கிரியைகள் அல்லது கிரியைகளின் தொகுதியாக அமை யும். இக்கரணங்கள் பாரம்பரிய மனித சமூகங்களின் சமூக ஒழுங் கமைப்பு, சமய நடைமுறைகள், நம்பிக்கைகள், ஐதிகங்கள் ஆகிய வற்றை உணர்த்துவனவாகவும் காணப்படும். இன்னொரு வகையிற் கூறுவதனால் பாரம்பரிய சமூகங்களின் பண்பாட்டுக் கோலங்களை எளிதில் இனங்காண உதவும் சாதனங்கள் கரணங்கள் எனலாம். இதனைக் கருத்திற் கொண்டே **ருத் பெனடிக்ற்** என்ற ஆய்வாளர் **கரணம்** பற்றிப் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

கரணமென்பது நிர்ணயிக்கப்பட்ட விரிவான நடத்தைகளின் வடிவமாகும். இது தனிமனிதனின் சுயமான அம்சமாகவோ பண்பாட்டி னுடைய தனிச்சிறப்புக் கூறாகவோ அமையும். பண்பாட்டின் ஏனைய அம்சங்களில் அன்றிக் கரணங்களிலேயே வெவ்வேறு நாகரிகங்களின் நம்பிக்கைகளும் இலட்சியங்களும் மிகத்தெளிவாக வெளிப்படுகின்றன.

காலத்துக்குக்காலம் கரணம் என்ற பதத்தின் வரைவிலக்கணம் குறித்து ஆய்வாளர்களிடையே பல்வேறு கருத்துக்கள் வழங்கி வந்துள்ளன. ஆரம்பத்தில் சமயக்கிரியைகளையே இப்பதத்தினால் வழங்கினர். **டேர்ஹம்** என்ற ஆய்வாளர் பின்வருமாறு இதனை விளக்கு கின்றார்:

> **கரணங்கள் புனிதப் பொருள்களின் முன்னால் மனிதன் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பதைக் கூறும் ஒழுக்கவிதியாகும்.**
>
> என்றார்.

இவ்வனைத்து அம்சங்களும் மலையக மக்களது அனைத்துக் கலை வடிவங்களிலேயும் பிரதிபலித்து நிற்பதனை இன்றும் துல்லிய மாக அவதானிக்க முடியும்.

தமிழ்க் காதல்

ஒருமட மாது ஒருவனுமாகி இன்ப சுகந்தரும் அன்பு பொருந்தி உணர்வு கலங்கி ஒழுகிய வீந்து ஊறு சுரோணித மீது கலந்து நிகழ்வது சிற்றின்பம்.

சுக்கிலமும் சுரோணிதமும் எனப்படும் ஆண், பெண் காம நீர் சேர்ந்து விளைவது சிற்றின்ப உடலுறவு. காதலினால் விளைவது இலகுவான கூடல்; ஒன்றுபடுதல்; புணர்தல். இயற்கை உந்துதல் நிகழ்வாகவே ஆண், பெண் பிறப்புகள் நிகழ்கின்றன. சமுதாயத் தொடச்சிநிகழ்கிறது.

சூரிய சந்திரர், பகலிரவு, மேடுபள்ளம், மேல்கீழ், உள்வெளி, அகம்புறம், நன்மை தீமை, வெற்றி தோல்வி, பிழை சரி, ஆம் இல்லை, நேர் எதிர் எனவரும் சொற்கள் தமிழ்மொழியிலே **"முரண்"** தன்மையை உணர்த்தவல்லனவாக விளங்குகின்றன அல்லவா? எதிரெதிர்ப் பண்புகள் இணையும் போது போட்டிகள் நிகழ்கின்றன. எனினும் மனிதத்துவத்திலே எதிரெதிர்ப் பண்புகள் இணையும் போது புதுமை தோன்றும். இது பொது விதி ; இயற்கை நியதி.

தமிழ் மொழியிலேயுள்ள எதிரிணைவுகள், எதிர்ச்சொற்கள், எதிர்ப்பொருட்சொற்கள், எதிர்ப்பாற் சொற்கள் என்பனவும் ஆய்வு நோக்கிலே இன்பஞ் செய்து நிற்கின்றன. **சொல்லோடும், பொருளோடும் உயிரோடும் உடம்போடும் தமிழ்மொழியை இணைத்துப் பெருமை சேர்த்தவர்களாகத்** தொல்காப்பியர், சங்கப்புலவர்கள், இளங்கோ, வள்ளுவர், கம்பர், பட்டினத்தார், அருணகிரிநாதர், அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர், கச்சியப்பர், சேக்கிழார் என நீண்டதொரு ஞான பரம்பரையைக் கூறலாம்.

தமிழர் தம் காதல் வாழ்வு, இல்லறம், சிற்றின்பம், பேரின்பம் என்னும் நோக்கிலே **இலக்கிய ஆய்வு செய்தவர்களாக** டாக்டர் வ. சுப. மாணிக்கம், பேராசிரியர் அ. ச. ஞானசம்பந்தன், பேராசிரியர் சு. வித்தியானந்தன், பேராசிரியர்கள் க.கைலாசபதி, கா.சிவத்தம்பி, சி. தில்லைநாதன், ச.தனஞ்செயராச்சியம், மு.வரதராசன், க.வே.சுப்பிர மணியன்,அ.சண்முகதாஸ், அ.சதாசிவம், ஆ.வேலுப்பிள்ளை, பொ.பூலோகசிங்கம், சி.மௌனகுரு, க. அருணாசலம், எம்.நு.ூமான், துரை.மனோகரன், இ.பாலசுந்தரம், நா.சுப்பிரமணியம், பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை, க.சொக்கலிங்கம், பேராசிரியர் சிவஞானசுந்தரம்

(நந்தி), பேராசிரியர் கா. சுப்பிரமணியபிள்ளை, மறைமலையடிகள், பேராசிரியர் வி. செல்வநாயகம், டாக்டர் மு. இராசமாணிக்கனார், டாக்டர் என். கே. முருகானந்தன் ஆகியோரைக் குறிப்பிடலாம். ***தமிழ்க் காதல், தமிழர் சால்பு, சங்கத்தமிழர் வாழ்வியல்*** என்னும் தரமான ஆய்வு நூல்கள் நமக்குக் கிடைத்துள்ளன. தொல்காப்பியரியற்றிய ***மெய்ப்பாட்டியல்*** பகுதியும், ***இறையனார் களவியலுரையும்*** விதந் துரைக் கத்தக்கன.

பிறப்புக்கள் - தோற்றங்கள் நான்கு வகைப்படுவன:

1. முட்டையிற் பிறப்பன. 2. பையிற் பிறப்பன.
3. அழுக்கிற் தோன்றுவன. 4. மண்ணைப் பிளந்து வெளிவருவன.

இவை தேவர், மக்கள், விலங்கு, பறவை, ஊர்வன, நீர் வாழ்வன, தாவரம் என்னும் ஏழுவகைப் பிறப்பில் அடங்கும்.

இலக்கிய நோக்கிலே சங்கச் செய்யுட்களிலே காணப்படும் பொருள் மரபு அக்காலத்து மக்கள் வாழ்க்கையை ஆதாரமாகக் கொண்டுள்ளது என்று கூறுகின்றார் *தமிழ் இலக்கிய வரலாறு* எனும் நூலை எழுதிய பேராசிரியர் வி. செல்வநாயகம். மக்களது நடத்தைக் கோலங்களை அவர் இலக்கியத்திலே புகுத்தி எழுதியபோது, **அகத்திணை, புறத்திணை யென இரண்டாக வகுத்துச் செய்யுள் செய்தனர்** சங்கச் சான்றோர். இலக்கியக்கலையும், மருத்துவக்கலையும் மக்களுணர்வு நலன்களைத் துல்லியமாய்த் துலக்கி, விளக்கி நிற் கின்றன. **அகத் திணை என்பது காதலொழுக்கம்.** அது புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் என்னும் பிரிவுகளையுடையது. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் ஐவகை நிலவொழுக்கங்களே தொன்றுதொட்டு நிகழும் வாழ்வியல் ஒழுக்காறு களாகவுளீளன. காலத்தால் முற்பட்ட நெறியாகவும் உள்ளவை நோக்கற்பாலது. காதலனுக்கும் காதலிக்கும் இடையே யுள்ள காத லொழுக்கத்தைப் புலவன் கூறும் போது பெயர் சுட்டாதுரைப் பதும், சுட்டியுரைப்பதும் வழக்கமாய் இருந்துள்ளது. அகத்திணைப் பாக்களுள் சுட்டியொருவர் பெயர் கூறாப் பாக்களே உள்ளன. ***இத்தகு நாகரிகமான செய்யுட் கொள்கையை - மரபை - பிற மொழி இலக்கியங்களிலே காண்டலரிது.*** சங்ககால மக்கள் தூய காதலொழுக்கத்தையும் அறத் தினின்று வழுவாத வீர வாழ்க்கையையும் சிறப்பாகப் போற்றி வந்தன ரென்பது அக்கால நூல்கள் வாயிலாக அறியக் கிடக்கின்றது. காதலும் போரும் சங்ககாலச் செய்யுட்களிற்போல் வேறு எந்தக் காலச் செய்யுளிலும் பாராட்டப்படவில்லை. பெண்பாலாரின் குறிப்பாகத்

தலைவியரின் மெய்ப்பாடுகள் சங்க இலக்கியத்திலே நுட்பமாகப் காட்டப்பட்டுள்ளன.

குறிஞ்சியிலே நிகழும் ஒழுக்கம் **புணர்தல்** என்று வரையறை செய்தனர். இக்காதலொழுக்கத்தில் இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப் பாடு, பாங்கற்கூட்டம், பகற்குறி, இரவுக்குறி எனப்பல திறப்படும்.

ஒருவனும் ஒருத்தியும் தம்முட் காதல் கொண்டு வாழ்தல் அன்பினைந்திணை எனப்படும். ஒத்த அன்பான ஒருவனும் ஒருத்தியும் தம்முட் கூடுகின்ற காலத்துப் பிறந்த பேரின்பம் அக்கூட்டத்தின் பின்னர் இன்னவாறு இருந்தது என்று சொல்ல முடியாத போது அவ்வாழ்வை (அகம்) அன்பினைந்திணை என்றனர். கைக்கிளை என்பது ஒருதலைக் காமம். அது தலைவன் தலைவி ஆகிய இருவருள் ஒருவரிடமே தோன்றி வீளங்கும் காதல். அதனை மூன்றாக வகுத்துக் கூறுவர். முதலாவது, பருவமெய்தாத பேதை யொருத்தியைக் கண்ட ஆடவ னொருவன் அவள் மேற் காதல் கொண்டு அவளைப் பற்றிப் பலவாறெல்லாம் சொல்லி இன்புறுதல். இரண்டாவது, ஒத்த அனபினராய ஒருவனும் ஒருத்தியும் ஊழ் வசத்தால் ஒருவரை ஒருவர் எதிர்ப்பட்டுக் கூடும் கூட்டத்திற்குமுன் தலைவனிடம் பெரும்பாலும் நிகழும் காட்சி, ஐயம், தெளிதல், தேறல் என்னும் நான்கு செய்திகளுமாம். மூன்றாவது கொல்லேறு தழுவுதல் முதலியவை காரணமாக நிகழும் மணமுறைகளாகும். இவ்வாறு நிகழும் கைக்கிளைப் பகுதி களுட் பருவமெய்தாத பேதையரிடம் நிகழ்வதைச் சிறப்பித்துக் கூறும் செய்யுட்கள் கலித்தொகையிலே உள்ளன.

பெண்களது உளவளர்ச்சியைக் கொண்டே பருவங்கள் வகுக்கப் பட்டுள்ளன. பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம் பெண் என்று பெண்களது பருவம் காதல் உணர்வை அடிப்படையாகக் கொண்டே நிர்ணயிக்கப்பட்டுள்ளமை கண்டின் புறத்தக்கது. இன்றும், அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்ற நாற்குண சம்பந்தம் பண்படிப்படையில் பெண்ணுணர்வுடனும், வாழ்வுடனும் பின்னிப் பிணைந்தே யுள்ளன.

இயற்கைப் புணர்ச்சிக்கு முன் நிகழும் காட்சி முதலியன பிற் காலங்களில் எழுந்த கோவைப் பிரபந்தங்களிலே சிறப்பாக அமைக்கப் பட்டுள்ளன.

பெருந்திணை என்பது பொருந்தாக்காமமாம். ஒருவன் ஒருத்தி யிடம் மிக்க காமத்தனாகி அவளை அடையப்பெறாது மடலேறுதல்,

வரைபாய்தல் முதலியவற்றால் தன்னை மாய்த்துக் கொள்ளுதல் முதலியவற்றைப் பொருளாகக்கொண்டு விளங்கும் செய்யுட்கள் பெருந்திணையின்பாற்படுவன.

அன்பினைந்திணை என்னும் தூய காதலைப் பாடுதல் பெரு வழக்கமாயிருந்த சங்க காலத்தில் கைக்கிளை, பெருந்திணை வழக்கு மிக அருகியே காணப்பட்டனவென்பதை ***நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு*** என்னும் தொகை நூல்களிற் சேர்க்கப்பட்டுள்ள செய்யுட் களைக் கொண்டறியலாம்.

ஒத்தகாமம்

ஆண்,பெண், தலைவன், தலைவியரது காதல்நிலை வெளிப்படுமிடத்து அதற்கு உதவும் வகையிலே தோழி, பாங்கன். (தோழன்) தூது என்பன நிகழுவதை இலக்கியங்கள் சுட்டுகின்றன. பெண் தனது காதலைப் புலப்படுத்தும் முறைமைகள் - நுட்பங்கள் பல வகைப்படும். அவை மிகுந்த நளினமானவை. நாணமிக்க பெண்கள் **காதலை** வெளிப்படுத்தும் போதும் நனி நாகரிகத்தினராய்த் திகழ்ந்து நிற்பர். **வீதி** கூட்டும் காதலர்களும் உலகிலுளர். காப்பியங்களும், புராணங்களும், திருமுறைகளும் மானுடக் காதலையும் தெய்விகக் காதலையும் சிறப்பித்துப் பாடுகின்றன. ஆண்டாளது பாசுரங்களிலே பெண்ணின் இயல்பான காம வெளிப்பாடுகள் காட்சிப்படுத்தப் பட்டுள்ளன. செயங்கொண்டான் இயற்றிய கலிங்கத்துப்பரணியிலே **கடைதிறப்பு** என்னும் பாடற்பகுதி கலவியின்பம், காமச்சுவைப் பண்பு பொது ளியவையாகவுள்ளன. அருணகிரிநாதர் இயற்றிய திருப்புகழ் காதல், காமம் பற்றிப் பரந்துபடப் பேசி நிற்கின்றது. சிற்றின்ப வேட்கை ஈடுபாடு பேரின்பமாகிய தெய்வநல நாட்டத்தைத் தடுக்கும் ஊறு செய்யும் என்று அருணகிரியார் கவல்கிறார்.

ஒத்த தலைவன், தலைவியர் ஊழ் வயத்தால் ஒன்றுபட்டு வாழ்க்கைத் துணையாக அமைவர் என்று தமிழ் மக்கள் நம்பினர். தலைவன், தலைவியருக்குப் பத்துவகையான ஒப்புமைகள் - ஒத்த தன்மைகள் - கூறப்படும். இவை இன்றும் உண்மை வாய்ந்திலங்கு கின்றன. பாலியற் பிறழ்வெண்ணம்மிக்கவர்களே இத்தொல்காப்பிய விதியையும் நிராகரிப்பர். ***உண்மை புனிதமானது என்பதை உணர்வதே மேல்.***

பிறப்பே குடிமை ஆண்மை ஆண்டொடு
உருவு நிறுத்த காம வாயில்
நிறையே அருளே உணர்வொடு திருவென
முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே.

(தொல் : பொருள், 25.)

இருவர்க்கும் ஒத்த அன்பு நிகழ்வதற்கு இடையூறாக இருக்கின்ற குண நிகழ்ச்சிகளையும் **தொல்காப்பியர்** பின்வருமாறு கூறுகின்றார்.

நிம்பிரி கொடுமை வியப்பொடு புறமொழி
வன்சொல் பொச்சாப்பு, மடிமையொடு குடிமை
இன்புறல் ஏழைமை மறப்பொடு ஒப்புமை
என்றுஇவை இன்மை என்மனார் புலவர்.

(தொல் : பொருள், 26)

இந்தக் குணங்கள் எல்லாம் கட்புலனாகச் சுட்டிக்காட்ட இயலாதவை. நாட்டுப் பழக்கத்தால் அனுபவத்தைக் கொண்டு மனத்தினால் குறித்து உணரப்படுவனவாம். தலைவன் தலைவியர்க்குரிய ஒப்புமைக் குணங்கள் அவ்விருவரது மன ஒப்புமையால் இறுதியில் ஒரு நிலைப் பட்ட தன்மையராவர். ஒப்பு, உருவு, கற்பு முதலியன எல்லாம் **நெஞ்சால் உணரப்படுவதன்றிக் கட்புலனாகக் காட்டத் தகுவனவல்ல என்பதை,**

ஒப்பும் உருவும் வெறுப்பும் என்றா
கற்பும் ஏரும் எழிலும் என்றா
சாயலும் நாணும் மடனும் என்றா
நோயும் வேட்கையும் நுகர்வும் என்றுஆங்கு
ஆவயின் வருஉம் கிளவி எல்லாம்
காட்ட ளாகாப் பொருள என்ப.

(தொல்: பொருள், 51.)

இச்சூத்திரத்துள் எல்லாம் என்று குறித்ததைக்கொண்டு ஒளி, அளி, காய்தல், அன்பு, அழுக்காறு, பொறை, நிறை, அறிவு என்னும் குணங்களையும் உரையாசிரியர் உரைப்பர். இந்தக் குணங்கள் வாயிலாக நேரும் அறம், பொருள், இன்பங்களின் நுகர்வு எல்லாக் காலத்தும் எல்லாவிடத்தும் நிகழ்வதாம். தேவர்கள் உலகிலுங் கூட இந்த நுகர்ச்சி இல்லாத காலம் இல்லை என்கிறார் **தொல்காப்பியர்.**

இமையோர் தேஎத்தும் எறிகடல் வரைப்பினும்
அவைஇல் காலம் இன்மை யான.

(தொல்: பொருள், 52.)

மணவாழ்க்கை

மண வாழ்க்கையில் ஒத்த அன்பு கணவன் மனைவியர் இருவருக்கும் உரிய பண்பாகும். இந்த ஒத்த பண்பையே காதல் என அழைத்தனர்.

.... யாக்கைக்கு
உயிர் இயைந்தன்ன நட்பின் உயிர்
வாழ்தல் அன்ன காதல்
காதல் அன்ன பிரிவு அரியோனே!

(அகம்: 339: 11-14)

என்பது உத்தமக் காதல் வாழ்க்கையின் இலட்சியத்தைப் புலப்படுத்து கின்றது.

காதல் வாழ்வில் இருவரும் பிரியாது கூடி வாழ்தலையே பெரும் பேறாகக் கருதினர். வறிய வாழ்க்கை வாழ்ந்தாலும் பிரியா வாழ்க்கையே பெருமைதரும் வாழ்க்கை என்று அறிவுறுத்தப்படுகிறது. தமிழர் தம் வாழ்வியல் நடைமுறை இதுவாகும். இளமையும் காமமும் இணையப் பெற்றார் அதன் பயனை நுகராது நாளைப் போக்கின் சென்ற இளமையை மீட்பது இயலாது. இக்கருத்தை,

இளமையும் காமமும் ஓராங்கிப் பெற்றார்
வளமை விழை தக்கது உண்டோ? உள்நாள்
ஒரோஒகை தம்முள் தழீஇ ஒரோஒகை
ஒன்றன்கூறு ஆடை உடுப்பவரே ஆயினும்
ஒன்றினார் வாழ்க்கையே வாழ்க்கை, அரிதுஅரோ
சென்ற இளமை தரற்கு.

(கலி: 18:7:12.)

என்ற பாடற்பகுதி புலப்படுத்துகிறது.

காதலர்கள் கூடும் கூட்டம் (புணர்ச்சியின்பம்) ஒருவர் மெய்யும் மற்றவர் உடம்பும் உட்புகுவது போன்று அவ்வளவு நெருக்கமாக அமைந்தது. இதனை அகம் (379:15) பின்வருமாறு கூறுகின்றது:

மெய் புகுவன்ன கை கவர் முயக்கம்

காதலியின்முலை நெருங்குமாறு தழீஇக்கொண்டு இரவு கழியு மட்டும் நூலிடைகூட விலகினால் அதனால் தங்கள் முயக்கத்திற்கு வருந்திக் கழிபெரும் காம நுகர்ச்சியே சிறந்தது என்று இன்ப நுகர்ச்சி யைப் போற்றினர்.

மாரிப் பித்திகத்து ஈர்இதர் அலரி
நறுங்காழ் ஆரமொடு மிடைந்த மார்பில்
குறும்பொறிக் கொண்ட கொம்மைஅம் புகர்ப்பின்
கருங்கண் வெம்முலை ஞெழுங்கல் புல்லிக்
கழிவ தாக கங்குல்.

(நற்: 314:3-7.)

அணிவளை முன்கை, ஆல்இதழ் மடந்தை
வார்முலை முற்றத்து நூல்இடை விலங்கினும்
கவவுப்புலத்து உறையும் கழிபெருங் காமத்து
இன்புறு நுகர்ச்சியின் சிறந்தது ஒன்றுஇல்.

(அகம்: 361:4-7.)

எனவருவன மேற்குறித்த கருத்திற்கு அரண் செய்யும். மேலும் இன்பத்துக்குரிய காலம் இளமைக் காலம். முதிர்ந்தார் மீண்டும் தம் இளமையைப் பெற இயலாது. தவிரவும் **வாழ்நாளின் எல்லையும் ஒருவருக்கும் அறுதியிட்டு உரைக்க இயலாதது. ஆதலால் இன்ப நுகர்ச்சியில் வாய்ப்பு நேரும்போது அதனைக் காலந்தாழ்த்தாது பெறுதல் வேண்டும் என்பதை மேற்குறித்த பாடற்பகுதிகள் வலியுறுத்துகின்றன.** இத்தகைய நிலையில் இன்பம் துய்ப்போர் ஒருவர்க்கொருவர் இன்றி யமையாதவராய் ஒருவர் மீது ஒருவர்க்குள்ள பெருவிருப்பத்தைத் தம் இனிய காதல் மொழிகளாற் புலப்படுத்தி நின்றனர்.

ஆண்பெண் காதல் மொழிகள்

பைஞ்சுனைப் பூத்த பகுவாய்க் குவளையும்
அம்சில ஓதிஅசைநடைக் கொடிச்சி
கண்போல் மலர்தலும் அரிது; இவள்
தன்போல் சாயல் மஞ்ஞைக்கும் அரிதே

(ஐங் : 299-2-5.)

உயிர்எழுத்து ஒன்றிய செயிர்தீர் கோன்மைப்
பிரிந்துறல் அறியா விருந்து கவலி

நம்போல் நயவரப் புணர்ந்தன
கண்டிடும் மடவரல்; புறவின் மாவே.
(ஐங் : 419.)

நலம்மாண் எயிற்றி போலப் பலமிகு
நன்னல நயவரவு உடையை
என்தோற் றனையோ! மாவின் தளிரே.
(ஐங் : 365: 3-5.)

தொடலை தைஇய மடவரல் மகளே!
கண்ணினும் கதவ, நின்முலையே!
முலையினும் கதவ, நின்தடமென் தோளே.
(ஐங்: 361: 3-5.)

இவை காதலன் தன் காதலியின் நாணங்கண்டு தனது பெரு விருப்பத்தை மொழிகளால் வெளிப்படுத்திய பகுதிகளாம்.

கழுத்துஅமை கைவாங்காக் காதலர்ப்புல்ல
விழுத்தகை பெறுக. (பரி: 11: 116-117)

பூவீழ் அரியின் புலம்பப் போகாது
யாம்வீழ்வார் ஏமம் எய்து. (பரி: 11: 118-119)

முன்முறை செய்தவத்தின் இம்முறை இயைந்தேம்
மறுமுறை அமையத்தும் இயையை. (பரி: 11: 138-139)

சாதல் அஞ்சேன்; அஞ்சுவல், சாவின்
பிறப்புப் பிறிது ஆகுவது ஆயின்
மறக்குவேன் கொல், என் காதலன் எனவே.
(நற்: 397: 7-9)

இம்மை மாறி மறுமை ஆயினும்
தீ ஆகியர் எம் கணவனை
யான்ஆ கியர்நின் நெஞ்சு நேர்பவளே.
(குறு: 49: 3-5)

இவை ஒரு காதலியின் அன்பு மிகுதியாற் போந்த மொழிகள், தமது அன்பு பிறவிதோறும் தொடரவேண்டும் என்னும் விருப்பத்தையும் இவள் மொழிகள் புலப்படுத்துகின்றன.

காதலின் எல்லையை அளவிட்டு உரைத்தல் இயலாது. இது பருகுதலையொத்த தன்மை வாய்ந்தது. ஈருடல் என்னும் உடற் பேதமின்றி ஒருயிர்த் தன்மைப்பட்ட உயிர் வாழ்வுடையது. இவர் தம் காதல் முயக்கத்தால் உடம்பும் ஒன்று என்னும் படியாக ஆகிவிடு கிறது. இத்தகைய உயரிய காதல் நிலையைப் பெற்றவரை.

பல்படை நிவந்த வறுமைஇல் சேக்கை
பருகு வன்ன காதலொடு திருகி
மெய்புகு வன்ன கைகவர் முயக்கத்து
ஓர்உயிர் மாக்கள்

(அகம்: 305:5-8)

என அழைக்கிறார் புலவர்.

காதல் தானும் கடலினும் பெரிதே (நற்: 166:10) என்றபடி பெரிதாகக் காணும் பொருள்களிலெல்லாம் மிகப் பேரளவினது ஆகும் காதல் உணர்ச்சி. ஒரு புலவர் நிலத்தைவிட மிகப்பெரியது, வானத்தை விடவும் மிக உயர்ந்தது. நீரைப்போல அளந்து அறிய இயலாதது என்று இக்காதலைப் பாராட்டுகிறார். (குறு: 3),

இந்தக் காதல் தொடக்கம் முதல் வாழ்வுக் காலம் முடியவும் ஒரு பெற்றியதாக அமையவேண்டும் என்பதே இருபாலாரின் விருப்ப மாக இருந்தது.

வேட்டோர்க்கு
அமிழ்தத்து அன்ன கமழ் தார் மார்பின்
வண்டு இடைப் படாஅ முயக்கமும்
கண்டாக் காதலும் தலைநாள் போன்மே.

(அகம்: 332:12-15.)

என்பதனால் முதல்நாட் போல என்றும் இன்பம்மிக்கு ஓங்கியமை பெறப்படும்.

காமம் காதலாகப் பெருகுதல்

காதல் என்பது அன்பின் முதிர்ந்தநிலை, சாதாரணமாக நிகழும் அன்பைக் காமம் என்பர்.

காமம் கலந்த காதல் உண்டுஎனின்
நன்றுமன்.

(அகம்: 268:6-7.)

என்பதனால் காமம் கலந்து பெருகி முதிர்ந்த நிலையில் அது காதலாக விளைகிறது. அது இருவரதும் **மெய்யுறு புணர்ச்சியில்** போய் முற்றுகிறது.

காதற் காமம் காமத்துச் சிறந்தது
விருப்பேற் றொத்து மெய்யுறு புணர்ச்சி.

(பரி: 9:15-16.)

என்பது காமம் காதலாய் பெருகிக் காதலரிடையே இன்பத்தைத் தோற்றுவிப்பதைப் புலப்படுத்துகிறது.

முதற்கண் அரும்பும் காமநிலை

ஒத்த தகுதி படைத்த ஆடவர், பெண்டிர் எதிர்ப்படும் காலத்து ஒத்த உணர்ச்சியுடையாரிடையே நுட்பமாகப் பொருந்தி அமைவதே காம உணர்ச்சி. **பேய் தான் கண்ட கனவை வெளியிற் கூறாதது போன்று இருவரிடத்தும் நிகழ்ந்த காம உணர்ச்சியும் மறைத்து வைக்கப் படுகிறது.**

இடைபிறர் அறிதல் அஞ்சி, மறைகரந்து
பேஎய் கண்ட கனவின் பல்மாண்
நுண்ணிதின் இயைந்த காமம்.

(அகம்: 303:1-3)

என்பது இருவரிடத்தும் முதற்கண் அரும்புகின்ற காம நிலையை நமக்கு அறிவிக்கின்றது. இந்தக் காமத்தின் வளர்ச்சிக்கு இடையீடாகக் குறுக்கிடுவது நாணம். காமத்தின் எழுச்சி **"மிகமிக நாணம்"** விலகி ஒடுகிறது அவர் தம் அறிவை மயக்குகிறது.

நாண்அட்டு
நல்அறிவு இழந்த காமம்
வில்உமிழ் கணையின் சென்றுசேண்படவே.

(அகம்: 303:1-3)

என்பவை கொண்டு நாணத்தை அடிமைப்படுத்தக் காமம் மீதூர்தல் பெறப்படும்.

காம உணர்ச்சியுற்றார் பிறருடைய அலர்மொழிக்கு அஞ்சினால் அவர்தம் காமம் கைகூடாது போகும். காமத்தை விட்டுவிட்டால் எஞ்சி இருப்பது நாண் ஒன்றுமே ஆகும். ஆகவே காமமும் அலர்மொழி யும் ஒன்றுக்கொன்று முரணாக அமைந்து காதல் வெற்றிக்கு இடையூறாகக் குறுக்கிடும். (குறு: 12:1-5)

நலிதரும் காமமும் கௌவையும் என்றுஇவ்
வலிதின்உயிர் காவாத் தூங்கிஆங்கு என்னை
நலியும் விழுமம் இரண்டு.

(கலி: 142:56-58.)

என்பது ஒரு காமமுற்ற பெண்ணின் நிலையை விளக்குகின்றது. காமத்தினால் நலியும் காதலிக்கு அன்புமொழி கூறி ஆற்றுவிக்கின்ற தன்மை காதலன் ஒருவனுக்கு மட்டுமே இயைவதாகும். அவன் உரிய காலத்தில் வந்து அன்பு செய்யாமற் போனால் காதலியின் நிலை இரங்கத்தக்கதாய்விடும்.

நோய்அலைக் கலங்கிய மதன்அழி பொழுதில்
காமம் செப்பல் ஆண்மகற்கு அமையும்
என்ன மகன்கொல் தோழி! தன் வயின்
ஆர்வம் உடையர் ஆகி
மார்புஅனங் குறுநரை அறியா தோளே.

(நற்: 94:2-3-7-9)

என்று ஒரு காதலி தன் தோழிக்குத் தன் மனநிலையைப் புலப்படுத்து கிறாள்.

காதலன் மறைவில் வந்து தலைவியிடத்தில் அன்பு செய்தாலும் அது இடையறவுபடுதலினால் கள் மயக்கம் தீர்ந்தால் உறும் வேறுபாடு போன்று காதலிக்கு வேறுபாட்டைச் செய்வதற்குக் காரணமாய் இருந்தது. மறைவிற் புணர்ச்சிக் காலத்தும் காதலியின் மேனி பசலை யடைந்த காரணம் சிறிதளவு அவனது முயக்கம் (தழுவல்) நீங்கிய தனாலோ அல்லது காம இச்சையின் இடையறவினாலோ ஏற்பட்டது ஆதல்வேண்டும் என்று அனுமானிக்கிறாள் ஒரு தோழி.

குறைகெழு மரந்தை அன்ன இவள்நலம்
பண்டும் இன்றே கண்டிசின் தெய்ய
உழையின் போகாது அளிப்பினும் சிறிய
நெகிழ்ந்த கவின்நலம் கொல்லோ? மகிழ்ந்தோம்
கட்களி செருக்கத்து அன்ன
காமம் கொல்? இவள் கண்பசந்ததுவே.

(நற்: 35:7-11)

எனவருவது தோழியின் அனுமான வாக்கு.

காமம் கை கடந்து செல்லுமாயின், அது தாங்குதல் எளிதன்று. எனவே நாணத்தைக் கைவிட்டுக் காமத்திற்கு ஒரு எல்லை காணவேண்டும் என்று வீரைவது காதலரின் இயல்பு.

சொல்லின் சொல்எதிர் கொள்ளாய், யாழ நின்
திருமுகம் இறைஞ்சி நாணுதி கதுமென்
காமம் கைம்மிகின் தாங்குதல் எளிதோ! (நற்: 39:1-3)

எனவரும் தலைவன் பேச்சு காதலரின் மனநிலையை நன்கு புலப் படுத்துகிறது. காமம் விரைவிலே கைகூடாத போது இருபாலாரிடத் திலும் அது நெருப்பைப் போலச் சுடும் தன்மையுடையதாய் அவர்களை மிகவும் துன்புறுத்தி விடுகின்றது.

அழல்மன்ற காம அருநோய் நிகழ்மன்ற
நேரிழை ஈத்த இம்மா. (கலி: 139:30-31)

இது விரும்பிய காதலியை மணந்துகொள்ளக் கூடாத நிலையில் மடலேறுதலைத் தனக்கு உற்ற நோய்க்குரிய உபாயம் என்று துணிந்துவிட்ட காதலனது காமத்தின் உச்ச நிலையைக் காட்டுகின்றது.

ஓஓகடலே! ஊர்தலைக் கொண்டு கனலும் கடுந்தீயுள்
நீர்பெய்தக் காலே சினம்தனினும் மற் றி:தோ
ஈரம்இல் கேள்வன் உறீஇய காமத்தீ
நீருள் புகினும் சுடும்.

(கலி : 144:59-62)

இது பிரிவுக்காலத்து ஒரு காதலி காமத்தால் நொந்த மனநிலையைக் காட்டுவது. காதலனைப் பிரிந்த நிலையில் இத்தகைய காமநோயும் அதனாற் காதலி தன் நிலைகெட்டு நாணத்தைவிட்டு, துன்புறுதலும் இயல்பேயாகும். காதலனைப் பிரிந்த நிலையில் தலைவி இருந்த நிலையைக் கலி. 145 ஆம் பாடல் கூறுகிறது.

தலைவன் தலைவியரால் தனிமையில் கூடும் களவு மனம் பெரியோர்களால் ஆதரிக்கப்பட்ட தொன்றாகும்.

ஈருவேம் ஆய்ந்த மன்றம் இதுஎன
நாம்அறி வுறாலின் பழியும் உண்டோ.

(குறி: 21:22)

என்று ஒரு தலைவி இதன் பழிப்பின்மையை எடுத்து மொழிகிறாள். எல்லோருமறிய மணம் செய்து கொள்ளுதலைக் **கற்புமணம்** என்பர்.

இது பெற்றோர்கள் விருப்புடன் தலைவியைக் கொடுக்கத் தலைவன் மணம் செய்து கொள்ளுதலாகும். (குறு: 51:3-6, அகம்: 252: 10:-18) இந்தக் **கற்புமணம்** உலகறியச் செய்து கொள்ளுதலால் இதனை **நாடறி நல்மணம்** என்று கபிலர் குறிப்பிடுகிறார்.

நேர்இறை முன்னை பற்றி, தூமர்தர
நாடுஅறிநல்மணம் அயர்கம்; சில்நாள்
கலங்கல் ஒம்புமின் இலங்கு இழையர். (குறி: 231:233)

எனத் தலைவன் வாக்கின் மூலமாகத் தெரிவிக்கிறார். மகளிர் தாம் அன்புகொண்டு விரும்பிய ஆடவரை மணந்துகொள்ளுதலே யன்றி வேற்றுவரைவு நேருமாயின் (வரைவு - திருமணம்) அதை விரும்பு வதில்லை. மேலும் தமிழர் தம் பண்பாட்டிலே **மகளிர்க்கு ஒரு மணத்தைத் தவிர இருமணம் நேருவதும் இல்லை.**

விரிநீர் உடுக்கை உலகம் பெறினும்
அருநெறி ஆயர் மகளிர்க்கு
இருமனம் கூடுதல் இல்இயல்பு அன்றே.
(கலி: 114:19-21)

எனவே தமிழர் இல்லங்களிலே பெண்பாலார் தாங்கள் வரித்த ஒரே ஆடவனை மணத்தல் இயல்பாய் இருந்தமை புலப்படும்.

மணத்தலால், **பிறந்தகம், புகுந்தகம்** என இரு சொற்கள் பிறந்தன. பெண்கள் எப்பொழுதும் தங்கள் புகும் இடத்திலேயே (புகுந்தகத்தில்) போற்றத்தக்கவர்கள். மலையில் பிறந்த சந்தனமும், நீருள் பிறந்த முத்தும் யாழில் பிறக்கும் இசையும் அவற்றைப் போற்று வோர்க்கு பயன்பட்டுப் பெருமை பெறுகின்றன. பெண்களின் நிலையும் இவற்றை ஒத்ததே.

பலவுறு நறுஞ்சாந்தம் படுப்பவர்க் கல்லதை
மலையுளே பிறப்பினும் மலைக்குஅவைதாம் என்செயும்?
நினையுங்கால் நும்மகள் நுமக்கும்ஆங்கு அனையளே!
சீர்கெழு வெண்முத்தம் அணிபவர்க்கு அல்லதை
நீருளே பிறப்பினும் நீர்க்கவைதாம் என்செய்யும்?
தேருங்கால் நும்மகள் தூமக்கும்ஆங்கு அனையளே;
ஏழ்புணர் இன்னிசை முரல்பவர்க்கு அல்லதை
யாழுளே பிறப்பினும் யாழ்க்குஅவைதாம் என்செய்யும்
கூறுங்கால் நும்மகள் நுமக்கும்ஆங்கு அனையளே.
(கலி :9:12-20)

பெண் - குடும்ப விளக்கு

பெண்ணே குடும்பத்திற்கு விளக்காக அமைபவள். இவளுடைய பெருங்குணங்களே வாழ்க்கைக்குச் சிறப்பளிப்பவை. ***மகளிருக்கு உயிராக விளங்குபவர் அவர்தம் கணவன்மார் ஆவர்.***

ஒண்சுடர் பாண்டிற் செஞ்சுடர் போல
மனைக்கு விளக்கு ஆயினள் மன்ற. (ஐங் : 405:1-2)

வினையே ஆடவர்க்கு உயிரே ; வாள்நுதல்
மனைஉறை மகளிர்க்கு ஆடவர் உயிர். (குறு: 135:1-2)

ஆடவரின் அன்பும் ஆதரவும் அவர்களுக்குப் பேரரண்களாய் அமைந்தன.

குடிநன்கு உடையன், கூடுநர்ப் பிரியலன்
கெடுநா மொழியலன், அன்பினன். (அகம்: 352: 8-11)

என்று தலைவனொருவனுடைய குணங்களைப் பாராட்டிப் பேசுகிறாள் ஒரு தலைவி.

இல்லக்கிழத்தியின் இயல்புகள்

இல்லக்கிழத்தியாகிய பெண் அன்பு, ஒழுக்கம், கற்பு, பொறை, விருந்தோம்பல், சுற்றத்தை உபசரித்தல் முதலிய குணங்களைப் பெற்று விளங்கினாள்.

அன்பும் மடனும் சாயலும் இயல்பும்
என்பு நெகிழ்க்கும் கிளவியும் பிறவும்
ஒன்றுபடு கொள்கை யோடு. (அகம்: 225:1-3)

என ஒரு தலைவியின் குணவியல்பு கூறப்படுகிறது.

வாழ்க்கைத் துணைக்குரிய பெருங்குணங்களை,

கற்பும் காமமும் நற்பால் ஒழுக்கமும்
மெல்இயல் பொறையும் நிறையும் வல்லிதின்
விருந்துபுறத் தருதலும் சுற்றம் ஓம்பலும்
பிறவும் அன்ன கிழவோன் மாண்புகள். (தொல்: பொருள்: 11)

என்று ***தொல்காப்பியம்*** கூறுகிறது.

தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்

(திருக்குறள். 956)

மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை

(திருக்குறள். 51)

பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பெனும்
திண்மையுண் டாகப் பெறின்

(திருக்குறள். 54)

கற்புடையாரின் மேன்மை

கற்புடைய பெண்ணைத் தெய்வம் எனவே கருதிப் பேசினான் ஒரு தலைவன்.

பெண்மை சான்று பெருமடம் நிலைஇக்
கற்புஇறை கொண்ட கமழும் சுடர்நுதற்
புரையோர். (பதி: 70, 14-16)

ஆண்ற கற்பின் சான்ற பெரியள்
அம்மா அரிவையோ அல்லள்
ஏர்மலர் நிறை கூனை உறையும்
சூர்மகள் மாதோ என்னும். (அகம்: 198, 12-13)

மகளிர் கற்புக்கு மழை பெய்விக்கின்ற தெய்விக ஆற்றலும் இருந்தது.

தெய்வந் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை.

(குறள்: 55)

வறன்ஓடின் வையகத்து வான்தரும் கற்பினாள்.

(கலி: 16:20)

என்று பெண் பாராட்டப்படுகின்றாள். மேலும் இவர் தம் கற்புடை மையால் வானத்தில் விளங்கும் அருந்ததியைப் போல உலகம் தொழுகின்ற பெருமை வாய்ந்தும் விளங்கினர்.

வடமீன் புரையும் கற்பின் நறுநுதல்.

(பெரும்: 302-303)

வடமீன் போல் தொழுது எத்த வயங்கிய கற்பினாள்.

(கலி: 2:21)

எனவருவன இதற்குச் சான்றாகும்.

கணவனைப் பேணுதல்

பெண்மை நலம் படைத்த கற்புடைய மகளிர் தம் கணவர்க்கு உண்டி முதலிய சமைத்து இட்டு உபசரித்து அவன் விருப்புடன் உண்பதைக் கண்டு நனிபெருமகிழ்வு கொண்டிருந்தனர்.

முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்
கழுவுறு கலிங்கம் கழாஅது உடீஇ
குவளை உண்கண் குய்ப்புகை கமழத்
தாம்தழந்து அட்ட தீம்புளிப் பாகர்
இனிதெனக் கணவன் உண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே.

(குறு: 167:1-6)

இப்பாடல் ஒரு பெண்ணின் இல் வாழ்க்கைத் தன்மையைக் கண்டு (தனிக்குடித்தனத்தைக் கண்டு) உவந்துரைக்கும் செவிலித் தாயின் மகிழ்ச்சியை வெளிப்படுத்துகிறது. கணவனுடைய இல்லத்தில் வறுமை இருந்தாலும் அவரோடு இயைந்து அவனுக்குத் தொண்டு செய்து வாழ்தலையே கடமையாகக்கொண்டனர்.

கற்புடையாள் கணவன் உயர்வுறல்

கற்புடைய நல்மனைவி வாய்க்கப் பெற்றவர் புகழ்பெற வாழ்ந்தனர். கற்புடைய நல் மனைவியின் வருகையால் கணவனுக்கு வறுமை வாழ்வு நீங்கிச் செல்வவாழ்வு வாய்க்கவும் பெறுவான்.

ஓர்ஆண் வல்சிச் சீர்இல்வாழ்க்கை
பெருநலக் குறுமகள் வந்தென
இனிவிழவு ஆயிற்று என்னும் இல்லுரே.

(குறு : 295:4-6)

புகுந்த இடத்தில் வாழ்வு

தமது தந்தை செல்வச் செழிப்பில் இருந்த போதிலும் கணவனை விட்டுப் பிரிந்து செல்லும் நிலையில் பெண்கள் வாழ வில்லை.

கொண்ட கொழுநன் குடிவறன் உற்றென
கொடுத்த தந்தை கொழுஞ்சோறு உள்ளான்
ஒழுகுநீர் நுணங்கு அறல்போல
பொழுது மறுத்து உண்ணும் சீறுமது கையனே!
(நற்: 110: 10-13)

அன்னாய் வாழி! வேண்டுஅன்னை நம்படப்பைத்
தேன்மயங்கு பாலினும் இனிய அவர்நாட்டு
உவலைக் கூவற்கீழ் மானுண் டெஞ்சிய கலுழி நீரே.
(ஐங் : 203, 1-4)

இவை பெண்பாலார் தமது கணவனுடன் இணைந்து வாழ்தலை எவ்வளவு மேன்மையாகக் கருதினர் என்பதைத் தெரிவிக்கின்றன.

தீட்டுடை மகளிர் செயல்

தூய்மையில்லாத மகளிர் கலம் எனப்படும் பாண்டங்களைத் தொடுதல் இல்லை. தீட்டுடையோர் விலகியே நிற்பர். கோயில்களுக்கும் இவர்கள் செல்வதில்லை.

அனங்குடை முருகன் கோட்டத்துக்
கலம்தொடா மகளிரின் இகந்து நின்றவ்வே.
(புறம்: 299:6-7)

என்பதாலே தெரியவரும்.

முனிவர்களை அடுத்தோர் தம் தூய்மை இன்மை காரணமாக அவர்கள் நெருங்காது விலகிச் செல்வது மரபு. (குறு: 203:4-5.)

கணவனைப் பிரிந்து வாழும் மகளிர் கூந்தலையும் மேனியையும் பேணாது வருத்த நிலையில் இருப்பர். **கணவர் உடனுறையும் காலத்தில்தான் அவர்கள் கோலம் பூண்டு இன்பமாக வாழ்வர்.**

அரிமதர் மழைக்கண் அம்மா அரிவை
நெய்யொடு குந்த மைஇருங் கூந்தல்.
(புறம்: 147:5-9)

என்பது கணவனைப் பிரிந்துவாழும் மகளிர் நிலையை உணர்த்துகிறது.

பெண்கள் **கற்பிற்கு அறிகுறியாக முல்லை மலரை** அணிவது மரபு.

முல்லை சான்ற கற்பு. (சிறு: 30: நற்: 142. அகம்274:13-14)

மகளிரின் வாழ்க்கைச் சிறப்பு அவள் தம் கணவனுக்கும் பெருமையளித்து. கற்புடைய மனைவியின் சிறப்பால் கணவன்மார் பெருமிதத்துடன் வாழ்ந்தனர். ***பதிற்றுப்பத்தும், திருக்குறளும்*** இதனை வலியுறுத்துகின்றன.

புகழ் புரிந்த இல்லிலோர்க்கு இல்லை இகழ்வார்முன்
ஏறுபோற் பீடு நடை.

(குறள் 59)

மக்கட்பேறு

பெறுமவற்றுள் யாமறிவ தில்லை அறிவறிந்த
மக்கட்பேறு அல்ல பிற. (குறள். 61)

அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்
சீறுகை அளாவிய கூழ். (குறள். 64)

மக்கள்மெய் தீண்டல் உடற்கின்பம் மற்றுஅவர்
சொற்கேட்டல் இன்பம் செவிக்கு. (குறள். 65)

குழல்இனிது யாழ்இனிது என்பர் தம்மக்கள்
மழலைச்சொல் கேளா தவர். (குறள். 66)

இல்லறப் பயனாய்க் கிடைக்கும் பெரும்பேறு - சிறந்தபேறு **அறிவறிந்த மக்கட்பேறு** எவ்வளவு பெருஞ் செல்வம் படைத்து இன்ப மாக உண்டு உடுத்து வாழ்ந்தாலும் பெண்ணோடு கூடி மக்களைப் பெறாதார் வாழ்வு சிறப்பதில்லை. இல்லறத்தானின் மேன்மை இயம் புதற்கெளிதாமோ என்று கூறத்தோன்றுகிறது.

தென்புலத்தார் தெய்வம் விருத்தொக்கல் தானென்றாங்கு
ஐம்புலத்தா றோம்பல் தலை.

(குறள் 43)

கருவினைச் சுமப்பவள் பெண். பத்து மாதங்கள் சுமந்து குழந்தையைப் பெறுவாள் பெண். அருணகிரிநாதர் திருப்புகழிலே,

கருவடைந்து பத்துற்ற திங்கள்
வயிறிருந்து முற்றிப் பயின்று
கடையில் வந்துதித்துக் குழந்தை வடிவாகி...

என்று பாடுகிறார். மாதாமாதம் கரு வளர்ந்து முற்றிப் பின் உலகிலே பிறக்கிறது. **பெண்களுக்குள்ள சாதனையே மகப்பேறு. இது பெண்மையின் பேராற்றல். சமுதாய உற்பத்தியை** ப் பெண்களே நிகழ்த்துகிறார்கள். 'தாயைப்போல பிள்ளை' என்பது முதுமொழி. பிரவசம்தான் கன்னியை - திருமணமாகாத பெண்களைத் தாயாக்குகிறது. தாய்க்குள்ள தனிச்சிறப்புகள் பல. அன்பும், அருளும், கருணையும், பண்பும், பாசமும், தியாகமும், சீலமும், வடிவும், வனப்பும், உயிரும், உருவமும் கொடுத்து மனிதர்களை உலவவிடுபவளே தாய். **அம்மா** என்றசொல் மிகவும் சிறப்பு வாய்ந்தது. **அம்மா என்று நீ அழைத்தால் அமுதகானம் பொழியுமடா** என்கிறார் கவிஞர் கண்ணதாசன்.

குழந்தைகளின் தளர்நடையும் மழலைப் பேச்சும் அவர்கள் சோற்றை அளைந்து உண்ணும் பேறும் மிக இன்பம் பயப்பனவாகும்.

படைப்புப்பல படைத்துப் பலர் ரோடு உண்ணும்
உடைப்பெருஞ் செல்வர் ஆயினும் இடைப்படக்
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டும் தொட்டும் கல்வியம் குழந்தும்
நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும்
மயக்குறு மக்களை இல்லோர்க்குப்
பயக்குறை இல்லைநாம் வாழு நாளே.

(புறம்: 188)

என்று பாண்டியன் அறிவுடை நம்பியாகிய அரசனே மக்கட் பேற்றின் சிறப்பைக் குறித்துக் கூறுவது கருதற்பாலது. தங்கள் குடிப்பிறந்த முன்னோர்களுக்கு நீர்க்கடன் அளித்து அவர்களுக்கு நற்கதியளிப்பார் புதல்வர்களேயாவர்.

தென்புல வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்
பொன்போற் புதல்வர்ப் பெறாஅ தீரும்.

(புறம். 9:3-4)

புதல்வரைக் **குடிக்கு விளக்கு** என்று போற்றினர். இம்மைக்கும் மறுமைக்கும் இன்பம் பெறுவோர் புதல்வரைப் பெற்றோரே என்பது பழமொழியாகவே நாட்டில் வழங்குகிறது.

குழந்தையை வளர்த்துச் சான்றோனாக ஆக்குதல் தாய், தந்தையரின் பெருங்கடமையாகிறது.

ஈன்று புறத்தருள் என்தலைக் கடனே
சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே.

(புறம். 312:1-2)

என்கிறாள் ஒரு தாய்.

தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
முந்தி யிருப்பச் செயல். (குறள். 67)

ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய். (குறள். 69)

மகன்தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை
என்னோற்றான் கொல்எனுஞ் சொல். (குறள். 70)

குழந்தையின் தளர் நடையும் பெற்றோர்க்கு இன்பம் தரு கின்றது. குழந்தையைத் தழுவிக் கொள்ளும்போது அதுவும் கைகளால் பெற்றோரின் நெற்றி, கன்னம் முதலியவற்றைத் தடவி அவர்க்கு இன்பம் செய்கின்றது. தாய் குழந்தைக்கு அம்புலி காட்டியும் பாராக்குக் காட்டியும் உணவை ஊட்டுகிறாள்.

வாழ்வின் இன்பத்திற்கு அடிப்படையாகவுள்ளது அன்பு. அன்பு என்பது ஒருவர் நெஞ்சம் மற்றவர் நெஞ்சத்தோடு ஒன்றிக் கலப்பதாகும். உத்தமமான அன்பிற்குச் சேர்ந்து வாழ்தலும் கூடிப் பழகுதலும் முக்கிய மன்று. அன்பு சுரக்கின்ற காலத்தில் அது இயல்பாகவே எழுந்து ஒருவரோடு மற்றைவரைப் பிணித்துவிடும். முன்பின் பழகி அறியாத ஒரு ஆடவனுக்கும் ஒரு இள நங்கைக்கும் ஏற்பட்ட அன்பைக் குறித்து-காதலைக் குறித்து இந்த ஆடவன் வியந்து பேசுவது அன்பின் தோற்றத் தை நன்கு புலப்படுத்துகிறது.

யாயும் ஞாயும் யாரா கியரோ?
எந்தையும் நுந்தையும் எம்முறை கேளிர்
யானும் நீயும் எவ்வழி அறிதும்
செம்புலப் பெயல்நீர் போல
அன்புடை நெஞ்சம் தாம்கலந் தனவே. (குறு: 40:1-5)

செம்புலப் பெயல்நீர் போல **இயல்பாக எழுகின்ற பாச உணர்ச் சியே அன்பு.** இது நீரைப் போன்று நன்மை பயப்பது.

ஈரமுடைமையின் நீரோரனையை. (பதி: 90:140)

அன்பினால் ஒருவருக்கொருவர் விருப்பம் மிகுதலும் இயல்பு. உயிர்க்கு உயிரன்னர்.

(குறு: 218:15)

யாரினு மினியன் பேரன் பினனே.

(குறு: 85:1-2)

எனவருவன அன்பின் மிகுதியைப் புலப்படுத்தும்.

அன்பின் ஏதுவாக அருள் பிறக்கும். பொருளுக்காகப் பிரிகின்ற ஒருவன் அன்பையும் அருளையும் விடுத்துத் தன் மனத்தைப் பொருள் மேல் வைத்துச் செல்கிறான்.

அருளும் அன்பும் நீக்கித் துணை துறந்தோம்.
பொருள்வயிற் பிரிவோர்.

(குறு: 20:1-2)

என்று இத்தகைய மனநிலையுடைய ஒருவன் வருணிக்கப்படு கின்றான். அருளும் அன்பும் நீங்கிப் பாவம் இழைத்தார் நரகத்திற்கு ஆளாவர் என்று நம்பினர்.

அருளும் அன்பும் நீக்கி நீங்கா
நிரயம் கொள்பவரோடு ஒன்றாது காவல்
குழவி கொள்பவரின் ஒம்புமதி."

(புறம்:5:5-7)

என அரசன் ஒருவன் அறிவுறுத்தப்படுகிறான்.

ஒருவரையொருவர் கண்ணாற் காணாமலேயே ஒத்த உணர்ச்சி யுடையர்களிடத்து அனபு பிறக்கும். அன்பின் முதிர்ச்சியே நட்பு. உயிருடன் உயிர் கலந்து ஓருயிராய் ஒன்றிய தன்மையதாம் உத்தம மான நட்பு.

இந்நட்பில் வெறுப்பு என்பது தலை காட்டுவதில்லை. இந் நட்புக்குப் பிரிவு என்பதும் என்றும் இல்லை. யாராலும் பிரிக்க முடியாத அத்தனை நெருக்கமாக அமைந்தது உயர்ந்த நட்பு. இருதலைப் புள்ளிற்கு ஓருயிர் அமைந்தாற் போன்று ஈருடல் ஓருயிராய் விளங்கும் நீர்மையராவர் நட்பினர். மேலும் பிறப்புத் தோறும் தொடர்ந்து வரும் பிணைப்புமாம்.

உயிர்கலந்து ஒன்றிய தொன்றுபடு நட்பின்
செயதீர் நெஞ்சமொடு செறிந்தோர்.

(அக: 205:1-2)

உயிர்ஓரன்ன செயிர்தீர் நட்பின்
இருதலைப் புள்ளின் ஓர்உயிரம்மே.

(அக:12:4-5)

என்றும் பிரியாத பிணைப்பு மிகச் சீரியர்மாட்டே நிகழ்வது. செல்வக் காலத்து உடனிருந்து துன்பக்காலத்தில் பிரிவோர் சீரியரல்லர். பொருளுக்கு ஆசைப்பட்டு நட்பிற்குத் துரோகம் விளைவிப்போர் சிறப்புடையரல்லர். சேர்ந்திருக்கும் காலத்துப் புகழ்ந்து கூறிப் பிரிந்த இடத்தில் பழி கூறுவோர் நட்புச் சீரியதன்று. நட்பினர்களிடமிருந்து மறை பொருள்களைத் தெரிந்துகொண்டு அவற்றை வெளியிலே பரப்பு வோர் பெருமையுடையரல்லர்.

பரத்தையர்

காதற்பரத்தை இற்பரத்தை, சேரிப்பரத்தையென்று சங்க இலக்கியங்கள் சுட்டுகின்றன. பொருட்பெண்டிர் என்ற தொடரிலிருந்து இவர்கள் பொருளுக்காகத் தமது உடலை விற்றனர் என்ற கருத்திலே பேசப்படுகின்றது. **தமிழர் தம் வாழ்வியல் நெறியிலே பரத்தமை வாழ்வு நிகழ்ந்துள்ளமை அறியக்கிடக்கின்றது.** வரைவின் மகளிர் எனவும் அக்காலத்தில் இவர்கள் அறியப்பட்டுள்ளனர். பரத்தையர் ஏழிசையாழை வாசிக்கும் இன்னிசைக் கலையில் சிறந்திருந்தனர். கொண்டையிலே வெண்ணிறப் பூக்களை அணிந்துகொள்வர். பிறமண்டலத்தாரும் உள்ளூரிலுமாய்த் தம் வடிவழகை விரும்பிவரும் இளையராகிய செல்வர் பலரை விரும்பிச் சேர்வர் ; கூடுவர்.

முற்படப் பலருடன் புணர்ந்த புணர்ச்சியாற் குலைந்த ஒப்பனை யைச் சீர்செய்துகொள்வர். தம்மை அடுத்துவரும் செல்வரை விருப்பத்துடன் பொய் வார்த்தையால் முதலிற் கூட்டிக்கொண்டு நுண்ணிய பூண்களோடு கூடிய அவர்தம் மார்பைத் தம் மார்பிலே படுப்படும்படியாகத் தழுவிக்கொள்வர். இங்ஙனம் அன்புடையர் போலக் கூடிய தழுவலை அவர் பொருள் தரும் அளவும் மறைத்து அவருடைய செல்வம் எல்லாவற்றையும் வாங்கிக்கொள்வர். வண்டு பூவில் தேனை உண்டு நீங்குவதுபோல் பொருள் பெற்ற பின் இவரைத் திரும்பியும் பாரார். **(பரத்தை கரும்பு போன்றவள்; மனைவி நெல் போன்றவள்)** பழுத்த மரத்தைத் தேடியலையும் பறவைபோல் மேலும் பொருள் தரும் பிறரை நாடித் தம்முயிரைப் பாதுகாக்கின்ற பரத்தை வாழ்க்கையிலே திளைத்து நின்றனர். தம்மைக் கண்டாரை நெஞ்சக்

காமத்தால் வருத்தமுறச் செய்வித்து அவர்பால் உள்ள பொருள்களைக் கொள்ளை கொள்ளுதலின் இவரை **நெஞ்சு நடுக்குறூக் கொண்டி மகளிர்.** (மது. காஞ் . 559-589) என்கிறார்.

புலவியாற் கற்பு வாழ்க்கை சிறத்தற்கு இப்பரத்தையர் ஏதுவாக உள்ளனர் என்றும் தமிழை ஆராயாதார் களவு கற்பொழுக்கப் பயனை உணர்ந்து கொள்ளப்படார் என்றும் பரத்தையரையும் வாழ்வின் ஓர் அங்கமாகப் ***பரிபாடல்*** குறிப்பதும் கருதற்பாலது.

காதற் காமம், காமத்துச் சிறந்தது
விருப்போர் ஒத்து மெய்யுறு புணர்ச்சி
புலத்தலின் சிறந்தது கற்பே அதுதான்
இரத்தலும் ஈதலும் இவை உள் ளீடாப்
பரத்தை உள்ளதுவே, பண்பு குகழவுங்
தோள்புதிது உண்ட பரத்தை இல்சிவப்புற
நாள்அணிந்து உலக்கும் சுணங்கறை அதுவே.

(பரி: 9;12-26)

இப்பாடற்பகுதி அகப்பொருளாம் இல்வாழ்வின் களவு கற்பு நிகழச்சிகளையும் கற்பு வாழ்வின் இன்பச் சிறப்பை மிகுவித்தற்குப் பரத்தையும் ஏதுவாக இடைவருதலையும் விளக்குகிறது. ஆண்மக்களு டைய மனைவிட்டுப் பிரிதல் நிகழ்ச்சியில் **பரத்தையர் பிரிவு** ஒன்று என்றும்

பரத்தை வாயில் நால்வர்க்கும் உரித்தே
நிலத்திரிபு இன்று அஃது.

(தொல்: பொருள்: 28)

என்றும் **தொல்காப்பியர்** கூறுவதனாலும் இவ்வொழுக்கம் தீமை யுடையதாக அந்நாளில் கடியப்படவில்லை என்பது போதரும்.

மகளிர் விளையாட்டாயத்தாருடன் கூடிச் சுனைஆறு, கடல் முதலியவற்றில் நீராடி மகிழ்ந்தனர் எனப் பேசுகிறது. ***அகநானூறு*** அதிகாலையில் நீராடுவதோடு பிறகாலங்களிலும் மக்கள் சூழ் நிலைக்கும் தொழில் நிலைக்கும் ஏற்றவகையில் நீராடி வந்தனர். சில காலங்களில் எண்ணெய் தேய்த்தும் நீராடினர். மகவீன்ற மகளிர்க்கு உரியதாகத் தொல்காப்பியர் கூறும் **நெய்யணி மயக்கம்** (தொல்: கள:5) இவ்வழக்கத்தைக் காட்டும். புதல்வர்ப் பயந்த மகளிர் (பயந்த - பெற்ற) ஈன்றணியை வருத்தம் நீங்கியபின் சுற்றத்தாருடன் குளத்திற்

சென்று குளித்தலை மதுரைக்காஞ்சியுங் கூறுகிறது. (மது: கா: 600-603.)

நெய்யும் குய்யும் ஆடிமெய் யோடு
மாசு பட்டென்றே கலிங்கமும்.

(நற்: 380:11-12)

என மகவீன்ற மகள் ஒருத்தி நெய்யாடியதனால் அவள் ஆடை மாசுபடிந்தமை விளக்கப்படுகிறது. குளித்து முடிந்ததும் கூந்தலில் உள்ள நீரைப் பிழிந்து அதனை உலரவிடுவர். (குறிஞ்: 59-60)

பெண்கள் கச்சுக் கட்டுதல்

பெண்கள் மார்பில் கச்சுக்கட்டும் பழக்கம் உடையராய் இருந்தனர். கச்சுக்களைச் செய்தபின் அதன் விளிம்புகளை முடிதலும் ஒரு கைவினையாகும். இத்தொழில் புரிவோர் (வம்புநிறை முடிநர்) (ம:514) எனக் குறிப்பிடப்படுவர். இக்கச்சு பூத்தொழிலால் அழகு செய்யப்பெற்றிருக்கும். காந்தள் மலர் பரந்து கிடக்கின்ற நிறம் பல கச்சுப்பரந்த களம் போல அழகு பெறப் பொலிவுற்று விளங்கியது என்கிறார் கபிலர் (குறி: 197-199). பெண்கள் முலையை மறைத்துக் கச்சினை இழுத்துக் கட்டுவது மரபு.

பூந்துகில் மரீஇய ஏந்துகோட்டு அல்குல்
அம்மாசு ஊர்ந்த அவர்நூற் கலிங்கமொடு
புனையா ஓவியம் கடுப்ப புனைவுஇல்
தளிர்ஏர் மேனி கடுப்ப புனைவுஇல்
தளிர் ஏர் மேனி தாய சுணங்கின்
அம்பனைத் தடைஇயு மென்தோள், முகிழ்மலை
வம்பு விசித்து யாத்த வாங்குகாய் நுசுப்பின்.

(நெடுநல்: 145-151)

என்று மகளிர் துயிலெடுத்துக் கச்சுக்கட்டும் இயல்பினை எடுத்துரைக் கிறார் **நக்கீரர்.**

இக்காலத்தைப் போல் சட்டை அணியும் பழக்கம் முற்காலத்துத் தமிழரிடை இல்லை. தமிழகத்துக்கு வந்த யவனர் **மெய்ப்பை** என வழங்கும் ஒருவகைச் சட்டையை அணிந்துகொண்டனர்.

தொய்யில் எழுதுதல்

தமிழ் மகளிர் தம் ***முலைமீதும் தோள்மீதும்*** வண்ணக் குளம் பினால் தொய்யிலும் கரும்பும் எழுதிக் கொள்வதுண்டு. இவற்றைத் தம் ***காதலியர்க்குக் காதலர்கள் எழுதினர்*** என்றுங் குறிக்கப்பட்டுள்ளது. இவள்,

உருத்துஎழு வனமுலை ஒளிபெற எழுதிய
தொய்யில் காப்போர் அறிதலும் அறியார்.
(குறு: 276:2-4)

நெய்தல் தெறிக்கவும் வல்லன், நெடுமென் தோள்
பெய்அம்பு ஈர்க்கவும் வல்லவன் இளமுலைமெல்
தொய்யில் எழுதவும் வல்லன், தன்கையில்
சீலை வல்லான் போலும் செறிவினான் (கலி: 143:31-34)

எனவும் வருவன காண்க.

திலகமிடுதல்

தமிழ்மகளிர் தமது நெற்றியில் திலகம் இடுதல் அந்நாள் தொட்டுவரும் மரபேயாகும். (கலி: 92:35) செந்நிறத் திலகமிடுதல் மாபெருவழக்காயிருந்தது.

நெற்றி விழியன நிறைதிலகம் இட்டாளே
கொற்றவை கோலம் கொண்டு ஓர்பெண்.
(பரி: 11:99-100)

கொற்றவையின் நெருப்பாகிய நெற்றி விழிக்கு ஒப்பாகத் திலகம் இட்டாள் என்பதனால் இங்கே இந்தப் பெண் இட்ட திலகம் செந்நிறத்தது என்பது போதகும்.

கண்ணுக்கு மையிடலும் சங்க இலக்கியத்திலுண்டு. சிலப்பதி காரத்திலே கண்ணகியின் கண் **செங்கண்** என்றும் மாதவி கண் **கருங்கண்** என்றுங் கூறப்பட்டுள்ளது. கண்ணகி கோவலனோடு புணர்ந்து வாழ்ந்தவளாதலால் செங்கண், மாதவி ஆடற்செல்வி **கணிகை** என்பதால் **கருங்கண்ணி** என்றும் வருணிக்கப்பட்டனர்.

திருக்குறளிலே **காமத்துப்பாலில்** புணர்ச்சி விதும்பல் என்ற 129 ஆவது அதிகாரத்திலே **கண்ணின்** அருமையை அதி அற்புதமாகப் பாடியுள்ளார் வள்ளுவர்.

உள்ளக் களித்தலும் காண மகிழ்தலும்
கள்ளுக்கில் காமத்திற் குண்டு. (குறள். 1281)

ஊடற்கண் சென்றேன்மன் தோழி அதுமறந்து
கூடற்கண் சென்றதுஎன் நெஞ்சு. (குறள். 1284)

எழுதுங்கால்கோல்கானாக் கன்னேபோல் கொண்கனை
பழிகாணேன் கண்ட விடத்து. (குறள். 1285)

காணுங்கால் காணேன் தவறாய காணாக்கால்
காணேன் தவறல் லவை. (குறள். 1286)

கண்ணின் துனித்தே கலங்கினாள் புல்லுதல்
என்னினும் தான்விதுப் புற்று (குறள். 1290)

காதற்சிறப்புரைத்தல் எனும் அதிகாரத்தில்,

கண்ணுள்ளார் காத லவராகக் கண்ணும்
எழுதேம் கரபாக்கு அறிந்து. (குறள். 1127)

என்று காதல் கண்ணுடன் தொடர்புபட்டுப் பேசப்படுகிறது.

கண்ணொடு கண்ணிணை கௌவி ஒன்றையொன்று
உண்ணவும் உணர்வும் ஒன்றிட
அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்.

என்று ***கம்பராமாயணம்*** கூறும்.

மணிவாசகராகிய தலைவி,

கண்களிரண்டும் அவன் கழல் கண்டு
களிப்பன ஆகாதே என்கிறாள்.

மாதவியாளிடத்துக் காமமுற்றுக் கோவலன் அவளிடம் சென்ற தைக் கூடாவொழுக்கம் புரிந்தீர் என்றார் இளங்கோவடிகள்.

ஒழுக்கத்தில் தவறுதல் சிறுமைதரும் செயலாகும். ஒழுக்கமே பெருமையும் புகழும் பெருமிதமும் தருவது. **பெண்ணுக்குக் கற்பென்றால் ஆணுக்குக் அறிவும் நிறையும்.** ஆணுக்கு கடமை பகற் பொழுதென்றால்; பெண்ணின் கடமைகள் இரவுப் பொழுதில் எனவும்

காணலாம். ஆணுக்குப் புறம், பெண்ணுக்கு அகம் (வீடு). பொன் முதலானவற்றாலான ஆபரணம் சிதைந்தால் அதை மீண்டும் செய்து கொள்ள இயலும். **ஆனால் ஒழுக்கம் தவறினால் மீண்டும் சீர் செய்வது இயலாததாகும்.** ஒழுக்கந்தவறிய மாசைப்போக்கி மாண் புடைய புகழை நிறுத்துவது எத்தகைய உயர்நிலையுடை யார்க்கும் இயலாது.

முத்தினும் மணியினும் பொன்னினும் அத்துணை
நோ்வரும் குரைய இயல்பும் கலம்கெடின் புணரும்
சார்பும் வியப்பும் இயல்பும் குன்றின்
மாசு அறக்கழீஇ வாங்கு புகழ் நிறுத்தல்
ஆசு அறு காட்சி ஐயர்க்கும் அந்நிலை
எளிய என்னார் தொல்மருங்கு அறிஞர். (குறி. 13-18)

என்பதால் ஒழுக்கத்தின் விழுப்பம் புலனாகும். ஒழுக்கமுடை யாரே **அறவர்** என்று சிறப்பிக்கப்படுவர். (அகம்:304:19; புறம்:399: 19).

ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும். (குறள். 131)

மறப்பினும் ஒத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கங் குன்றக் கெடும். (குறள் 134)

(ஒத்து - வேதம்)
(எ+டு) இவ்வோத்து என்னுதலிற்றோவேனீன்
தமிழ் நுதலிற்று

என்பது இறையனார் களவியல் உரை.

நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும். (குறள் 138)

ஆன்மாக்கள் ஈருருக் கொண்டு (ஆண் - பெண்) இன்பம் துய்ப்பது இறைவனின் விருப்பம் ; இயற்கை. அதுவே படைப்புக் கொள்கை. ***பெண் ஒன்றும் பாவத்தின்*** வடிவமல்ல. அப்பெண்ணிடத்து உடலுறவு கொள்வது தான் சுகம் என்றில்லை. உள்ளங்களின் இணைப்பிலும் இன்பமொன்று விளையும் (உ+ம்) இராமகிருஷ்ணர் - அன்னைசாராதாதேவி. அது மேம்பட்டது ; தூய்மையானது. ***யார் பெண்ணை இழித்தும், நெளித்தும் பழித்தும் பேசுகிறாரோ அவர் தாம் அறியாமையில் விழுந்தவர். அசுத்தமாயையில் அழுந்திக்கிடப்பார். பிருங்கியின் வரலாறு காண்க.***

காதலும் மோகமும் வெவ்வேறு. காதல் இரண்டு உள்ளத்தில் ஏற்படும் ஒத்த உணர்வு. மோகம் ஒரு தலையானது. காதலின் தன்மை அன்பு; மோகத்தின் தன்மை ஆசை, மாதரார் குழல்வாசம் மனதில் தைத்தாலும் மாயை பற்றிய அறிவுடையோர் அந்த மையலைத் தமது அறிவின் துணைக்கொண்டு விலக்கமுடியும். மையல் தோன்றி விலகுவது வேறு ; மையலே தோன்றாத நிலை அடைவது வேறு. மையலற்றிருப்பது உபாசகன் கடமை. இதனை உணர்த்தவே கந்தர நுபூதியிலே ***ஊஞ்சல்படும் பரிசு என்று ஒழிவேன்*** என்கிறார் அருண கிரிநாதர். ***மனிதர்களுக்கு முன்மாதியானது தெய்வ உறவு*** என்பதை ***பணியா என வள்ளி பதம் பணியும் தணியா அதிமோக தயாபரனே*** என்று பாடுகிறார் அருணகிரிநாதர்.

கண்ணின் பார்வை வார்த்தையில் சொல்ல இயலாதவற்றையும் சொல்லத் தகாதவற்றையுங் கூடச் சொல்லும். பார்வைக்கு அர்த்தம் உண்டு. ஒருவனது நோக்கை நெடுநோக்கு, சுடுநோக்கு, தொடு நோக்கு எனப் பலவாறு பிரித்தறியலாம். ***பெண்களைப் பார்க்கும் போது பார்வையின் ஈர்ப்புச் சக்தியைப் பயன்படுத்தக்கூடாது.*** அவர் களுடைய உடம்பையும் உள்ளத்தையும் துளைப்பது போல் உறுத்து நோக்குவது (Hypnotic Sight) ஒழுக்கக்கேடான செயலாகும். ***பண்பாள னுக்கு அழகு தன்னுடைய பார்வையைத் தனக்கு முன் இரண்டு அல்லது இரண்டரை அடிக்கு மேல் நீளவிடாமற் செல்வதாம்.*** அந்தப் பண்பு அநேக பாவங்களிலிருந்து அவனை விலக்கிவைக்கும். எத்தனைதான் எச்சரிக்கையோடு ஒருவன் நடந்து கொண்டாலும் தற்செயலாகவேனும் பெண்ணிச்சை அவனுள் தலையெடுத்து ஆதிக்கம் செலுத்தத் தொடங்கி விடும். ***எப்போதும் கடவுள் நினைப்பை முன்னிலைப்படுத்திக் கொண்டார்க்கு அத்தகைய இடர்ப்பாடு இல்லை எனலாம்.***

கணத்தில் தோன்றும் பெண்ணாசை எக் காலத்திற்கும் ஆட்டிப் படைப்பதாகிவிடும். ***பெண்ணிடத்து மையல் கொண்டவன் தன்னுடைய ஒழுக்கத்தையும் கல்வியையும் செல்வத்தையும் இழந்து விடுகிறான்.*** மலையளவு சுமையைத் தலைமீது வைத்து அலைகின்ற நிலை அவனுக்கு ஏற்பட்டுவிடுகிறது. ***மட்டிர் குழல் மங்கையர் மையல் வலைப்பட்டுசல் படும் பரிசு*** என்கிறார் அருணகிரிநாதப் பெருமான்.

பெண்ணின் சுகத்தைப் பெரிதாய்க் கருதித் தனது இளமையைச் செலவிடுகிறவனுக்கு அழிவுகள் மிகப் பல. காமவழியில் செயலற்றுப் போனவன் தான் கடைதேறுவதற்கு குமாரப்பருவத்து முருகனிடமே பத்தினிவிரதனாய் இலங்கும் தெய்வத்திடம் சரண்புகுவது இயல்பாம்.

மணவாழ்வே உன்னதமானது என்பதே முருக உபாசனையின் பயன் ; தத்துவம்.

பெண்களைத் தாய்நிலையில் வைத்துப் பார்ப்பதே உத்தம மானது ***சிங்கார மடந்தையர் தீனெறி*** என்பர் அருணகிரிநாதர், பிறன்மனை நயத்தலையும் பெண்ணாசையையும் விட்டுவிட்டால் ***அறிவுமயங்காது வாழலாம், புலனடக்கமே இதற்கு வேண்டும்.***

தெய்வநெறி அறியாத ஆணும் பெண்ணும் நடத்தும் வாழ்க்கை துன்பங்களுக்கு உறைவிடமாகிவிடும். கணவனின் தெய்விக வாழ்க் கைக்குத்தானும் ஒத்த மனத்துடன் துணையாய் நின்ற மனைவியரைப் புராணங்கள் எடுத்துரைக்கின்றன. அந்தப் பெண்களிடம் தெய்விகப் பண்பு நிரம்பியிருந்தது. ஒவ்வொரு மனிதனும் மூன்றுவகைப் பண்பு களைப் பெற்றிருக்கின்றான். அவை மிருகப்பண்பு, மனிதப்பண்பு, தெய்வப்பண்பு ஆகியன. மிருகப்பண்பு என்பது உடற்பண்பு ஆகும். பசி, துயில், காமம் என்பன உடற் பண்புகளில் குறிப்பிடத்தக்கவை. இவற்றை வென்று **போரின்பம்தரும் ஆன்மிகப் பண்பிலே வாழ முனை வதே வாழ்வுத் துயரினின்றும் விடுபடவழியாகும்.**

மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில்நல்லகதிக்கு யாதுமோர் குறைவில்லை (க்)
கண்ணினல் லஃதுறும் கழுமல வளநகர்ப்
பெண்ணினல் லாளொடும் பெருந்தகை இருந்ததே.

(திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்)

கனகசபாபதி நாகேஸ்வரன்

சைவமும் தமிழும்

இந்து மதம் ஒரு மதமன்று. இந்துமதம் என்ற சொல் கடவுள், ஆசிரியன், பிரமாணநூல், வழிபாடு என்பவற்றுள் எதன் பெயரையுஞ் சார்ந்தாகத் தெரியவில்லை. சிந்து நதிக்கரையில் இருந்தவர்களை ஹிந்துக்கள் என்று **பாரசீகர்** அழைத்தனர். அவர்களை இந்துக்கள் என்று **கிரேக்கர்கள்** கூறினர். இந்துக்கள் என்ற பெயரிலிருந்தே இந்தியா என்ற பெயர் ஏற்பட்டது. இந்திய நாட்டிலுள்ள பூர்விக மக்கள் ஐரோப்பாக் கண்டத்தாரால் இந்துக்கள் என்று அழைக்கப்பட்டனர். இந்துக்களுக்குள் பல மதங்கள் இருப்பதை அறியாத **மேலை நாட்டினர்** இந்துக்கள் எலலோருக்கும் ஒருமதம் இருப்பதாக எண்ணி **இந்துமதம்** என்ற பெயரைத் தோற்றுவித்தனர். இந்துமதம் என்ற பெயர் தமிழிலாவது வடமொழியிலாவது கிடையாது என்கிறார் ***தமிழர் சமயம்*** (ப.440) எனும் நூலை எழுதிய ஆய்வாளர் கா.சுப்பிரமணியபிள்ளை. வடமொழி வேதத்தைப் பிரமாணமாகக் கொண்ட வைதிகர்கள் மதமே இந்துமதம் என்று பேசுபவராய் அம் மதமே இந்திய நாட்டிலுள்ள எல்லா மக்களுக்கும் உரியமதம் என்று நிலைநாட்ட முன்வந்துள்ளனர்.

ஆங்கில மதம், ஜப்பானிய மதம், அமெரிக்க மதம் என்று மதங்கள் இருக்குமாயின் இந்துமதம் என்ற ஒரு மதமும் உண்டென லாம். அவை இல்லாதது போல இந்துமதம் என்ற ஒரு மதமும் கிடையாது. இந்தியாவில் தோன்றிய இந்துக்கள், மகமதியர் முதலிய எல்லாரையும் இந்தியர்கள் என்பது பொருந்தும். ஆனால் இந்தியாவில் தோன்றிய புத்தம்,ஜைனம், வைதிகம், ஸ்மார்த்தம், சைவம், வைணவம் முதலிய சகல மதங்களையும் இந்துமதம் என்று கூறுதல் பொருத்தமா யில்லை. ஆதலால் வடமொழி வேதத்தின் வேறான சிறந்த பிரமாணங் களையுடைய தமிழ்ச் சைவ வைணவர்கள் தங்கள் சமயங்களை இந்துமதம் என்று கூறுதல் அறிவுக்கும் பொருந்துவதாயில்லை.

சைவம் காத்த **நாவலர்பெருமான்** எழுதிய கட்டுரைகளையும் நூல்களையும் - பிள்ளைகளுக்கு எழுதிய பாடப் புத்தகங்கள் உட்பட நோக்கினால் - **கண்டிப்பான ஒழுக்கத்தை** ஆகக் கூடியளவு வற்புறுத் தும் மார்க்கத்தை நாவலர் சிறப்பித்திருத்தல் தெளிவாகும். இன்னும் சொல்வதானால், தன்னளவில் நாவலர் தனிப் பக்திமானாக இருந்தி ருப்பினும், பொதுவில் **பக்தியைப் பார்க்கிலும்** ஒழுக்கசீலத்தையே சமயிகள் **வழுவாது கடைப்பிடிக்க வேண்டியதாக** முதன்மைப்படுத்தினர் என்பது மனங்கொள்ளத்தக்கது. (இதனை இன்னொரு விதத்திலும்

விவரித்தல் கூடும். சமயத்தை இருவழிகளில் வாழ்க்கையுடன் இணைக் கலாம். **அறிவுரீதியான** விளக்கத்துடன் சமயத்தைக் கடைப்பிடிப்பது ஒருவழி ; **அநுபூதி** நெறியில் உணர்ச்சிரீதியாகக் கடைப்பிடிப்பது மற்றையவழி. நாவலர் வாழ்க்கையில் அநுபூதி நெறி முக்கியத்துவம் பெறவில்லை என்றே கூறத் தோன்றுகிறது. (இதன் விளைவுகள் விரிவாக ஆராய வேண்டியவை.) தூய்மையுணர்சியுடனும் மரபுணர்ச்சி யுடனும் சமயவாழ்க்கையையே இலட்சியமாகக்கொண்டு வாழ்ந்த நாவலரவர்கள் அறிவிலே வரலாற்றின் கருவியாகச் சமயத்தின் நவீன மய மாக்கத்திற்குக் காரணகர்த்தக்களில் ஒருவராய் இருந்திருக்கிறார்.

> **சிவபெருமானிலும் உயர்ந்தவர் உண்டு என்றாவது சிவபெரு மானுக்குச் சன்மானம் உடையவர் உண்டு என்றாவது கொள்ளாது சிவத்துரோகம்... சைவசமயிகள் என்று பெயரிட்டுக் கொண்டு, அநேக மூடர்கள் எற்கிற குட்ட தேவதைகளையும் காடன், மாடன், சுடலைமாடன், காட்டேறி, மதுரைவீரன், கறுப்பன், பதினெட்டாம் கறுப்பன், சங்கிலிக் கறுப்பன், பெரிய தம்பிரான், முனி, கண்ணகி, பேய்ச்சி முதலானவர்களையும் வணங்குகிறார்கள்..... இவர்கள் எல்லாரும் சிவத்துரோகிகள், இவர்களே அஞ்ஞானிகள்.**
>
> (எ + டு, பேராசிரியர் கலாநிதி கா. கைலாசநாதக் குருக்கள்)

இந்திய அல்லது இந்து மதங்கள் பல. அவற்றுள் சைவம், வைணவம் இருமதங்கள் என்றால் பொருந்துவதே. வேத வாக்கியங் களுக்குச் சைவத்திற்கும் வைணவத்திற்கும் ஏற்ற முறையில் பொருள் கொள்ளுதல் பைபிளுக்கும் குர்ஆனுக்கும் சைவ வைணவப்பொருள் கொள்ளுதல் போலாகும். வேதத்திலும் உபநிடதத்திலும் சிற்சில இடங்களில் சைவ வைணவக் கருத்துக்கள் காணப்படுதல் பற்றி அவற்றைப் பிரமாணமாகச் சைவர்களும் வைணவர்களும் கொள்ளுதல் பொருத்த மின்றாம். சைவச் சிறப்புப் பிரமாண நூல்களாகிய பன்னிரு திருமுறைகளுக்கும், பதினான்கு சித்தாந்த சாத்திரங்களுக்கும் மாறு பாடில்லாத வடநூற் பகுதிகளுமே தழுவத்தக்கன என்று அகில உலகச் சைவ மகாநாடு தீர்மானித்துள்ளது.

தமிழ்ச் சைவ, வைணவ சமயங்கள் அடிப்படையில் ஒத்த கருத்துடையன. அது ***தொல்காப்பியம், திருக்குறள், பரிபாடல்*** முதலிய சங்க நூலாராய்ச்சியாலும், தேவாரத் திருவாசக, திருவாய் மொழி, திருமொழி ஆராய்ச்சியாலும் நன்கு புலனாகும். சைவம், வைணவம் என இருபிரிவடங்கிய ஒரு சமயத்தைத் **தமிழர் சமயம்** என்று கருதி

அதனைத் தமிழ்மக்கள் போற்றுவது அவசியமாகும். **கடவுள்** என்னுஞ் சொல் கடவுளொருவரைத் தவிர வேறு எப் பொருளையும் குறிக்கப் பயன்படுவதில்லை. உலகெலாம் உணர்ந்து ஓதற்கரிய முதல்வனைக் குறிப்பதற்கு வேறு எந்தச் சொல்லும் அத்தகைய பொருத்தமுடைய தென்று தோன்றவில்லை. இந்துசமயம் என்ற பெயர் வழக்கும், ஷண்மதத்தில் ஒன்று சைவம் என்ற கருத்து நிலையும் பிறருக் குரியவை. அவை அவரவர் நோக்கைப் பொறுத்துள்ளவை. சிவன் ஆறு வேறு கடவுளில் ஒருவரல்ல ; **அவர் அனைத்துக்கும் மேலான முழுமுதற் கடவுள்** என்பதையும் நம்மால் ஆகுமட்டும் பிரகடனப்படுத்திச் சனாதன சைவநிலைக்கு உறுதிபெற நிற்றல் வேண்டும் என்ற கருத்தினைச் சைவத் தமிழ் மக்கள் மனங்கொள்ள வேண்டும்.

சித்தாந்த சைவம், காஷ்மீர சைவம், வீர சைவம், ஆகமார்த்த சைவமாகவும் அது இந்திய உபகண்டத்திலும் அப்பாலும், பரந்து கிளைத்துக் காணப்படுகிறது. **சித்தாந்த சைவம் தமிழ் மக்கள் வளர்த் தெடுத்த சமயம்.** அதன் தத்துவங்கள். **சைவசித்தாந்தம்** எனப் பெயர் பெறுவன. ***மணிமேகலையிலும், திருமந்திரத்திலும்*** (கி.பி 5 அல்லது 6 ஆம் நூற்றாண்டு) சித்தாந்த சைவத்தின் சமயமுடிவுகள் உருப்பெற்றன.

கற்பன கற்றுக் கலைமன்னு மெய்யோகம்
முற்பத ஞான முறை முறை நண்ணியே
சொற்பதமே வித் தூரிசற்று மேலான
தற்பரங் கண்டுளோர் சைவசித்தாந்தமே.

(திருமந்திரம்)

எமது சமயம் சுத்தாத்துவித சைவசித்தாந்தம்.
சைவம் சீவசம்பந்தம், உயிரின் உயர்வற உயர்ந்த உயர்வே
சித்தாந்தம். முடிந்த முடிவென்பது சித்தாந்தம்
என்பதன் பொருள்.

என்று எழுதியுள்ளார் இலக்கிய கலாநிதி, பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, சைவத்தின் பெருந்தத்துவத்தினை ,

பேரொளிப் பிழம்பாகிய இறைவெளிக்குச்
சிவசக்தியென்று பெயர். அது ஒரு ஞான சமுத்திரம்,
கருணைக்கடல், இரங்காமலிருக்கமாட்டாமை
அதன் இயற்கை.

என்று மேலும் விவரிக்கிறார் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

சைவசமயம் அன்புநெறி, அறிவுநெறி, அறநெறி, ஒழுக்கநெறி, அனுபவநெறி, இல்லறநெறி, துறவுநெறி, சித்தர்நெறி (தியான நெறி) பக்திநெறி எனவமைந்து உயிர்களை உய்வீக்கிறது.

தமிழர் சைவத்தில் மெய்க் கொள்கையின் அறிவே வற்புறுத்தப் படுவதன்றி வழிகாட்டுமுறை அவரவர் கருத்திற்கேற்பவும், வசதிக்கேற் பவும் வகுத்துக்கொள்ள இடமுண்டு.

அப்பனை ஆரா வமுதினை வள்ளலை
எப்பரி சாயினும் ஏத்துமின் ஏத்துமின்
அப்பரிசு ஈசன் அருள்பெறலாமே.

என்கிறார் திருமூலர்.

அருணைக் கலம்பகம் என்னும் நூலிலே எல்லப்ப நாவலர் மிகத் தெளிவாகவும், சுருக்கமாகவும் சைவத்தின் இலட்சியத்தை எடுத்துப் பாடியுள்ளார்.

சைவ எல்லப்பநாவலர் பின்வருவாறு சைவத்தின் மகோன்னதத் துவத்தினைப் பாடியுள்ளார்.

சைவத்தின்மேற் சமயம் வேறில்லையதிற்சார் சீவமாம்
தெய்வத்தின் மேற் தெய்வமில்லெனும் நான்மறைச் செம்பொருள்
வாய்மை வைத்த சீர்திருத் தேவாரமுந் திருவாசகமும்
உய்வைத் தரச் செய்த நால்வர் பொற்றாளெம்முயிர்துணையே.

திருவாசகத்திலே,

எம்பிரானன்றி மற்றோர் தேவரைத் தேவரென்ன
அருவரா தவரைக் கண்டால் அம்மநாம் அஞ்சுமாறே.

என வருகின்றமையைக் காணலாம். தமிழராகிய நமது சமயம் **சைவம்.** சைவ முதற்கடவுள் ஒரே ஒருவர். அவர் **சீவன்.** வழக்கிலேயுள்ள மற்றைக் கடவுளரும் **முதற்கடவுளராதல் இலர்.**

சீவனை முழு முதற் கடவுளாக ஏற்று நிற்கும் சித்தாந்தமானது சைவம் சார்ந்த, சாராத சமயங்களை நான்கு வகைகளாகத் தருகிறது. அவை புறப்புறச் சமயங்கள், புறச்சமயங்கள், அகப்புறச் சமயங்கள், அகச் சமயங்கள் என்பனவாகும். **அவைதிக சமயங்களாறும் புறப்புறச் சமயங்களாகும்.** பாசுபதம், மாவிரதம், காபாலம், வாமம், பைரவம், ஐக்கியபாதம் (வீர சைவம்) ஆகிய ஆறும் அகப்புறச் சமயங்களாகும்.

பாடாணவாதசைவம், பேதவாதம், சிவசமவாதசைவம், ஈஸ்வர அவிகாரவாத சைவம், சிவசங்கிராந்தவாத சைவம், சிவாத்துவித சைவம் எனும் ஆறினையும் **அகச் சமயங்களாக** எடுத்தாண்டனர்.

புறப்புறச் சமயங்கள் ஆறும் **வேதங்களை** ஏற்காத பிரிவினர் களாவர். புறச் சமயத்தவர்கள் அறுவரும் வேதங்களை ஏற்றபோதிலும் சிவாகமங்களைப் புறக்கணித்து நிற்பவர்களாவர். அகப்புறச் சமயத் தவர்கள் அறுவரும் சைவசமய நிலைக்குரியவர்களாக விளங்கிய போதிலும், வேதாகமங்களுக்கும் புறம்பான நூல்களைச் சிறப்புப் பிரமாணமாக ஏற்று நிற்பதால் வேறுபட்டவர்களாக விளங்கினர். அகச் சமயத்தார்களும் சைவசித்தாந்த நெறியோடு நெருங்கிய தொடர்புடைய வர்களாக விளங்கிய போதிலும் குறிப்பாக முத்தி நிலையில் வேறுபட்டு விளக்க முற்படுவதனால் சைவசித்தாந்திகளினின்றும் வேறுபடுபவர் களாவர். ***தத்துவ நிஜாது போக சாரம்*** எனும் நூல் சிவனுடன் சம்பந்தமாகின்ற சைவம் எட்டெனக் கூறுகிறது. அவையாவன: பாசுபதம், மாவிரதம், காபாலம், வாமம், வைரவம், ஐக்கியவாதசைவம், காளா முகம், சிவாத்துவிதசைவம் என்பனவாம். இன்னுஞ் சிலர் சைவத்தை வேத சைவர், தாந்திரிக சைவர், மிச்சிர சைவர் என மூன்றாக வகுத்துரைப்பதுமுண்டு.

இந்து சமயம் இருக்கு வேதசமயமன்று. **சிவலிங்கம் இருக்கு வேதத்திற் பழிக்கப்படுகிறது.** இந்துசமய வரலாற்றின் பழைய நிலை ஒன்றினையே சிற்துவெளிச் சமயத்திற் காண்கிறோம். இனி, சிந்து வெளிக்கு முற்பட்ட சைவசமய ஆதாரங்களைப் பார்ப்போம்.

முக்கண்ணன், நீலகண்டமுடையவன், திங்கட்கண்ணியன், உமையொருகூறன், முபுரமெரித்தவன், நீலமேனி வாலிழைபாகத்து ஒருவன், திரிபுரமெரித்த விரிசடைக்கடவுள், முக்கட் செல்வன், உமை பொருபாகன், கண்ணுதலோன், இமயவன், சங்கரன், அரன் எனும் பெயர்கள் சிவபெருமானைக் குறித்தனவாயுள்ளன. தைத்திரிய ஆரணி யத்தில் ***சிவலிங்காய நம*** எனச் சிவலிங்கவடிவம் பாராட்டப்படுகிறது.

வேதங்களைப் படிக்கவும் படிப்பிக்கவும் செய்தல், மத சம்பந்த மான சடங்குகளும் புரோகிதமும், நடத்துதல், யாகம் செய்தல், தானம் ஏற்றுக் கொள்ளுதல் போன்றவை பார்ப்பனர்களின் தருமமாகும். மனுஸ் மிருதியிலே நால்வகை வருணப்பாகுபாடு சுட்டப்பட்டுள்ளது.

பூஜாபரிபாலனம், வேத ஆராய்ச்சி, தானம், பகைவர்களை அழித்தல் முதலியனை கூஷத்திரியர்களின் தருமமாகும். விலங்குகளைப்

பாதுகாத்தல், ஆராய்ச்சி, வணிகம் இவை வைசியர் தர்மங்கள். இந்த மூன்று வருணத்தாருக்கும், எதிர்ப்போ பொறாமையோ இன்றிப் பாத சேவை செய்வது என்ற ஒரே தர்மமே சூத்திரர்களுக்கு விதிக்கப்பட்டது. இருக்குவேதத் துதிப்பாடங்களில் பதினொரு இடங்களில் **சிவ** எனும் சொல்லாட்சி அமைந்துள்ளது. உருத்திரனைச் சுட்டுவதாய் உபநிடதத் தில் சிவன் என்னும் பெயர்வருகிறது. உருத்திரன் துன்பத்தை நீக்கு வதும் இன்பத்தை அருளுதலும் ஆகிய இருவகைத் தொழில் ஆற்றுப வராகவுள்ளார்.

இன்றைய சைவசமயத்திற்கு விளக்கந்தந்துள்ள ஆய்வாளர் டாக்டர் ப. அருணாசலம் சிந்துவெளியில் சிவலிங்கத்திற்கு முதன்மை யுண்டு. இருக்கு வேதத்தில் அது பழிக்கப்படுகிறது. எனவே **ஆகம நெறிக் கொள்கையும் வேதநெறிக் கொள்கையும் இணைந்த சமயமே சைவம் என்று நிறுவுகிறார்.**

இறைவன் அறிவு வடிவானவனாதலின் அறிவன், அறிவு என்ற சொற்கள் தேவாரத்தில் பயின்று நிற்பன. தோன்றியன யாவும் அழிந்து விடும் இயல்பின. ஆகவே தோன்றாதவைக்கு அழிவுங் கிடையாது. ***இறைவன் அநாதியானவன். ஆகவே முடிவும் இல்லாதவன். பிறப்பிலே சைவர்களாகிய நாம் இறப்பிலும் சைவத்தை விட்டு மாறக்கூடாது.***

தமிழர் நெறியாகிய சைவம் **விரிந்த** நோக்குடைமையால் உலகிலுள்ள யாவராலும் தழுவப்படுதற்குரியதாயிருப்பதோடு நூற் பிரமாணமாகிய கட்டுப்பாடு இல்லாதது. தேவார முதல்வர்கள், மாணிக்கவாசக சுவாமிகள், நம்மாழ்வார் முதலிய சமயப் பெருந் தலைவர்கள் நூற்பிரமாணத்தை வற்புறுத்தாது தங்கள் **உயர்ந்த அனுபவத்தையே** எடுத்துரைத்தனர். இதனால் சுருதிப் பிரமாணத்தைப் பார்க்கிலும் (வேத வழக்கை விட) **அனுபவப் பிரமாணத்தையே** முதன்மையாகத் தமிழர் சமயத் தலைவர்கள் எல்லாரும் கைக் கொண்டனர் என்பது தெளிவு. **உரையினும் அருட்காட்சியே** சிறந்த தென்பது அவர்கள் கருத்து. அருட்காட்சியின் உண்மைத் திறனைப் பகுத்தறிவினால் ஆய்ந்து அறிந்துகொள்வதற்கும் பெருந்துணை புரிந்தவர் ஆசிரியர் மெய்கண்டாரே ஆவர்.

சைவசித்தாந்தம்

சைவத்தின் அடிப்படை **சைவசித்தாந்த அறநோக்கு ஆகும். சைவ சித்தாந்தம் மானுடநேயந் தழுவிய அறவியற் சிந்தனைகளைப் புகட்டி வந்திருக்கிறது.** அறநோக்கைக் கொண்டு சித்தசுத்தி அடைவதையே சைவசித்தாந்தப் பெருநெறி வலியுறுத்தும். சைவசித்தாந்தம் சாத்திர

நூலளவையாலும் தோத்திர நூல்களாலும் நிறுவப்படும். பதினான்கு மெய்கண்டசாத்திரங்களே சைவ சித்தாந்த தத்துவ சாத்திர விளக்கத் திற்கு மூலங்களாக அமைகின்றன. ***சிவஞானபோதம்*** சைவ சித்தாந்த சாத்திரத்தைத் தர்க்கரீதியில் எடுத்தாண்ட தலைசிறந்த நூலாகக் கொள்ளப்படுகிறது. **சைவசித்தாந்தம் இன்பத்தை அடையும் நெறியாகி அறத்தையும் அன்பையும் இணைத்துரைக்கிறது.** சைவ சித்தாந்தம் வாழ்வின் நெறிமுறைகளுக்கூடாக உயர்நிலையை அடைதல் சாத்திய மெனப் போதிக்கிறது. சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நாற்பாதங்கள் சுட்டப்பெறும். உறவுநிலையை அடிப்படையாகக் கொண்டு **தாசமார்க்கம், சற்புத்திரமார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம்** எனும் நான்கு மார்க்கங்களும் எடுத்தாளப்படுகின்றன. இவற்றின் வழி **சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சியம்** எனும் முத்திப்பேறு கிடைக்கும் எனச் சைவசித்தாந்தம் கூறுகிறது.

சரியைநெறி	-	திருநாவுக்கரசர் (அப்பர்)
கிரியை நெறி	-	திருஞானசம்பந்தர் (சம்பந்தர்)
யோகநெறி	-	சுந்தரமூர்த்தி சுவாமிகள் (சுந்தரர்)
ஞானநெறி	-	மாணிக்கவாசக சுவாமிகள் (மணிவாசகர்)

சம்பந்தருக்குப் **பாலையும்,** நாவுக்கரசருக்குச் **சூலையும்,** சுந்தரருக்கு **ஓலையும்,** மணிவாசகருக்குக் **காலையும்** (திருவடி) காட்டி ஆட்கொண்டார் சிவன்.

தன்னலமற்ற பக்தி, தியாகம், சேவை, தொண்டு, பிறர் நலம், அன்பு, பணிவு, அடக்கம் போன்ற பல நற் குணங்கள் கைவரப் பெறுகின்றனவென்று **சைவசித்தாந்தம்** கூறுகிறது. கர்மமார்க்கம், பக்திமார்க்கத்தைவிட, சைவசித்தாந்தம் காட்டும் ஞான மார்க்கம் ஆழமானதும் இயல்புமானதுமாகும். சைவசித்தாந்தமானது சைவம் + சித்தம் + அந்தம் எனும் பகுப்புக்குரியதாகின்றது. சைவம் சிவசம்பந்தத்தையும் சித்தம் முடிவான உண்மையையும் அந்தம் முடி வென்பதையும் சுட்டும் வகையில் சைவத்தின் முடிந்த முடிபான உண்மையாகுமென்பதைச் **சைவசித்தாந்தம்** உணர்த்திநிற்கின்றது. ***வேதாந்தத் தெளிவாம் சைவசித்தாந்தம்*** என்ற சொல்லாட்சி ***சீவப்பிர காசத்தில்*** எடுத்தாளப்பட்டுள்ளது "***பதி, பசு, பாசம்,*** எனும் முப்பொருள் களைப் பிரதிபலிக்கும் வேதாந்தத்தின் தெளிவுப்போதமாகிய சைவ சித்தாந்தம்" என விளக்குகிறார் காசிவாசி செந்திநாதையர்.

பொருள்கள் பதி, பசு, பாசம் என்பது **சைவசித்தாந்தம்.** முதன்மையானது பதியாகிய கடவுள். திருவருளுக்கு மற்றோர் பெயர் சக்தி, **சைவசித்தாந்திகள் சிவத்தை ஆணாகவும், சக்தியைப் பெண்ணாகவும் உருவகிப்பர். *சிவமின்றேற் சக்தியில்லை, சக்தியின்றேற் சிவமில்லை*** என்றும், ***அருளது சக்தியாகும் அரன்றனக்கு, அருளினால் ஆகமத்தே அறியலாம்*** என்றும் அருணந்தி சிவாசாரியர் விளக்குவார்.

***சைவ சித்தாந்திகள்* உலகு என்று குறிபிடும் பொழுது எல்லா உலகங் களையும் (Universality) அவற்றில் வாழும் எல்லா உயிர்களையும் குறிப்பிடுகின்றனர்.**

> **அடிப்படை உண்மைகள் ஐம்புலன்களுக்கு அப்பாற்பட்டவை. அவற்றினை ஊகித்துணர முடியுமேயன்றிக் கண்கூடாகக் காணவியலாதாம். அவ்வாறு ஊகித்தறிவதற்கும் சில முறைகளைக் கையாள வேண்டுமாம். அதற்காகத் தான் முதற்படியில் செம்மையான சிந்தனையையும், இரண்டாவது படியில் அறிவளவை இயலையும் அமைந்து, அவை இரண்டும் ஒருங்கியைந்து செயற்படும் பொழுது தான் உண்மைப்பொருளை ஊகித்துணர முடியும்.**
> என்கிறார் டாக்டர். முத்துராமன்.

மனிதனுக்கு மனிதன் அறிவிலும் ஆற்றலிலும் அழகிலும் அமைப்பிலும் நடையுடை பாவனைகளிலும் வேறுபாடுகளும் வித்தியா சங்களும் உள்ளமையை நாம் காண்கிறோம். இவற்றுக்கெல்லாம் காரணம் கன்மமே. ஏனென்றால் அவரவர்கள் புரிந்த செயலின் தன்மை களுக்கேற்பத் தேகங்களையும் சூழ்நிலைகளையும் பெறுவதே இறை வனின் ஆணை. சித்தாந்த ரீதியில், ஆணவமலமும் நான் என்ற துணிவும் மாயை மலமும் என்னுடைய தேகமென்ற தன்னலமும் ஒன்றுகூடிய காலத்தில் அவற்றின் முடியாகிய மல நீக்கம் செயற்படுத்து கின்றது என்று மேலும் கூறுகிறார் டாக்டர் முத்துராமன்.

மனிதனுடைய முயற்சிக்கும் அப்பாற்பட்ட பொருள் உண்டு என நிறுவுவது **சைவசித்தாந்தமாகும். சைவசித்தாந்தத்** தருமம் வேறு, **இறைவன் வேறல்ல என்றும், நீதி வேறு இறைவன் வேறல்ல என்றும் உணர்த்துகின்றது.** இறைவன் போக்குக்கு உகந்ததெதுவோ அதுவே

சமயத்தில் நீதி. எனவே சைவநீதி சர்வமங்களங்களையும், சர்வ நன்மைகளையும் ஒருங்கே தரும் என்பதே வரலாற்று முடிவாகிறது.

சமய இலட்சியத்தின் இறுதி முடிவாகிய மோட்சமெனும் ஆத்மானந்த அனுபவத்தைப் பெறவைத்தல் என்பது சைவசமயஞ் சார்ந்த சாத்திர நூல்கள் தோத்திர நூல்கள் எல்லாவற்றிற்கும் ஒத்த முடிவு. அவ்வகையான ஒரு இறுதிப் பேற்றுக்கு உபகரிக்கும் அநுகூலப் பண்புகளனைத்துமமைந்த சமயம் சைவசமயம் என்பதும் அங்ஙனமே அதற்கு அத்தன்மையிருத்தல் ஆகும். அறிந்த, உணர்வு பூர்வமாக ஒப்புக்கொள்ளக்கூடிய நியாய ரீதியான விளக்கச் செழிப்பும் உண் டென்பதும் ஒருதலை.

இலக்கியகலாநிதி, பண்டிதர் ஏழாலை மு.கந்தையா பின்வரு மாறு எழுதியுள்ளார்.

> **சமயங்களைப் பலவாகப் படைத்த இறைவன் நோக்கம் அவ்வச் சமயத்தவர் அனைவரும் தத்தம் சமய உண்மைப்படி ஒழுகிப் படிப்படியாக ஆன்ம ஈடேற்றம் பெற்றுயர்ந்து முடிவில் முத்தியின்பப் பேற்றுக் குப் பூரண உத்தரவாதமளிக்கும் உண்மை விளக்கத் தோடு கூடிய சைவசமயஞ் சார்ந்து உய்வுற வேண்டு மென்பதே.**

மக்கள் ஒவ்வொருவருக்கும் இன்றியமையாதது சமயம். ஆனால் அவரவர் ஆத்மிகத் தகுதியையும் தரத்தையும் பொறுத்தே அமையவேண்டுவது. சமயத்தால் எல்லார்க்கும் ஒரே சமயம் பொருந் துவதாயில்லை. அதனால் மனித சமூகத்திற் சமயங்கள் பலவாயின. அவ்வப்பிரிவினர் தத்தம் ஆத்மிகத் தரத்துக்கும் தகுதிக்குமேற்ப மெய்ப் பொருளுணர்வில் படிப்படியாக முன்னேறி வரச்செய்யும் கருணை யால் இறைவனால் எப்போதோ செய்து முடிக்கப்பட்ட காரியம் அது.

அவரவர் ஆன்மிகத் தரநிலையைப்பற்றி அவரவருமறியார் ; அயல வருமறியார், அவரவர்க்கு உள்ளுணர்வாயிருக்கும் இறைவனே அறிவான். இறைவனை அறிந்து இறைவனருளாலே மெய்ஞ்ஞானி களாயிருக்கும் மேலோர்களும் அவனருளால் அறிவர். இது காலங் கண்ட வேதாகம ஞானமுடிவு. ஆதலின் *எல்லாச் சமயமும் இருப்பது நீதி. அவ்வச் சமய நெறிப்பாடுகளைத் தத்தமக்கியலும் வகையால் அனுட்டிப்பதும் நீதி. அப்படி அவ்வச் சமயத்தவர் மேற்கொள்ளும்*

அனுட்டானத்துக்கு மற்றெச் சமயத்தாராயினும் இடைஞ்சல் பண்ணாதிருக்க வேண்டுவதும் நீதி. இதுவும் வேதாகம சம்மத உண்மையே என்றும் கூறுவர் இலக்கியகலாநிதி பண்டிதர் மு.கந்தையா.

ஆண்மக்களுக்கும் பெண்மக்களுக்கும் சம உரிமைகள் கொடுப்பதற்குத் தமிழர் சமயமான சைவம் தடைகூறுவதில்லை. ஆயின் சமுதாய நன்மைக்கென கருதப்பட்ட சில காரணங்களால் இன்னார்க்கு இன்ன கடமைகள் இருத்தல்வேண்டும் என்று முன்னோர் வரையறுத்தனர். இதனைக் **கற்றறிந்த பெண்கள் உணர வேண்டும். சிலவேளைகளில் கல்வியே பண்பாட்டுக்குத் தடை, உலகப் பேரழிவு.**

முடிவாக, தமிழர் திருநெறியாகிய **சைவசமயம் உலகிற்கே பொதுநெறியாகும்** வாய்ப்புடையது. குலப்பிறப்பு, நூல் நம்பிக்கை, **வணக்கமுறைக் கட்டாயம் முதலிய கட்டுப்பாடுகள் இல்லாத ஒரு பெரும் தனிநெறி - சைவநெறி - தமிழர் சமயமாதலின் அது ஒரு காலத்தில் உலகெலாந்தழுவும் ஒப்புயர்வற்ற மாண்புடையதாய் விளங்கும்.**

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.
(கந்தபுராணம்)

கனகசபாபதி நாகேஸ்வரன்

இந்துக் கல்லூரிகளும் தமிழ்க்கல்வி மரபும்

இன்றும் பல புகழ்பெற்ற கல்விமான்களும் பொதுமக்களும் ஆங்கில மிஷனரிக் கல்விதான் எமது சைவத்தமிழ் மக்களுக்கு உன்னதமான உயர்வைத்தரும் என்று மனப்பால் குடித்துக்கொண்டிருக் கிறார்கள். **அபத்தம், அபத்தம்.** மாணவர்களைத் தமிழ்க்கல்வியில் ஆர்வம் கொள்ளப்பண்ணுபவை இந்துக் கல்லூரிகளே. தமிழ்மொழிப் போதனையிலேதான் **கல்வியின் ஆழம்** தமிழ் பேசும் மக்களுக்கு விளங்கும் என்ற உண்மையையும் தமிழ் மொழியிலேயுள்ள சமய இலக்கிய காவிய நூல்களிலேதான் தமிழறிவும், உத்திகளும், தருக்க நியாயங்களும், எக்காலத்திற்கும் பொருந்தும். உண்மைகளும் அதிகம் உள்ளன என்ற பெருமையையும், இவையே அன்றாட வாழ்க்கையை, அதன் சவால்களைத் தவிர்க்க உதவுவன என்ற மாபெரும் நடைமுறை உண்மையையும் பலரும் மறுதலித்துப் பகட்டுக்காக மாயையாக வாங்கும் ஆங்கில மிஷனரிக் கல்வியிலே மூழ்கிக்கிடந்து நமது கலாசாரம், பண்பாடு, சிந்தனைப் பெருமை அனைத்தையும் சிதைத்து நிற்கின்றனர். கிறிஸ்தவ மிஷனரிகளும், ஏனைய மதஸ்தாபனங்களைப் பிரதிநிதித் துவப்படுத்தும் கல்லூரிகளும் - மனோ நிலையில் - மனப்பாங்கில் - சைவத்தமிழர் என்னும் இந்து மாணவர்களுக்கு – தமிழ் மொழிப் பிறந்த மாணவர்க்குச் சுதந்திரச் சிந்தனையை, வழிபாட்டு ரிமையை வழங்க ***முன்வரவில்லை; முன்வரவேமாட்டா*** என்பதனை இந்துக்கல்லூரிகளிலே பயிலும் மாணவர்களும் சைவத் தமிழுலகமும் நன்குணர்ந்து கொள்வது நமது கல்வி மரபை நல்லபடி வளர்த் தெடுக்கப் பெரிதும் வேண்டப்படுவதாகும். ***கல்வி மதவழிப்பட்ட தென்பதுதான் அதன் வரலாறு*** இங்கே தான் சாதிச்சிந்தனைக் குளப்பம் பற்றியும் அதன் பெருமையும் சைவக்கல்வி மரபும் உரத்துச் சிந்திக் கப்படத்தக்கன.

அவ்வாறாயின் சைவக் கல்வி மரபு தோற்றம் பெறுமுன்னர் உள்ள நிலைமைகள் எப்படி? என்று நோக்குவது சுவாரஸ்யமானது. இன்றும் புகழ்பெற்றுள்ள கிறித்தவ பாடசாலைகளில் முஸ்லிம் பாடசாலைகளில் சர்வதேசப் பாடசாலைகளில் கொள்கைப் பிரகடனம் உண்டு. **அதாவது, சைவசமய முழுமுதற்கடவுள் சிவபெருமான் பற்றியோ தேவார திருவாசகங்கள் புராணங்கள் பற்றியோ பிள்ளைகள் படிக்கக் கூடாது; திருநீறு தரித்தலாகாது. விக்கிரகத்தை வணங் கலாகாது என்றெல்லாம் விதிகள் கட்டுப்பாடுகள் எடுகோள்கள் உள்ளன.**

இப்படிப்பட்ட கல்லூரிகளிலே படித்துப் பட்டம் பெற்ற கல்விமான்களுக்கு, மருத்துவர் களுக்கு, பொறியியளாளர்களுக்கு, வங்கி அதிகாரிகளுக்கு, வீரிவுரையாளர்களுக்கு, பேராசிரியர்களுக்கு, கலாநிதிகளுக்கு, மதபிர சாரகர்களுக்கு இன்றும் தமிழ்க் கலாசாரம், சைவாசாரம், விழுமியங்கள் என்பன மருந்துக்கும் கூடத் தெரியாது. இவ்வாறு தமது புகழ்பூத்த பண்பாட்டைத் தெரிந்துகொள்ளச் செய்யாத கல்வி ஏன்? அதன் பயன்தான் என்ன? என்று யாராவது சிந்தித்தார்களா? பிள்ளைகளே! இன்று ஒரேயொரு கல்விச் சிந்தனையாளர் கொழும்புப் பல்கலைக் கழகக் கல்விப்புலப் பேராசிரியர் சோ. சந்திரசேகரன் அவர்கள் பின்வருமாறு இத் தொடர்பில் மிஷனரிக் கல்வியை - ஆங்கிலக் கல்வியைப் பற்றிக் கூறுகிறார்:

> **பிள்ளைகளின் கற்றல் எவ்வாறு நடைபெறுகின்றது என்னும் விடயம் பற்றி அண்மைக் காலத்தில் மேற்கு நாடுகளில் செய்யப்பட்ட ஆய்வுகளின் முடிவுகள் எமக்கு முற்றிலும் பொருந்துவன எனக் கூறமுடியாது. வேறுபட்ட கலாசாரத்தில் செய்யப்பட்ட ஆய்வுகளாயினும் அவை எமது கல்வியில் அறிவை விரிவுபடுத்துவன என்பதால் பயனுள்ளது எனக் கருதுகிறோம்....இவ்வாய்வுகள் மேலை நாடுகளில் பாடத் திட்டங்களையும் கற்பித்தல் முறைகளையும் மாற்றியமைக்கக் காரணமாகியுள்ளன.**
>
> (தினகரன், 13.03.2002)

இலங்கையிலே இந்துக்கல்லூரி மாணவர்கள் ஆங்கிலப் பாடத்தை மிகுந்த தேர்ச்சியுடனும் ஆர்வத்துடனும் கூடியவிரைவிலும் கற்கவேண்டும் என்பது இங்கு மிகமிக அழுத்தந்திருத்தமாகக் கூறப்பட வேண்டியது. ஆயினும் அதனை விட நமது சமயமரபு, மொழிமரபு, பண்பாட்டுமரபு, கல்விமரபு என்பனவற்றையும் சுயமாக்க கற்க விருப்பம் கொள்ள வேண்டும். நமது விழுமியங்களும் சமயமும் மேலானவை யென்ற நம்பிக்கை ஒவ்வொரு வருடைய உள்ளங்களிலேயும் ஏற்பட வேண்டும். இன்று பல்கலைக் கழகங்களிலே பெரும்பாலும் ஆங்கில மொழி மூலப் போதனைகளே நிகழுகின்றன. ஆகவே நமது சைவச் சிறார்கள் ஆங்கில மொழியின் திட்ப நுட்பங்களையறிவதுடன், அம் மொழியிலே நன்கு பேசுவதற்கும் தம்மைத் தயார்ப்படுத்திக் கொள்ள வேண்டும். தமிழ் மொழியிலே நிரம்பிய தேர்ச்சியுடையோர் ஏனைய மொழிகளிலேயும் முயன்றால் மிகுந்த தேர்ச்சியடைவார்கள் என்ற

உண்மையைத் செயன்முறைப்படுத்திக் தமிழர்கள் காட்டவேண்டும். ***கல்வி மரபு*** பற்றியறிய வேண்டும்.சைவச்சிறார்களின் கல்வி முன்னேற்றம் கருதிச் ***சைவக்கல்வி மரபு*** பற்றியும் ***நாவலர் மரபு*** பற்றியம் இக்கட்டுரையிலே சுட்டிக்காட்டிக் ***கல்வியின் பயன்*** பற்றிக் சிந்திக்கலாம் என்று கருதுகிறேன்.

நாவலர் காலத்தில் ஈழத்துக் கல்விமுறையினைப் பார்க்கும் போது அன்றைய சமுதாயத்தில் அரசாங்கப் பாடசாலைகளும் கூடவே மிஷனரிப் பாடசாலைகளும் இருந்தனவென்பதை அறிகிறோம். சுதேசி களைக் கவரும் எண்ணத்தோடு நிறுவப்பட்ட மிசனரிப் பாடசாலை களுக்கு அரசாங்கப் பாடசாலைகள் இடையூறாக இருந்தன. இதனால் மிசனரிமார் தமது மதத்தை வேகமாகவும் தீவிரமாகவும் மக்கள் மத்தியில் பரவச்செய்யும் நோக்கோடு அரசாங்கப் பாடசாலைகளை இல்லாமற் செய்யவேண்டும் என்ற எண்ணங்கொண்டவராக இருந்தனர். இந்நேரத்தில் 1833 இல் வில்லியம் கோல்புறூக், கமறன் ஆகிய இருவரும் பிரித்தானியாவிலிருந்து ஈழத்திற்கு வந்து சில சீர்திருத்தங்களைச் செய்தனர். இதன் பயனாக அரசினர் நடாத்திய தாய்மொழிப் பாடசாலைகளை மூடிவிடவேண்டும் என்று சிபார்சு செய்யப்பட்டது. இதனால் 1843ஆம் ஆண்டு அரசினர் நடாத்திய தமிழ்ப் பாடசாலைகள் மூடப்படவே மிசனரிமாரால் நடாத்தப்பட்ட பாடசாலைகளுக்குச் சைவசமயத்தைச் சார்ந்த பிள்ளைகளும் சென்று படிக்கவேண்டிய நிலைமை உண்டாகியது. கிறிஸ்தவப் பின்னணி யிலே நடாத்தப்பட்ட இப்பாடசாலைகளிற் படித்த மாணவர்கள் காலப் போக்கிற் கிறிஸ்தவ சமயத்தைத் தழுவுதல் தவிர்க்க முடியாததாகியது. இந்நிலைமை நாவலரை மிகவும் வருத்தியது. பாதிரியாரிடம் உத்தி யோகம் வகித்த காலத்திலேயே மாணாக்கர்களுக்குத் தமிழ்க் கல்வி கற்பிக்கும் நோக்கத்தோடு நாவலர் தமது வீட்டுத் திண்ணையில் கற்பிக்கத் தொடங்கினார். மாணாக்கருக்குத் தமிழ்க்கல்வியும், சமயக் கல்வியும் கற்பிக்கும் நோக்கத்தோடு அவரது வீட்டின் திண்ணை யில் தொடங்கப்பட்ட பாடசாலையே 1848 இல் சைவப்பிரகாச வித்தியா சாலை தோன்றுவதற்கு ஆரம்பமாக அமைந்தது. நாவலர் பெருமான் பின்வருமாறு எழுதுகிறார்:

> **சில காலத்துக்கு முன்னே கவர்ண்மென்டார் இத் தேசத்திலே சில இங்கிலீசுப் பள்ளிகூடங்களைத் தாபித்துச் சில வருஷம் நடத்தினார்கள். அவை களிலே கிறிஸ்து சமயப் புத்தகமொன்றும் படிப்பிக் கப்படவில்லை. அங்கே சைவசமயப் பிள்ளை**

களெல்லாரும் வீதி தரித்துக்கொண்டே படித்து வந்தார்கள். அதைக்கண்ட பாதிரிமார்கள் கவர்ன் மெண்டுப் பள்ளிக் கூடங்கள் நிலைபெற்றால் தங்கள் கருத்து வாய்க்காது என்று நினைத்து இங்கிருந்த சில துரைமார்களைத் தங்கள் வசப்படுத்திக் கவர்ண் மென்டுக்கு நியாயங் காட்டி எழுதுவித்து அப்பள்ளிக் கூடங்களை எடுப்பித்து விட்டு அவைகளுக்குக் கவர்ண்மென்டார் செலவழிக்கும் பணத்தைத் தங்கள் பள்ளிக்கூடங்களுக்கு ஆக்குவித்துக்கொண்டு அநீதியாகிய தங்கள் கருத்தையே நிறைவேற்றிக் கொண்டு வருகிறார்கள்.

மிசனரிமாருக்கும் போட்டியாகத் தனியொருவராக நின்று 1848 இல் அரசாங்க உதவிப்பணம் பெற்றுப் பாடசாலை நடத்தியமை நாவலர் பெருமானது உள்ளத்தின் உறுதியையே காட்டுகிறது. நாவலர் 1864 ஆம் ஆண்டு சிதம்பரத்தில் சைவப்பிரகாச வித்தியா சாலையை நிறுவினர். 1872 இல் ஆங்கிலப் பாடசாலையை வண்ணார் பண்ணையில் நிறுவினார். நாவலர் பெருமான் நிறுவிய இவ்வாங்கில வித்தியா சாலையே வளர்ந்து இன்றைய **யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு** வழி வகுத்தது.

"பெயரளவில் திருவாவடுதுறை ஆதினம் ஆறுமுகநாவலரைத் தந்ததாயினும், உண்மையை நோக்குமிடத்துப் ***பதினான்கு வருடக் கிறிஸ்தவ சூழலே நாவலரை நமக்குத் தந்தது***" என்கிறார் பண்டிதமணி, இலக்கிய கலாநிதி சி. கணபதிப்பிள்ளை.

பெரியபுராண வசனம் (1952), ***கந்தபுராணம்*** (1886), ***பாரதம், கந்தரலங்காரம், கந்தரனுபூதி, கோயிற்புராண உரை*** (1868) ***திருமுருகாற்றுப்படை*** எனப் பெருந்தொகையான நூல்களை 1850 ஆம் ஆண்டு தொடக்கம் வெளியிட்டார். (வெறும் சமய சம்பந்தமான நூல்களை மட்டும் வெளியிட்டுள்ளார் என்று இவரைக் குறை கூறுபவர்கள் நாவலர் காலத்துத் தேவையை உணர்ந்து பார்ப்பதில்லை.) **சைவம் சம்பந்தமான நூல்களைப் புறக் கணித்த அக் காலத்திலே, நாவலர் வாழ்ந்த சைவத் தமிழ் நூல்களைப் பதித்தும், உரை கண்டும் வெளியிட்டிரா விடடால் தமிழிலக்கியத்திற் பெரும் பகுதியை நாம் இழந்திருப்போம். வெறுஞ் சமய இலக்கியங்களை மட்டும் எழுதவேண்டும் என்ற நோக்கம்**

உள்ளவராக இருந்திருந்தால் இலக்கண நூல்கள், சங்க நூல்கள் ஆகியவற்றிலே கவனத்தைச் செலவிட்டிரார்.

நாவலரது நேரடி மாணாக்கர்கள் மேதாவிகளாகிய பொன்னம் பலபிள்ளை, செந்திநாதையர், சதாசிவம்பிள்ளை, ஆறுமுகம்பிள்ளை ஆகியோர் நாவலரது கல்வித் தொண்டுக்குச் சிறந்த உதாரணங் களாவர். ***நாவலர் பரம்பரை*** பற்றி இன்றைய சைவத் தமிழ் மாணவர்கள் அறிந்துகொள்ள முனையவேண்டும். நாவலரது நன்மாணாக்கராகிய சதாசிவம்பிள்ளை நாவலரைப் போலவே பிரம்மச்சாரியாக இருந்து முப்பதுவருடகாலம் வித்தியாசாலையிற் கல்விப்பணி புரிந்தார். நாவல ரின் மாணாக்கரும், மருமகனுமாகிய வித்துவசிரோமணி பொன்னம் பிள்ளை நாவலரின் பல பின் வித்தியசாலை அதிபராக இருந்தவர். உரை யாசிரியர் ம.க. வேற்பிள்ளை, கோப்பாய் சபாபதி நாவலர், மாதகல் அருணாசலஐயர், வண்ணார்பண்ணை சுவாமிநாத பண்டிதர், சாவகச்சேரி, பொன்னம்பலபிள்ளை, கொக்குவில் சபாரத்தின முதலியார், பிரம்மஸ்ரீ சி.கணேசையர் என இத்திறத்தோர் யாவரும் பொன்னம் பல பிள்ளையிடம் பாடங் கேட்டவர்களாவர். நாவலர் வழிநின்று கல்வித் தொண்டு செய்த சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவரிடம் பல மாணாக்கர் கல்வி கற்றனர். காரைநகர் பஞ்சாட்சரஐயர், இருபாலை வேதாரணிய தேசிகர், தாவடி மு. பொன்னையாபிள்ளை, நீர்வேலி வி. மயில்வாகனபிள்ளை ; விழிச்சிட்டிப் பண்டிதர் சி.கதிரிப்பிள்ளை, மட்டுவில் சி. கணபதிப்பிள்ளை, மட்டக்களப்பு, த. பெரியதம்பிப்பிள்ளை என்போர் முக்கியமானவர்.

தமிழ்க்கல்வி, சைவக்கல்வி என்ற நோக்குநிலையே இன்று கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி வரலாற்றிலே குறிப்பிடத்தக்க மதிப்பைத் தந்து நிற்கிறது. போராட்டங்கள், இன்னல்கள், கெடுபிடிகள், காடைத் தனங்கள், வன்மங்களுக்கும் மத்தியில் முகத்துவாரம் இந்துக் கல்லூரி, கணபதி வித்தியாலயம் என்பன தலைநிமிர்ந்து வளர்ந்து வருகின்றன. இங்கு பயிலும் மாணவர் களது அறிவு விருத்தி, ஆர்வம், பயன் என்பன கருதிச் சில கல்விச் சிந்தனைகளையும் நோக்குவோம்.

பண்பாட்டைச் சந்ததி சந்ததியாகக் கடத்தும் ஊடகமே மொழி.

மொழி என்பது வலிமைமிக்க தொடர்பாடல் ஊடகமாகும். இது மனிதனின் அதிசிறந்த ஓர் ஆக்கமாகும். வாழ்க்கைக்கு இன்றியமையாத ஒரு கருவி. மொழியைப் பயன்படுத்தியே நாம் சிந்திக்கிறோம். தேசியத் தனித்துவத்தை வெளியிடும் இலச்சினையும் மொழியேயாகும். ஒருவரின் தேசியத் தனித்துவம் பொதுவாக மொழியினாலேயே வெளிக்காட்டப்படு கிறது. ஒருவரின் அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான திறன்

மொழியை அடிப்படையாகக் கொண்டே உருவாகின்றது.***கல்வீச் செயன் முறையில் மொழிக்கு முக்கியத்துவம் வழங்கப்படவேண்டும்*** என்பர் பியாஜே எனும் கல்வி உளவியலாளர். மொழியும் கல்வியும் வேறு பிரிக்க முடியாத அளவுக்கு ஒன்றுடனொன்று தொடர்புடையவையாகும். மாணவர் மொழியை ஒரு பாடமாகக் கற்கின்றனர். பின்னர் அம் மொழியை ஊடகமாகக்கொண்டு கலைத்திட்டத்தின் ஏனைய பாடங் களைக் கற்கின்றனர். மொழியானது மொழிக்கு மாத்திரமுரிய தன்று. மாறாக அது ஒட்டுமொத்தமான கல்விச் செயன்முறைக்குரியது. எனவே பாடசாலைத் தொகுதியில் பணியாற்றும் ஒவ்வொர் ஆசிரிய ரையும் மொழியாசிரியராக மாற்றிக் கல்விச் செயன்முறையின் ஒவ் வோரு சந்தர்ப்பத்திலும் மொழியைத் திருத்தமாகக் கையாளுவதற் கான வழிவகைகளைச் சிந்தித்துத் திட்டமிட்டு மேற்கொள்ள வேண்டியது இன்று இன்றியமையாததாகும்.

கல்விப் பேராசிரியர், சந்திரசேகரனின் முக்கிய ஆய்வு முடிவுகள் பின்வருமாறு

> **மாணவர்களின் சுறுசுறுப்பான ஈடுபாடு, அக்கறை என்பன இல்லாமல் மாணவர்கள் கற்றலில் கவனம் செலுத்தமாட்டார்கள். பாடசாலைக் கற்றல் என்று கூறும்போது மாணவர்கள் தாமாக அதில் கவனம் செலுத்தவேண்டும். அவதானத்தில் ஈடுபட வேண்டும். தமது கற்றலுக்கான பொறுப்பைத் தாமே ஏற்க வேண்டும். ஆசிரியர்களின் பணி மாணவர்கள் இவ்வாறான கற்றலை நாடும், துருவி ஆராயும் இயல்புகளை வலியுறுத்து வதாகும். அதாவது இந்த இயல்புகளைப் பெற் றுக்கொள்ள ஆசிரியர் பிள்ளைகளுக்கு உதவுதல்.**
>
> (தினகரன், 13-03-2002)

கற்றலில் மாணவர்களின் ஈடுபாட்டையும் பங்கேற்பையும் ஊக்குவிப்பது ஆசிரியர்கள் எதிர்நோக்கும் முக்கிய சவாலாகும். அவர்கள் இதற்கான சுவாரசியமான கற்றற் சூழலை வகுப்பறையில் ஏற்படுத்தவேண்டும். மாணவர்களின் ஆர்வங்கள், ஈடுபாடுகள், எதிர்கால அபிலாஷைகள் என்பவற்றுக்கேற்ற கற்றல் இலக்குகள் ஆக்கிக்கொள்ள அவர்களுக்கு உதவுதல். (எல்மோர், பீட்டர்சன் (1996, பியாஜே 1978).

கனகசபாபதி நாகேஸ்வரன்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கல்வியியற்பீடத்தின் தலை வரும் பேராசிரியருமான கலாநிதி சபா.ஜெயராசா அநேக தமிழ் மொழி மூல நூல்களைக் கல்விச் சிந்தனையாளர்களுக்கென வெளி யிட்டுள்ளார். நவீன கல்விச் சிந்தனைகள், ஆய்வு முறைகள், பாடசாலை வகுப்பறைக் கற்பித்தல் என்ற நோக்கிலே இவரது கருத்துக்கள் பெரிதும் பயனுடையவை. ஆங்கிலச் சொற்களுக்கு இவர் எழுதிய தமிழ்ப் பெயர்ப்புகள் நமது புதிய சிந்தனையிலே இடம் பிடிக்கவேண்டிய வையாகும். தமிழ்மொழி, உயர்கல்வி ஆர்வமுடைய மாணக்கர்கள் கலாநிதி சபா. ஜெயராசா அவர்களுடைய கருத்துக்களைத் தேடிப் பிடித்துக் கற்றுக் கொள்ளல்வேண்டும் என்றும் நான்ஆலோசனை கூற முடியும். அவர் எனக்குக் கற்பித்த பேராசான்; என்குரு; புகழ்பூத்து கல்வியாளன். பேராசிரியர்க்குப் பேராசிரியர்

பிள்ளைகளே! மாணவமணிகளே!

கல்வி வாழ்கையும் அதன் பயனாக சமயவாழ்வும் தான் நாகரிக வாழ்க்கை என்பது அறிஞர் தம் கருத்தாகும். ஒரு சமுதாயத் தின் நாகரிகத்தை எடுத்துக்காட்டுவது கல்வி. அதனால் கல்வியானது ஆதி காலந்தொட்டு இன்றுவரை எல்லோராலும் போற்றப்பட்டு வருகிறது. ஒருவனிடம் மறைந்து கிடக்கும் ஆற்றலைத் கலலி தோண்டி வெளிக்கொணர்வதே கல்வியின் இலக்காக அமைதல்வேண்டும். கல்விப்பயன் **உள்ளொளியை** வெளிக்கொணர்வதாகும்.

கல்வி ஒருவனிலே **நடத்தை மாற்றத்தைக்** ஏற்படுத்தும். ஒருவன் பெறும் பல்வகைப்பட்ட அனுபவங்களே கல்வியாகும். அனு பவங்களினூடாகவே ஒருவன் முற்றறிவைப் பெறுகிறான்.

> **கல்வி என்பது அனுபவங்களை அனுபவங்களால்**
> **அனுபவங்களினூடாக அளிப்பதாக அமையவேண்டும்.**

என்பர் **ஜோன் டூயி.**

> **வாழ்க்கை அமைப்பிற்கும் இயல்பான சூழ்நிலைக்கும்**
> **இடையிலான சமமான அனுபவமே கல்வி.**

என்கிறார் **பேர்ட்ரன்ரஸல்.** அதாவது சூழலுக்கேற்ற வகையில் பொருந்திவாழக் கற்றுக்கொள்வதே கல்வியாகும்.

> **மனிதருக்குள் மறைந்து கிடக்கும் பூரணத்துவத்தை**
> **வெளிக்கொணர்வதே கல்வி.**

என்றார் **சுவாமி விவேகானந்தர்.** கல்வி என்பது குழந்தைகளிட மிருந்து

முழு மனிதனை வெளிக்கொணர்வது ; முழு மனிதனை உருவாக்குவது. அவனுடைய ஆளுமையை வளர்ப்பது. எனவே மனிதன் உடல், உள்ளம், ஆன்மா, இருதயம் என்பவற்றை ஒருமித்த வகையில் விருத்தி செய்து ஆளுமையை அடையச் செய்வதே. கல்வியின் பயனாகும். என்று கூறுகிறார் **மகாத்மாகாந்தியடிகள்.** ஆங்கிலக் கவிஞரான வில்லியம் வேர்ட்ஸ்வேர்த் (william wordsworth),

மனிதத் தன்மையினை மனிதர் பெறப்
பயிற்சி யளிப்பதே கல்வி.

என்கிறார்.

மனிதத் தன்மையாவது அறவழி நடத்தலாகும். வங்கக் கவிஞர் **ரவிந்திரநாத் தாகூர்,**

சுதந்திரமான சிந்தனையும் கலையை
உணரும் அழகுணர்ச்சியும், இரக்க
சிந்தனையும் படைப்பாற்றலும் ஒருவனிடத்தில்
வளரத் துணைபுரிவதே கல்வி.

என்கின்றார்.

'கல்வி என்பது ஓர் ஆய்வு' என்ற முடிவுக்கு வரலாம் போல் தோன்றுகின்றது. ஒருவன் தன்னையும் தான் வாழும் சூழலையும் அறிந்து கொள்ளத் துணை நிற்பது கல்வி. தான் வாழும் சூழலையும் சமூகத்தையும் அதன் பாரம்பரியத்தையும் நாகரிகத்தையும் பண்பாட்டையும் ஆராய்ந்துணரலாம். அவற்றைப் பேணிக்காக்கவும் கல்வி பயன்படுகிறது. சுருங்கக் கூறுவதானால் சமுதாயம் காண விழைகின்ற சான்றோனை உருவாக்கிச் சிறந்தவொரு குடிமகனை நாட்டுக்கு அளிக்க உதவுவதே கல்வியின் பயனாகும்.

கல்வியின் நோக்கங்கள்

மாணவனுடைய அறிவை விருத்தி செய்து, அதனூடாக அறியாமையாகிய இருளையகற்றும் பண்பாட்டுப் பாரம்பரியங்களைப் பேணுவதற்கு வழிவகுத்தல் வேண்டும். ***பண்பாடு ஒரு நாட்டின் உயிர் நாடி.*** பண்பாடு இல்லாத நாடு முதுகெலும்பு இல்லாத உடல் போன்றது. கல்வி, பண்பாடாகிய செல்வத்தைப் பேணிக் காப்பாற்றுதல் வேண்டும்

அறவழி நின்று **ஒழுக்கத்தையும் ஒப்புரவையும் பேணுவதற்குக் கல்வி உதவுதல்வேண்டும்.** அறமே மனித வாழ்வின் அடிநாதமாகும்.

அறமில்லா வாழ்வு உயிரில்லா உடம்பு போன்றது. **அறநெறியறிவு கல்வியின் முக்கிய அம்சமாகும்.**

கல்வியினூடாக ஒருவன் சிறந்த உளப்பயிற்சி பெறுதல் வேண்டும். ஒழுக்கம், கட்டுப்பாடு, அகிம்சை, பணிவு, ஈகை, இன்சொல், தியாகம் ஆகிய பண்புகளையுங் கற்றல் அவசியமாகும்.

ஒருவனைச் சமூகமயமாக்குவதில் கல்வி பெரும் பங்கு பெறுகிறது. சூழலுக்கேற்பப் பொருந்தி வாழக் கற்றுக்கொள்வது மாணவரின் கடமையாகும். குழந்தை சூழலுக்கேற்பத் தன்னை மாற்றியமைக்கக் கற்றுக்கொள்ளவில்லையானால் வாழ்க்கையில் தோல்வியடைந்து விடுகிறது. தோல்வி உளவியல் தாக்கங்களை ஏற்படுத்திவிடும் என்பதை ஞாபகத்தில் கொள்ளல் அவசியம். ஆகவே சமூகவியல் பின்னோக்குவதற்குரிய கல்வியைக் குழந்தைகளுக்களித்தல் முக்கிய மாகின்றது. சமூகப்பயன்பாடு கல்வியால் ஏற்படவேண்டும்.

கல்வியினூடாக ஒருவன் சீராக வாழக் கற்றுக்கொள்ள வேண்டும். கல்வி வாழ்க்கைப்பயனை அளிக்கவில்லையானால் அது பயனுடையதன்று. வாழ்வு நோக்கு கல்விக்கிருத்தல் இன்றியமை யாதது. வெறும் ஏட்டுக் கல்வியால் பயனில்லை. **கல்வி ஒருவனை வாழவைக்கவில்லையானால் அக்கல்வி நோக்கமற்றாகிவிடுகிறது.**

படிப்புத் தகைமைக்கேற்ற தொழில் கிடைக்கத் திட்டங்களும் ஏற்பாடுகளும் வேண்டும்.

கல்வி சிறந்த குடிமகனை உருவாக்குதல்வேண்டும். ஒரு சமுதாயம் பயனடைவதற்குக் கல்வி முறையாக அளிக்கப்படல் வேண்டும். கல்வியறிவில்லாத சமுதாயம் இருட்டில் வெளிச்சமின்றி நிற்கும் ஒருவனுக்குச் சமமானது. சமுதாய நலன் கருதும் மனிதன் கல்வியை ஒரு கருவியாகப் பயன்படுத்துகிறான். கல்வியறிவு சமூக வளர்ச்சிக்கு உதவவில்லை யென்றால் அதனால் பயனே இல்லை. இதனையே நவீன கல்வியாளர்கள் இடித்துரைக்கின்றார்கள்.

மனிதன் என்பதற்குச் சிந்திக்கும் உயிரி என்பது பொருளாகும். சிந்தனை அடிப்படையில் அறிவு பெருகவேண்டும். சிந்திக்கும் திறனே எதனையும் தூண்டித் துருவி ஆராயும் பண்பினை வளர்க்கும். இதன் மூலம் தர்க்க ஆற்றல் காரணகாரியத் தொடர்புகாணும் திறன், பகுத்தறிவு என்பன வெளிப்படுகின்றன.

கல்விபுகட்டும் ஆசிரியர்கள், சீரிய சிந்தனையாளர்களாக விளங்கவேண்டும். தருக்க ரீதியாகச் சிந்தித்துத் தமது ஆசிரியர் பணியை அவர்கள் அமைக்கவேண்டும். இதன் மூலம் மாணவர் கற்க வேண்டியவற்றைக கற்றுக்கொள்ளவும், சிந்திக்கும் திறனுடைய வர்களை எளிதாக உருவாக்கவும் முடியும். மாணவரின் உள நிலைக்கு ஏற்றவாறு அறிவு வழியில் அவர்களைச் செலுத்தி அவர்கள் தாமே சிந்தித்துச் செயலாற்ற ஆசிரியர்கள் வழிகாட்ட வேண்டும். கூலிக்காக மட்டும் வேலை செய்யக்கூடாது.

சோக்கிரட்டீஸ் கல்வி பற்றிப் பின்வருமாறு கூறியுள்ளார்.

> **கல்விக்கு எல்லையில்லை, கல்வி என்பது வாழ்க்கை. அதை அடையக்கூடிய ஒரே வழி சுய அனுபவமும், அறிவு சேர்க்கும் ஊக்கமும், தளராத அறிவுத் திறனுமாகும்.**

எனக் கூறியுள்ளார்.

கல்வி என்பது வாழ்க்கை என்னும் கருத்தை ஏற்றுக்கொண்ட **பிளேட்டோ,**

> **அத்தகைய வாழ்க்கையிலிருந்து பெறும் அறிவு அனுபவத்திலிருந்து உதிக்கவேண்டும். அந்த அறிவு சிந்தனையைக் தூண்டவேண்டும். சிந்தனைத் தூண்டல் புதுத்தன்மை பெற்று முழுமை பெற்றதாக எல்லோருக்குமுரிய பொதுச் சொத்தாக மாறவேண்டும்.**

எனவும் கூறினார்.

ஆசிரியர்களைப் பற்றி ***சோக்கிரட்டீஸ்*** கூறும் பொழுது, ***ஆசிரியர்கள் ஞானவிளக்குகளாவார்*** என்றுரைத்துள்ளனர். கல்விச் சிந்தனையாளர் ***ரூஸோ*** வின் கருத்துப்படி,

> **ஆசிரியர்கள் போதனையிலும் சாதனை யிலும் பிள்ளை களுக்கு எடுத்துக்காட்டாக விளங்குவதுடன் எல்லாத் துறைகளிலும் தலைசிறந்த அறிஞர்களாக விளங்க வேண்டும். ஆசிரியர்கள் ஞானமுள்ளவர்களாகவும், சமூக ஊழல்களை அகற்றும் ஆற்றலுள்ளவர்களா கவும் மனிதரின் கடமைகளை நன்கு உணர்ந்தவர் களாகவும், குழந்தைகள் செய்யும் தவறுகளினால் ஏற்படும் தாக்கங்களைத் தாமே பொறுப்பேற்கும் தன்மை உடையவர்களாகவும் இருக்கவேண்டும்.**

> **"ஆசிரியர்" என்பதற்கு அணிகலனாக விளங்கும் ஆசிரியர்கள் மன்னுயிர்க்கு வரும் துன்பங்களைத் தம் உயிர்த்துன்பங்களாகத் தாங்கும் தன்மையுடைய வர்கள். கருணையுள்ளம் கொண்டவர்களாக விளங்க வேண்டும். துன்பத்தைத் துடைத்தெறியும் தூய உள்ளத்தை மாணவர்களிடம் வளர்க்க வேண்டும். அதிகார அடக்கு முறையால் பிள்ளைகளைக் கட்டுப் படுத்தாமல் அன்பினால் அரவணைத்து ஆட் கொள்ள வேண்டும்.**

என்று கூறுகிறார்.

கல்வி என்பது என்றும் வளர்ந்து கொண்டிருப்பது. சூழ்நிலை மாற்றங்களுடன் மாறிக் கொண்டிருக்க வேண்டியது; என்றும் இயங்கிக் கொண்டிருப்பது கல்வி. எனவே கல்விக்கு இறுதி இலக்கு என ஒன்றுமில்லை. வளர்ச்சிக்கு வழிவகுக்கும் கல்வி வளர்ந்து வரும் கல்விக்கே வழிகாட்டவேண்டும். **செயல் அனுபவமூலம் பெறப்படும் அறிவே உண்மையானது. ஆகவே அறிவு என்பது வாழ்க்கையில் அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டியங்குவதாகும்.**

தனியாரின் திறன்களை விருத்திசெய்து அவற்றிற்கேற்பச் சூழலைப் பயன்படுத்தி இயலுமானவற்றைப் பூரணப்படுத்திக் கொள்ள அவனுக்குதவுவதே கல்வி. எனவே மனிதன் தனது தேவைக்கும் திருப்திக்கும் இணங்க இயற்கையாய்ப் பயன்படுத்த அறிந்துகொள்ள வேண்டும்.

கல்வி என்பது சமுதாயம் அழியாமல் பேணிக்கொள்வதற்கு வேண்டிய கருவியாகும். சமுதாய அனுபவங்கள் கல்வியினால், - கல்வி மூலம் பரிமாற்றம் செய்யப்பட்டு - எல்லோரும் பங்குபெறும் அனுபவர்களாக இருக்கவேண்டும். எனவே, கல்வி தனியாள் அருமை யை வளர்ப்பதோடு சமூக வாழ்வையும் தொடர்புபடுத்தக் கூடியதாக இருக்க வேண்டும். அதன் மூலம் தனியார் சிறப்புறச் சமூகம் சிறப்புறும். எனவே **கல்வி, வாழ்க்கையையும் சமூக முன்னேற்றத்தையும்** நோக்க மாகக் கொண்டிருக்கவேண்டும்.

பிள்ளைகள் கல்வி கற்கும் பாடசாலைகள் சமுதாயப் பிரதிபலிப் பாக விளங்கவேண்டும். அவை பிள்ளைகள் இயற்கையான பணி களைச் செய்து வளர்ச்சிபெறும் இடமாகும். இயற்கைப் பணிகள் பிள்ளை களின் வாழ்வில் உண்மையான பங்கு பெறுவனவாக அமைந்

திருந்தாலே அவர்கள் சமூக நிலைகளை எதிர்நோக்கும் சக்தியைப் பெறுவார்கள். எனவே பிள்ளைகள் உண்மையான சமூக நிலைகளில் பணிபுரியவும், ஆக்கப் பணிகளில் ஈடுபடவும், சக்தியும் வல்லமையும் உடையவர்கள் என்னும் நம்பிக்கையையும் வளர்க்கும் இடமாகப் மாற்றம் பாடசாலைகள் அமையவேண்டும்.

பாடசாலைகள் பிள்ளைகளுக்கு உண்மையான பயன்படக் கூடிய பணிகளைக் கொடுக்க வேண்டும். பிள்ளைகள் வகுப்பறையில் உடற்பணிகளில் மட்டுமல்லது உளப்பணிகளிலும் ஈடுபட்டுச் **சுதந்திர நோக்குடன் சுயசிந்தனையை** விருத்தியாக்க வேண்டும்.

பிள்ளைகள் பாடசாலையில் சுதந்திரமான சூழலில் வளர வேண்டும். பிள்ளைகள் சிந்திக்கும் திறன் வாய்ந்தவர்கள். அவர்களின் சிந்திக்கும் திறனைத் தூண்டித் தத்துவ, விஞ்ஞான நோக்கை வளர்க்க வேண்டும். **நுண்ணறிவுத் திறன்** ஆக்கப்பணிகளில் பயன்படுவதோடு சமூகப் பிரச்சினைகளைத் தீர்ப்பதிலும் உபயோகிக்கப்படவேண்டும்.

உளவளர்ச்சியும், மனப்பாங்கும் பரந்த உள்ளமும் கல்வியின் பயன்கள்.

கல்வியென்பது முன்னேற்றத்தை நோக்கி வளர்ச்சி பெறுவதாக அறிவியல்முறைகளையும் துறைகளையும் மேன்மேலும் பயன்படுத்து வதாக அமையவேண்டும். **கல்வியின் பிறிதொரு பெரிய பயன்பாடு மனிதனைப் பண்பாடுடையவனாக்குவதும், பரந்து விரிந்த மனவளம் உடையவனாக்குவதுமாகும்.**

அரம்போலும் கூர்மை யரேனும் மரம்போல்வர்
மக்கட்பண் பில்லா தவர்.

என்பது **திருவள்ளுவர்** கருத்தாகும்.

மனிதன் எப்படியும் வாழலாம் என்பது நியதியில்லை. இப்படித் தான் வாழவேண்டுமென்பதே நியதியாகும். பாடசாலைகளில் ஒழுங்கும், **கடடுப்பாடும் மீறப்படுமானால்** அது பண்பாட்டை மிகவும் பாதிக்கு மென்பதில் எள்ளளவும் ஐயமேயில்லை.**சமயவாழ்வே ஒழுங்கு.**

கல்வியின் அடுத்த மிகமிகப் பிரதானமான அம்சம் சமயக்கல்வி யாகும். மனிதனுடைய ஆளுமையை முழுமையாக்கும் மனிதத்தன்மை வாய்மை, அறம், முருகியல் ஆகிய பலவும் வளர்ச்சியடைவதற்குச் ***சமயக்கல்வி*** அவசியமாகும். விழுமியங்கள் பற்றியும் சமயக்கல்வி பற்றியும் **நிபுணர் கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம், எம்.ஏ.** எழுதிய

கனகசபாபதி நாகேஸ்வரன்

கட்டுரைகளும் வானொலிப் பேச்சுகளும் மாணவர்களாகிய நாம் அறிய வேண்டியவை; உணரவேண்டியவை பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி, இராமநாதன் இந்துக் கல்லூரி, முகத்துவாரம் இந்துக்கல்லூரி சைவ மங்கையர்கழகம் என்பன கொழும்பில் சைவத் தமிழ்க் கலாசாரத்தின் நாற்பெருஞ்சின்னங்களாகும். முகத்துவாரம் இந்து கல்லூரியிலே கோயில் கொண்டுள்ள கற்பகவிநாயகப் பெருமான் மாணவர் களுக்கு விக்கினங்கள் வாராமல் நல்வித்தைகளைத் தந்தருள் புரிவான் என்பதில் எதுவித ஐயமுமில்லை. இக்கல்லூரிகளின் அதிபர்கள் ஆளுமை கொண்ட கல்விமான்கள். நல்லாசான்கள், பல்கலைக் கழகப் பட்டமும், கல்வித்துறையிலே டிப்புளோமா பட்டங்களும் பெற்றவர்கள். மிகவும் இடுக்கண் நிலவிய காலகட்டத்திலே கல்லூரியின் இருப்புக்கு அயராது உழைத்தவர்கள். அதிபர்கள் எனும் நிலையிலே தமது நற்பணிகள் ஆற்றி நிறைவு காண்பவர்கள். கல்விப் பெறுபேறுகளாலும், சாதனைகளாலும் மேலும் இந்துக்கல்லூரிகள் நீடுபுகழ் பெற மாணவர் கள், ஆசிரியர்கள், பெற்றார், நலன்விரும்பிகள் அனைவரும் பாடுபட்டு உழைக்க வேண்டும் என்று கூறவிழைகிறேன். அனை வருக்கும் அன்பான நல்வாழ்த்துக்கள்.

சைவத்திருமுறைகள்

சோழப்பெருமன்னராட்சியில் சைவசமயம் உன்னத வளர்ச்சி பெற்றது. **அருண்மொழிவர்மனாகிய முதலாம் இராஜராஜன்** முயற்சி களின் பயனாகாவே தேவார திருவாசகங்கள் இன்று எமக்குக் கிடைத் திருக்கின்றன. அவற்றை அவனே திருமுறைகளாகத் தொகுப்பித்தான். **தேவாரம் பண்ணோடு பாடப்படுவது.** அவற்றிற்குப் பண் அமைப்பித்த பெருமையும் அவனுக்குரியது.

தென்னகத்துக் கட்டடக்கலையின் சிகரமாக விளங்கும் **தஞ்சைப் பெருவுடையார் கோயில் சிவபாதசேகரனால் ஈடும் எடுப்புமற்ற வகையில் நிர்மாணிக்கப்பட்டது. கலைவனப்பில்** அது நிகரற்ற படைப் பாகும். சைவ சமய தத்துவங்களையும் வழிபாட்டு மரபுகளையும் ஆலய ஏற்பாடுகளையும் முழுமையாகப் பிரதிபலிக்கும் பான்மையில் இதன் கட்டட, சிற்ப அமைப்புக்களும் அதிலே வரையப்பட்டுள்ள சிலாசாசனங்களும் விளங்குகின்றன. ஆலயங்களிலே திருமுறைகளை ஓதுவதற்கு ஓதுவார்களையும், வழிபாட்டில் உபசாரமாக ஆடல், பாடல் புரிவதற்கு நாட்டியப் பெண்களையும் நியமித்தார்கள். இவற்றின் வளர்ச்சிக்கென மானியங்களும் வழங்கப்பட்டுள்ளன.

சோழர் காலத்திலே திருவிசைப்பா, திருப்பல்லாண்டு ஆகியன தோன்றின. சேந்தனார், கருவூர்த்தேவர், திருமாளிகைத்தேவர், பட்டினத்தார் ஆகியோரது பாடல்கள் பக்திச்சுவையும் தத்துவச்சிந்தனை களும் செறிந்தனவாக இருந்தன. 12 ஆம் நூற்றாண்டிலே அநபாயன் காலத்திலே சேக்கிழார் பாடிய பெரியபுராணம் சைவசமயத்தின் வரலாற்றையும் தத்துவங்களையும் மக்கள் வாழ்க்கையோடும் இயற்கை நெறியோடும் இணைத்துக் கூறும் தனிச்சிறப்புடைய நூலாகும்.[1]

இராஜராஜன் தில்லைக்குச் சென்று அரும்பாடுபட்டு, கிடப்பிலே கிடந்த தேவாரங்களைப் பெற்று நம்பியாண்டார்நம்பி மூலம் அவற்றைத் திருமுறைகளாக முறையாகத் தொகுப்பித்தான். அத்தோடு கோயில் களில் அவற்றை முறையாகப் பக்கவாத்தியங்கள் சகிதம் பண்ணுடன் பாட ஓதுவார்களையும் நியமித்தான். இங்ஙனம் சைவத்துக்கு ஆற்றிய தொண்டு அளப்பரியது.

நாம் தேவாரம் பாடுமுன்னரும் பாடிய பின்பும் **திருச்சிற்றம்பலம்** என்று சொல்லுகிறோம். இதற்குக் காரணம் சைவ மக்களுக்குத் திருச்சிற்றம்பலம், அதாவது தில்லைச்சிதம்பரமே முதன்மையான

கோயில் என்பதாகும். இங்குதான் **தேவாரங்கள் இராஜராஜனால் மீட்டெடுக்கப்பட்டன.** ஆகவே நாம் **திருச்சிற்றம்பலம்** எனும்போது மூர்த்தி, தலம், தேவாரம் பாடிய அருளாளர்கள், இராஜராஜ மன்னன் எல்லோரையும் நினைவுகூருகிறோம். எமது உள்ளத்தில் எழும் **நன்றிப்** பெருக்கே, பக்தியுணர்வே நாம் சைவத்திற்குச் செய்யும் பெருந் தொண்டாகும். எல்லோரதும் உள்ளத்திலும் எழும் இவ்வுணர்ச்சி சைவத்தை நிலைநாட்டும் சக்தியாக விளங்கும்.[2]

சோழப்பெருமன்னன் இராஜராஜன் தம்மிடம் வரும் ஓதுவா(ர்) மூர்த்திகள் மூவர் அருளிய தேவாரங்களிற் சிலவற்றை ஓதக்கேட்டு மனமுருகி நின்றான். பாடல்களின் இனிமை, சொற்செறிவு, ஆத்மிக உணர்வு ஆகியவற்றால் கவரப்பட்டதால் தேவாரப்பாடல்கள் முழு வதையும் பெற எண்ணினான். அம்முயற்சி பலிக்காததையிட்டு மனம் வருந்தினான். திருநாரையூரிலுள்ள நம்பியாண்டார் நம்பி என்னும் அந்தணச் சிறுவன் மூலமாகத் தேவார ஏடுகள் தில்லையில் மறைத்து வைக்கப்பட்டுள்ளதை இராஜராஜன் அறிந்தான். இவ்வரலாற்றினை உமாபதிசிவாசாரியார் அருளிச்செய்த ***திருமுறைகண்ட புராணம்*** பின்வருமாறு கூறும்:

வார்ந்தருட்கண்ணீர் சொரிய நம்பி கேட்ப
வண்டமிழ்கள் இருந்த இடம் மன்று ளாடும்
கூர்ந்த இருட்கன்டர் புறக் கடையின் பாங்கர்க்
கோல மலர்க்கைகள் அடையாளமாகச் சார்ந்தன.

அரசன் நம்பியாண்டார் நம்பியுடன் தில்லைக்குச் சென்று அங் குள்ள தில்லை மூவாயிரவரைத் தேவார ஏடுகளைத் தருமாறு வேண்டினான். ஆனால் அவர்களோ தேவாரம் அருளிச்செய்த மூவரும் வந்தாலன்றிக் கதவு திறக்காது எனக்கூறினர். பின் ஒருவாறு தேறி என்ன செய்யலாம் எனச் சிந்தித்தான்.

அரசனும் மெய்த்தகுசீர் அம்பலவர்க்கு உற்ற செல்வ
வீழா எடுத்து விளம்பு தமிழ்மூவர் தம்மை உய்த்து
அணிவீதியின் உலாவ வருவித்து உம்பர்நாயகன்
தன் கோயில் வளமாக்கி, உள்ளே சித்தமெலாம்
உருக்கு தமிழிருக்கை சேரச் சேர்த்தி
அவர் சேர்ந்ததெனச் செப்பிநின்றான்.
இதன் பொருள்,

ஸ்ரீ நடராஜப்பெருமானுக்கு விழா எடுப்பித்து தேவாரமுதலிகள் மூவர் திருமேனியையும் உருவாக்கி விழாவில் அம்மூவரையும் வீதிவலஞ் செய்வித்து அந்தணர்களைத் திருப்தியடையச் செய்தான்.

இவ்வாறு அரசன் **மதியூகத்துடன்** அச்செயலைச் செய்தான் என்பதைத் திருமுறைகண்ட புராணம் மூலம் அறியமுடிகிறது. பின்னர் கோயில் அர்ச்சகர்கள் காட்டியவாறு நோக்க, **அறை தானாகத் திறந்து கொண்டது.** அப்போது அறையினுள் அரசன் கண்டது அவனை அதிர்ச்சியுற வைத்தது. ஏடுகள் **கறையானாற்** சேதமடைந்திருந்தன.

பொய்யுடையோர் அறிவுதனைப் புலன்கள் மூடும்
பொற்பதுபோல் போதமிகும் பாடல் தன்னை
நொய்யசிறு வன்மீக முடக் கண்டு
நொடிப்பளவிற் சிந்தை நொந்தான் வேந்தன்.

என்பது ***திருமுறைகண்ட புராணம். (வன்மீகம் - கறையான்; புற்றுமுடிய தவமுனி வான்மீகி)***

ஏடுகளைத் தைலமிட்டுத் துப்பரவாக்கியபோது பல ஏடுகள் அழிந்திருப்பதைக் கண்ட மன்னன் கவலையடைந்தான். அப்போது **இக்காலத்துக்குகந்தவை அழியாமல் இருக்கின்றன** என ஓர் அசரீரி வாக்குக் கேட்டது. அரசன் கவலை நீங்கி அடியார்களுக்குத் தான தருமங்கள் செய்வித்தான். நம்பியாண்டார் நம்பியும் அரசன் வேண்டிய தற்கு இணங்க ஏடுகளை வகைப்படுத்தினார்.

திருஞானசம்பந்தர் அருளிச் செய்த 384 திருப்பதிகங்களை முதல் மூன்று திருமுறைகளாகவும், திருநாவுக்கரசர் பாடிய 313 பதிகங்களை அடுத்த மூன்று திருமுறைகளாகவும், சுந்தரமூர்த்தி நாயனார் அருளியதை ஏழாம் திருமுறையாகவும், திருவாசகத்தை எட்டாம் திருமுறையாகவும், திருவிசைப்பா திருப்பல்லாண்டுப் பாடல் களை ஒன்பதாம் திருமுறையாகவும், திருமூலரின் திருமந் திரத்தை 10 ஆந் திருமுறையாகவும், பின்னர் இறைவனால் அருளிச் செய்யப்பட்ட திருமுகப் பாசுரம் முதலாக நம்பியாண்டார் நம்பி அருளிய திருத்தொண்டர் திருவந்தாதி ஆகியவற்றையுங் கபிலதேவர், நக்கீரர், சேரமான்பெருமாள் நாயனார், பட்டினத்தடிகள் ஆகியோர் பாடல்களையுஞ் சேர்த்துப் பதினொரு திருமுறைகளாகவும் வகுத்தார் நம்பியாண்டார்நம்பி. இவ்வாறாகப் பதினொரு திருமுறைகளாக வகுக்கப்பட்ட பாடல்களில் முதல் ஏழு திருமுறைகளான தேவாரங்களுக்குப் பண் அமைத்தல்

பற்றிய கேள்வி எழுந்தபோது நம்பியாண்டார் நம்பி திருவெருக்கத்தம் புலியூரில் இறைவனை வேண்டி நின்றார்.

நல்லிசை யாழ்ப்பாணர் நன்மரபின் வழிவந்த
வல்லியொருத்திக் கிசைகள் வாய்ப்பளித்தோம்.

என அசரீரி வாக்குக் கேட்டது.

மன்னன் அப்பெண்ணை அழைப்பித்து வேண்ட அவளும் **சுருதி வழிப்பண் தழுவும் நல்லிசையின் வழிகேட்டு யாவரும் மகிழ்ந்தார்கள்.** தில்லையம்பலத்திலே அந்தணர்கள், மன்னன், நம்பி மற்றும் அங்கிருந் தோர் அனைவரும் கேட்கும்படியாக அப்பெண் தில்லைக் கூத்தன் திருவருளால் **பண்** வகுத்துக் கொடுத்தாள். என அறிகின்றோம்.

சொன்ன நட்ட பாடைக்கு தொகை எட்டுக்கட்டளையாம்
இன்னிசையால் தகுந்தக்கராகத்திற்கு ஏழு கட்டளையாம்
பன்னு பழந்தக்கராகமும் பண்ணின் முன்றுளதாம்
உன்னரிய தக்கேசிக்கு ஓரிரண்டு வருவித்தார்.

இங்ஙனம் மற்றைய பண்களுக்கும் கட்டளைகள் வகுக்கப்பட்டன.

இராஜராஜன் தேவார ஏடுகளை மீட்டதுடன் நின்றுவிடவில்லை. அவற்றைத் **திருமுறைகளாக** வகுப்பித்தும் **பண்ணடைவு** செய்வித்தும் **தேவாரங்களைக்** காத்துள்ளான். **சைவக்கோயில்கள்** எங்கணும் **தேவாரப் பண்கள் பாடப்படவேண்டும் என்றும் கட்டளை பிறப்பித்தான்.** தஞ்சைப் பெரியகோயிலில் 49 ஓதுவார்களையும் இரு மத்தளம் வாசிப் போரையும் நியமித்தான். அவர்களுக்கு நெல்விளையும் நிலங்களும், வசிக்க வீடுகளும், பசுமாடுகளும் ஈந்தான் எனச் **சாசனங்கள்** (INSCRIPTIONS) கூறுகின்றன.

தேவாரங்களைச் **சாரங்கி, கொக்கரி** போன்ற பக்கவாத்தியங் களுடன் பாடச்செய்தான். இவனது ஊக்கம் சோழநாட்டிலுள்ள கோயில் கள் எங்கும் பரவியது. மேலும் சைவசமயக் குரவர்களான திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி, மாணிக்கவாசகர் எனும் அருளாளருடைய திருமேனிகளைச் செப்பினால் ஆக்கி அவர்களுக்குக் குருபூசைகளும் நடத்தினாரெனவும் இம் முன்மாதிரியைப் பிற சைவால யங்களும் பின்பற்றின எனவும் அறியமுடிகின்றது. இச் சந்தர்ப்பத்தில் அக்காலப் பண்களையும் இக்காலத்து இராகங்களையும் கவனத்தில் கொள்வோம். மாணாக்கர் கூர்ந்த கவனிப்புடன் இவற்றைப் படித்தல் பெரும் பயன் தரும்.

பகலிற்பாடும் பண்கள்

	பண்	இராகம்.
1.	புறநீர்மை	- பூபாளம்.
2.	காந்தாரம், பியந்தைக்காந்தாரம்	- நவரோசு
3.	கௌஷிகம்	- பைரவி
4.	இந்தளம், திருக்குறுந்தொகை	- மாயாமாளவகௌளை
5.	தக்கேசி	- காம்போதி
6.	நட்டராகம், சாதாரி	- பந்துவராளி
7.	நட்டபாடை	- கம்பீரநாட்டை
8.	பழம்பஞ்சுரம்	- சங்கராபரணம்
9.	காந்தாரபஞ்சமம்	- கேதாரகௌளை
10.	பஞ்சமம்	- ஆகிரி

இரவிற் பாடும் பண்கள்.

1.	தக்கராகம்	- காம்போதி
2.	பழந்தக்கராகம்	- சுத்தசாவேரி (ஆரபி)
3.	சீகாமரம்	- நாதநாமக்கிரியா
4.	கொல்லி, கொல்லிக்கௌவாணம்,	- திருநேரிசை, நவரோஸ்
5.	வியாழக்குறிஞ்சி	- சௌராஷ்டிரம்
6.	மேகராகக்குறிஞ்சி	- நீலாம்பரி
7.	குறிஞ்சி	- அரிகாம்போதி
8.	அந்தாளிக்குறிஞ்சி	- சாமா

பொதுப்பண்கள் மூன்று
(பகலிலும் இரவிலும் பாடக்கூடியவை)

1.	செவ்வழி	- யதுகுலகாம்போதி
2.	செந்துருத்தி	- மத்தியமாவதி
3.	திருத்தாண்டகம்(குறிஞ்சி)	- அரிகாம்போதி

திருமுறைகள் **நிலையாய செல்வத்தை** எளிதாக அடைவதற்கு வழிகாட்டும் **நூல்கள்.** அருளோடு கூடிய சிவபரம்பொருளே **திரு** ஆகும். அதாவது பெறத்தக்க செல்வம். மனக்கோணலை நீக்கி வாழ்க்கை முறையை ஒழுங்குபடுத்தும் நூலே இத்திருமுறைகள். இவற்றைப் பாடிவந்தவர்கள் ஓதுவார்கள். இவர்கள் ***திருமுறைகண்ட புராணம்*** கூறும் கட்டளை பேதங்களையும் ஐயந்திரிபறக் கற்று,

பன்னிரண்டு திருமுறைகளையும் பண் நியதியோடு மரபு தவறாமல் பண்ணியல்பாகப் பக்தியுடன் காதலாகிக் கசிந்து கண்ணீர்மல்கி ஓதுகின்றவர்கள் பண்ணிசை வல்லார்கள் ; பண்ணைப் பாடுவோர்.

இன்னிசையால் பாடவல்லார் இருநிலத்தில் ஈசன் என்னும் இயல் பினார் என்றும், **சம்பந்தனது தமிழ் வல்லார் அடிபேணுதல் தவமே** என்றும் திருஞானசம்பந்தர் அருளியுள்ளார். இதிலிருந்து திருமுறை யினை ஓதும் பாக்கியம் பெற்றவர்கள் சிறந்த **குரு** எனக் கொள்ளக் கூடியவர்கள் எனலாம்.

சைவர்கள் முதலிலே **சிவதீட்சை** பெற்றிருக்கவேண்டும். திரு முறைகளை ஓதும் தகுதி இருக்கின்றதென்பதை அனைவரும் உணருதல்வேண்டும். அப்போதுதான் அவர்கள் தம்மைச் சீராக்கிக் கொள்ளமுடிவதுடன் ஒரு நல்ல பரம்பரையையும் ஏற்படுத்திக் கொள்வர். **திருமுறைகளை ஓதுபவர்கள் தூய்மையராயிருத்தல் வேண்டும்.** அப்போதுதான் திருமுறைகளின் புனிதத்தன்மையை உணரக்கூடியதாக இருக்கும் ; அதற்குக் **கௌரவம்** கொடுக்க முடியும். எக்காரியத்தைச் செய்யும்போதும் நாம் **உள்ளும் புறமும் தூய்மை** உடையவராய் இருத்தல்வேண்டும். நாம் சைவன் என்று சொல்வதற்கு முதற்கண் சிவதீட்சை பெற்றிருத்தல் வேண்டும். அல்லாதவர்கள் தம்மைச் சைவசமயிகள் என்று கூறிக்கொள்ள அருகதையற்றவர்கள்; **தீட்சை** ஒரு **சத்தியம்** போன்றது.

திருமுறைகளை இறைவனே அருளினார் என்ற நம்பிக்கை கொண்டவராகச் சைவசமயிகள் இருத்தல்வேண்டும். **நம்பிக்கை** இல்லாது **போலித்தனமாக** நடத்தல் திருமுறைகளை அவமதிப் பதாகும். ஒன்றிய மனத்துடன் **பொருள் உணர்ந்து பாடுதல்** தனக்கு மட்டுமல்ல ஏனையோருக்கும் உளநெகிழ்வையும், மனோரம்மியத் தையும் கொடுக்கவல்லது.

பாடல்களிலே பொதிந்துள்ள பக்திப் பெருக்கைத் தாமும் உணர்ந்து மெய்ப்பாடு வெளிக்கிளம்பக்கூடியதாக, மற்றவர் மனதை உருக்கிக் காட்டக்கூடியதாகப் பாடும் திறனை வளர்த்திருத்தல் வேண்டும். இங்கு ஒருவர் தனது வித்துவத்தைக் காட்ட என்று இல்லாமல் மற்றவர் பின் தொடரவேண்டும் என்ற குறிக்கோளுடன் பாடுதல்வேண்டும் ; பயில்வித்தல் வேண்டும்.

பன்னிரு திருமுறைகளையும் குருமூலமாகப் பயின்று அவரது அங்கீகாரம் பெற்று அவரது ஆசியுடன் பாடுதல் **குருபக்தியையும் பணிவையும்,** இறைபக்தியையும் ஒருவரிடத்தில் பரிணமிக்க வைக்கிறது.

திருமுறைகளை ஓதும் முறை

திருமுறைகளை வரிசைக்கிரமமாக ஓதல்வேண்டும் என்பது விதி. **ஒன்றையாவது தவிர்ப்பது குற்றமாம்.** இன்று பன்னிரு திருமுறை களையும் பஞ்சதோத்திரம், பஞ்சபுராணம் என்று சுருக்கிவிட்டார்கள். பஞ்ச தோத்திரம் என்பது தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருப்புராணம் என்பனவாம். இவற்றைப் பாடிய பின்னர் திருப்புகழ் மற்றும் அடியார்கள் திருப்பாடல்கள் கோயிலிற் பாடப்படு கின்றன. தேவாரம் பாடும்போது முதலில் 1ஆம், 2ஆம், 3ஆம் திருமுறைகளிலிருந்தும் (சம்பந்தர்), அடுத்து 4ஆம், 5ஆம், 6ஆம் (திருநாவுக்கரசர்) பின்னர் 7ஆம் (சுந்தரரது) திருமுறையுமாகப் பாடல் வேண்டும். முறைமாறிப் பாடுவது தவறாகக் கணிக்கப்படுகிறது; குற்ற முமாகும். திருமுறைகளைச் சொற்பிழை பொருட்பிழைகளறப்பாடுதல் வேண்டும்.

திருமுறைகளைப் பாடும்போது குற்றங்கள் நீக்கியே பாடுதல் வேண்டும். குற்றங்களாவன: பண்குற்றம், எழுத்துப்பிழை, சொற்பிழை, பொருட்பிழை, நாசியால் பாடுதல், வாயைக் குகைபோலத் திறத்தல், வாய் கோணுதல், அழுமுகங்காட்டல், கண்கள் ஆடுதல், தலைநடுங் குதல், புருவமேறுதல், மிடறுவீங்குதல் முதலியனவாகும்.

திருமுறைகளைப் பண்ணோடு பாடும் சிறப்பைப் பற்றித் திருஞானசம்பந்தர் பல இடங்களிலே கூறியுள்ளார்.

"நாதன் வேதியன் ஞானசம்பந்தன் வாய் நவிற்றிய தமிழ் மாலை ஆதரித்திசை கற்றுவல்லார்", "சொலக்கேட்டுகந்தவர் தம்மை வாதியாவினை", "மறுமைக்கு மிம்மைக்கும் வருத்தம் வந்தடையாவே."

பண்ணியல் பாடவல்லார்கள் என்னும் பழியொடு பாவமிலரே.
பண்களார் தரப்பாடுவார் பழியீலர், புகழாமே.
பண்ணாருந் தமிழ் வல்லார் பரலோகத் திருப்பாரே.

இவை பண்பாடுதலின் திவ்யமான பலனைக் குறிக்கின்றன. இவற்றைச் சைவர்கள் உணர்ந்திருக்கவேண்டும். ஆசை, விருப்பம், பண்ணிசைப்பற்று அநுபூதியை உண்டாக்க வல்லன.

பக்தி இலக்கியங்களான சைவத்திருமுறைகள் மக்களைப் பாடாது பரம்பொருளான இறைவனான சிவனைப் பாடுகின்றன. இறை வனைப் பாடுவது என்னும்போது திருக்கோயில்களைப் பாடுவது என்பது பொருளன்று ; **இறை அனுபவத்தைப் பாடுவது** என்பதுதான் பொருள்.

தெய்வ அனுபவமுள்ளவர்கள் ஞானியர். **திருமுறைகளை** விளக்கும் சபாபதி நாவலர்,

> **திருமுறை இலக்கியங்கள் தீரோதானம் நீங்கிய**
> **அருள்நாத ஒலியும், மற்றைக் கலைப்புலவர்கள்**
> **பாடிய பாட்டுக்கள் மாயாநாத ஒலியுமாதலின்**
> **சிறிதும் தம்முள் ஒவ்வா மாணிக்கமும் செங்கல்லும்**
> **போல்வன அவை என விளக்குவர்.**[3]

என்று குறிப்பிடுகிறார்.

பக்தி இயக்கத்தைத் தோற்றுவித்து நடத்தியவர் என்று கருதப் படும் ஆளுடைய பிள்ளையார் சிவனருளால் ஞானப்பால் உண்டு **ஞானசம்பந்தர்** என்று கூறப்பெற்றவர். சிவன்தேவியை ஞானப்பால் ஊட்டுமாறு வேண்ட தேவியோ **சிவஞானத்து இன்னமுதம்** அருளப் பிள்ளையோ தெளிந்த ஞானம் பெற்று விடுகிறது. ஞானசம்பந்தர் பெற்ற ஞானம் எத்தகையது என்பதனை,

> **சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்**
> **பவமதனை யறமாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானம்**
> **உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம்**
> **தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தார் அந்நிலையில்.**[4]

என்று சேக்கிழார் பாடுவார். தேவியால் திருமுலைப்பால் ஊட்டப்பெற்று ஞானசம்பந்தம் பெற்ற ஆளுடைய பிள்ளையார் தலை நின்ற நெறியே **பக்திநெறி.** சம்பந்தர் திருக்கோவில்கள் தோறும் சென்று தொழுது இறைவனை ஏத்திப் பாடியவர். இறைவனைத் தொழுதுய்வதற்கு ஞானம்வேண்டும் என்று பாடுகிறார்:

> **ஊனமிலராகி உயர்நற்றவ மெய்கற்றவை உணர்ந்த அடியார்**
> **ஞானம் மிக நின்றுதொழ நாளும் அருள்செய்யவல நாதனிடமாம்.**[5]
> **முன்னைவினை போய வகையினால் முழுதுணர்ந்து முயல்கின்ற முனிவர்**
> **மன்னவிருபோது மருவித்தொழுது சேரும் வயல் வைகாவிலே.**[6]

அடியார்கள் ஞானம் மிக, அதன் விளைவாக நின்றுதொழுகின் றனர். முழுதுணர்ந்து முயல்கின்ற முனிவரும் தொழுகின்றனர். இங்குத் தொழுதல் **இறைவன் திருமுன்னர் ஒடுங்கி நிற்றலே.** மேலும் இவ்வாறு கூறும் போதும், ஞானியரும் முனிவரும் பக்தி நெறியிலே நின்று திருக்கோவில் வழிபாட்டில் திளைப்பதையே பாடுகிறாராதல் வேண்டும்.

சம்பந்தர், அப்பர், சுந்தரர் என்னும் மூவரையும், **மூவர் முதலிகள்** என்று சுட்டும் வழக்குச் சைவ உலகிலுண்டு. இம்மூவரும் பாடியன **தேவாரம்** என்று வழங்கப்பெறுகின்றன. ஞானப்பால் ஊட்டப் பெற்ற வரலாற்றினை ஞானசம்பந்தரே பின்வருமாறு தமது தேவாரத்திற் பாடியுள்ளார்:

போதையார் பொற்கிண்ணதடிசில் பொல்லாதெனத்
தாதையார் முனிவுறத் தானெனை யாண்டவன்
காதையார் குழையினன் கழுமல வளநகர்ப்
பேதையா ளவளொடும் பெருந்தகை யிருந்ததே.[7]

எனப் பாடுவார். குழந்தையாகவிருந்தபோதே சம்பந்தருக்குத் தெய்வ தரிசனம் கிடைக்கிறது. சேக்கிழார் சுவாமிகள் பாடிய சம்பந்தர் வரலாற்றிலும் இவ்வுண்மை தெளிவாக உணர்த்தப்படுகின்றது. அத் தெய்வ தரிசனத்தால் கவரப்பட்டு அத்தரிசனத்தில் தம்மை இழக்கிறார். தேவார முதற்பாடலே இவ்வனுபவத்தைச் சுட்டிப் பாடுவதாகும்.

தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண் மதிசூடி
காடுடைய சுடலைப் பொடிபூசி என்னுள்ளம் கவர்கள்வன்
ஏடுடைய மலரான் முனைநாட்பணிந் தேத்த வருள்செய்த
பீடுடைய பிரமா புரமேவிய பெம்மானி வனன்றே.[8]

இத்தேவாரத்தோடியைந்த கதைமரபும் மிக்க பிரசித்தி பெற்ற தொன்றாகும். தோணிபுரத்தீசன் உமையோடும் விடையேறி ஞானப் பாலூட்டியதும், பின்னர் சிவபாதவிருதையார் குளத்திலே முழுகிக் குளித்துவிட்டுக் கரையேறிக் குழந்தையின் வாயில் எச்சிலைக் கண்டு, **யார் இது செய்தது?** என்று வினவிய வினாவுக்குப் பதில் கூறுவது போன்று அமைந்த பாட்டு இது. சிவசொரூபத்தை ஞானவட்டத்தில் நின்று பாடுகிறார் ஞானசம்பந்தர்.

சம்பந்தர் கண்ட தரிசனம் எத்தகையது? செவியில் தோடு, தலையில் வெண்மதி, உடம்பெல்லாம் வெண்ணீறு. இவற்றோடு விடை

தரிசனம் தருகிறான் இறைவன். **காடுடைய சுடலைப் பொடி பூசி என்னுள்ளம் கவர்கள்வன்** எனத் திருநீற்றுப்பூச்சில், சுடுகாட்டுச் சாம்பற் பூச்சில் தம்மை இழக்கிறார் சம்பந்தர். சங்காரகாரனாக இறைவனைத் தரிசிக்கும் ஞானப் பக்குவத்தைக் குழந்தைப் பருவத்திலேயே பெற்று விடுகிறார் என்றுதான் கூறவேண்டும்[9] என்பர் டாக்டர் ப. அருணசாலம்.

திருக்கோவில்களில் பலவற்றிலும் இத்தத்துவ வடிவங் களையே தரிக்கிறார். திருக்கோவில்களிலிருக்கும் திருமேனி தன்னைச் சிவன் எனவே கண்டுதொழுகிறார். சிவனை உயிர்கள் உய்யத் திரு விளையாடல்கள் பலவற்றையும் புரிந்து அருளாளனாகக் கண்டு தொழு கிறார். அவன் அருட்செயல்களும் அருட்டிருமேனியும் சம்பந்தரைக் கவர்கின்றன. குழந்தை சம்பந்தர் அத்திருக்கோவில்களில் தம்மை மறக்கிறார். பக்திக் காதல் மேலிடுகின்றது. திருக்கோவில்களில் சூழ விருந்த இயற்கைக் காட்சிகளில் அருட்டிருமேனி, அவன் ஒளி பரவி நிற்கும் இயற்கைக் காட்சிகள் இவற்றில் தோய்ந்து பெற்ற அனுபவ வெளிப்பாடே சம்பந்தர் பாடல்கள். பிறிதொரு வகையாகக் கூறுவ தென்றால் இயற்கைக் காட்சிகளில் தோய்ந்தெழுந்த அழகனுபவம், இறைவன் அருட்செயல்களிலும் அருட்டிருமேனியிலும் கொண்ட காதலனுபவம், இறைவன் திருக்கோவில்களையே சிவன் எனக் கண்டு தெளிந்த ஞான அனுபவம் ஆகிய இம்மூன்று அனுபவங்களையுங் கொண்டு விளங்கும் அழகுக் கவிதைகளை, காதற் கவிதைகளை, ஞானப் பாடல்களைச் சம்பந்தர் பாடினார் எனல் வேண்டும்.[10]

> "இயற்கை இறைவன் படைப்புப் பொருளென் பர். தெய்வக் கவிஞர்களுக்கு இயற்கை, இறைவன் அழகினைத்தாங்கி நிற்கும் காட்சிப் பொருள் எனல் வேண்டும். தொடக்க நிலையில் இயக்கமற்ற சடப் பொருளாகவே தோன்றுகின்றது. இயற்கை, தன் தோற்றப் பொலிவாக பல்வேறு நிகழ்ச்சிகளாலும் மக்களைத் தன்பால் ஈர்த்துநிற்கும் அழகுப் பொரு ளாகத் தோன்றி, மனிதனுக்குப் பல அறவுணர்வு களையும் எடுத்துக்கூறும் அறநிலையமாக வளர்ந்து, இறுதியாக இறையொளி தாங்கி நிற்கும் திருக் கோவிலாகவே தெய்வக் கவிஞர் தம்திருவுள்ளத்தில் மலர்ச்சியடைகிறது. இயற்கை இறைவனின் திருவுட லாகவே விளங்குகிறது."[11]

அகத்துறைக் காட்சிகள் பலவற்றையும் சம்பந்தர் பாடல்கள் புலப்படுத்தி நிற்கின்றன. நலனிழந்து ஆற்றாமை மிக்க தலைவி தன்தலைவனுக்குத் தூதுவிடும் அகத்துறை மரபும் சம்பந்தர் பாடல்களில் பின்பற்றப்படுகிறது:

வன்டரங்கப் புனற்கமல மதுமாந்திப் பெடையினொடும்
ஒண்டரங்க இசைபாடும் அளியரசே ஒளிமதியத்
துண்டர்அங்கப் பூண்மார்பர் திருத்தோணி புரத்துறையும்
பண்டரங்கற் கென்னிலைமை பரிந்தொருகாற் பகராயே.[12]

அலைகள் வீசுகின்ற நீர்நிலையொன்று கமல மலர்கள் பூத்து விளங்குகிறது. அம்மலர்த்தேனையுண்டு பெண்வண்டோடு சேர்ந்து இசைபாடுகின்றது ஒரு கோத்தும்பி. இவ்வரசவண்டே தன் தலை வனுக்கு(சிவனுக்கு)த் தன்நிலையை எடுத்துக்கூறத்தக்கது எனக் கருதுகிறாள் தலைவி. அவ்வரச வண்டினை விளித்துத் தன் தலைவனைப் பற்றிக் கூறுகிறாள். **என் தலைவன் ஊர் தோணிபுரம். தலையிலே பிறைமதியமணிந்தவன். மார்பில் எலும்புமாலை அணிந்தவன். பண்டரங்கனாக, உடம்பெல்லாம் சுடலைப் பொடிபூசியவனாக இருப்பவன் அவன். பேரருளாளன். என்மீது அன்புகொண்டு நீ ஒருமுறை அவனிடம் செல்லமாட்டாயா?** என வேண்டுகிறாள் உயிராகிய -ஆன்மத் தலைவி.

தான் விரும்பும் காதலனை அடையமாட்டாத நிலையில் அவன் பெயரையாவது பேச அல்லது கேட்டுக்கொண்டிருக்க ஆசைப்படுகிறது மனம்.

சிறையாரும் மடக்கிளியே இங்கேவா தேனொடுபால்
முறையாலே உணத்தருவன் மொய்பவளத் தொடுதரளம்
துறையாருங் கடற்றோணி புரத்தீசன் துளங்குமிளம்
பிறையாளன் திருநாமம் எனக்கொருகாற் பேசாயே.[13]

என்னும் தேவாரத்தில் தன் தலைவன் நாமத்தைக் கேட்க விரும்பிக் கிளியிடம் கூறப் பணிக்கிறாள். அவன் பெயரையேயன்றி அவனை அடையும் நெறியையும் அறிய அவள் உள்ளம் விரும்புகின்றது.

சேற்றெழுந்த மலர்க்கமலச் செஞ்சாலி கதிர்வீச
வீற்றிருந்த அன்னங்காள்; வீண்ணோடு மண்மறைகள்
தோற்றுவித்த திருத்தோணி புரத்தீசன் துளங்காத
கூற்றுதைத்த திருவடியே கூடுமா கூறீரே.[14]

தூதுவிடுதற்கு எவ்வாறு கோத்தும்பியைத் தேர்ந்தெடுத்தாரோ அதைப்போன்று அவனை அடையும் நெறியைக் கூறுதற்கும் அரச அன்னத்தையே தேர்ந்தெடுக்கிறார் சம்பந்தர்.

இறைவன் ஒருவனே ஆடவன்; உயிர்கள் எல்லாம் பெண்களே என்ற எண்ணத்தில் அவனை அடையத் துடிக்கும் பக்தி நெறியின் ஒரு பகுதியாகக் காதல் உணர்வு சிறக்கலாயிற்று. இங்குப் பேசப்படும் மொழி உலகியல் பற்றியதாகலாம். அம்மொழியில் நிறைந்து நிற்கும் உணர்வு இறவாத இன்ப உணர்வு. அடியவர்கள் அனுபவித்த **சிவபோகத்தை விளக்கவேண்டின் உலகியல் இன்பத்தைத் துணையாக** க் கொண்டே விளங்குவர். அடியவர்கள் பலரும் தெய்வ போகத்தை உவமை வாயிலாகவே விளக்கமுயல்வதும் ஈண்டு கருத்தத்தக்கது. **இறைவனை எண்ண என் உள்ளம் குளிரும்; உள்ளங் குளிர்ந்த போதெல்லாம் உகந் துகந்துரைப்பேனே** என்பதற்கேற்ப சம்பந்தர் பாடல்கள் **தெய்வீகத் தன்மையின் வெளிப்பாடன்றி; உலகியல் வெம்மையின் வெளிப்பாடன்று எனலாம்.**

சம்பந்தர், திருக்கோவிலைச் சிவனாகத் தொழுவதோடு, தாம் தரிசித்த இறைவனோடு உரையாடுகிறார். தமக்குவேண்டியதை இறைவனிடம் வேண்டிப் பெறுகிறார்.

இடரினும் தளரினும் எனதுறுநோய்
தொடரினும் உனகழல் தொழுதெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்தநஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே.
இதுவோஎமையாளுமாறீவதொன் றெமக்கில்லையே
அதுவோஉன தின்னருள் ஆவடுதுறை அரனே.

எனப் பாடித் தந்தையார் வேள்விக்குப் பொன் பெறுகிறார்.

வாசி தீரவே காசு நல்குவீர்
மாசின் மிழலையீர் ஏசல் இல்லையே.[16]

இறைவ ராயினீர் மறைகொள் மிழலையீர்
கறைகொள் காசினை முறைமை நல்குமே.[17]

இங்கு நாம் கருதவேண்டுவது, சம்பந்தர் இறைவனோடு கொண்ட உயிர்த் தொடர்பே, இறைவன் அவர் வாழ்க்கை முழுவதும் பிரிப்பின்றி நிற்கிறான்.[18]

"சம்பந்தர் கவிதைகள் சில ஏகபாதம், யமகம், திருவெழுகூற்றிருக்கை என்னும் கவிகளாக உள்ளன. **ஏகபாதம்** என்னும் கவிதையில் இறைவன் திருப் பெயரையேனும் மீண்டும் மீண்டும் சொல்வதால் ஓருணர்ச்சி பயில்வோர் உள்ளத்தில் பிறக்கலாம். திருவெழுகூற்றிருக்கையும் சித்திர கவியாயினும் ஆசிரியப்பாவாக அமைந்திருப்பதால், கருத்தோட்டம் தடைப்படாமலிருக்கலாம். ஆயின் **யமகம்** பயில் வோர்க்கு எத்தகைய அனுபவத்தையும் விளைக்க மாட்டாத நிலையிலுள்ளது"[19] என்கிறார் டாக்டர் ப. அருணாசலம்.

யாமா மாநீ யாமா மாயா ழீகா மாகா ணாகா
காணா காமா காழீ யாமா மாயாநீமா மாயா.[20]

என்பது **யமகம்.** இசைத்தமிழ்க் கவிஞராக வாழ்ந்த சம்பந்தர் ஓசைநயம்மிக்க பாடல்களைப் பாடிப் பயில்வோர் கவிதை இன்பம் வாயிலாக இறைஉணர்வைப் பெறத் தூண்டியவர். இதிலிருந்து **யமகம்** தோத்திரமென்ற வகையில் பாடும்போது பக்தியை மிகுவிக்குமென்பதே கருதத்தக்கது. பண்ணொன்ற இசை வளத்தினால் **யமகமும்** சம்பந்தரது **முத்தமிழ்ச் சமத்காரத்தினை** விளங்கிக் கொள்வதற்கு உதவுவன வாகும்.

பல்லவர் காலத்தில் பாண்டியன் நெல்வேலி வென்ற நின்றசீர் நெடுமாறனும் பல்லவன் மகேந்திரவர்மனும் சமண சமயத்தைத் தழுவுகின்றனர்... தமிழ்நாடே சமண நாடாகக்கூடிய சூழ்நிலை உருவாகியது. அப்பொழுது அப்பரும் சம்பந்தரும் தோன்றிச் சமணத்தின் வீறடக்கிச் சைவத்தைப் பரப்புகின்றனர்.[21]

தமிழிலக்கிய வரலாற்றாசிரியரான பிறிதொரு ஈழநாட்டுப் பேராசிரியர் வி. செல்வநாயகம் அவர்கள் அப்பர், சம்பந்தரது அவதாரத்தைப் பின்வருமாறு சுட்டுகிறார்:

"கி. பி. ஏழாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் சமணசமயம் பல்லவ அரசன் மகேந்திரவர்மனையும் பாண்டிய அரசன் நின்றசீர் நெடுமாறனையும் தன்வசமாக்கித் தமிழ்நாட்டில் ஆதிக்கஞ் செலுத்தத் தொடங்கிற்று. அந்நாளில் **சைவநெறி தான்பெற்ற புண்ணியக்கண் இரண்டெனத்** திருநாவுக்கரசரும் திருஞானசம்பந்தரும் அவதரித்து

அம்மன்னனிருவரையும் சைவராக்கிச் சமணத்தின் வீறடக்கிச் சைவத்தை வளர்த்தனர். சைவசமயத்திற் பிறந்த திருநாவுக்கரசர் இறைவனையடைய மனங்கொண்டவராகி இளமையிலேயே சைவ சமயத்தை விட்டுச் சமணனாகித் துறவொழுக்கத்தை மேற்கொண்டு வாழ்ந்தனர். பல ஆண்டுகள் சென்றும் சமணசமயத்தைவிட்டு மீண்டும் அவர் சைவத்தைத் தழுவினார். அதைக்கண்ட சமணத்துறவிகள் அவருக்குப் பல இன்னல்களை இழைத்தனர். அவற்றிற்கெல்லாம் ஆளாகியும் கலங்காத நெஞ்சினராய்ச் சைவசமயத்தை இறுகத் தழுவிக்கொண்டு சிவபெருமானுக்குப் பாமாலையணிந்தும் உழவாரப் படைகொண்டு வாணாளெல்லாம் ஆலயத்திருப்பணி செய்தும் சைவத்தை வளர்த்தனர். இவ்வாறு வயோதிபராய்த் திருநாவுக்கரசர் திருத்தொண்டு செய்துவருங் காலத்தில், சீர்காழி என்னும் திருப்பதியில் திருஞானசம்பந்தர் அவதரித்துப் பாலனாய் விளையாடும் பருவத்தி லேயே பண்கனிந்த பாடல்கள் பல பாடி இறைவனை ஏத்தலாயினர். அவர்களிருவரும் சைவ சமயத்திக்கு அளவிடற்கரிய தொண்டுகள் செய்துள்ளனர்."[22]

பேராசிரியர், கலாநிதி ஆ. வேலுப்பிள்ளை, சம்பந்தர் பாடல் களைப் பற்றிப் பின்வருமாறு *தமது தமிழர் சமய* வரலாறு (1985) நூலில் கூறுவன அனைவராலும் மனங்கொள்ளத்தக்கவை:

> **சம்பந்தர் பாடல்கள் ஒவ்வொன்றிலும், பெரும்பாலும் இரண்டு வரிகள் இயற்கை வருணனையா கவும் இரண்டு வரிகள் இறைவனைப் பற்றியதாகவும் அமைகின்றன. அவ்வமைப்பு, சம்பந்தருக்கு இயற் கையழகிலும் இறைவனருளிலும் ஒரேவகையான ஈடுபாடிருந்ததைக் காட்டுகிறதென்பது மரபாக வரும் விளக்கம்... சம்பந்தர் பதிகம் ஒவ்வொன்றிலும் எட்டாம் பாட்டில் இராவணனைப் பற்றிய குறிப்பு வருகிறது.. ஆளுடையபிள்ளையார் ஒவ்வொரு பதிகத்திலும் ஒன்பதாம் பாட்டில், திருமாலும், பிரமனும் சிவனின் அடிமுடியைத் தேடியுங் காணமுடியாமற் போனதாகவரும் புராணக்கதைகளைப் பற்றிய குறிப்புத் தருவர்... பிள்ளையார் பத்தாம் பாடலில், சமண பௌத்தர் இழித்துக் கூறப்படுவர். முத்திரைக் கவிகள் பலவற்றில் நற்றமிழ் ஞானசம்பந்தன் 'சம்பந்தன் செய்த**

தமிழ்மாலையென்றெல்லாம் தமிழுடன் தன்னை ஒன்று சேர்த்துக்கூறும் பண்பு காணப்படுகிறது. வைதிக நெறியும், தமிழ் நாட்டிற் கேயுரிய ஆதிச் சமயமும் கலந்தே சம்பந்தரின் சைவம் தோன்றிய தால், சம்பந்தர் சமணருக் கெதிரான சைவரி யக்கத் தைத் தமிழின எழுச்சியாக ஆக்கிச் சுலபமாக வெற்றி யீட்ட முயன்றிருக்கிறா ரென்றும் கருதுவதற்கு இட மிருக்கிறது."[23]

இனி, திருநாவுக்கரசு நாயனாரது தேவாரங்களைப் பற்றி நோக்கலாம். அப்பர் சுவாமிகளின் வாழ்க்கை சமணத்துடனும் சைவத்துடனும் பின்னிப்பிணைந்திருந்தது. சைவராகப் பிறந்து வளர்ந்த அப்பர் சமண சமயத்திற் சேர்ந்து சமணப் பேரறிஞராகிப் பின்பு சைவராக மாறிச் சைவ சமய மறுமலர்ச்சியில் முக்கிய பங்கு வகித்துச் சிவலோகம் சார்ந்தார் எனப் பெரிய புராணம் கூறும். சமணத்திற் சேர்ந்த அப்பர் அங்கு தருமசேனர் ஆனார். தருமசேனருக்கு வந்த சூலை நோயைச் சமணரால் தீர்க்க முடியாமற் போனதும் சைவரால் தீர்க்க முடிந்ததும், தமிழர் சமய வரலாற்றில் ஓர் திருப்பு மையமாக அமைந்துவிட்டன. சமணமும் தருமசேனர் என்ற பெயரும் அழிந்தன; அந்த அழிவிலே, சைவமும் திருநாவுக்கரசர் என்ற பெயரும் தோன்றின. சமணர் அப்பருக்குச் செய்த இடுக்கண்களை மேலும் விபரிக்கும் பேராசிரியர், கலாநிதி ஆ.வேலுப்பிள்ளை,

வலிமை மிக்க எதிரிகள் அப்பரை மிக மோசமாகத் துன் புறுத்தினர். திருநீறும் ஐந்தெழுத்தும் அப்பரும் எதிர்த்து நின்றனர். அப்பர் பரம சாதுவாக நடந்துகொண்டார். துன்பங்கள் யாவற்றையும் ஏற்றார்; சகித்தார். சிவன் நினைவில் மகிழ்ந்திருந்தார்; எதிரிகள் தொடர்ந்து இழைத்து வந்த துன்பங்கள் ஒவ்வொன்றும் அப்பர் வாழ்வில் வளர்ச்சிப் பகுதிகளாயின. தமிழ் மக்களும் மன்னனும், தலைவணங்கத் தக்க பெருமையுடையவராக அப்பரும், கேலி செய்யக்கூடிய சிறியோராகச் சமணரும் மாறிக்கொண்டிருந்தனர்.[24]

அப்பர் பெருமானின் பக்திவைராக்கியம், உள்ளத்து உறுதி என்பன அவரது திருமுறைகள் மூலம் துலக்கம்பெறும்:

நாமார்க்குங் குடியல்லோம் நமனை யஞ்சோம்
நரகத்திலிடர்ப்படோம் நடலை யில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்லோம்
இன்பமே எந்நாளுந் துன்ப மில்லை.
தாமார்க்குங் குடியல்லாத் தன்மை யான
சங்கரன்நற் சங்கவெண் குழையோர் காதிற்
கோமாற்கே நாமென்றும் மீளா யாளாய்க்
கொய்மலர்ச்சே வடியிணையே குறுகி னோமே.

என்றும், **அஞ்சுவது யாதொன்றுமில்லை அஞ்சவருவது மில்லை** எனவும் வரும் திருமுறைகளில் அப்பரின் வைராக்கிய பக்தி நிலையினைக் காணலாம். பிற தேவார ஆசிரியர்களுக்கில்லாத கவிதை வீறு அப்பர் பாடல்களில் உண்டு. அப்பர் பாடல்கள் அனுபவத் துடிப்பு மிக்கவை, சிவனைப் பாடும்போது,

குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமின்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற் பால்வெண் ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற் பாதமுங் காணப் பெற்றால்
மனிதப் பிறவியும் வேண்டுவ தேஇந்த மாநி லத்தே.[25]

அஞ்சாமைமிக்க ஒரு சத்தியாக்கிரகியாக அப்பர்சுவாமிகளை அறிஞர் விவரிப்பர்.[26] அப்பரின் உணர்ச்சிமிக்க சிறந்த கவிதை அகத் துறையிலமைந்துள்ள **முன்னமவனுடைய** என்ற திருத்தாண்டகமாகும்.

இனி, **சுந்தரமூர்த்தி நாயனாரது** திருமுறை வளத்தினை நேக்கலாம்:

"நல்லியல் ஞான சம்பந்தனும் நாவினுக்கரசரும் சொல்லியவே சொல்லி ஏத்துகப்பான்" என்று பாடும் சுந்தரர் அவ்விரண்டு தேவார ஆசிரியர்களும் சென்ற நெறியே சென்று அவ்விருவரையும் போல் ஆலயத்திலே அரனைத் தரிசித்துப்பெற்ற அனுபவங்களைப் பாடியவர். பொய்மையாளரைப் பாடாதே எந்தை புகலூர்பாடுமின் புலவீர்காள், என்று பாடி உய்ய அறிவுறுத்தினார் சுந்தரர். யோகநெறி நின்று தோழமை நெறியுடன் வாழ்ந்தவர் என்பர்.

இனி, **மாணிக்கவாசக சுவாமிகள்** அருளிச்செய்த திரு வாசகத்தின் சிறப்புகளை நோக்குவோம்:

எட்டாந்திருமுறையாகிய திருவாசகத்தை இறைவனே தமது திருக்கரத்தால் எழுதினார் என்னும் வரலாறொன்றுண்டு. இத்திரு வாசகம் 51 உட்பிரிவுகளையும், 655 பாடல்களையுங் கொண்டது திருப்பெருந்துறை அனுபவமே திருவாசகத்தின் **உயிர் நிலை**[27]. என்கிறார் டாக்டர் ப. அருணாசலம். பெரும்பாலும் நாயக - நாயகி பாவப்பாடல்களைப் பாடிய அருளாளராக மாணிக்கவாசக சுவாமிகளை அறிஞர்கள் விமர்சிப்பர்.

> **மாணிக்கவாசகர் தம்மைத் தலைவியாகக் கொண்டே திருவாசகம் முழுவதையும் பாடினார் என்று கூடக் கொள்ளலாம். அதை ஏற்றுக் கொள்ளாவிட் டாலும், திருவாசகத்துள் ஒரு பகுதி நாயகன் - நாயகி பாவம் விளக்கித் தோன்றுமாறு மாணிக்கவாசக சுவாமிகள் பாடியுள்ளார். திருவெம்பாவை, திருவம் மானை, திருப்பொற்சுண்ணம் திருக்கோத்தும்பி, திருத்தெள்ளேணம், திருச்சாழல், திருப்பூவல்லி, திருவுந்தியார், திருத்தோணோக்கம், திருப்பொன்னூ சல், அன்னைப் பத்து, குயிற்பத்து, திருத்தசாங்கம் என்ற திருவாசகப்பகுதிகள் மாணிக்கவாசகசுவாமி கள் நாயகன் - நாயகி பாவத்திலே இறைவனைப் பாடுவதற்குத் தம்மை நாயகியாக மகளிர்ப் பொழுது போக்கு, உரையாடல் முதலிய பல்வேறு கோணங் களில் பாவனை செய்து பாடியனவாகும். இத்தனை துறைகளிலே இவ்வாறு கற்பனை செய்து பாடிய தமிழ்ப்புலவர் வேறு ஒருவருமிலர்.**[28]

திருவாசகத்தில் பக்திச் சுவையொன்றே சிறப்பாய் விளங்கு கின்றது.[29] என்று குறிக்கிறார் டாக்டர் சி.பாலசுப்பிரமணியன்.

> பத்தாந் திருமுறையாகிய திருமூலர் திருமந் திரம் தத்துவ நூலாயும் விளங்குகின்றது. திருமந்தி ரத்தில் ஆகமக் கூறுகளாகிய சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னுங் கருத்தினைத் திருமந்திரம் மிகவும் விரிவாகக் கூறியுள்ளது. **அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்** எனக் குறிப்பிடு கின்றது. திருமூலர் யாப்பு ஒரே வகையானது. ஈரசைச் சீர்மிக்கு வரச் சிறுபான்மை முச்சீரும் வர நாற்சீர் கொண்ட

அடி நான்கினைப் பெற்று நடக்கும் ஒவ்வொரு அடியிலும் பன்னிரண்டெழுத்தும், பதினோரெழுத்தும் வரும். இயற்சீர் வெண்டளையும் வெண்சீர் வெண் டளையும் அவர்பாட்டில் வரும் தளைகளாம்.[30]

பன்னிருதிருமுறைகளுள் வரலாற்றுப் பாங்கானதும் அடியார் களது வாழ்க்கையினூடே இறையின்ப அனுபவத்தையுரைப்பதுமான கதை தழுவிய பக்திக்காவியம் பக்திச்சுவை நனிசொட்டப் பாடிய திருத்தொண்டர் புராணமெனப்படும் **பெரியபுராணமாகும். பெரிய புராணத்தின் காவியநாயகர் சுந்தரமூர்த்தி நாயனாராவார்.**

தொகுத்து நோக்கும்போது, பன்னிரு திருமுறைகளென வழங்கும் தோத்திரநூல்கள் அனைத்தும் **என்றென்றும் வாழ்வீலே இன்பத்தை அனுபவிப்பதற்குப் பேருதவிபுரியும் தெய்வீகத் திருநெறிய தமிழ் மந்திரங்களாகும். சைவசமயத்தவர்களது அன்றாட நடைமுறை வாழ்வில் திருமுறைகள் இடம்பெறுவது அவசியமாகும். நேர்ந்துள்ள துன்ப வாழ்வு நீங்கி மறையவும், இடுக்கண்கள் யாவும் பொடிப்பொடி யாய்ப் போகவும் செய்ய வல்லன திருமுறைகள் ஆகும். எனவே ஒவ்வொருநாளும் திருமுறையின்பத்தில் திளைக்கவேண்டும் என்ற உறுதிவாழ்வினை எடுத்து மண்ணில் நல்லவண்ணம் வாழ்வோமாக. நம்பிக்கையே நல்வாழ்வு.**

அடிக்குறிப்புகள்.

1. குமாரசாமி, சி., *தேவாரந் தந்த இராஜராஜன்* (1997), கொழும்பு, அணிந்துரை.ப.6.
2. *மேலது*, முன்னுரை,
3. சபாபதி நாவலர்., *திராவிடப்பிரகாசிகை*, இலக்கிய மரபியல்,ப. 172.
4. *பெரிய புராணம், திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் புராணம்*, செய். 70.
5. ***சம்பந்தர் தேவாரம்,*** செய், 3561.
6. *மேலது*, செய், 3562.
7. *மேலது*, செய், 3053.
8. *மேலது*, செய், 01.
9. அருணாசலம். ப., *பக்தி இலக்கியம்*, பாரி புத்தகப் பண்ணை, சென்னை, 1983, பக். 117.
10. *மேலது*, ப. 217- 218.
11. *மேலது*, ப. 218.

12. சம்பந்தர் தேவாரம், செய். 645.
13. மேலது, செய், 654.
14. மேலது, செய், 650.
15. மேலது, செய், 2834.
16. மேலது, செய், 992.
17. மேலது, செய் 993.
18. அருணாசலம், ப., மு. கு. நூல், ப. 228.
19. மேலது, ப. 229.
20. சம்பந்தர் தேவாரம், செய், 4057.
21. வேலுப்பிள்ளை ஆ., "சைவமறுமலர்ச்சியும் சம்பந்தர்சமயப் பிரசாரமும்", தமிழர் சமய வரலாறு, பாரிபுத்தகப்பண்ணை, சென்னை,1985, ப. 80.
22. செல்வநாயகம்., வி தமிழ் இலக்கிய வரலாறு., குமரன் பதிப்பகம், கொழும்பு, 1996, ப. 82 - 83.
23. ஆ. வேலுப்பிள்ளை., மு. கு. நூ, ப. 84 - 86.
24. மேலது, ப. 102.
25. திருநாவுக்கரசுநாயனார் தேவாரம், செய், 4941.
26. டாக்டர், ப. அருணாசலம்., மு. கு. நூ. ப. 238.
27. மேலது ப. 256.
28. வேலுப்பிள்ளைஆ., மு. கு. நூ. ப. 120 - 121.
29. அகில உலக இந்து மாநாட்டுச் சிறப்பு மலர். கொழும்பு, 1982.
30. "திருமுறைகளில் இலக்கியவளம்", அகில உலக இந்துமாநாட்டில் சிறப்பு மலர், இந்துசமயபிரகரங்கள் அமைக்க, கொழும்பு (1982), ப.212.
31. மேலது, ப. 212.

ஆதார உசாத்துணை நூல்கள்

1. அந்தனிஜீவா., (1995), ***மலையகமும் இலக்கியமும்,*** மலையக வெளியீட்டகம், லக்ஷா கிராபிக்ஸ்லிமிட், கொழும்பு.

2. அப்புஸ்வாமி, பெ.நா., (1996), ***வசனமும் கவிதையும்,*** (அமெரிக்க இலக்கிய வரலாறு) ஜோதிநிலையம், சென்னை.

3. அருணாசலம், க., (2002), ***சுவாமி விபுலானந்தரின் சமயச் சிந்தனைகள்,*** தென்றல் பப்ளிகேஷன், கொழும்பு.

4. இராமலிங்கம், மா., (எழில் முதல்வன்), (1999), ***நாவல் இலக்கியம்,*** நியூசெஞ்சுரி புக்ஹவுஸ் லிமிட், சென்னை.

5. இராமலிங்கம், மா., (1978), ***புதிய உரைநடை,*** தமிழ்ப் புத்தகாலயம், சென்னை.

6. இராமலிங்கம், மா., (1977), ***இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம்.*** தமிழ்ப்புத்தகாலயம், சென்னை.

7. இராமலிங்கம்பிள்ளை, வெ., (1994), ***இலக்கிய இன்பம்,*** பழனியப்பா பிரதர்ஸ். சென்னை.

8. இராசமாணிக்கனார், மா., (1958), ***இலக்கிய அமுதம்,*** ஔவை நூலகம், சென்னை.

9. இளவரசு, சோ., (1992), ***இலக்கியவரலாறு,*** பாரி ஆப் செட், பிரிண்டர்ஸ், சென்னை.

10. கனகரத்தினம், இரா.வை., (1997), ***நாவலர் உரைத்திறன்,*** பூரணம் வெளியீடு, கார்த்திகேயன் பிரைவேட்லிமிட்டெட், தயா பதிப்பகம், யாழ்ப்பாணம்.

11. குலரத்தினம், க.சி. (1989), ***செந்தமிழ் வளர்த்த செம்மல்கள்,*** சுடரொளி வெளியீட்டகம், யாழ்ப்பாணம்.

12. கைலாசபதி, க., (1977), ***தமிழ் நாவல் இலக்கியம்,*** நியூசெஞ்சுரி பிரிண்டர்ஸ், சென்னை.

13. கைலாசபதி, க., (1986), **ஈழத்து இலக்கிய முன்னோடிகள்**, மக்கள் வெளியீடு, சென்னை.

14. கைலாசபதி, க., (1999), **ஒப்பியல் இலக்கியம்**, குமரன் பப்ளிஷர்ஸ், சென்னை.

15. கைலாசபதி, க., (2002), **சமூகவியலும் இலக்கியமும்**, குமரன் பப்ளிஷர்ஸ், சென்னை.

16. கைலாசபதி, க., முருகையன், இ., (2000), **கவிதை நயம்,** குமரன் பப்ளிஷர்ஸ், சென்னை.

17. கைலாசபதி, க., (1974), **இரு மகாகவிகள்**, நியூசெஞ்சுரி பிரிண்டர்ஸ், சென்னை.

18. கைலாசபதி, க., (1991), **பண்டைத்தமிழர் வாழ்வும் வழிபாடும்**, குமரன் பப்ளிஷர்ஸ், சென்னை

19. சிவத்தம்பி, கா., (2002), **இலக்கியமும் கருத்து நிலையும்**, மக்கள் வெளியீடும் தேவா ஆப்செட், சென்னை.

20. சிவத்தம்பி, கா., (2001), **விமர்சனச் சிந்தனைகள்**, மக்கள் வெளியீடு.

21. சிவத்தம்பி, கா., (1982), **இலக்கணமும் சமூக உறவுகளும்**, குமரன் புத்தக இல்லம், கொழும்பு, சென்னை.

22. சிவத்தம்பி, கா., (1978), **நாவலும் வாழ்க்கையும்**, தமிழ்ப்புத்த காலம், சென்னை.

23. சிவகுமாரன், கே.எஸ்., (1996), **திறனாய்வுப் பார்வைகள்**, செவ்வந்தி பிறைவேட்லிமிட், 28, குணானந்த மாவத்தை, கொழும்பு.

24. சீனிவாசன், ரா., (1980), **தமிழ்ப்பாவியல்**, மெட்ரோ பிரிண்டர்ஸ், பேகேஜிங் இன்டஸ்டிரி, சென்னை.

25. சுந்தரமூர்த்தி, இ., (1994), **நடையியல் சிந்தனைகள்**, பிரிண்ட்வேல் சர்விஸ் லிமிட், சென்னை.

26. சுப்பிரமணியன், அ.வெ., (2000), ***கவிதையைச் சுவைப்பது எப்படி?***, சக்தி பிரிண்டர்ஸ், சென்னை.

27. சுப்பிரமணியன், க.நா., (2001), ***இலக்கியவளர்ச்சி***, கற்பகம் அச்சகம், சென்னை.

28. சுப்பிரமணியம், க.நா., (2001), ***இந்திய இலக்கியம்***, கலைஞன் பதிப்பகம், சென்னை.

29. சுப்பிரமணியம், க.நா., (1993), ***விமர்சனக்கலை***, நர்மதா வெளியீடு, நர்மதா பதிப்பகம், சென்னை.

30. சொக்கன், (1992), ***பைந்தமிழ் வளர்த்த பதின்மர்***, ஸ்ரீலங்கா அச்சகம், யாழ்ப்பாணம்.

31. சோமகாந்தன், நா., (1992), ***ஈழத்து இலக்கியம் - பல்துறை நோக்கு***, அலைகள் அச்சகம், சென்னை.

32. டொமினிக் ஜீவா, (தொகுப்.) (1985), ***எங்கள் நினைவுகளில் கைலாசபதி***, நியூசெஞ்சுரி புக் பிரிண்டர்ஸ், சென்னை.

33. தமிழண்ணல், (1995), ***ஒப்பிலக்கிய ஆய்வு***, மீனாட்சி புத்தக நிலையம், மதுரை.

34. தமிழண்ணல், (1986), ***தொல்காப்பியரின் இலக்கியக் கொள்கைகள்***, (***இறைச்சி***), மீனாட்சி புத்தக நிலையம், மதுரை.

35. தளையசிங்கம், மு., (1984), ***முற்போக்கு இலக்கியம்***, க்ரியா, சென்னை.

36. திருமலை முத்து சுவாமி, அ., (1975), ***இலக்கிய மலர்கள்***, அருணா பப்ளிகேசன்ஸ், சென்னை.

37. நாகேஸ்வரன், கனக, (2004), ***அறுபத்து நான்கு கலைகளும் கலையாக்கத் திறன்களும்***, லஷ்மி அச்சகம், கொழும்பு.

38. நாகேஸ்வரன், கனக., (2004), ***வட இலங்கையின் சக்திபீடம் நயினைத் நாகபூசணி அம்மன் (வரலாறும் தலப்பெருமையும்)***,

திருக்கேதீச்சரம் ஸ்ரீ சபாரத்தின சுவாமிகள் நூற்றாண்டு விழாச்சபை, வெளியீடு, கொழும்பு.

39. நாகேஸ்வரன் கனக., (2005), யாழ்ப்பாணத்துத் ***தமிழ்ப் பிரபந்த இலக்கியங்கள்***, லஷ்மி அச்சகம், 195, ஆட்டுப்பட்டித்தெரு, கொழும்பு.

40. பத்மநாதன், சி., (2005), ***இலங்கையில் இந்து சமயம்***, குமரன் அச்சகம், கொழும்பு.

41. ***பன்முக ஆய்வில் கைலாசபதி***, (***பதின்மூன்று ஆய்வுக் கட்டுரைகள்***) (1992), சூரியா அச்சகம், சென்னை.

42. பாலசுப்பிரமணியன், சி., (1944), ***இலக்கியக் காட்சிகள்***, நறுமலர்ப்பதிப்பகம், சென்னை.

43. பாலசுப்பிரமணியன், சி., (1995), ***தொல்காப்பியக் கட்டுரைகள்***, பாரி ஆப்செட் பிரிண்டர்ஸ், சென்னை.

44. பாலசுப்பிரமணியன், சி., (1989), ***சங்க இலக்கியம் சில பார்வைகள்***, நறுமலர்ப்பதிப்பகம், சென்னை.

45. பெரிய கருப்பன், இராம., (தமிழண்ணல்), (1978), ***ஒப்பிலக்கிய அறிமுகம்***, சோலை நூலகம், மதுரை.

46. பொற்கோ, டாக்டர்., (1998), ***ஆராய்ச்சி நெறிமுறைகள்***, ஐந்திணை வெளியீடு, சென்னை.

47. மோகன், இரா., (1944), ***இலக்கியச்சோலை***, பாரி ஆப்செட் பிரிண்டர்ஸ், சென்னை.

48. வரதராசன், மு., (1959), ***இலக்கியத்திறன்***, காக்ஸ்டன் அச்சகம், சென்னை.

49. வரதராசன், மு., (1979), ***இலக்கியமரபு***, பாரிநிலையம், சென்னை.

50. வானமாமலை, நா., (1999), ***இலக்கியத்தில் உள்ளடக்கமும்***

உருவமும், மக்கள் வெளியீடு, சென்னை.

51. வீரகத்தி,க., (1971), ***கடலும் படகும்***, ஆசிர்வாதம் அச்சகம், யாழ்ப்பாணம்.

52. வேலுப்பிள்ளை, ஆ., (1985), ***தமிழர் சமய வரலாறு***, பாரிபுத்தகப் பண்ணை, சென்னை.

53. வேலுப்பிள்ளை, ஆ., (1999), ***தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும்***, ஸ்ரீ லங்காபுத்தகசாலை, யாழ்ப்பாணம்.

54. வையாபுரிப்பிள்ளை, எஸ்., (1959), ***அகராதி நினைவுகள்***, தமிழ்ப் புத்தகாலயம், மதுரை.

55. ஜகந்நாதன், கி.வா., (1966), ***தமிழ்நாவலின் தோற்றமும் வளர்ச்சியும்***, நண்பர்கள் அச்சகம், சென்னை.

56. ஜெயராசா, சபா., (1989), ***அழகியல்***, அம்மா வெளியீடு, இணுவில், மருதனார் மடம்.

57. Kanaganayagam, C., (1977), **The influence of English literature on the development of Tamil literary Criticism**, யா.மா.ப. நோ. கூட்டுறவுச் சங்க வெளியீடு. யாழ்ப்பாணம்.

Appendix

MR. K. NAGESWARAN, M.A., SENIOR LECTURER, GR.I
DEPARTMENT OF LANGUAGES
DETAILS OF PUBLICATIONS AND RESEARCH ARTICLES

1.1 REFEREED JOURNALS

1. "Navalarum Muththuthambipillaium", *Arumuganavalr centenary volume,* Editor – in – charge, Professor, K. Kailasapathy, Published by the srilasri Arumuganavalar sabai, printed Thirumakal press, chunnakam, Sri Lanka, 1979, p.196.

Publishing Committee :Professor, K. Kailasapathy (President)
Member : Professor. K. Sivathamby
Dr. A. Sanmugadas
Mr. A. Ambikaipahan, B. A.
Mr. N. Subramaniam
Organizer : Mr. A. Sivanesaselvan, M. A.

2. "Kavithai neriyum Kavithai Murivum", *Kalasurabhi,* Humanities student's union magazine, University of Jaffna, 1976.
3. "Thaduththadkonda puranaththil cekilar Kavi nalan", *Inthu neri,* Hindu Student's union magazine, University of Jaffna, 1978.
4. "Valvin Thunpanilai ciththrippuhal", *Inthu neri,* Hindu student's union magazine, University of Jaffna, 1978.
5. "A Study of the literary froms about Nallur Kandasamy Temple and Maviddapuram Kandasamy Temple" Dissertation submitted for the degree of Master of Arts (M.A.) Tamil in the University of Jaffna, Thirunelvely, 1987. (Supervisior, Professor, A Velupillai)
6. "Scientific thinking appears in the Tamil literature" *Thamilosai,* Tamil mantram sudent's union magazine, University of Jaffna, 1885.
7. "Nanthium cirukathaihalum", *Jeeva shakthi,* medical student's union magazine, Faculty of Medicine, University of Jaffna, 05-08-1988.

8. "Nainative sri Nagapooshai Amman", *London saiva munneetra sangam silver jubilee special volume,* 31-08-2002, No. 02, Salisbury road, manorpark, London, U.K. E126AB, P.124. (This is an international magazine, published by the trust this article requested by widwan Mrs. Vasantha Vythianathan, on of the eminent Tamil womem orator in the world.)
9. "Kathirkamaththu Murugapperuman meethu eluntha pirapanthankal", *Second world Hindu conference souvenir,* Ministry of Hindu affairs, 248 21, Galle Road, Colombo -4, 02-06-2003, P. 90 (This souvenir is sponsored by the National Saving's Bank and the Sri Ponnampalavaneswarar Temple, Kochchikadai, Colombo and printed in 48B, Bloemendhal Veethy Colombo -13.)

Editorial Board :

1. Mr. K. Raguparan (chief Editor), Senior Lecturer, Department of Languages, South Eastern University, Oluvil.
2. Professor. A. Sanmugadas (Head, Dept. of Tamil, University of Jaffna)
3. Professor. S. Pathmanathan, (Professor/ Conference secretary, Dept. of History, University of Peradeniya.)
4. Mr. S. Theivanayagam (Assistant Director, Dept. of Hindu and Cultural Affairs)
5. Dr. M. Vethanathan, (Senior Lecturer, Dept. of Hindu Civilization, University of Jaffna.

1.2 BOOK EDITING

1. *Thaduththaadkonda puranam,* Text book, Jaffna, 30.09.1989.
2. *Siva Thththuva malar,* Luxmi press, Colombo, 23.06.1996.
3. *Shakthi Thaththuva malar,* Graphic land, Kandy, 24-07-1996.
4. *Bhakthi malar,* Luxmi press, Colombo, 2004.
5. *Navanaatham,* Luxmi press, Colombo 05-01-1998.

1.3 MALLIKAI (TAMIL LITERARY MAGAZINE) ARTICLES

1. "Ilankaiyarkonin cirkathikal", *Mallikai,* 1978.
2. "Sri Lankan Modern Epics", *Millikai,* 1980.
3. "Indian Therukkooththu dramas", *Mallikai,* 1988.
4. "Textual Criticism – Variations", *Mallikai,* 1989.
5. "Commentary writers and textual criticism", *Mallikai,* 1989.

1.4 MAGAZINES ARTICLE

1. "Ilanko vadiththa Illakkiyam", *Komuhi,* Manipallava kala mantram, 1972. (An article won first prize for the essay competition conducted by manipallava Kalamantram)
2. "War, Revolution in the Political theories – some ideas", *Sankaman,* monthly literary magazine, published by the A/L students of Mahajana College, Tellippalai, 1974.
3. "Bharathiyarin Kannan Paaddill Thaththuvach carpum pothanai panpum" *Chevvanthi,* 1978.
4. "Techniques for the development of Tamil languages skills", *Tamil Illakkiyak Kazhaha malar.* Sept. 1980.
5. "Language and the Radio", *Inamulakkam,* 1981.
6. "Phonetical Traditions in *Tamil oli,* April, 1982.
7. "Youth and religion", *Parashakthi,* Indu Ilaiygnar sangam, Royal College, Colombo, 1983.
8. "Moola paadath thiranaaiva? Paadapeethath Thiranaaiva? *Uoorttu,* 1986.
9. "Theen poluthu" *Cirithiran,* 1986.
10. Saivaththin Perumaihal", *Alayamani,* 1988.
11. Pallava Kaalamum Bhakthi ilakkiya neriyum", *Aathavan Eluhiran,* 1988.
12. "Yanku Aahuvaikol Poonkulai", *Pandit A. Arumugam Silver jubilee volume,* Chulipuram, 05-02-1989.
13. "Kural Kaaddum Ullam", *Ullam,* 1989.
14. "Thiruvacakamum Manavacakamum", *Thiruvacaka swamikal malar,* 1989.
15. "Vallipura maayavan pillaith thamil, (Book Review), *Aalayamani,* Jaffna.

16. "Chen cot kondal sinkaavelanar", *Kaaraingar Kaarthikeyap pulvar special volume,* Karainagar, 1990.
17. "Sockan paniattum nituvanangal", *manivizah malar,* Naayanmaarkaddu, Nallur, 02-06-1990.
18. "Shakthi Thaththuvam", Shakthi *Thathuvam malar,* Grafic land, Kandy, 24-07-1996.
19. "Education" (Kalvi), *Pavala vizha special volume,* Kathiresan Kanitha vidyalyam, Nawalapitiya, 04-12-1999.
20. "Thirukkural Aranoolaa? Neethinoola? Waalkai vilumiyankalai uraikkum noola? *Kathiresen Pavalavizha special volume.* Kathiresan Central College, Nawalapitiya, Colombo, 05-02-1999.
21. "Saivamum Thamilum", *Golden Jublee volume,* Hndu College, Bambalapitiya, Colombo, 2001.
22. "Saivath Thirumuraihal ", *Gnanach Chudar,* January, February, March, 2002.

1.5 PAPER (DAILY AND WEEKLY) ARTICLES

1. "Thaththuvap porulum sasti mahimaiyam", *Eelanaadu,* 13-11-1979.
2. Pioneer of the stage drama swami sankarthas, *Eelanaadu,* 13-11-1979.
3. "Parliament Budget speeches of 1980", *Eelanaadu,* 19-11-1979.
4. "The Importance of manuscripts on Tamil literary research", *Eelanaadu* 19-11-1979.
5. "Hindu cultural Ministry and Hindu conference", *Eelanaadu,* 22-10-1979.
6. U.N.O. and it's functionable aspects, *Eelanaadu,*
7. "Thaipongal and it's significance", *Eelanaadu,* 14-01-1980.
8. "Some important development of Indian Congress, *Eelanaadu.*
9. "Socialogy and Literature", (Book review) Author, Professor, K. Kailasapathy, *Eelanaadu,* 10-02-1980.
10. (Book review) Hindu culture and society, *Eelanaadu,* 17-02-1980.
11. "Significance of Sivarathri", Ministry of Regional development and Hindu affairs, *Eelanaadu,* 02-03-1980.

12. "The contribution of umaruppullavar on Islamic Tamil Literature", *Eelanaadu,* 24-02-1980.
13. "Education and usage of Tamil Language. *Eelanaadu,* 23-12-1981.
14. "Higher Education is not essential for females" (Debate speech), Tamil valarchchi kazhakam karaingar, 1984.
15. "Kaaviya kaalamum naval illakkiya uhamum", *Eelanaadu* Weekly, 06-01-1985; 20-01-1984.
16. "Sri Ponnampalam Ramanathan and his valuable contributions, *Eelanaadu*". 25-11-1984.
17. "Mrs. Indira Ghandhi", *Eelanaadu,* 11-11-1984.
18. "Cola emperor and their well organized administration", *Eelanaadu,* 19-07-1985.
19. "Aadi Amaavasai", *Eelanaadu,* 15-07-1985.
20. "Muththamil Viththakar swami vipulananda adikal", *Eelanaadu,* 19-07-1985.
21. "Suntharar Paadalkali vinchinirppathu adimai unarva? Tholamai unarwa?, *Thinakaran,* 30-07-1985.
22. "Kanvo ithu nanavo?", *Eelanaadu,* 24-07-1985.
23. "Packam caaratha Thiranaaivaalarkal", *Thinakaran,* 21-09-1985.
24. "Sani virathamum athan Thaththuvamum, *Eelanaadu,* 21-09-1985.
25. "Deepavali and it's significance", *Eelanaadu,* 11-11-1985.
26. "Seeridum Nagapooshanithai", *Thinakaran,* 30-05-1986.
27. "Paaventhr Bharathithasan", *Thinakaran,* 30-05-1987.
28. "Murugan Moorththch cirappu munaippudai nihalvathu", *Uthayan,* 28-06-1988.
29. "Sirvamatha sannithiyakath Thihalum Nainaiampathy", *Uthayan,* 28-06-1988.
30. "Nainai Nagapooshani – History and worship", *Thinakaran.*
31. "Inainthu naatha malai polium Naathaswaran Ilavarasarkal", *Uthayan, Sanjjevi,* silver jubilee special volume, 26-03-1989.
32. "Samaya Ganam elitho", *Young Hindu,* 1989.
33. "Keermalai research may be built up", *Thinakran,* 21-05-1989.

34. "Theivamakavi cekkilar gurupoojah", *Hindu Organ,* 23-06-1989.
35. "Bhakthi period will be spread again", *Hindu Organ.* 07-07-1989; 04-08-1989.
36. "Nachchuvayahi Nainai Nayahi", *Eelanaadu,* 18-06-1989.
37. :Karma yogi sri V. Kathiravelu", *Vaaramurasoli,* 25-06-1989; Thinakaran vaaramajari, 13-08-1989.
38. "Intru emakku uramooddum Pandithamani", *Eelanaadu,* Vaaramalar, 20-08-1989.
39. "Theever cirai meeda selvan kalal kaaval irukka Kavalaihal aaen", *Uthayan,* 29-09-1989.
40. "Thamilmozhiyin Thanich cirappuhal", *Elanatham,* 1990.
41. "Vallipura Maayavan Pillaith Thamil", *Thinakaran,* Vaaramalar, 15-04-1990.
42. "T. V. and Radio programmes evaluation" AIBD, (Kualalmpur, Malayasia) *Eelanaadu,* 05-08-1984.

1.6 MAHAKUMBAPISHEKA SPECIAL VOLUMES

1. "Deepavali", (Theory and Practical), *Mahakumbapisheka special volume,* kalavavodai vasantha Nagapooshani ammam kovil, Erlalai, 31-01-1990.
2. "Thanakuvamai Illaatha Thannaliyaalan", *Kee, Vaa. Jeganathan, Special volume,* Neerveli, 1990.
3. "Thirumurukaatruppadaiyum aarupadai veedukalum", *Karainagar Thikkarai sri muththumari amman mahakumbaphisheka malar,* Karainagar. 16-03-1990.
4. "Ambikaiyach caranpuhunthaal athika varam peralam", *Thavalakkiri sri muththumari amman mahakumbaphi sheka malar,* Alaveddy north, Alaveddy.
5. "Saiva samayamum senthamil molium", *Vavuniya sri Kanthasamy Kovil mahakumbaphisheka malar,* 12-09-1999.
6. "Muruga Thathuvam", *Vavuniya sri Kanthasamy Kovil mahakumbaphiseka special volume,* Vavuniya, 12-09-1999.

7. "Some Historical aspects about shakthi worship", *Sri Paththirakaali amman Rajagopura mahakumbaphisheka malar,* Trincomalee, 07-02-2001.
8. "Sri muruga virathangal", *Panchamitha malar,* Sri Thandaauthapaani swami kovil, Bogawanthalawa, 27-03-2001.
9. "Ganapathiyum compeuterum", *Maanicka vinayagam,* cammankoodu Sri maanicka vinayagar kovil mahakumbaphisheka special volume, 10-10-2001.
10. *Muranpaaduhalin aruvadaihal,* (A collection of short stories, publiched by Mrs. Kohila Mahendran), Preface.
11. *"Ithaya uoonam"* (Novel), Sithy Sanmuganathan, A. R. Publication, No. 200 A, Haputale Road, Thumbagoda, Balangoda, Printed by Punsanda Printers, Balangoda, 2002, P.1 – x11. (preface)

1.7 S. L. B. C. / BROADCATING

1. "Kulanthai Kurl", (Book review), *Kalai Kolam,* (Arts magazine), 1980.
2. "Thondan", (Book review), *Kalai Kolam,* (Arts magazine), 03-10-1984.
3. *"Arul Amutham",* Hindu religious programme, Broadcasting every Wednesday (6.30 p.m. to 7.00 p.m)



மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை

கட்டுரை இலக்கிய வடிவம்
தமிழ் மொழியிலே கால்கோள் கொள்வதற்குரிய
ஆக்க நடவடிக்கைகள் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்களால்
முன்னெடுக்கப்பட்டன. நாவலரைத் தொடர்ந்து தமிழ்க் கட்டுரை
இலக்கியத்தின் ஆழ நீளங்களை விரிவாக்குவதிலே பெரும்பங்கு
கொண்டவர் சுவாமி விபுலாநந்தர். நாவலர் வசனநடை கைவந்த
வல்லாளராய்க் கட்டுரை இலக்கியத்தை வளம்படுத்த, சுவாமி விபுலாநந்தர்
அறிவியல் தமிழ் கைவந்த வல்லாளராகக் கட்டுரை இலக்கிய வளத்தை
முன்னெடுத்தார். இந்த வளர்ச்சித் திசை முகங்கள் பல்கலைக்கழக
மரபினரால் மேலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்த வளர்ச்சியின் ஓர்
அருவியாகி நிற்பவர் நண்பர் கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்கள்.

அறிவுக் கையளிப்பில் நீண்ட அனுபவம் பெற்ற இவர் யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம், சபரகமுவ பல்கலைக்கழகம் தமிழ் இணையப்
பல்கலைக்கழகம் முதலியவற்றின் வழியாகப் பலநூறு பட்டதாரிகளை
உருவாக்கியவர். வானொலி மற்றும் தாலைக்காட்சி வாயிலாக வளமான
அறிவுக் கையளிப்பினை வழங்கி வருபவர். ஈழநாடு ஆசிரிய பீடத்திலே
கடமையாற்றி இதழியல் தமிழை வளர்ப்பதிலே பங்கு கொண்டவர். தமிழ்மொழி,
இலக்கியம், இலக்கணம் வரலாறு, பண்பாடு, கலைகள், தொல்லியல், சமயமெய்யியல்,
முதலாம் துறைகளிலே ஆழ்ந்த ஆய்வுக் கட்டுரைகளையும் அறிவுப் பரவலாக்கற்
கட்டுரைகளையும் எழுதி வருபவர். பத்துக்கு மேற்பட்ட ஆய்வு நூல்களை
வெளியிட்டுத் தமது ஆளுமைப் பரிமாணங்களைத் துலக்கி நிற்பதோடு
நாவலர் மரபிலே சொற் பெருக்குக் கலையையும் பேணி வளர்த்து வருபவர்.

- பேராசிரியர். கலாநிதி சபா. ஜெயராசா -

Printed by: Luxmi Printer, Tel: 2448545, 2473533